
நீயில்லாமல்
நானில்லை
பிரேமா

# நீயில்லாமல் நானில்லை!

பிரேமா

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

# நீயில்லாமல் நானில்லை!

## 1

காலை ஆறு மணி பத்து நிமிடங்களுக்கு சேரன் எக்ஸ்பிரஸ் கோயம்புத்தூர் ரயில் நிலையத்தை வந் தடைந்தது. மித்ரன் ஏ.சி. கோச்சில் இருந்து வெளியேறி அந்த ஜனத்திரளில் கலந்தான்.

மித்ரன்... இருபத்தேழு வயது இளைஞன். நல்ல உயர மும், அதற்கேற்ற உடற்கட்டும், கம்பீரமும் நிறைந்தவன். தன் தந்தை ஆரம்பித்த தொழிற்சாலையை அவர் இறந்த பின்பு தனியாளாய் நின்று திறம்படப் பொறுப்பேற்று நடத்திக் கொண்டிருப்பவன்.

வியாபார விஷயமாக கோவைக்குச் செல்ல வேண்டிய வேலை வந்ததை அறிந்தவுடன் அவனது பி.ஏ. ஃப்ளைட் டிக்கெட்டிற்கு ஏற்பாடு பண்ணுவதாகச் சொன்ன

பொழுது, மித்ரன் அவனைத் தடுத்து இரயிலில் முன்பதிவு செய்யச் சொன்னான்.

அவன் படித்த கல்லூரியில் இந்த வருடம் பொன் விழா கொண்டாட்டம் நடைபெற இருப்பதால் பழைய மாணவர்களிடம் இருந்து நன்கொடையையும், பங்கேற் பையும் தான் எதிர்பார்ப்பதாக அவனது ஹெச்.ஓ.டி. அவனுக்கு போனில் தகவல் சொல்லியிருந்தார்.

கோவைப் பயணம் முடிவானவுடன், நன்கொடை விஷயமாகப் பேச அவன் நேரில் செல்ல முடிவெடுத் தான். அதனால் அவன் அந்தக் கல்லூரி நாட்களின் நினைவாக இரயிலில் பயணிப்பது என்று முடிவு செய்தான்.

ரயில் நிலையத்தை விட்டு வெளியே வந்து டாக்ஸி பிடித்து ரெசிடென்சி ஹோட்டலுக்குச் சென்றான்.

அவனது பிசினஸ் விஷயமாக வந்த வேலை மதியத் துக்கு மேல் தான் பார்க்க வேண்டியிருந்ததால், முதலில் கல்லூரிக்குச் சென்று தனது ஹெச்.ஓ.டி.யைச் சந்திக்க முடிவு செய்து பரபரப்பாகக் குளித்துச் சாப்பிட்டுத் தயா ரானான்.

அவனுக்கென்ற ஒரு டாக்ஸியை ஹோட்டலில் சொல்லி ஏற்பாடு செய்து கொண்டு, கல்லூரி வளாகத்தி லேயே அமைந்திருந்த அவனது ஹெச்.ஓ.டி.யின் இல் லத்திற்குச் சென்றான். ஆனால் அவரோ அதற்குள் கிளம்பி டிபார்ட்மென்டுக்குச் சென்றிருந்தார். அவரை அங் கேயே சென்று சந்திக்க முடிவு செய்தவன் டாக்ஸியைத் தவிர்த்து நடந்து செல்லத் திட்டமிட்டான். ஆறு ஆண்டு களுக்கு முந்தைய தனது கல்லூரி நாட்களை அசை போட்டவாறே முகத்தில் தோன்றிய புன்னகையுடன் நடந்து சென்றான்.



அவனுக்கு முன்னால் நான்கு பெண்கள் தங்களுக்குள் பேசிச் சிரித்தபடியே சென்று கொண்டிருந்தார்கள். அவர் களது பேச்சில் இருந்து வர இருக்கும் ஏழாவது செமஸ் டருக்கு இன்றிலிருந்து ஹால் டிக்கெட் தருவதாகவும், அதை வாங்கத் தான் அவர்கள் நால்வரும் செல்கிறார்கள் என்பதையும் மித்ரன் அறிந்து கொண்டான்.

அதில் ஒருத்தியின் தலைமுடியைப் பார்த்து 'இவ்வளவு நீளமும், அடர்த்தியும் உள்ள முடியா!' என்று வியந்தான்.

அப்பொழுது அவர்களது பேச்சு தேர்வு சமயத்தில் தாங் கள் கடைபிடிக்கும் மூட நம்பிக்கைகளின் புறம் திரும்பியது.

''ஆனாலும் நம்ம காவ்யாக்கு இப்படி ஒரு டிரஸ் சென்டிமென்ட் இருக்கக் கூடாது'' என்றாள் ஒருத்தி.

''நீ எதைச் சொல்லுற?''

''இந்த டிரஸ் போட்டுட்டுப் போனால் தான் எக்ஸாம் நல்லா எழுதுவேன் என்று சொல்லி ஒரே டிரஸைப் போடுவாளே அதைச் சொல்லுறேன்.''

''அதுனால உனக்கு என்ன நஷ்டம்?'' என்ற காவ்யா வின் கேள்விக்கு.

அவளது அறைத் தோழியான சஹானா, ''எங்களுக்கு நஷ்டம் எல்லாம் ஒண்ணும் இல்ல காவ்யா. ஆனால் அதனால எங்களுக்குக் கஷ்டம் தான். எப்படின்னு கேட் குறியா? நீ ஒரே டிரஸைத் துவைச்சுப் போட்டா பரவா யில்லை. அதைத் துவைச்சா உன் லக் போயிடும் என்று துவைக்காமல் போடுறியா... அதோட நாத்தம் தாங்க முடியாமத் தான் எங்களுக்குக் கஷ்டமாயிருக்கும்'' என்று அவள் சொல்லி முடிக்கும் முன்பே அவளுக்கு இரண்டு அடிகள் காவ்யாவால் பரிசளிக்கப்பட்டது.

''என் டிரஸ் சென்டிமென்ட் பத்தி இவ்வளவு பேசு றாளே... இவ மட்டும் ரொம்ப ஒழுங்கோ! கொஸ்டின்

பேப்பர் கலரில சென்டிமென்ட் பார்க்கிறாள். புளூ கலர் கொஸ்டின் பேப்பர் என்றால் அன்னைக்கு எக்ஸாம் ஈஸியா இருக்கும். வேற கலர் வந்தால் பேப்பர் கஷ்டமா இருக்கும் எவறு. இவளை என்னன்னு சொல்லுறது?'' என்று அந்த நான்காவது தோழியைப் பார்த்து காவ்யா கிண்டல் அடித்தாள்.

அவர்களது பேச்சு மித்ரனுக்குச் சிரிப்பை வரவழைத்தது.

அப்பொழுது சஹானா தும்மல் போடவும்...

''இவ்வளவு நீளமா முடி வைச்சிருக்கிற நீ நிதானமா லீவ் நாளில குளிக்க வேண்டியது தானே சஹானா? எதுக்கு இன்னைக்கு குளிச்சே? பாரு சரியா காயாததால தும்மல் வருது'' என்று அக்கறையாகக் காவ்யா கேட்டாள்.

'இந்த நீளக் கூந்தல் பெண் பேரு சஹானாவா? நல்ல பேர். ராகத்தோட பேர்!' என மித்ரன் நினைத்துக் கொண்டான்.

''என்னமோ இன்னைக்கு நல்ல நாளாம். எங்க அம்மா தான் தலைக்குக் குளிக்கச் சொன்னாங்க'' என்று சஹானா சொன்னவுடன்,

''சென்னையில இருக்குற அம்மா பேச்சைக் கேட்குற அளவுக்கு நீ நல்லவளா சகி?'' என்று ஒரு தோழி கேட்டதற்கு.

''ம்ம்ம்... காவ்யா வீட்டில் இருந்து அவங்க அப்பா வார்டனுக்கு அனுப்பிய பர்மிஷன் லெட்டரை ஒளிச்சு வைச்சு அவளை ஊருக்குப் போக விடாமல் தடுத்தது. எனக்குப் பிடிக்காத படத்துக்கு நீங்க என்னை விட்டுட்டுப் போக முடிவு செஞ்சப்போ வயித்து வலின்னு சொல்லி உங்களையும் சினிமா போக விடாமல் தடுத்தது... இப்படி சில பல விஷயங்களை நீக்கி விட்டுப் பார்த்தால்



இந்த சஹானா நல்லவள் தான் அப்படின்னு வரலாறு சொல்லுது யா...'' என்று அவள் சொல்லி முடிக்கும் முன்பே அவளை மூவரும் சேர்ந்து மொத்தத் தொடங்கினர், ''நீ சகி இல்லை... துரோகி!'' என்ற கூற்றுடன்.

''ஹேய் நல்லவள் அப்படின்னு சொல்லுறதுக்கு வேணா ஈஸியா இருக்கலாம். ஆனால் நானும் எவ்வளவு நாளுக்குத் தான் நல்லவளாகவே நடந்துக்கிறது... சே சே நல்லவளாவே நடிக்கிறது. அதான் காலேஜ் முடியுறப்பாவது கொஞ்சம் சேட்டை பண்ணலாமே...'' என்ற சஹானாவை இடைமறித்து,

''ஹேய்! நீ பாட்டுக்கு ஃபீலிங்க்ஸைக் கிளப்பாதே. இன்னும் அஞ்சாறு மாசம் தான் பாக்கி இருக்கு'' என்று தோழி ஒருத்தி சோக கீதம் இசைத்தாள்.

''என்னமோ அதுக்கு அப்புறம் நாம பார்த்துக்கவோ, பேசிக்கவோ போறதில்லைங்கிற மாதிரி எதுக்கு இப்போ சீன் காட்டுறீங்க? செல்போன், இ-மெயில், பேஸ்புக் குன்னு கடைசி வரை நம்மளை தொடர்பில் நீடிச்சு வைக்கத் தான் ஏகப்பட்ட விஷயங்கள் வந்திருச்சே?'' என்ற காவ்யாவின் கேள்விக்குப் பதிலாய்,

''எத்தனைத் தகவல் தொடர்பு சாதனம் வந்தாலும் ஒரே இடத்தில இருப்பது மாதிரி வருமா? நாம எல்லோரும் ஒண்ணா ஒரு இடத்திலே மீட் பண்ணனும் அப்படின்னாலே குறுக்க ஆயிரம் தடை வரும். வேலை இருக்கு. லீவு கிடைக்கலைன்னு சாக்கு சொல்லுவீங்க. கல்யாணம் ஆகிடுச்சன்னா மாமியாரைக் கேட்கணும், கணவனைக் கேட்கணும் அப்படின்னு சொல்லுவீங்க. அப்புறம் குழந்தை குட்டின்னு வந்துட்டால் கேட்கவே வேண்டாம்'' என்று சஹானா அலுத்துக் கொள்ளவும்,

''சஹானா சொல்லுறதும் சரி தான்'' என்று ஒருத்தி ஆதரவு தெரிவித்ததும்,

காவ்யா, ''என்ன சரி? அதுக்காக இப்படியே இருந்திட முடியுமா என்ன? நாம அடுத்தடுத்த கட்டத்துக்குப் போக வேண்டாமா?'' என்று குறுக்குக் கேள்வி கேட்டாள்.

''போகணும் காவ்யா. யாரு இல்லைன்னு சொன்னா? நல்லா லைஃபை என்ஜாய் பண்ணிட்டு அப்புறமா கல்யாணம் பண்ணிக்கனும். காலேஜ் படிக்கும்போதே கல்யாணம் பண்ணிக்கிட்டு நம்ம சித்ரா மாதிரி அவஸ்தைப் படக் கூடாதுன்னு சொல்லுறேன்'' என்றதும்,

''நீ சொல்லுறதும் சரிதான் சஹானா...'' என்று காவ்யா ஒத்துக் கொண்டாள்.

''ஹேய் சகி... சஹானா ஆஆஆ...'' என்று பின்னிருந்து யாரோ அழைக்கவும் முன்னால் சென்று கொண்டிருந்த சஹானா திரும்பினாள்.

அவளைப் பார்த்ததும், அவளது அழகில் மித்ரன் ஷாக் அடித்தது போல் அங்கேயே சில நொடிகள் நின்று விட்டான்! பின் தன்னைச் சுதாரித்தவனாய் அவர்களைக் கடந்து சென்றான்.

சஹானா... அழகிய தோற்றம் உடையவள். அதைவிட அவளின் கண்கள் அழகானவை. அவளது விழியில் விழுந்திட பலரும் துடித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவளோ அவர்கள் யாரையுமே விழி எடுத்துப் பார்க்கத் தயாரில்லை.

மித்ரனின் கண்களுக்கும் முதலில் தென்பட்டது அவளது அழகிய பெரிய கண்கள் தான். 'என்ன கண்ணுடா அது!' என்று அவனுக்குத் தோன்றியது. அவளைப் பற்றி விசாரிக்கலாமா என்று ஒரு நிமிடம் தோன்றிய தன்



எண்ணத்தை அவன் மிக விரைவாக அழித்தான். கல்லூரியில் ஒரு பெண்ணைப் பற்றி விசாரிப்பது முறையான செயல் அல்ல என்று தீர்மானித்தான்.

பின் ஹெச்.ஓ.டி.யைச் சென்று சந்தித்தான்.

''மித்ரன் வாப்பா. போனிலேயே பேசி இருக்கலாம். இதுக்காக நேரில் வந்து...'' என்று சொல்லத் தொடங்கியவரை இடைமறித்து,

''சார் நான் ஒண்ணும் உங்களைப் பார்ப்பதற்காக கோயம்புத்தூர் வரலையே! பிசினஸ் விஷயமா வந்தேன். அப்படியே உங்களைப் பார்த்திட்டுப் போகலம்னு தான் நேரிலே வந்தேன். காலேஜையும் பார்த்து ரொம்ப நாள் ஆச்சே சார்'' என்றான்.

''அடுத்த மாசம் பங்ஷனுக்கு நேரிலே வருவாய் தானே?''

''உங்க கிட்ட பொய்யா வாக்குறுதி கொடுக்க விரும்பலை சார். டொனேஷன் வேலை எல்லாம் நான் செய்து தந்திடுவேன். ஆனால் அன்றைக்கு வர முடியுமான்னு அந்த சமயம் தான் சார் சொல்ல முடியும்...''

''சரி பா புரியுது. நீ பிசினஸ் மேன்.''

''சார் என்னைக்கும் நான் உங்க ஸ்டுடண்ட் தான். நீங்க தானே சார் ப்யூட்டி பர்ஸ்ட்ன்னு சொல்லிக் கொடுத்து இருக்கீங்க.''

'ஹா ஹா' என்று சிரித்தவர் அவனிடம் வர இருக்கும் பொன் விழாக் கொண்டாட்டத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்.

அப்பொழுது ஒரு மாணவன் அவரின் அனுமதியின் பேரில் உள்ளே நுழைந்தான்.

வந்தவன், ''சார், நான் ஃபைனல் இயர் ஸ்டுடண்ட் நவீன்'' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''சொல்லுங்க நவீன். நீங்க தானே கோல்டன் ஜூப்ளி பங்ஷனுக்கு உங்க இயர் ரெப்ரசன்டேட்டிவ்?''

''ஆமா சார். அதான் பங்ஷன் பற்றிப் பேசலாம்ன்னு வந்தேன்.''

''காலையிலே இருந்து எக்ஸாமுக்கு ஹால் டிக்கெட் கொடுக்குறாங்களே... வாங்கிட்டீங்களா?''

''வாங்கிட்டேன் சார்.''

''அப்போ போய் படிக்குற வேலையைப் பாருங்க. எக்ஸாம் முடிஞ்ச பிறகு இது பற்றி எல்லாம் யோசிக்க லாம்'' என்று சொல்லி அவனுக்கு விடை கொடுத்தார்.

அதற்கு மேல் அவரைக் கேள்வி கேட்க முடியாமல் அவனும் வெளியேறினான்.

''ஓ.கே. சார், நானும் கிளம்புறேன்'' என்று சொல்லி மித்ரன் அவரிடம் இருந்து விடைபெற்று வெளியே வந்தான்.

அங்கே அந்த நவீன் தனியாக நின்று கொண்டு புலம் பிக் கொண்டிருந்தான்.

''ஹேய் என்னாச்சு யங் மேன்? நீயா பேசிக்கிட்டு இருக்க?'' என்று அருகே சென்று மித்ரன் விசாரித்தான்.

''உங்களுக்கு ஹெச்.ஓ.டி. வேண்டப்பட்டவரா சார்?''

''ம்ம்ம்... கடவுளுக்கு முன் வேண்டப்பட வேண்டியவர் தான்?''

''அப்படின்னா...''

''மாதா, பிதா, குரு, தெய்வம்ன்னு சொல்லுவாங்க இல்ல... அந்த லிஸ்டிலே கடவுளுக்கு முன்னால மரி யாதை செலுத்தப்பட வேண்டியவர்ன்னு சொல்லுறேன்.''

''ஐயோ இப்படிக் கடிக்குறீங்களே!''



''இல்லைன்னா நீங்க மட்டும் தான் யூத்து நாங்க எல்லாம் வயசானவங்க என்று சொல்லிடுவீங்களே... அதான்...''

''அதை விடுங்க. எங்க ஹெச்.ஓ.டி. குருன்னா நீங்க...'' என்று அவன் இழுக்க,

''நானும் இந்த காலேஜிலே தான் படித்தேன். ஆறு வருஷம் முன்னால படிச்சு முடிச்சேன். கோல்டன் ஜூப்ளி பங்ஷன் விஷயமாப் பேசத் தான் சார் என்னை வரச் சொன்னார். அவர் எல்லா ஏற்பாடும் பக்காவா பண்ணிக் கிட்டு தான் இருக்கார். சோ எதைப் பற்றியும் யோசிக் காமல் போய் படிங்க, நவீன்.''

''ஓ! நீங்க சீனியரா? என் வயித்திலே பால் வார்த்தீங்க சார். பசங்க எல்லாம் என்ன ஆச்சுன்னு போய் ஹெச்.ஓ.டி.யைக் கேட்டுட்டு வான்னு ஒரே தொல்லை பண்ணுறாங்க... வந்து கேட்டா இவர் இப்படிச் சொல் லிட்டார். எல்லா ஏற்பாடும் செஞ்சுக்கிட்டுத் தான் இருக்கேன் என்று ஒரு வார்த்தை சொல்லலாம் இல்ல, சீனியர்?''

''ஹேய்! என்ன நவீன் நான் உன்னைப் பேர் சொல்லிக் கூப்பிட்டுக்கிட்டு இருக்கேன். நீ என்னடான்னா எனக்கு ஓவரா மரியாதை செலுத்திக்கிட்டு இருக்க... என் பேர் மித்ரன்'' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட வுடன்,

''சே சே... நீங்க என்னை விட ஆறு வயசு பெரியவரா இருக்கீங்க. அதனால பேர் எல்லாம் சொல்ல முடியாது. வேண்டும் என்றால் பாஸ் என்று கூப்பிடவா?''

''என்னைப் பார்த்தா...'' என்று தொடங்கிய மித்ரனை முடிக்க விடாமல்,

''என்னைப் பார்த்தா கொள்ளைக் கூட்டத் தலைவன் மாதிரியா இருக்கு என்று மொக்கை போடாதீங்க பாஸ்'' என்று நவீன் அலுத்துக் கொண்டான்.

''நான் ஒண்ணும் அப்படிச் சொல்ல வரலையே. என்னைப் பார்த்தா 'பாஸ்' என்கிற பாஸ்கரன்' படத்தில வரும் ஆர்யா மாதிரி வெட்டியாத் தெரியுதா? என்று தான் கேட்க வந்தேன்.''

''ஷப்பா முடியலை. இப்பவே இந்தக் கடி கடிக்குறீங்களே... படிக்குற காலத்துல என்ன கடி கடிச்சுருப்பீங்க!''

''கடிக்குறதுக்கு நான் என்ன நாயா?''

''வேணாம் நான் அழுதுடுவேன். சின்ன பையன். தெரியாமல் சொல்லிட்டேன் விட்டு விடுங்க பாஸ்.''

''அப்படி எல்லாம் விட முடியாது. காலேஜுக்கு வந்திட்டு கடி ஜோக் சொல்லாமல் போனால் எப்படி? இப்போ நான் கேட்கிறதுக்கு பதில் சொல்லு.''

''பாஸ் எனக்கெல்லாம் கேட்க மட்டும் தான் தெரியும். ம்ம்ம் சரி பரவாயில்லை. நீங்களே கேளுங்க'' என்றதும்,

''ஜனவரி பதினாலுக்கும், பிப்ரவரி பதினாலுக்கும் என்ன வித்தியாசம்?'' என்ற மித்ரனின் கேள்விக்கு.

''நீங்களே சொல்லுங்க... ம்ஹூம் கடிதங்க'' என்று நவீன் சொன்னவுடன்,

''ஒரு பொண்ணு பொங்கல் கொடுத்தால் அது ஜனவரி பதினாலு. அதே பொண்ணு அல்வா கொடுத்தால் அது பிப்ரவரி பதினாலு'' என்று மித்ரன் பதில் சொன்னவுடன்,

'ஹா ஹா' என்று நவீன் சிரித்துக் கொண்டிருக்கும் பொழுதே அவனிடம் இருந்து மித்ரன் விடைபெற்றுக் கிளம்பினான்.



# 2

அடுத்த நாள் மித்ரன் தன் பிசினஸ் வேலை ஒன்றை முடித்துக் கொண்டு தனது கல்லூரிக்கு அருகில் இருக்கும் ஹோட்டலுக்கு டிபன் சாப்பிடச் சென்றான்.

வேலை விஷயமாக காவ்யாவின் அக்கா கோவை வந்திருந்தாள். அவளை அழைத்துக் கொண்டு சஹானா, காவ்யா மற்றும் அவளது தோழிகள் அனைவரும் அதே ஹோட்டலுக்கு வந்தார்கள்.

தூரத்திலேயே சஹானாவை மித்ரன் பார்த்துவிட்டான். சஹானாவைக் கண்டதும் தன் மனதில் ஏற்படும் உற்சாகத்தைக் குறித்துக் கொண்டான். அவர்கள் அவனுக்கு அருகில் இருக்கும் டேபிளில் சென்று அமர்ந்தார்கள்.

காவ்யா சஹானாவைப் பார்த்து, ''நாம எப்போ ஹோட்டலுக்கு வந்தாலும் நம்ம மகியும் சித்ராவும் சூப் குடிச்ச கதை தான் ஞாபகம் வருது இல்ல?'' என்றாள்.

உடனே காவ்யாவின் அக்கா, ''அது என்ன கதை?'' என்று கேட்க, சஹானா சொல்ல ஆரம்பித்தாள்.

''எங்க கிளாஸ்மேட்ஸ் ரெண்டு பேர் காலேஜில் சேர்ந்த புதுசில் ஹோட்டலுக்குப் போய் இருக்காங்க. டொமேட்டோ சூப் ஆர்டர் பண்ணியிருக்காங்க. இவங்க ஆர்டர் பண்ணின அஞ்சு நிமிஷம் கழிச்சு சர்வர் மூணு கிண்ணங்களைக் கொண்டு வந்து கொடுத்திருக்கார். ஒரு கிண்ணத்துல டொமேட்டோ சாஸ், இன்னொரு கிண்ணத்துல சில்லி சாஸ், மற்றொரு கிண்ணத்துல

வினிகர்'ல பச்சை மிளகாய் எல்லாம் அரிந்து போட்டுக் கொண்டு வந்து வச்சிருக்கார்...'' என்று சஹானா சொல்லிக் கொண்டு இருக்கும்போதே,

''இதை எல்லா ஹோட்டலிலும் சூப் ஆர்டர் பண்ணினால் கொண்டு வந்து தருவாங்க தானே? அவங்க அவங்க விருப்பத்துக்கு ஏற்ப அதை சூப்பில் கலந்து குடிச்சுக்கணும் தானே?'' என்று காவ்யாவின் அக்கா இடைமறித்துக் கூறவும்,

''இது உங்களுக்குத் தெரியுது... எங்க பிரண்டுஸுக்குத் தெரியலையே... அவங்க நினைச்சுக்கிட்டாங்க இந்த மூணு கிண்ணத்துல இருப்பதை நாமளே மிக்ஸ் பண்ணி சூப் ப்ரிப்பேர் பண்ணிக் குடிச்சுக்கணும் போலன்னு'' என்று காவ்யா சொன்னவுடன் அவளது அக்கா சிரிக்க ஆரம்பித்தாள்.

சஹானா தொடர்ந்து கூற ஆரம்பித்தாள்.

''இதை மிக்ஸ் பண்ண பவுல் ஒண்ணும் கொடுக்கலையே... இதை எதில் போட்டு மிக்ஸ் பண்ணுவது? நம்ம வாயிலா? இல்லை நேரடியா நம்ம வயித்திலே போய் அதுவே மிக்ஸ் ஆகிக்கட்டும் என்று நினைச்சு எல்லாத்திலும் கொஞ்சம் கொஞ்சம் குடிப்பதான்னு பட்டிமன்றம் நடத்திக்கிட்டு இருந்து இருக்காங்க... அப்போ சர்வர் வந்து சூப்பை வைத்திருக்கார். இதுங்க ரெண்டும் 'பிங்கர் பவுல் சேர்வ் பண்ணின சர்வர்!' மாதிரி முழிச்சிருக்காங்க'' என்று சொன்னதும் அனைவரும் சிரிக்க ஆரம்பித்தனர்.

''அது என்ன பிங்கர் பவுல் சேர்வ் பண்ணின சர்வர் கதை?'' என்று காவ்யா அக்கா இன்னொரு கதை கேட்கத் தயாரானாள்.

''எங்க பிரண்ட் ஒருத்தி சாப்பிடப் போன பொழுது அவ பக்கத்து டேபிளிலே ஒரு கிராமத்து ஜோடி வந்து சாப்பிட வந்திருக்காங்க. சாப்பிட்டு முடிச்சதும் கை கழுவுவதற்கு சுடு தண்ணீரில் லெமன் போட்டு பிங்கர் பவுலைக் கொண்டு வந்து வைக்க... அந்த ஜோடி என்ன நாம ஆர்டர் பண்ணாமலே அவங்களா கொண்டு வந்து தராங்க என்று தங்களுக்குள் பேசிக் கொண்டு சர்வரைக் கூப்பிட்டு ஏன்பா இதுக்கு எவ்வளவு காசுன்னு கேட்டு இருக்காங்க. சர்வர் காசு கிடையாது ப்ரீ தான்னு சொல்லவும், ப்ரீயா அப்ப சரி கொஞ்சம் சர்க்கரை கொண்டு வாங்கன்னு சொல்லியிருக்காங்க. சர்வரும் அவங்க எதுக்கு கேட்கிறாங்கன்னு தெரியலை என்றாலும் கஸ்டமர் கேட்குறாங்களேன்னு கொண்டு வந்து கொடுத்திருக்கார்.

இவங்க அந்த லெமனைப் பிழிஞ்சு அதிலே சர்க்கரையைக் கலந்து லெமன் ஜூஸ் ஆக்கிக் குடிச்சிட்டாங்க. இதைப் பார்த்த சர்வருக்குச் சிரிப்பு வந்திருக்கு. இருந்தாலும் சிரிக்கக் கூடாதுன்னு தன்னைக் கஷ்டப்பட்டு கண்ட்ரோல் பண்ணியிருக்கார்'' என்று சொன்னதும் சஹானா உட்பட அனைவரும் மறுபடியும் சிரித்தனர்.

''ஆனா அக்கா இதெல்லாம் பரவாயில்லை. அவங்க கடைசியா ஒரு பஞ்ச் வச்சிருக்காங்க பாருங்க... அது தான் சூப்பர். அது என்னன்னா... அவங்க அந்த சர்வரைக் கூப்பிட்டு எங்கேயாச்சும் ஜூஸ் கலக்க சுடு தண்ணி கொடுப்பாங்களா? அடுத்த தடவை எல்லாம் பச்சத் தண்ணி கொடுப்பா. சுத்த விவரம் தெரியாத புள்ளையா இருக்கியேன்னு ப்ரீ அட்வைஸ் வேற கொடுத்திட்டுப் போயிருக்காங்க. அதைக் கேட்டு அந்த சர்வர் 'எல்லாம் நம்ம நேரம்!' என்று ஒன்றும் சொல்ல முடியாமல் திரு திருவென விழிச்சிருக்கார்'' என்றதும் காவ்யாவின் அக்கா பொது இடம் என்பதால் தனது சிரிப்பைக் கஷ்டப்பட்டு அடக்க...

அப்பொழுது அவளது கைப்பேசி அழைக்கவே அதை எடுத்துக் கொண்டு காவ்யாவின் சகோதரி அந்த இடம் விட்டு நகர்ந்தாள்.

திடீரென நினைவு வந்தவளாகத் தோழி ஒருத்தி, ''என்ன சஹானா நேற்றுக் கிளி ஜோசியம் எல்லாம் பார்த்தியாம். எப்போதில் இருந்து உனக்கு ஜோசியத்தில் நம்பிக்கை வர ஆரம்பிச்சது?'' என்று கேட்டாள்.

''நம்பிக்கை எல்லாம் இல்லை. சரி நம்மாள அவங்களுக்குத் தொழில் நடக்கட்டுமேன்னு ஒரு மனிதாபிமானம் தான். வேற ஒண்ணுமில்லை'' என்று சஹானா சொன்னாள்.

''காலம் மாறினாலும் இன்னும் இந்த கிளி ஜோசியம் எல்லாம் மாறலை இல்லையா? அதே பழைய சாமி படத்தை வைச்சு ஓட்டிக்கிட்டு இருக்காங்க'' என்று காவ்யா சொன்னதும்,

''காலத்துக்குத் தகுந்த மாதிரி படத்தை வேணா மாத்தச் சொல்லுவோமா?'' என்று சஹானா கேட்டவுடன்,

''என்ன படம் வைக்கச் சொல்லலாம் சஹானா?'' என்று தோழி ஒருத்தி கேட்டதும், சஹானாவை முந்திக் கொண்டு காவ்யா சொல்ல ஆரம்பித்தாள்.

''உதாரணத்துக்கு படிக்குற பிள்ளைங்க வந்து நான் எதிர்காலத்துல என்னவா வருவேன் என்று கேட்டாங்கன்னு வைச்சுக்க... கல்லும், சிமிண்டும் உள்ள படம் வந்தால் சிவில் இஞ்சினியர் என்றும், ஏரோப்பிளேன் வந்தால் ஏர் ஹோஸ்டஸ் அல்லது பைலட், பேனா வந்தால் எழுத்தாளர் அல்லது நிருபர்...'' என்று சொன்ன காவ்யாவை இடைமறித்த சஹானா,



''அது என்ன ஏரோப்பிளேன் படம் வந்தால் அதில் வேலை தான் செய்யணுமா? அந்த பிளேனுக்கு ஓனர் ஆக முடியாதா? பேனாவை நிருபரும், எழுத்தாளரும் தான் உபயோகிக்குறாங்களா? வாத்தியார் யூஸ் பண்ணுறதில்லையா? இல்லை இஞ்சினியர் ஆன நீயும் நானும் யூஸ் பண்ணலையா?'' என்று கேட்டதும்,

''தப்பு தப்பு தாயே தப்பு தான்... நீ சொல்ல வந்ததை இடைமறிச்சு நான் பேசினது தப்பு தான்... அதுக்காக இப்படியா? நீயே கண்டினியூ பண்ணும்மா...'' என்று போலியாக காவ்யா அலுத்துக் கொள்ளவும்,

''இதுக்கு மேல எனக்கு சொல்லத் தெரியாதுங்கிறதை வெளிப்படையா சொல்லாமல் என்ன அழகா மேட்ச் பண்ணுற காவ்யா'' என்று சஹானா சொன்னதும் அனைவரும் சிரிக்க ஆரம்பித்தனர்.

''சரி நானே மீதியைச் சொல்லுறேன்... அதே மாதிரி என்ன வேலை கிடைக்கும் என்று கேட்பவங்களுக்குக் கடிச்ச மாம்பழம் வந்தால்...'' என்று சஹானா தொடங்கவும்,

''நிறுத்து நிறுத்து... என்னது கடிச்ச மாம்பழமா? ஆப்பிள் நிறுவனம் கடிச்ச ஆப்பிளைத் தானே லோகோவா வச்சு இருக்காங்க! நீ கதையை மாத்துறியே சஹானா...'' என்று ஒருத்தி சந்தேகம் கேட்க,

''ஆமா அதை யாரு இல்லைன்னு சொன்னா... கடிச்ச மாம்பழம் என் கம்பெனி... அதாவது சஹானா கம்பெனி லோகோவா?''

''என்னது சஹானா கம்பெனி லோகோவா?''

''ஆமா நான் ப்யூச்சரில் கம்பெனி ஆரம்பிக்கத் தான் போறேன். அப்போ என் கம்பெனி லோகோ கடிச்ச மாம் பழம்தான்!'' என்றவுடன்,

''என் சஹானா இதுக்கு நாங்க 'வாட் அ கான்பிடன்ஸ்!' அப்படின்னு சொல்லணுமா இல்லை ஓட்டைக் கான் பிடன்ஸ்ன்னு சொல்லணுமா?'' என்று கர்மசிரத்தையாக ஒருத்தி சந்தேகம் கேட்கவும் அனைவரும் சிரிக்க ஆரம்பித்தனர்.

''அது உங்க இஷ்டம் எப்படி வேணும்னாலும் சொல்லிக்கோங்க. அன்னைக்கே இதுக்கு எம்.ஜி.ஆர். சிச்சுவேஷன் சாங் பாடி வைச்சிட்டுப் போயிருக்கார்'' என்று சஹானா சொன்னதும்,

''என்னன்னு பாடி இருக்கார்?''

''அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும் இது ஆணவச் சிரிப்பு! அப்படின்னுதான்'' என்று அலட்டிக்காமல் சொன்னவுடன்,

''அட அட... ச்சு...'' என்று அவர்கள் சிலாகிக்க,

''சரி என்னை முழுசா சொல்ல விடுங்க. கடிச்ச மாம் பழப் படம் வந்தால் சஹானா கம்பெனியிலே வேலை கிடைக்கும் என்றும், ஒரு பாட்டில் கிளிசரின் வந்தால் டி.வி. நடிகை ஆவாங்க என்றும், அதே ஒரு டம்ளர் கண்ணீர் படம் வந்தால் அந்த டி.வி. சீரியலை எல்லாம் பார்த்துக் கண்ணீர் விடும் குடும்பத் தலைவி ஆவாங்க என்றும் சொல்வாங்க'' என்றாள்.

''உன் லாஸ்ட் ஸ்டேட்மென்ட்டை மட்டும் தாய்க் குலங்கள் கேட்டாங்கன்னு வைச்சிக்க உன் முதுகிலே டின்னு கட்டிடுவாங்க'' என்று காவ்யா சொன்னதும்,

''ஓ! அப்போ அதை மட்டும் நான் வாபஸ் வாங்கிக் கறேன். தாய்க்குலம் ஆதரவு எனக்கு எப்பவும் தேவை'' என்றாள்.



அருகில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த மித்ரன் 'சரியான குறும்புக்காரி போல!' என்று எண்ணி மன தினுள் சிரித்துக் கொண்டான்.

''தாய்க்குலம் ஆதரவை விடு... நீ தாய்க்குலம் ஆகிடுவேன்னு கிளி சொல்லிச்சாமே அந்தக் கதையைச் சொல்லு'' என்றொருத்திக் கேட்க,

''ஹேய்! ஆமா சீக்கிரமே நம்ம சஹானாக்கு கல் யாணம் என்று கிளி ஜோஸியத்துல நேற்று அந்த ஆள் சொன்னார்'' என்று காவ்யா சொன்னவுடன்,

''அப்படியா? அப்போ இன்னொரு சித்ரா உருவாகி றாளா?'' என்று ஒருத்தி கிண்டல் பண்ணியவுடன் கோபம் அடைந்த சஹானா,

''எனக்குக் கூடிய சீக்கிரம் கல்யாணம்ன்னு நானா சொன்னேன்? கிளி தானே சொன்னது?'' என்றாள்.

''ஜோசியம் பலிச்சிடுச்சுன்னா...?''

''நான் தான் சொல்லுறேனே... எனக்கு ரெண்டு வருஷம் கழித்துத் தான் கல்யாணம். அப்படி இல்லாட்டி னாலும் மினிமம் ஆறு மாசம் கழிச்சுத் தான் கல்யாணம்'' என்று சஹானா வீராப்பாகச் சொன்னாள்.

''அப்படி சஹானாவுக்குக் கல்யாணம் நடந்து விட்டால் நாம நம்ம காலேஜ் முழுசும் 'வார்த்தை தவறி விட்டாள் சஹானா!'ன்னு போஸ்டர் ஒட்டுவோம்'' என்று ஒருத்தியும்,

''அப்படி நடந்திடுச்சுன்னா, நீ உன் நீண்ட தலை முடியை வெட்டி பாய் கட் பண்ணிக்குவியா சஹானா?'' என்று மற்றொருத்தியும் நக்கல் பண்ண,

''இல்லைன்னா அவளை வேற பேர் சொல்லிக் கூப் பிடலாம்!'' என்று காவ்யா சொன்னவுடன் அனைவரும் அதை ஆதரித்தனர்.

''வேற என்ன பேர் வைக்கலாம்? சஹானா பேரை அப்படியே திருப்பிப் போட்டு நகாசுன்னு கூப்பிடு வோமா?'' என்று கேட்டுக் கொண்டே ஒருத்தி சிரிக்க சஹானா கடுப்பானாள்.

என்ன பேர் வைக்கலாம் என்று அனைவரும் தீவிரமாகத் தங்களுக்குள் பேசுவதைப் பார்த்து சஹானா கடும் கோபம் அடைந்தாள். அவளது கோபத்தைக் கண்டு கொள்ளாது அவர்கள் தங்கள் பேச்சில் மூழ்கினர். காவ்யாவின் அக்கா திரும்பி வர...

''ஆனாலும் இந்தப் பட்டப் பேர் வைக்குறதில் நீ தானே குவீன் சஹானா... நீயே எங்களுக்கு ஹெல்ப் பண்ணு. நீ வைச்ச பேரிலேயே அந்த ரெண்டு பக்கெட் தான் பெஸ்ட்!'' என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்க, அந்த ரெண்டு பக்கெட் கதையைச் சொல்லச் சொல்ல காவ்யா அக்கா சொன்னவுடன்,

''எங்க சீனியர் ஒருத்தன் நடந்து வருவது அவனோட ரெண்டு கையிலும் தண்ணி உள்ள பக்கெட்டைச் சுமந்து வந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கும்னு அவ னுக்கு ரெண்டு பக்கெட்டுன்னு பேர் வைச்சிட்டாள்!'' என்று சொல்லிச் சிரித்தனர்.

'சரியான வாலு!' என்று மித்ரன் தனக்குள் நகைத்துக் கொண்டான்.

அனைவரும் சாப்பிட்டு முடித்து அங்கிருந்து கலைந் தனர். அவள் பின்னே தன் மனமும் செல்வதை ஒரு ஆச்சரியத்துடனே மித்ரன் குறிப்பெடுத்தான்.

மித்ரன் வந்த வேலையை முடித்துக் கொண்டு சென் னைக்குத் திரும்பினான்.



# 3

மித்ரன் தன் தந்தையின் நண்பரான மகாதேவன் வீட்டு அழைப்பு மணியை அழுத்தி விட்டுக் காத்திருந் தான். கதவை மகாதேவன் தான் திறந்தார்.

''ஹேய் மித்ரன்! வாப்பா!'' என்று வரவேற்றார்.

''இந்தப் பக்கமா வந்தேன். அப்படியே உங்களைப் பார்த்திட்டுப் போகலாமேன்னு வந்தேன் அங்கிள். எப்படி இருக்கீங்க?'' என்று கேட்டுக் கொண்டே கையில் இருந்த ஸ்வீட் பாக்ஸை அவரிடம் கொடுத்தான்.

அதை அவனிடம் இருந்து பெற்றுக் கொண்டவர், ''நான் நல்லா இருக்கேன். உங்கப்பா இறந்த பின்பும் கூட என்னை மறக்காமல் அப்பப்ப வந்து எட்டிப் பார்க்குறியே... ரொம்ப சந்தோஷம் பா. நீ உட்கார்ந்திரு. நான் போய் உனக்கு டீ போடுறேன்'' என்று அடுக்களையை நோக்கி நகர்ந்தார்.

''வீட்டில யாரும் இல்லையா அங்கிள்?''

''எல்லோரும் வெளியே போயிருக்காங்க பா.''

''எனக்கு ஒண்ணும் வேண்டாம் அங்கிள். இப்படி உட்காருங்க. உங்ககிட்டே கொஞ்ச நேரம் பேசிட்டுக் கிளம்புறேன்.''

''என் டீ ரொம்ப சுமாராத் தான் இருக்கும். அதனால உன் பேச்சைக் கேட்டு இங்க உட்காந்துக்கிறேன்'' என்று சொல்லி அவனருகில் அமர்ந்தவர், ''என் டீயைப் பத்தி உங்க அப்பா உன்னை ஏற்கனவே எச்சரித்து வைச்சிருக் கானா?'' என்று கேட்டார்.

''இல்லையே அங்கிள், ஏன் கேட்குறீங்க?''

''அவ்வளவு மோசமா நான் அவனுக்கு டீ போட்டுக் கொடுத்து இருக்கேன்.''

''சர்க்கரைக்குப் பதிலா உப்பு போட்டீங்களா? இல்ல ஒரு படத்திலே காட்டுற மாதிரி எலிப் பாஷாணம் போட்டுட்டீங்களா?''

''எலிப்பாஷாணமா? அதெல்லாம் இல்லை...'' என்று அலறியவர், தான் டீ போட்டக் கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

''பால் கொதிக்க வைச்சு ரெண்டு கரண்டி சர்க்கரைப் போட்டு, ஒரு கரண்டி டீத்தூள் போட்டு...'' என்று அவர் ஒரு நொடி சொல்லாமல் நிறுத்த,

''எல்லாம் சரியாத்தானே போட்டு இருக்கீங்க அங்கிள். அப்புறம் என்ன பிரச்சனை?''

''கூடவே ஒரு கரண்டி காபித் தூளும் போட்டுட்டேன் பா'' என்று பரிதாபமாகச் சொன்னார்.

மித்ரனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

''அதைக் குடிச்சிட்டு உங்க அப்பா, டேய் நான் சுக்குக் காபி குடிச்சு இருக்கேன். இதென்னடா டீக்காபி என்று நக்கல் பண்ண ஆரம்பிச்சுட்டான்'' என்று சொல்ல, இருவரும் சிறிது நேரம் சிரித்து மகிழ்ந்தனர்.

அங்கிருந்த ஸ்டூலில் பாதி விரிந்திருந்த நிலையில் இருந்த போட்டோ ஆல்பத்தைப் பார்த்தவன்,

''போட்டோ பார்த்துக்கிட்டு இருந்தீங்களா? என்ன ஆல்பம் அங்கிள்?'' என்று கேட்டான்.

''என் பொண்ணோட கல்யாண ஆல்பம் பா. நீ தான் அன்னைக்கு வெளியூருக்குப் போய்விட்டாயே. உன்



அம்மா மட்டும் தான் வந்தாங்க. பார்க்கிறாயா?'' எனக் கேட்டு அதைத் தூக்கி அவன் கையில் வைத்தார்.

''தாங்க பார்க்கிறேன்'' என்று சொல்லி வாங்கியவன் ஒரு அசுவாரஸ்யத்துடனே பக்கங்களைப் புரட்டினான். அப்படிப் பார்த்துக் கொண்டிருந்தவனின் விழிகள் விரிந்தன. காரணம் அந்த போட்டோவில் இருந்தது சஹானா!

''சஹானா'' என்று மனம் நினைத்ததை வாய் வெளியே உதிர்த்து விட்டது.

''உனக்கு சஹானாவைத் தெரியுமா மித்ரன்?'' என்று மகாதேவன் கேள்வி எழுப்பினார்.

''ம்ம்ம்... இப்பத் தான் கொஞ்ச நாள் முன்னாடி காலேஜிலே பார்த்தேன்.''

''அட ஆமா! அவளும் உன் காலேஜிலே தான்பா படிக்கிறாள்'' என அவர் அத்தோடு தன் பேச்சை முடித்தார்.

அவன் அந்த போட்டோவை விட்டு கண்களை அகற்றாததும், அடுத்த பக்கத்தைத் திருப்ப முனையாததும் அவரது கருத்தில் பட்டது. விஷயத்தை அறிய முற்பட்டவராய், ''உனக்கு சஹானாவைப் பிடிச்சிருக்கா மித்ரன்?'' என்று நேரடியாக விஷயத்துக்கே வந்தார்.

''ம்ம்... காலேஜிலே பார்த்தேன் அங்கிள். பேசவெல்லாம் செய்யலை. பார்த்தவுடனே பிடிச்சிருந்தது. ஆனால் அது காலேஜ்... அங்க ஒரு பொண்ணைப் பத்தி எந்த விசாரணையும் வச்சுக்கக் கூடாதுன்னு பேசாமல் வந்திட்டேன். அடிக்கடி அந்த முகம் என் நினைவில் வந்து போகும். இன்னைக்கு உங்க வீட்டிலே போட்டோவிலே பார்க்கவும்...'' என்று அவன் இழுக்க,

''பார்க்கவும்...'' என்று அவர் அவனை மேலே சொல்லுமாறு ஊக்க...

"இது தெய்வத்தின் விருப்பமும் கூடன்னு தோணுது. இப்பச் சொல்லுங்க அங்கிள். இவ யாரு?"

"என் கூட வேலை செய்கிற வரதராஜன் பொண்ணு தான், மித்ரன். நல்ல குடும்பம். உங்களோட ஒப்பிட்டுப் பார்த்தால்... உங்க இருவருக்கும் இடையில் பணத்தில் தான் ஏற்றத் தாழ்வு இருக்கும். நீயோ உன் அம்மாவோ பணத்தைப் பெருசா நினைக்க மாட்டீங்கன்னு எனக்குத் தெரியும். நீயே சொன்ன மாதிரி இது கடவுள் போட்ட முடிச்சா தான் இருக்கும்."

"வசதி பற்றி ஒண்ணும் பிரச்சனையில்லை அங்கிள். பொண்ணோட குணம் எப்படி?"

"ரொம்ப நல்ல குணம். உங்க வீட்டுக்கு ஏத்த பொண்ணு தான் பா. நானே வரதன் கிட்ட பேசி உங்க கல்யாணத்தை முடிச்சு வைக்குறேன்."

"ரொம்ப தாங்க்ஸ் அங்கிள். ஆனா அவ படிப்பை முடிச்சுக்கட்டும் அங்கிள்."

"நீ சொல்லுறதும் சரி தான் பா" என்று அவரும் ஒத்துக் கொண்டார். மித்ரன் அவனது குடும்ப உறுப்பினர்களைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

மேற்கொண்டு சிறிது நேரம் அவரிடம் பேசியவன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான்.

## 4

டிசம்பர் மாதம் பாதி முடிவடைந்த நிலையில், ஏழாவது செமஸ்டர் விடுமுறைக்கு சஹானா சென்னையில் உள்ள தனது வீட்டிற்கு வந்திருந்தாள்.



பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கும் தம்பி அர்ஜுனுக்குப் பாடத்தில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்து வைத்து பொழுதைப் போக்கினாள்.

ஆனால் மறந்தும் அவள் தன் தாய் அமிர்தத்திற்கு சமையலறையில் உதவி செய்யவில்லை. அமிர்தமும் பாவம் இத்தனை நாள் பரீட்சைக்குப் படித்திருப்பாள். அதனால் வீட்டில் ஓய்வாக இருக்கட்டும் என நினைத்து மகளை எந்த வேலையும் செய்யச் சொல்வதில்லை.

மகாதேவனின் மனைவி மற்றும் மகனுடன், சஹானா, அமிர்தம், அர்ஜுன் என அனைவரும் தென்னிந்தியக் கோயில்களுக்கு டிராவல்ஸ் மூலம் நான்கு நாட்கள் சுற்றுலா சென்றார்கள்.

அவர்கள் ஊருக்குச் சென்ற மறுநாள் அலுவலகத்தில் வரதராஜன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாய்ந்து விட்டார்.

மகாதேவன் பதறிப்போய் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். மருத்துவமனை போகும் வழியில் வரதராஜன், "மகாதேவா, அவசரப்பட்டு என் குடும்பத்தாருக்குத் தகவல் சொல்லாதே!" என்றார்.

"அதெப்படி வரதா சொல்லாமல் இருக்க முடியும்?" என மகாதேவன் கேட்க,

"ரொம்ப பயந்துடுவாங்க பா. அவசியம்ன்னா சொல்லிக்கலாம். ப்ளீஸ்..." என்று கெஞ்சி அவரை அடக்கி விட்டார்.

மருத்துவமனையில் சேர்த்து அவரைப் பரிசோதித்துப் பார்த்த டாக்டர்கள் அவருக்கு ஹார்ட் அட்டாக் வந்திருப்பதாகத் தகவல் சொன்னார்கள். ஆஞ்சியோகிராம் டெஸ்ட் எடுத்தார்கள். அவருக்கு சர்ஜரி செய்ய வேண்டி

இருப்பதாகக் கூறினார்கள். அதற்கு முன்பு கிட்னிக்குச் செல்லும் ரத்தக் குழாயில் ஸ்டன்டிங் (Stenting) செய்ய வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார்கள். மகாதேவன் மருத்துவரைத் தனியேச் சென்று சந்தித்தார்.

"டாக்டர் என் பேர் மகாதேவன். நான் தான் பேஷண்ட் வரதராஜன் கூட வந்தேன். அவர் நிலைமையைப் பற்றித் தெரிஞ்சுக்கலாமா?"

"ஷ்யூர், உட்காருங்க. அவர் வீட்டில் இருந்து யாரும் வரலையா?"

"என் பாமிலியும், அவன் பாமிலியும் சேர்ந்து கோயில்களுக்கு டூர் போயிருக்காங்க டாக்டர். எங்களுக்கு இடையே முப்பது வருஷ நட்பு இருக்கு. அதனால எதுவா இருந்தாலும் என்கிட்டேச் சொல்லுங்க டாக்டர்" என்று மகாதேவன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது டாக்டருக்கு இன்டர்காமில் அழைப்பு வந்தது.

எடுத்துப் பேசியவர், "உள்ளே அனுப்புங்க!" என்றார்.

பின் மகாதேவனைப் பார்த்து, "சாரி ஒரு ரெண்டு நிமிஷம். என் பாமிலி பிரண்டு, அவர்கிட்டே பேசிட்டு உங்களுக்கு விரிவாச் சொல்லுறேன்" என்றார்.

"சரி டாக்டர். நான் வெளியே வெயிட் பண்ணுறேன்" என்று மகாதேவன் எழப் போக,

"அதெல்லாம் தேவையில்லை. சும்மா ரெகுலர் செக்கப்பிற்கான ரிப்போர்ட் வாங்கத் தான் வரான். அதனால தான் உங்க கூட பேசிக்கிட்டு இருக்கும் போதே உள்ளே வரச் சொல்லிட்டேன்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது கதவைத் தட்டி அனுமதி வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்த மித்ரனைப் பார்த்து மகாதேவனுக்கு யானை பலம் வந்தது போல் இருந்தது.



"மித்ரன்!" என்று மகாதேவன் கூப்பிட,

அவரை அங்கு எதிர்பார்க்காத மித்ரனோ, "என்ன அங்கிள், ஆஸ்பிடல் வந்து இருக்கீங்க? யாருக்காவது உடம்பு சரியில்லையா?" என்று விசாரித்தான்.

"சஹானா அப்பாக்கு ஹார்ட் அட்டாக். அதான் என்ன வென்று விசாரிச்சுக்கிட்டு இருக்கேன்."

"அப்படியா?" என்று கேட்டுக் கொண்டே மகாதேவனின் அருகில் இருந்த சேரில் அமர்ந்தான். பின் டாக்டரைப் பார்த்து, "என்னாச்சு அங்கிள். அவர் எனக்கு ரொம்ப வேண்டியவர்" என்றான்.

"வெல். அவருக்கு பை-பாஸ் சர்ஜரி பண்ணனும். சில பேஷண்ட்ஸுக்கு எமர்ஜென்சியா உடனே செய்ய வேண்டிய கட்டாயம் இருக்கும். மிஸ்டர் வரதராஜனுக்கு அப்படி ஒரு நிலைமை இல்லை. சர்ஜரி செய்வது தான் அவர் பிரச்சனைக்குத் தீர்வு. அதனால கண்டிப்பாச் செய்யனும். ஆனால் அதுக்கும் முன்னால ஸ்டென்டிங் அப்படிங்கிற ட்ரீட்மெண்ட் பண்ணனும். அது சிம்பிள் புரொசிஜர் தான். ரெண்டே நாளில் வீட்டுக்குப் போயிடலாம்" என்று மித்ரனிடம் விளக்கினார்.

"சரி அங்கிள் அதை முடிச்சிட்டு அப்படியே சர்ஜரி பண்ணிடலாம் இல்லையா?"

"ஸ்டென்டிங்குக்கு அப்புறம் ஒரு சின்ன கேப் கொடுக்கலாம் மித்ரன். அவருக்கு B.P., சுகர், ரெண்டுமே ஹையா இருக்கு. அதெல்லாம் கொஞ்சம் கன்ட்ரோல் பண்ணனும்."

"அப்ப அடுத்த வாரம் செய்யலாமா அங்கிள்?"

"ஓ! தாராளமா செய்யலாம். நான் நாளையில் இருந்து ஒரு மாசம் லீவ். எனக்குப் பதிலா வேற டாக்டர் தான்

சார்ஜ் எடுத்துக்குவார். அவர்கிட்ட அப்பாயின்மென்ட் பிக்ஸ் பண்ணிக்கோங்க.''

''நீங்களே பண்ணினால் எனக்குத் திருப்தியா இருக்குமே...'' என்று மித்ரன் இழுக்கவும்,

''அப்போ ஒரு மாசம் வெயிட் பண்ணுங்க'' என்றார்.

''அதுவரைக்கும் ஒண்ணும் ஆகாதே அங்கிள்?''

''பிரச்சனை இருந்தால் சர்ஜரியை உடனே பண்ணிடுவோம் மித்ரன். இப்படி வெயிட் பண்ணச் சொல்ல மாட்டோம். நாங்க கொடுக்கும் மாத்திரையைத் தொடர்ந்து கவனமா சாப்பிட்டுட்டு வரணும். அவ்வளவுதான்.''

''ஆபரேஷனில் ஏதாவது ரிஸ்க் இருக்கா?''

''இப்ப எல்லாம் இந்த சர்ஜரி ரொம்ப சகஜமாகிடுச்சு. இதுல பெருசா ரிஸ்க் எல்லாம் கிடையாது. ஆனால் பேஷண்டோட மனநிலையும், சர்ஜரிக்கு அப்புறமா அவங்க எங்களுக்குக் கொடுக்கிற ஒத்துழைப்பும் தான் ரொம்ப முக்கியம். பேஷண்ட் நமக்கு உடம்பு சரியாகி விடும் என்று நம்பணும். டாக்டர்ஸ் எங்க மேலயும் அந்த நம்பிக்கையை வைக்கணும். அதை விட்டுட்டு ரொம்ப டென்ஷனானால் B.P. அதிகமாகி எங்களுக்குத் தொந்தரவு கொடுக்க ஆரம்பிச்சிடும்.

அதே மாதிரி ஆபரேஷனுக்கு அப்பறமும் நாங்க சொல்லுற அட்வைஸைக் கேட்டு நடக்கணும். சாப்பாடு விஷயத்திலே தொடங்கி சிகரெட், தண்ணி... இப்படி எல்லாத்திலேயும் ஒரு கட்டுப்பாடு வேணும். அத விட்டுட்டு நீ என்ன சொல்லுறது நான் என்ன கேட்குறதுன்னு சொன்னா... 'Operation success but patient died' என்று சொல்ல வேண்டி இருக்கும்'' என்று டாக்டர் தெளிவாக விளக்கியவுடன்,



''சரி அங்கிள், நாங்க வெளியே போய் பேசி முடிவு பண்ணிட்டுச் சொல்றோம்'' என்று சொல்லி மித்ரன் மகாதேவனுடன் டாக்டரின் அறையை விட்டு வெளியேறினான்.

வெளியே வந்தவுடன், ''என்ன அங்கிள் செய்யலாம்?'' என்று மகாதேவனைக் கேட்க,

''உனக்கு என்ன தோணுது மித்ரன்?'' என்று அவர் அவனையேத் திருப்பிக் கேட்டார்.

''டாக்டர் அங்கிள் இந்த சர்ஜரியை ரொம்ப வருஷமா செய்யுறார். கைராசிக்காரர் என்று பேர் வாங்கினவர். பேஷண்ட் எங்க அப்பாவா இருந்தால் ஒரு மாசம் கழிச்சுத் தான் ஆபரேஷன் பண்ணுவதா நான் முடிவு செய்வேன்'' என்று மித்ரன் தன் கருத்தைக் கூறினான்.

''நான் போய் வரதனைப் பார்த்துப் பேசிட்டு வரேன் மித்ரன். உனக்கு ஏதாவது வேலை இருக்கா?''

''நான் வெயிட் பண்ணுறேன் அங்கிள். நீங்க போய் பேசிட்டு வாங்க'' என்று சொல்லி மித்ரன் அங்கே இருந்த காத்திருப்போர் இருக்கையில் சென்று அமர்ந்தான்.

மகாதேவன் வரதராஜனிடம் மித்ரன் சஹானாவை விரும்புவது பற்றி எல்லாம் ஒன்றும் சொல்லாமல்... 'என் பிரண்டோட பையன் வந்தான். அவனும் நானும் டாக்டரிடம் பேசியதில் இப்படிச் சொல்கிறார்' என்று அவரது உடல்நலத்தைப் பற்றிய விஷயத்தை மட்டும் பகிர்ந்தார்.

வரதராஜனும் ஸ்டென்டிங் மட்டும் செய்து வீட்டுக்குச் சென்று, ஒரு மாதம் கழித்து பணத்திற்கும் ஏற்பாடு செய்தபின் ஆபரேஷன் பண்ணலாம் என்று முடிவு எடுத்தார்.

அதன்படி அன்றே அவருக்கு ஸ்டென்டிங் செய்தார்கள். மித்ரன் அவருக்கு ஒரு மாதம் கழித்து ஆபரேஷனுக்கு அவர் பெயரைப் பதிவு செய்தான். அவ்வப்போது வந்து உதவினான். வரதராஜனிடம் அறிமுகம் ஆகிக் கொள்ளவில்லை. முதல் நாள் வரதராஜன் ஐ.சி.யூவில் இருந்தார். அடுத்த நாள் அறைக்கு மாற்றப்பட்டார். அன்று மித்ரன் அறை வாயிலிலேயே நின்று மகாதேவனோடு பேசிவிட்டுச் சென்று விட்டான்.

உடனடியாக ஆபரேஷன் செய்யப் போவதில்லை என்பதால் குடும்பத்தாருக்கு விஷயத்தைத் தெரிவிக்காமலே இருந்து விட்டனர். இரு தினங்களுக்குப் பின் காலை ஒன்பது மணிக்கு வீடு வந்து சேர்ந்தனர்.

மகாதேவன் வெளியே சென்ற சமயம் வரதராஜனைப் பார்க்க வந்த அலுவலக நண்பர் ஒருவர் ஹார்ட் சர்ஜரி பற்றியும், அதில் உயிரிழந்த அவர் நண்பரைப் பற்றியும் விலாவாரியாக விளக்கிக் கூறி வரதராஜனைக் கவலைக்குள்ளாக்கிவிட்டுச் சென்றார்.

வெளியே சென்று திரும்பிய மகாதேவனுக்குப் பார்த்த உடனே நண்பரின் முகச்சோர்வு புரிந்து போனது.

''என்னாச்சு வரதா! எங்கேயாவது வலிக்குதா? எனக்குத் தொந்தரவு என்று நினைச்சுச் சொல்லாமல் இருந்து விடாதே'' என்று கவலைப்பட்டார்.

''எங்கேயும் வலிக்கலை. எதிர்காலத்தை நினைச்சா தான் ரொம்பக் கவலையா இருக்கு. நான் பொழைப்பேனா மகாதேவா?'' என்று வரதராஜன் சந்தேகமாய் இழுத்தார்.

''திடீர்னு இப்படி ஒரு சந்தேகம் உனக்கு ஏன் வந்துச்சு வரதா?''

''நான் இரண்டு நாளா ஆஸ்பத்திரியில் படுத்திருந்த போது எனக்கு என் குடும்பத்தைப் பற்றிய கவலை



ரொம்ப வந்திடுச்சு. அமிர்தத்திற்கு தனியா எதையும் செய்யத் தெரியாது. எனக்கு ஏதாவது ஆச்சுன்னா அவ எப்படிக் குடும்பத்தை நடத்துவாள்? ரெண்டு பிள்ளைங்களையும் அப்படிக் கரை சேர்ப்பாள்? நான் சேர்த்து வைச்ச பணத்திலே பாதியை ஆபரேஷனுக்கு செலவு செய்ய வேண்டியிருக்கும் மீதி உள்ள பணத்தை மட்டும் வைச்சு, என் வருமானமும் இல்லாமல் அவளால் எதிர்காலத்தை ஓட்ட முடியாதே!

சஹானா... அவளுக்கு கேம்பஸில் ஒரு வேலை கிடைச்சிருக்கு தான். ஆனா பொம்பளைப் பிள்ளையா இருக்காளே! அவளை ஒருத்தன் கையிலே பிடிச்சுக் கொடுத்தா தானே என் கடமை முடியும். நாளைக்கே அவளுக்கு ஒரு கல்யாணம் என்றால் பொறுப்பா எடுத்து நடத்த ஒரு ஆள் வேண்டாமா? எனக்குக் கூடப் பிறந்தவங்க என்று யாரும் இல்லை. என்னைப் பெத்தவங்களும் போய் சேர்ந்துட்டாங்க.

அமிர்தம் கூடப் பிறந்தது ஒரு அண்ணன். ஆனால் அவனை எல்லாம் கூடப் பிறந்தவங்க லிஸ்டில் சேர்க்க முடியுமா? உனக்குத் தான் அவனைப் பற்றித் தெரியுமே! அவன் எல்லாம் பாசம் என்றால் கிலோவிலே கிடைக்குமா? இல்லை லிட்டரிலே கிடைக்குமா? என்று கேட்குற ஆள். அவனை நம்ப முடியுமா? போதாத குறைக்கு அமெரிக்காவிலே வேற போய் உட்கார்ந்துக்கிட்டான். அதனால என்னால் முடியாதுன்னு ஒரே வரியில் முடிச்சிடுவான்.

அர்ஜுன்... இப்பத்தான் + 2 படிக்கிறான். இனிமே தான் காலேஜிலே நுழையணும். அவனுக்குச் சரியான காலேஜைத் தேர்ந்தெடுக்க வைச்சு யார் படிக்க

வைப்பா? பாங்கிலே எஜுகேஷன் லோன் கொஞ்சம் வாங்கலாம். சஹானா சம்பாதிக்கப் போறதால அவ உதவி செய்வாள் என்று எடுத்துக் கொண்டாலும்... அப்போ என் பையன் நாலு வருஷம் படிச்சு முடிக்குற வரைக்கும் என் பொண்ணு கல்யாணம் ஆகாமலே இருக்கணுமா? இதையெல்லாம் யோசிச்சுப் பார்த்தா ரொம்ப பயமா இருக்குடா மகாதேவா!'' என்று தன் மன ஆதங்கத்தை எடுத்துக் கூறினார்.

அவர் மனதில் இருப்பதை எல்லாம் வெளியே கொட்டி முடிக்கட்டும் என்று இதுவரை குறுக்கிடாது அமைதி காத்த மகாதேவன் பேச ஆரம்பித்தார்.

''நீ சொன்ன எல்லாமே நியாயம் தான். ஒரு தகப்பனா உன்னோட மனநிலையை என்னால புரிஞ்சுக்க முடியுது. நீ மூணு பிரச்சனை சொன்னாய். அதில் ஒரு பிரச்சனையைக் குறைக்க மட்டும் எனக்கு வழி தெரியும். அது நம்ம சஹானா பிரச்சனை.''

''சஹானா பிரச்சனை எப்படிடா தீரும்? உன் பையன் இப்பத் தான் காலேஜிலே ரெண்டாவது வருஷம் படிக்கிறான். என் பொண்ணை விட சின்னவனாப் போயிட்டான். இல்லைன்னா உன் பிள்ளைக்கே என் பொண்ணைக் கட்டிக் கொடுத்திடுவேன். அதுக்கு தான் வழி இல்லாமல் போச்சே!'' என்று வரதராஜன் குறைபட.

''ஏன்டா உங்க அம்மா உன்னைக் குறை மாசத்திலே பெத்தாங்களா? அவசரக் குடுக்கை. எல்லாத்திலேயும் அவசரம் தானா உனக்கு?'' என்று மகாதேவன் நக்கல் பண்ணினார்.

''இப்ப இந்த ஜோக் தேவையாடா?''

''என்னடா செய்யச் சொல்கிறாய்! பிறவிக் குணம் அவ்வளவு சீக்கிரத்திலே மறையாது. உன் கூட சேர்ந்து



நானும் பிடில் வாசிச்சா உன் கஷ்டம் மறைஞ்சிடுமா என்ன? அப்படின்னா சொல்லு. ரெண்டு பேரும் நல்ல பாட்டைத் தேர்ந்தெடுத்து ஒண்ணாவே வாசிப்போம்.''

''என்ன ஆச்சு மகாதேவா? என் பிரச்சனையிலே உனக்கு நட்டு கழண்டு விட்டதா?''

''அடப்பாவி! ஒரு நொடியிலே என்னை லூசுன்னு சொல்லிட்டியே. சரி விடு. விஷயத்துக்கு வரேன். நம்ம சஹானாக்கு சூப்பர் மாப்பிள்ளை பாத்திருக்கேன். உனக்கு எந்தப் பிரச்சனையும் கிடையாதுன்னு தெரிஞ்சதால தான் நான் ஜோக் அடிச்சிக்கிட்டு இருக்கேன். மாப்பிள்ளை என்னோட ஸ்கூல் பிரண்டோட பையன் தான். பேரு மித்ரன். இஞ்சினியர்க்குப் படிச்சிருக்கான். இருபத்தேழு வயசாகுது. ரொம்ப வசதியான குடும்பம். பிசினஸ் பண்ணுறான். ரெண்டு வருஷத்துக்கு முன்னால என் பிரண்டு இறந்து போய் விட்டான். மித்ரனுக்குக் கூடப் பிறந்தவங்க யாரும் கிடையாது. அவனோட அம்மா பார்வதி ரொம்ப அன்பான மனுஷி. மொத்தத்திலே அந்தக் குடும்பத்துக்கு நான் கியாரண்டி. உன் பொண்ணை... நம்ம சஹானாவை நீ கண்ணை மூடிக்கிட்டு அவனுக்குக் கட்டி வைக்கலாம்'' என்று மித்ரன் பற்றிய முழு விவரத்தையும் மகாதேவன் சொல்லி முடித்தார்.

அதைக் கேட்டு வரதராஜன் சிந்தனை வயப்பட்டார்.

''என்னடா வரதா ஒண்ணும் பேச மாட்டேங்கிறாய்? என்ன யோசிக்கிறாய்?''

''இவ்வளவு சிறப்புகள் நிறைஞ்சவங்க நம்ம வீட்டில் பொண்ணு எடுக்க எப்படிச் சம்மதிப்பாங்க? அதே மாதிரி நீ ஏன் உன் பொண்ணை அந்தப் பையனுக்குக் கட்டித் தரலை?''

"உன் ரெண்டு கேள்விக்கும் ஒரே பதில் தான். காதல்! என் பொண்ணை ஆசைப்பட்டுக் கேட்ட என் மாப்பிள்ளைக்குக் கட்டிக் கொடுத்தேன். அதே மாதிரி மித்ரனும் உன் பொண்ணு மேல ஆசைப்படுறான்."

"காதலா? என் பொண்ணா?" என்று வரதராஜன் அதிர...

"அவசரக் குடுக்கை என்று திரும்பவும் நிரூபிக்கிறாய்" என்று சொல்லிப் போன வாரத்தில் மித்ரன் தன்னிடம் கூறியவற்றை வரதராஜனிடம் எடுத்துரைத்தார்.

"இப்பக்கூட ரெண்டு நாளா ஆஸ்பிட்டலில் அவன் தான் எனக்கு உதவியா இருந்தான். தனக்குத் தெரிஞ்சவர் என்று சொல்லி உன்னை நல்லா கவனிச்சுக்க ஏற்பாடு செஞ்சான்" என்று மகாதேவன் சொன்னவுடன்,

"என்னிடம் அறிமுகப் படுத்தி இருக்கலாமேடா!" என்று வரதராஜன் பரபரத்தார்.

"இல்லை வரதா. அவன் தான் அப்படி ஒரு சூழ்நிலையிலே உன்னிடம் அறிமுகமாக விரும்பலை."

"நான் அவரைப் பார்க்கணுமே. உடனே வரச் சொல்லேன். ப்ளீஸ்..." என்று வரதராஜன் கெஞ்சவும்,

"வரச் சொல்றேன் டா. நீ நிம்மதியா படுத்து ரெஸ்ட் எடு" என்று சொல்லி மகாதேவன் அகன்றார்.



## 5

மகாதேவன் மித்ரனுக்குப் போன் செய்து தாங்கள் பேசிய அனைத்து விஷயங்களையும் கூறினார்.



வரதராஜன் அவனைப் பார்க்க ஆசைப்படுவதையும் தெரிவித்தார். அடுத்த ஒரு மணி நேரத்தில் மித்ரன் தன் தாய் பார்வதியுடன் சஹானாவின் வீட்டிற்கு வந்தான்.

சஹானாவின் வீடு இரு படுக்கையறைகளைக் கொண்ட பிளாட். ஒரு சிறிய ஹாலும், நடுத்தர அளவில் ஒரு அடுக்களையும் கொண்டது. பத்து வருடத்திற்கு முன்பு லோன் போட்டு வாங்கியதாக மகாதேவன் தெரிவித்திருந்தார்.

மித்ரனின் வீட்டோடு ஒப்பிடும் பொழுது சிறிய வீடாகத் தான் இருந்தது. ஆனால் அவர்கள் வீட்டில் இருக்கும் அதே சுத்தம் இங்கும் இருப்பதைப் பார்த்த பார்வதிக்குப் பரம திருப்தி உண்டானது. இருக்கும் இடம் சிறியதா பெரியதா என்பது முக்கியமில்லை. அதைப் பராமரிக்கும் விதத்தில் தான் லக்ஷ்மி வாசம் செய்வதாக நினைப்பவர் அவர்.

உள்ளே நுழைந்த பார்வதி, "வணக்கம்ங்க. இப்ப உங்களுக்கு உடம்பு நல்லா இருக்கா?" என்று வரதராஜனிடம் தானே முன் வந்து பேச ஆரம்பித்தார்.

எந்த பந்தாவுமின்றி இயல்பாய் அவர் பேசுவதை ஆச்சரியமாகப் பார்த்த வரதராஜன் மனமகிழ்ந்து போனார்.

"வணக்கம் அம்மா. நான் நல்லா இருக்கேன்" என்று பார்வதி கேட்டதற்குண்டான பதிலை வாய் உதிர்த்தாலும் அவர் பார்வை எல்லாம் மித்ரனின் மீதே இருந்தது.

'பையன் நல்லா அழகா கம்பீரமா இருக்கான். நம்ம பொண்ணுக்குப் பொருத்தமானவனாத் தெரியுறான். நல்ல குணம் என்று மகாதேவன் சொன்னான். இந்த அம்மாவும் பந்தா இல்லாமல் பழகுறாங்க. இந்த இடம் அமைந்தால் நம்ம பொண்ணு அதிர்ஷ்டசாலி தான்!'

என்று வரதராஜன் மனதில் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார்.

அம்மாவைத் தொடர்ந்து மித்ரனும் அதே கேள்விகளைக் கேட்டு நலன் விசாரிக்க... அவர் காதில் எதுவும் விழவில்லை.

மகாதேவன் நண்பர் அருகே சென்று, ''வரதாஆ!'' என்று உலுக்கி அவரை நிகழ்காலத்திற்கு இழுத்து வந்தார்.

''சரி ஏதோ சிந்தனை உட்காருங்க'' என்று வரதராஜன் இருக்கையைக் காட்ட... அவர்கள் அமர்ந்ததும் தானும் ஒன்றில் அமர்ந்தார்.

பார்வதி நேரடியாக விஷயத்திற்கு வந்தார். ''மகாதேவன் அண்ணா விஷயம் முழுவதும் சொன்னார். நீங்க எதைப் பற்றியும் கவலைப்படாதீங்க. உங்களுக்கு எங்களைப் பிடிச்சிருந்தால் உங்க பொண்ணை எங்க வீட்டுக்கு மருமகளா அனுப்புங்கள். நாங்க அவளைக் கண்ணுக்குள்ளே வச்சுப் பார்த்துக்கிறோம்'' என்றார்.

'கண்ணுக்குள்ள வச்சுப் பார்த்துக்க உங்களுக்கு என்ன அவ்வளவு பெரிய கண்ணா? உங்க மருமகளுக்குத்தான் கண்ணு ரெண்டும் பெருசு. அதிலே வீழ்ந்தவன் தான் உங்க பையன்!' என்று மனதில் நினைத்த மித்ரன், வெளியில் புன்னகைத்தான்.

''மகாதேவன் உங்க வசதி பற்றி சொன்னான். உங்க எதிர்பார்ப்பு என்னவென்று சொன்னீங்கன்னா...'' என்று வரதராஜன் தயக்கத்துடன் நிறுத்த...

''வரப் போகும் என் மருமகள் என் பையன் மனசுக்குப் பிடிச்சவளா இருக்கணும் என்ற ஒரே எதிர்பார்ப்பு தான் எனக்கு. உங்க பொண்ணைத் தான் என் பையனுக்குப்



பிடிச்சுப் போச்சே! அதுக்கு மேல என்ன வேணும்? உங்களுக்கும், உங்க பொண்ணுக்குப் பிடிக்க வேண்டியது தான் பாக்கி'' என்று பார்வதி ஒரே போடாகப் போட்டார்.

''ரொம்ப சந்தோஷம் மா. எனக்குப் பரிபூரண சம்மதம். நாளைக்கு என் பொண்ணையும் ஒரு வார்த்தை கேட்டுச் சொல்லிடுறேன். மறுக்க அவளுக்குக் காரணம் இருக்காது. என் பொண்ணு யாரையாவது விரும்பி இருந்தால் கண்டிப்பா என்னிடம் வந்து சொல்லி இருப்பாள். அந்த அளவு சுதந்திரமும், தோழமையும் நான் அவளுக்குக் கொடுத்து இருக்கேன்.''

''சந்தோஷங்க. உங்க பொண்ணு போட்டோவை நான் கொஞ்சம் பார்க்கலாமா?'' என்று பார்வதி கேட்டவுடன் வரதராஜனுக்கு வியப்புக் கூடியது.

''என் பொண்ணு போட்டோவை இதுவரைக்கும் பார்த்ததில்லையா? பார்க்காமலேவா சம்பந்தம் பேசினீங்க?''

''என் பையனுக்குப் பிடிக்குற பொருளோ, மனுஷங்களோ எதுவா இருந்தாலும் எனக்கும் பிடிக்கும்ங்க. அதான் பார்க்காமலே சரி என்று சொன்னேன். இப்போ ஒரு ஆர்வத்துல பார்க்கணும் என்று தோணுது. அதான்...'' என்று சொன்னவர் வரதராஜன் தந்த ஆல்பத்தை ஆவலுடன் புரட்டினார்.

சஹானாவின் போட்டோவைப் பார்த்த பார்வதி, ''உங்க பொண்ணு அம்சமா இருக்காள். பொருத்தமான ஜோடி தான். நீங்க உங்க வீட்டிலே கலந்து பேசிட்டுச் சொல்லுங்க. பிராப்தம் இருந்தால் எல்லாம் நல்லபடியாக நடக்கும். அப்ப நாங்க கிளம்புறோம். யாராவது பொண்ணு எப்படி இருப்பாள் என்று கேட்டால் காட்டுறதுக்காக ஒரு போட்டோ கொடுக்குறீங்களா?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்தார்.

அந்த ஆல்பத்தில் இருந்து ஒரு புகைப்படத்தை வரதராஜன் உருவிக் கொடுக்க முயல, மித்ரன் வேண்டாம் என்று தடுத்தான்.

''உங்க பொண்ணு விருப்பம் தெரிஞ்சதுக்கு அப்புறமா நாங்க வாங்கிக் கொள்கிறோம்'' என்று காரணம் சொல்லி விட்டான்.

வரதராஜன் ஒரு தயக்கத்துடனே மித்ரனின் முகத்தை மீண்டும் மீண்டும் பார்க்க... அவர் தன்னிடம் தனியாகப் பேச விரும்புகிறார் என்று புரிந்து கொண்ட. மித்ரன் தன் தாயை அர்த்த புஷ்டியுடன் பார்க்க... அவர் அதைப் புரிந்து கொண்டவராய்,

''நான் பக்கத்திலே இருக்குற பூங்காவிலே வெயிட் பண்ணுறேன் மித்ரன். நீ பேசிட்டு வா.'' என்று சொல்லி விடைபெற்றார்.

தன் அம்மா சென்றதும் வரதராஜனிடம் வந்து, ''என்னிடம் தனியா என்ன சொல்ல நினைச்சீங்க?'' என்று மித்ரன் நேரடியாக விஷயத்திற்கே வந்தான்.

''வந்து எப்படிக் கேட்குறதுன்னு தெரியலை...'' என்று அவர் ரொம்பவே தயக்கம் காட்ட...

''நீங்க கேட்க நினைப்பதைத் தயங்காமல் கேளுங்க. நான் உங்களைத் தப்பா நினைக்க மாட்டேன்'' என்று அவன் உறுதி அளித்ததும்,

''என் பொண்ணை என் ஆபரேஷனுக்கு முன்னால கல்யாணம் பண்ணிக்கிறீங்களா?'' என்று பட்டெனக் கேட்டு விட்டார்.

''வாட்? ஒரு மாசத்துக்குள்ளவா? ஏன் அவ்வளவு அவசரமா? அதுவும் படிச்சுக்கிட்டு இருக்குற பொண்ணை? அவ படிப்பு முடிஞ்சதும் நான் தான் கல்யாணம்



பண்ணிக்கிறேன். என்று சொன்னேன் தானே! என் மேல உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?'' என்று மித்ரன் அடுக்கடுக்காய் கேள்விகளை எழுப்ப,

''நான் உங்களை நம்புறேன்... நம்பலை அப்படிங்கிறது இல்லை விஷயம். நான் பார்த்து என் பொண்ணுக்கு ஒரு கல்யாணத்தை முடிச்சு வைச்சிட்டால் அதுவே எனக்கு யானை பலத்தைக் கொடுக்கும். மனசிலே பெரிய பாரம் குறைஞ்சிடும்'' என்று வரதராஜன் சொன்னதும்,

அதுவரை அமைதியாக இருந்த மகாதேவன், ''ஏன்டா ஆபரேஷனுக்குப் பிறகு நீ பிழைக்க மாட்டேங்கிற மாதிரியே பேசுகிறாய்?'' எனக் கேட்டார்.

''நீ வெளியே போனபோது என்னைப் பார்க்க வந்த நம்ம அலுவலக நண்பர் ஹார்ட் சர்ஜரி நடந்தவங்களோட கதை எல்லாம் சொன்னார். ஒரு வேளை அது மாதிரி எனக்கும் நடந்திட்டால்...''

''உடம்பு சரியில்லாதவங்களைப் பார்க்க வந்தால் என்ன பேசணும், என்ன பேசக் கூடாது என்று கூடவா தெரியாது. என்ன மனுஷங்களோ!'' என்று மகாதேவன் அலுத்துக் கொண்டார்.

''அவர் நடக்காத எதையும் சொல்லலையே. அதே மாதிரி என் வாழ்க்கையிலும் நடந்தால்...''

'நல்லவேளை பக்கத்து வீட்டினர் யாருக்கும் இவனது உடல்நிலை பற்றி எதுவும் நான் தெரிவிக்கவில்லை. இல்லாவிட்டால் அவர்களும் வந்து நலன் விசாரிக்கிறேன் பேர் வழின்னு இன்னமும் குட்டையைக் குழப்பி இருப்பார்களோ? ஆனால் இதற்கு மேலும் என்னத்தைக் குழப்ப முடியும்? ஏற்கனவே இவன் குழம்பிப் போய் தான் கிடக்கிறானே!'' என்று மகாதேவன் பெருமூச்சு விட்டார்.

"இருபத்தியொரு வயசு கூட முடியலையே! பெண்ணின் திருமண வயது இருபத்தி ஒன்னு என்று அரசாங்கமே சொல்லுது" என்றான் மித்ரன்.

"வயசு தான் உங்க பிரச்சனை என்றால்... அவளுக்கு இப்போ இருபத்தி ரெண்டு நடக்குது. ஜுன் மாதம் முப்பதாம் தேதிக்குள் மூனு வயசு முடிஞ்சால் தான் ஸ்கூலிலே சேர்த்துக்குவாங்க. இவள் ஜுலையிலே பிறந்ததால மூனு வயசிலே ஸ்கூலிலே சேர்க்க முடியலை. அவளை நாங்க நாலு வயசிலே தான் ஸ்கூலில் சேர்த்தோம்."

"ம்ம்ம் வேண்டும் என்றால் இப்போ நிச்சயதார்த்தம் பண்ணிடலாமா? அவ படிச்சு முடிச்சதுக்கு அப்புறமா கல்யாணம் பண்ணிக்கிறேன்."

அவர் எந்த பதிலும் சொல்லாததில் இருந்தே அதில் அவருக்கு உடன்பாடு இல்லை என்று மித்ரனுக்குத் தெளிவாகப் புரிந்தது.

உடன் இருந்து கேட்டுக் கொண்டிருந்த மகாதேவனோ நடுவே புகுந்து தான் எந்தக் கருத்தும் சொல்ல வேண்டாம் என்று தீர்மானித்தார். அவர்களே பேசி ஒரு முடிவிற்கு வரட்டும் எனக் காத்திருந்தார்.

வரதராஜன் மித்ரனைப் பார்த்து, "இப்போ நாட்டிலே எத்தனையோ கல்யாணம் நிச்சயதார்த்தத்தோடவே நின்று போயிடுது. அப்போ என்னை நம்பலையா என்று திரும்பவும் கேட்காதீங்க. ஒரு தகப்பனோட நிலையில இருந்து யோசிச்சுப் பாருங்க" என்று அவர் கெஞ்ச...

மித்ரனின் நிலை தான் தர்மசங்கடமாக மாறியது. மீதம் இருக்கும் தன் கல்லூரி நாட்களை எப்படியெல்லாம் கழிக்க வேண்டும் என்று சஹானா கூறியதை அவள் வாய்மொழியாகவே கேட்டவன் என்ற முறையில்



தன்னால் எப்படி அதற்குத் தடையாக இருக்க முடியும் என்று தோன்றியது.

தன் பதிலுக்காக அவர் காத்திருப்பதை உணர்ந்தவன், "நான் எங்கம்மாவிடம் கலந்து பேசிவிட்டுச் சொல்லுறேன்" என்று கூறி வெளியேறித் தாய் காத்திருப்பதாகச் சொன்ன பூங்காவிற்குச் சென்றான்.

தாயின் அருகே சென்றவன், "என்னம்மா வெயிலில் உட்கார வைச்சுட்டேனா?" என்று கேட்டான்.

"மார்கழி மாத வெயில் தானே பா. அதனால வெயில் கடுமையா இல்லை. அதை விடு. உன்னிடம் தனியா என்ன சொன்னார்?"

பெருமூச்சு ஒன்றை வெளியேற்றியவன் அவர் கூறிய அனைத்தையும் தாயிடம் கூறினான்.

"ம்ம்ம் அவர் பார்வையில் இருந்து பார்த்தால்... அவர் சொல்லுறது சரி தான். நீ என்ன நினைக்கிறாய் மித்ரன்?"

"எனக்கு என்ன சொல்லுறதுன்னு புரியலை மா."

"உன்னால கல்யாண ஏற்பாட்டை எல்லாம் இருபது நாளுக்குள் பண்ண முடியுமா மித்ரன்?"

அவரது கேள்வியில் ஆச்சரியம் அடைந்தவன், "அப்படின்னா இப்பவே கல்யாணத்தை முடிச்சிடலாம் என்று சொல்லுறீங்களா மா?!" என்று கேட்டான்.

"எப்படியும் அவள் தான் என் மருமகள் என்று முடிவாகிடுச்சு. கல்யாணம் எப்போ நடந்தால் என்னப்பா? நம்மால ஒருத்தர் சங்கடப்படக்கூடாது மித்ரன். இந்தக் கல்யாணம் அவருக்கு மன நிம்மதியைக் கொடுக்கும் என்றால் நாம் ஏன் அதைத் தடுக்கணும்? ஒரு வேளை அவர் பயப்படுற மாதிரி ஏதாச்சும் விபரீதமா நடந்திட்டால்... நம்மால தான் இப்படி ஆகிடுச்சோ என்று ஒரு குற்ற உணர்ச்சி நமக்கு வந்திடும்."

மித்ரனுக்குத் தாய் சொல்வதிலும் நியாயம் இருப்ப தாகவே பட்டது. திரும்பவும் சஹானா வீட்டிற்கு இரு வரும் சென்றனர்.

பார்வதி, ''நீங்க சொல்லுறபடியே உங்க ஆபரேஷ னுக்கு முன்னாலயே கல்யாணத்தை முடிச்சிடலாம்'' என்று சொல்லி வரதராஜனின் முகத்தில் நிம்மதியை வரவழைத்தார்.

''சஹானா ஜாதகம் கொடுங்க. ரெண்டு பேர் ஜாதகத் தையும் எங்க ஆஸ்தான ஜோசியரிடம் காண்பிச்சு ஒரு நல்ல நாள் குறிச்சிட்டு வரோம்'' என்று கேட்டு வாங்கி னார்.

வரதராஜனுக்கு மதிய சாப்பாடை ஏற்பாடு செய்து தந்து விட்டு மகாதேவன், மித்ரன், பார்வதி மூவரும் ஜோசிய ரிடம் சென்றனர்.

செல்லும் வழியில் மகாதேவன், ''மித்ரன் ஜாதகம் இப்ப உங்க கையில இருக்கா மா? இல்ல வீட்டுக்குப் போய் எடுத்திட்டு வரணுமா?'' என்று கேட்டார்.

''இல்லைண்ணா ஜோசியரே ஒரு காப்பி வைச்சிருக் கார். அப்படி இல்லை என்றாலும் மித்ரன் லாப் டாப்பிலே வைச்சு இருக்கான். அதனால பிரச்சனை ஒண்ணும் இல்லை'' என்று விளக்கினார்.

இருவரது ஜாதகமும் அமோகமாகப் பொருந்தி இருப்பதாக ஜோசியர் சொன்னவுடன் மூவரின் முகமும் பிரகாசமாகியது.

ஜாதகத்தை பார்வதியிடம் கொடுக்கும் பொழுதே வரதராஜனின் முகத்தில் தெரிந்த கலக்கத்தைப் பார்த் திருந்த மகாதேவன் இந்த நல்ல தகவலை உடனே அவரிடம் போன் மூலம் தெரிவித்தார். வரதராஜனிற்கு அளவில்லாத ஆனந்தம்.



மூவரும் வழியில் தங்களது மதிய உணவை முடித்துக் கொண்டு திரும்பவும் சஹானா வீட்டிற்குச் சென்றனர்.

பார்வதி வரதராஜனிடம், ''ஜாதகத்தைக் கொடுக்கும் போதே உங்க முகக் கலக்கத்தைப் பார்த்தேன். எனக்கும் உள்ளுக்குள்ள ஒரு உதறல் இருந்தது. ஆனா எல்லாத் தையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று செய்ய முடி யாதே! இது வாழ்நாள் முழுக்கத் தொடர வேண்டிய பந்தம் இல்லையா? நானும் வழியெல்லாம் 'முருகா முருகா' என்று சொல்லிக் கொண்டே தான் போனேன். முருகன் நல்ல சேதி சொல்லிட்டான்!'' என்றார்.

வரதராஜனும் அதை ஆமோதித்தார். பின் ஆவலே உருவாய், ''என்ன தேதிங்க அம்மா குறிச்சுக் கொடுத்திருக் கிறார்?'' என்று கேட்டார்.

''தை ஒன்று, தை மூன்று என்று ரெண்டு தேதியும் நல்லா இருக்காம். நாம மூணாம் தேதி கல்யாணம் வைச்சுக்கலாம். ஒண்ணாம் தேதி திருமாங்கல்யமும், முகூர்த்த புடவையும் வாங்கிடலாம். நாளைக்கு உங்க வீட்டில உள்ளவங்ககிட்ட சம்மதம் வாங்குங்க. அவங் களுக்கு ஓ.கே. என்றால் நாளை மறுநாள் அதாவது ஜனவரி ஒண்ணு... புது வருஷத்தன்று பத்திரிகை அடிக்கக் கொடுத்திடலாம். முகூர்த்த நாளுக்காக பத்திரிகை அடிக்காமல் வெயிட் பண்ணினால் முஹூர்த்த நாள் தள்ளிப் போகும். அப்புறம் உங்க ஆபரேஷனுக்குக் குறிச்சிருக்கிற தேதிக்கு முன்னால கல்யாணத்தை முடிக்க முடியாது. அதனால புது வருஷங்கிறது புதுப் பொலிவோடு கூடிய நாள்... நல்ல நாளா நினைச்சு நாம அன்னைக்கே பத்திரிகை அடிச்சுக்கலாம். இதைத் தான் நாங்க மூணு பேரும் காரிலே பேசிக்கிட்டு வந்தோம்.

உங்களுக்கு என்ன தோணுது?'' என்று பார்வதி வரதராஜனைப் பார்த்துக் கேட்க,

''நீங்க சொல்லுறபடியே செய்திடலாம்'' என்று வரதராஜனும் அவர்களது முடிவிற்கு ஒத்துக் கொண்டார்.

அப்பொழுது மித்ரன், ''நாளைக்கு உங்க ஹெல்த் கண்டிஷன் பற்றி உங்க வீட்டில எல்லோர்கிட்டயும் சொல்லப் போறீங்களா?'' என்று கேட்டான்.

''நீங்க வெளியே போயிருந்தபோது நான் அதைப் பற்றித் தான் யோசித்துக் கொண்டிருந்தேன். இப்பவே சொன்னால் எந்த நேரமும் அழுது குமிப்பாங்க. அப்புறம் கல்யாண வீடு மாதிரி இருக்காது. ஏற்கனவே எனக்காக எவ்வளவோ பொறுத்துப் போற உங்களுக்கு இவங்களோட அழுகை முகத்தைப் பார்த்தால் வெறுப்பா இருக்கும். அதனால நீங்க என் பொண்ணை விரும்பிக் கேட்டதால என் பொண்ணு ஜாதகத்தையும் உங்களோடதையும் பொருத்தம் பார்க்கப் போனேன். அந்த ஜோசியர் என் பொண்ணுக்கு இந்த மாசத்துக்குள்ளே கல்யாணம் பண்ணலை என்றால் இன்னும் ஆறு வருஷத்துக்குக் கல்யாணம் நடக்காது என்று சொல்லி விட்டதாகச் சொல்லிக்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டிருந்தவரை இடைமறித்த பார்வதி,

''மித்ரனுக்கு குரு பலன் முடியப் போகுது என்று சொல்லிவிடுங்க. இன்னைக்கு பார்த்தபோது ஜோசியர் இன்னும் ரெண்டு மாசத்திலே இவனுக்குக் கல்யாணம் பண்ணலை என்றால் ரெண்டு வருஷம் கழிச்சுத் தான் பண்ணனும் என்று சொன்னார். அதனால அவன் ஜாதகத்தின் பேரிலேயே பழியைப் போடுங்க. எல்லாம் ஒரு மாசத்துக்கு தானே?'' என்றார்.



''எல்லாத்தைப் பற்றியும் பேசினோம். மண்டபம் பற்றி ஒண்ணும் பேசலையே...'' என்று மகாதேவன் ஞாபகப்படுத்தினார்.

அதற்கு மித்ரன், ''நாளைக்கு இவங்க சம்மதம் சொன்ன பிறகு எல்லா மண்டபத்துக்கும் போன் செஞ்சு ஏதாவது கல்யாணம் கேன்சல் ஆனதினாலே மண்டபம் ஃப்ரீயா இருக்கா என்று கேட்டுப் பார்க்கணும் அங்கிள். அப்படி இல்லை என்றால் கோவிலில் வைச்சுக்கலாம். என்னம்மா சரி தானே?'' என்று மகாதேவனுக்கு விளக்கம் சொல்ல ஆரம்பித்தவன், பின் தாயைப் பார்த்து வினவினான்.

மகனைப் பார்த்து, ''சரிப்பா'' என்று சொன்னவர் வரதராஜனைப் பார்த்து, ''நாளைக்கு போன் செஞ்சு நல்ல சேதியா சொல்லுங்க. இப்போ நாங்க கிளம்புறோம். உடம்பைப் பார்த்துக்கோங்க!'' என்று சொல்லி விடைபெற்றார்.

# 6

மறுநாள் தூங்கி எழுந்ததுமே மகாதேவன் தனது வீட்டிற்குச் சென்றுவிட்டார். காலை ஏழு மணிபோல் ஊருக்குச் சென்றவர்கள் திரும்பி வந்தனர்.

வரதராஜனிடம் அவர் மனைவியும், பிள்ளைகளும் தாங்கள் சென்று தரிசித்து வந்த கோயில்களைப் பற்றி அளந்து கொண்டிருந்தனர்.

''நாங்க உங்க பக்கத்திலே இல்லை என்றதும் வாடிப் போயிட்டீங்களே பா.பேசாமல் நீங்களும் எங்க கூடவே

வந்து இருக்கலாம்'' என்று சஹானா சொன்ன பிறகே அமிர்தம் கணவரின் முகத்தைக் கூர்ந்து பார்த்தார்.

''என்னாச்சுங்க ஜுரமா?'' என்று அமிர்தம் கவலையுடன் கேட்டார்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. எல்லோரும் போய் ரெஸ்ட் எடுங்க. அர்ஜுன் நீ போய் காலைச் சாப்பாட்டை ஹோட்டலில் இருந்து வாங்கிட்டு வந்திடு'' என்று சொல்லித் தங்களது படுக்கையறைக்குள் நுழைந்தார்.

இன்னொரு படுக்கையறையை சஹானாவும், அர்ஜுனும் பகிர்ந்து கொள்கிறார்கள். அவர்களும் அவர்களது அறைக்குச் சென்று விட்டார்கள்.

வரதராஜன் தன் பின்னால் உள்ளே நுழைந்த மனைவியிடம், ''கதவைச் சாத்திவிட்டு வா. உன்கிட்ட கொஞ்சம் பேசணும்'' என்றார்.

அமிர்தம் வந்ததும் தன் அருகில் உட்காரச் சொல்லிவிட்டு, ''நம்ம சஹானா கல்யாணம் பற்றி நீ ஏதாவது யோசித்து வைச்சிருக்கியா? அவ அம்மாவா உனக்கு என்ன எதிர்பார்ப்பு இருக்கு?'' என்று கேட்டார்.

''அது பற்றி எல்லாம் எனக்கு என்னங்க தெரியும்? நீங்க பார்த்து எது செஞ்சாலும் எனக்கு சரிதான். இப்ப திடீர்னு எதுக்குக் கேட்குறீங்க?''

''சஹானாக்கு ஒரு வரன் வந்திருக்கு. நம்ம மகாதேவனுக்குத் தெரிஞ்ச குடும்பம். நல்ல குணசாலியா இருக்காங்க. ரொம்ப வசதியானவங்க. அந்தப் பையன் நம்ம பொண்ணைப் பார்த்திருக்கான். அவனுக்குப் பிடிச்சுப் போனதால விரும்பி வந்து கேட்டாங்க. உங்ககிட்ட எல்லாம் கேட்டுவிட்டுச் சொல்லுறேன் என்று சொல்லி இருக்கேன்.''



''நல்ல வரன் என்றால் முடிச்சிடலாம். வசதியானவங்க என்றால்...'' என்று அமிர்தம் இழுத்து நிறுத்த...

மனைவியின் கேள்வியைப் புரிந்து கொண்டவர், ''பொண்ணை மட்டும் தந்தால் போதும் என்று சொல்லிட்டாங்க'' என்றார்.

''அப்போ சஹானாவிடம் கேட்டுவிட்டுச் சம்மதம் சொல்லுங்க.''

''ஆனால் அவங்க பையன் ஜாதகத்திலே குரு பலன் முடியப் போகுதாம். அதனால இந்தத் தை முதல் வாரத்திலேயே கல்யாணம் வைக்கணும் என்று பிரியப்படுறாங்க.''

''ஓ! அப்படின்னா சஹானா ஒத்துக்குவாளான்னு தெரியலையே!''

''வா அவளையே கேட்டுவிடலாம்'' என்று மனைவியை அழைத்துக் கொண்டு வெளியே வந்தவர், ''அவங்க ரெண்டு பேரையும் கூட்டிட்டு வா!'' என்று சொல்லி சோபாவில் அமர்ந்தார்.

மகள் வந்தவுடன் அவளைப் பார்த்து, ''நீ யாரையாவது விரும்புகிறாயா சஹானா?'' என்று நேரடியாக விஷயத்திற்கே வந்தார்.

தந்தையிடம் இருந்து இப்படி ஒரு கேள்வியை எதிர்பாராத சஹானா, ''என்னப்பா திடீர்னு இப்படிக் கேட்குறீங்க? அப்படி இருந்தால் உங்ககிட்டே சொல்லியிருக்க மாட்டேனா?'' என்று எதிர் கேள்வி கேட்டாள்.

''உன்னை ஒருத்தவங்க விரும்பி பெண் கேட்குறாங்க. ரொம்ப நல்ல குடும்பம்'' என்று மித்ரனைப் பற்றித் தகவல் சொன்னார்.

''உங்களுக்குப் பிடிச்சா எனக்கும் ஓ.கே. தான் பா.''

''சந்தோஷம் மா. ஆனா அவங்க ஜனவரி பதினாறாம் தேதி கல்யாணம் வைக்கணும் என்று சொல்றாங்க...'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே,

''வாட்ட்ட்ட்? இன்னும் பதினைஞ்சு நாளிலா? எப் படிப்பா முடியும்? ரெண்டு வருஷம் கழிச்சுத் தான் கல் யாணம் பண்ணனும் அப்படின்னு நான் நினைச்சுக் கிட்டு இருக்கேன். அதுதான் முடியாது என்றால் அட் லீஸ்ட் ஆறு மாசம் காத்திருக்கச் சொல்லுங்க'' என்றாள்.

ஜாதகம், குரு பார்வை என்று மீண்டும் ஒரு முறை அதே பொய்யை வரதராஜன் அரங்கேற்றினார்.

''அப்படின்னா அவங்களை வேற பொண்ணுப் பார்த் துக்கச் சொல்லுங்கப்பா!'' என்று சஹானா தன் முடிவை அறிவித்தாள்.

வெளியே தனது நிலையைச் சொல்லவும் முடியாமல் மகளைச் சம்மதிக்க வைக்க வழியும் தெரியாத வரதராஜன் குழம்பித் தவித்தார். ஒரு நிமிடம் கண்மூடி அமைதி காத்தவர் எழுந்து நின்று மூவரையும் ஒரு பார்வை பார்த் தார்.

பின் அழுத்தமாக, ''இந்தக் கல்யாணம் அவங்க குறிச்ச தேதியில் நடக்கப் போகுது. இது என்னோட ஆசை, விருப்பம், ஆணை. இதிலே எதை வேண்டுமானாலும் எடுத்துக்கோங்க!'' என்று சொல்லிவிட்டு மடமடவென்று தனது அறைக்குள் சென்று மறைந்தார்.

மூவருமே விக்கித்துத் தான் போனார்கள். அவர் இது மாதிரி பேசி அவர்கள் பார்த்ததில்லை என்பதால் திகைத் துப் போயினர்.

இதில் அதிகம் திகைத்தது சஹானா தான், ஏனென் றால் பாதிக்கப்படப் போவது அவளல்லவா! அவளுக்கு



மிகுந்த கவலையாக இருந்தது. இதுவரை தந்தையை மீறி அவள் எதுவும் செய்ததில்லை. மீறும் சந்தர்ப்பத்தை வரதராஜன் இதுநாள் வரை ஏற்படுத்தவில்லை என்று சொல்ல வேண்டுமோ?

வரதராஜன் எழுந்து உள்ளே சென்றதும் அர்ஜூன் காலைச் சிற்றுண்டியை வாங்கக் கடைக்குச் சென்றுவிட் டான்.

அமிர்தம் சஹானாவிடம், ''ஏன் மா மாப்பிள்ளையை உனக்குப் பிடிக்கலையா? ரொம்ப அழகா இருக்கணும்ன்னு எதிர்பார்க்கிறாயா?'' என மெல்ல விசாரித்தார்.

''அப்பா போட்டோ எதுவும் காட்டலையே மா. அத னால அவர் அழகா இல்லையான்னு எப்படிச் சொல்ல முடியும்? எனக்கு வெளித்தோற்றம் ஒரு பொருட்டே இல்லை மா. என்னோட எதிர்பார்ப்பு என்னவென்றால் எனக்கு வரப் போறவர் நல்லவரா இருக்கணும். எனக்கு ஈக்குவலா படிச்சு இருக்கணும். நல்ல வேலையில் இருக் கணும். அவ்வளவு தான். அப்பா இதை எல்லாம் விசா ரிக்காமல் இந்த வரனை எனக்குப் பேசி முடிக்க மாட்டார். நான் அப்பாவை நம்புறேன்'' என்றாள்.

''அப்புறம் என்னம்மா உனக்குப் பிரச்சனை?''

''எனக்கு என் கிளாஸ்மேட் சித்ரா நிலை வந்து விடுமோன்னு பயமா இருக்குமா?''

''அப்படி என்ன நிலைமைமா அந்த சித்ராக்கு?''

''அவளுக்கு இரண்டாவது வருடம் படிக்கும் பொழுதே கல்யாணம் நடந்தது. அவள் கணவனின் குடும்பம் கோவையில இருந்ததால் அவள் ஹாஸ்டலைக் காலி பண்ணிட்டு டே-ஸ்காலரா வர ஆரம்பிச்சாள். கல் யாணம் ஆன உடன் அவளைப் பாதி பேர் ஒதுக்கி

வைச்சாங்கன்னா அவ பாதி பேரை ஒதுக்கி வைச்சாள். பின்னே அவ கிட்டே போய்...'' என்று சொல்லிக் கொண்டே வந்தவள் இதை எப்படித் தாயிடம் சொல்வது என்று தயங்கினாள். ஆனால் தன் பிரச்சனையைச் சொல்லாமல் விளங்க வைக்க முடியாது என நினைத்தவளாய் மீண்டும் தொடர்ந்தாள்.

''அவ கிட்டே போய் 'நேத்து நைட் என்ன ஒரே மஜாவா?' என்று விவஸ்தை இல்லாமல் கேள்வி கேட்டால் அவள் என்ன பண்ணுவாள்? அந்தக் கேள்வியை அவ க்ளோஸ் பிரண்ட் கேட்டால் அவ வெட்கப்படலாம்... சும்மா போற வரவங்க எல்லாம் கேட்டால் வேதனை தான் படணும். எனக்கும் அப்படி ஒரு இக்கட்டு வருமா? இப்படி ஒரு பிரச்சனை இருக்கு என்று நான் எப்படி மா அப்பாகிட்டே சொல்ல முடியும்? அப்பாகிட்டேயே சொல்ல முடியலை என்றால் யார் என்றே தெரியாத மூணாம் மனுஷன்கிட்டே ஒரு பொண்ணா இருந்துக்கிட்டு இந்தப் பிரச்சனைப் பற்றி நான் எப்படிப் பேச முடியும்?'' என்று கேட்டு நிறுத்தினாள்.

எனக்குப் புரிகிறது என்பது போல் அமிர்தம் அவளது கையை அழுத்திக் கொடுத்தார்.

''பிரண்ட்ஸ் மட்டும் இல்லை... எங்க புரொபஸர் ஒருத்தர் இருக்காரு... அந்த ஆளு தொல்லை தான் இன்னும் அதிகம். ஏற்கனவே அந்த ஆளு பொண்ணுங்களைக் கண்டால் ஜொள்ளு ஊத்துவார். சித்ராக்கு கல்யாணம் ஆனது தெரிஞ்சவுடன் அந்த ஆளு கேட்குற கேள்விகளால் அவள் அடைந்த அவமானம் தான் அதிகம். இதுல கொடுமை என்னன்னா அந்த ஆளு தான் எனக்கு பிராஜெக்ட் ஹெட். அதனால அடுத்த நாலு மாசம்



அந்தாளு முகத்துல தான் நான் முழிச்சாகணும். அம்மா ப்ளீஸ் நீங்க அப்பா கிட்டே எடுத்துச் சொல்லி ஒரு அஞ்சு மாசம் இந்தக் கல்யாணத்தைத் தள்ளி வைக்கச் சொல்லுங்க மா.'' என்று சஹானா கெஞ்சினாள்.

சரி என்று தலையசைத்த அமிர்தம் கணவனை நாடித் தங்களது அறைக்குள் சென்றார்.

சிறிது நேரம் கழித்துத் திரும்பி வந்தவர் அவளது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது எனும் விதமாக உதட்டைப் பிதுக்கித் தலையை இடவலமாக ஆட்டினார். சஹானா வெறுத்துப் போனாள்.

'ஏன் அப்பா இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறார்? எனக்கு இந்த மாப்பிள்ளையைப் பிடிக்குதா பிடிக்கலையா என் பதில் மட்டும் தான் சாய்ஸ் கொடுப்பாரா? என் கல்யாணம் எப்போ நடக்கணும் என்று நான் எதுவும் தனிப்பட்டு ஆசை வைத்துக் கொள்ளக் கூடாதா? என்னுடைய விருப்பத்தைப் பரிசீலனைப் பண்ண மாட்டாரா?

பணத்தைக் காட்டி அப்பாவை மயக்கிட்டாங்களா அந்த மாப்பிள்ளை வீட்டுக்காரங்க? ஆனால் அப்பா பணத்தை என்றைக்குமே பெருசா நினைக்க மாட்டாரே! ப்ச்சு...

அந்த மாப்பிள்ளை கிட்டே பேசிப் பார்ப்போமா? மி..த்..ர..ன்.. ம்ம்ம் மித்ரன் என்றால் பிரண்ட். ஒரு பிரண்ட் என் பிரச்சனையைக் காது கொடுத்துக் கேட்பாரா? ஆனால் அப்படிக் கேட்பவரா இருந்தால் என் விருப்பம் தெரியும் முன்பே இப்படி தேதி எல்லாம் குறிச்சு முடிச்சிருப்பாரா?' என சஹானா மனதுக்குள் புலம்பினாள்.

வரதராஜன் மித்ரனுக்கும், மகாதேவனுக்கும் போன் செய்து விஷயத்தைத் தெரிவித்தார்.

'நான் சஹானாவிடம் தனியா பேசணும்' என்ற அறிவிப்போடு, காலை பத்து மணி போல் மித்ரன் அவரின் வீட்டிற்கு வந்து நின்றான்.

சஹானாவிற்கு அவனைப் பார்க்கப் பிடிக்கவில்லை. தலை குனிந்து பேசாது நின்றாள்.

மித்ரன் வரதராஜனைப் பார்த்து, "மேலே மொட்டை மாடியில் போய் பேசட்டுமா? யாராவது வருவாங்களா?" என்று கேட்டான்.

அந்த அபார்ட்மென்ட்டில் மொத்தம் ஆறு வீடுகள் இருந்தன. இவர்களது வீடு தரைதளத்தில் இருந்தது. அதனால் தான் அவன் அவ்வாறு விளக்கம் கேட்டான்.

"இல்லை நீங்க போங்க. இந்த டைமுக்கு யாரும் இருக்க மாட்டார்கள்" என்று வரதராஜன் சொல்ல, அவன் படி ஏறி மொட்டை மாடிக்குச் சென்றான். வரதராஜனின் பார்வை வீச்சிற்கு அடிபணிந்து சஹானாவும் அவன் பின்னோடு சென்றாள்.

சஹானாவுடன் ஒரு வாக்குவாதத்தை எதிர்பார்த்தே அவன் கீழே அவர்களது வீட்டில் இருந்து கொண்டு அவளிடம் பேச விருப்பப்படவில்லை. அதே சமயம் வெயிலில் மொட்டை மாடியில் நின்று கொண்டா பேசுவது என நினைத்துச் சென்றவனுக்கு அங்கிருந்த வேப்பமர நிழலைப் பார்த்ததும் அப்பாடா என்ற உணர்வு வந்தது. அதனருகே சென்றவன் மொட்டை மாடியின் கைப்பிடிச் சுவரில் சாய்ந்து நின்று கைகளை மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு சஹானாவின் வரவிற்காகக் காத்திருந்தான்.

தலைகுனிந்த வண்ணம் வந்த நின்றவளிடம், "உங்களுக்கு என்னைப் பிடிக்கலையா? உங்க அப்பா வற்புறுத்தினாரா?" என்று அதிரடியாகக் கேட்டான்.



அவனது கேள்வியில் நிமிர்ந்து அவனை முதன் முதலாகப் பார்த்தவளுக்கு, 'இவனைப் பிடிக்காமல் போகுமா என்ன!' என்றே தோன்றியது. அவள் அவனுக்குப் பதில் சொல்ல முனையவில்லை.

அவன் அடுத்த கேள்வியைக் கேட்டான்.

"உங்களுக்கு வேற யாரையாவது பிடிச்சிருக்கா?"

இதற்கு மட்டும் 'இல்லை' எனும் விதமாக வேகமாக ஒரு தலையாட்டல் அவளிடம் பிறந்தது.

வார்த்தைகளின்றி வந்த அவளது பதில் அவன் வயிற்றில் பால் வார்த்தது.

"இப்போ கல்யாணம் பண்ணிக்கப் பிடிக்கலையா?"

'ஆமாம்' என்னும் விதமாக இப்பொழுது அவள் தலை ஆடியது. அது தான் அவனுக்குத் தெரியுமே! ஆனால் என்ன செய்வது? என்று நினைத்தவன்,

"வேற வழி இல்லையே. என் ஜாதகம்..." என்று அவன் தொடங்கவும் அவனை இடைமறித்து அவள் முதல் முறையாக வாய் திறந்தாள்.

"இந்தக் காலத்திலே போய் அதை எல்லாமா நம்பு நீங்க?"

"எனக்குக் கொஞ்சம் நம்பிக்கை இருக்கு. என் அம்மா ஜாதகத்தை முழுசா நம்புவாங்க" என்று பொய்யை அள்ளிவிட்டான்.

"உங்க அம்மாவை உங்களால கன்வின்ஸ் பண்ண முடியாதா?"

"உங்க அப்பாவை உன்னால் கன்வின்ஸ் பண்ண முடிஞ்சதா?"

"நீங்க தான் அவரை நல்லா மூளைச் சலவை செஞ்சு வைச்சு இருக்கீங்களே! எங்கப்பா இத்தனை வருஷத்திலே இப்படிப் பேசினதே கிடையாது தெரியுமா?"

அவள் குரலில் தொனித்த வலி அவனை, ''சரி அதுக்கு இப்போ என்ன செய்யலாம்?'' என்று கேட்க வைத்தது.

''பேசாமல் நீங்கள் வேற பொண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கோங்க. என்னை விட்டுவிடுங்க.''

தன் மனம் கவர்ந்தவள் தன்னை முழு மனதோடு ஏற்றுக் கொள்ள மறுப்பாள். அவள் கோபத்தில் கூடக் குறைவாக ஏதாவது பேசினாலும் பொறுத்துப் போக வேண்டும் என்ற முடிவோடு வந்திருந்த மித்ரனுக்கு அவள் 'வேறு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்' என்று சொன்னவுடன் கோபம் வந்து விட்டது.

''யாரைக் கல்யாணம் பண்ணனும் என்று எனக்குத் தெரியும். நீ ஒண்ணும் எனக்கு யோசனை சொல்ல வேண்டாம்'' என்று சொல்லிவிட்டு விருட்டென்று அவளைக் கடந்து சென்றான்.

'இவன் யார் என் மீது கோபப்பட?' என்ற எண்ணம் தோன்றியவுடன், ''அதே மாதிரி நானும் யாரை, எப்போ கல்யாணம் பண்ணனும் என்று முடிவு எடுக்கலாம் தானே?! எனக்கு அந்த உரிமை இல்லையா? பேரைப் பாரு பேரை... மித்ரனாம் மித்ரன். நீ எல்லோருக்கும் மித்ருவா இருக்கலாம் டா. ஆனால் எனக்கு மட்டும்... நீ என் வாழ்க்கையிலே வந்த சத்ரு டா!'' என்று தனக்குத் தானே சத்தமாகப் பேசிக் கொண்டே திரும்பியவள் அதிர்ந்தாள்.

அங்கே 'அவசரமும், கோபமும் வேண்டாமே மித்ரன்!' என்று தனக்குத் தானே அறிவுறுத்திக் கொண்டு கீழே போகாமல் திரும்பி வந்தவன் அவள் பேசியதைக் கேட்டுக் கொண்டு நின்றிருந்தான்.

கண்களை மூடிக் கொண்டு கசங்கிய முகத்துடன் நின்று கொண்டிருந்தவனைப் பார்த்து சஹானா மனம்



சுருங்கினாள். இதுவரை யாரையும் அவமானப் படுத்தியிராத சஹானாவிற்கு அவனது தோற்றம் சங்கடத்தை அளித்தது.

சஹானாவிடம் இருந்து இப்படி ஒரு பேச்சு வந்த பின்பும் இங்கு நிற்க வேண்டுமா என்று சுயகவுரவம் கேள்வி எழுப்ப... ஆசை கொண்ட மனமோ அதையெல்லாம் பார்த்தால் காரியம் நடக்குமா என்று எதிர் கேள்வி கேட்க... கடைசியில் சுயகவுரவத்தை ஆசை கொண்ட மனது வெல்ல ஒன்றும் பேசாமல் மீண்டும் அதே மரத்தடியில் போய் நின்று கொண்டு தெருவை வேடிக்கைப் பார்த்தான்.

அவனது அருகே சென்றவள், ''சாரி. ஏதோ ப்ளோவிலே சொல்லிட்டேன்'' என்றாள்.

சில நொடிகள் மௌனம் காத்தவன் தொண்டையைச் செருமிக் கொண்டு, ''ம்ம்ம். இப்போ நான் என்ன செய்யணும்?'' என்று அவளையே கேள்வி கேட்டான்.

''கல்யாணத்தை ஒரு ரெண்டு வருஷம் தள்ளி வைக்க முடியாதா?''

''ரெண்டு வருஷமாஆஆ?'' என்று அவன் அதிர,

''அட்லீஸ்ட் மே மாசத்துக்கு அப்புறமா வைக்க முடியாதா?'' என்று கேட்டாள்.

முடியாது என்னும் விதமாகத் தலையசைத்து மறுத்தவன், ''நீ காலேஜ் முடிச்ச பின்னாலே என்ன செய்யுறதா முடிவு பண்ணி வைச்சிருந்தாய்? கேம்பஸில் வேலை கிடைச்சிருக்கா?'' என்று கேட்டான்.

''ஆமாம் சென்னையிலே தான் வேலை கிடைச்சிருக்கு.''

''நீ வேலைக்குப் போறதிலே எனக்கோ என் அம்மாவுக்கோ எந்தப் பிரச்சனையும் இல்லை. இந்தக்

கல்யாணத்தினால உனக்கு வேற என்ன பிரச்சனை வரும் என்று நீ நினைக்கிறாய்?''

'நான் வேலைக்குப் போறதுக்கு நீங்க என்ன பெர்மிஷன் தர வேண்டியிருக்கு' என மனதில் திட்டிக் கொண்டு, ''கல்யாணம் முடிச்சிட்டு எப்படி போய் காலேஜிலே படிக்கிறது?'' என்று கேட்டாள்.

''ஏன் அதே மாதிரி ஹாஸ்டலிலே தங்கித் தான்.''

''ப்ச்சு... அதில்லை. என் கிளாஸ்மேட் ஒருத்திக்கு நாங்க இரண்டாம் வருஷம் படிக்கும் போதே கல்யாணம் ஆகிடுச்சு. அவளுக்குக் கல்யாணம் ஆன உடனே எல்லோரும் அவகிட்டே சகஜமா பேசுறதை விட்டுட்டாங்க. நாளைக்கு எனக்கும் அந்த நிலைமை தானே வரும்?''

கல்யாணம் ஆன பெண்கள் பொதுவாக கணவன், மாமியார், நாத்தனார் என்று பேசத் தொடங்கி விடுவார்கள் என்று நினைத்து உடனிருக்கும் பிற பெண்கள் எல்லாம் ஒதுக்கி வைத்ததை அவன் படிக்கும் காலத்தில் அவனே பார்த்திருந்ததால் அவளுக்கு என்ன பதில் சொல்வதென்று மித்ரனுக்குத் தெரியவில்லை.

''இது தவிர வேற என்ன பிரச்சனை இருக்கு?'' என்று மித்ரன் கேட்டவுடன்,

''என்னால சரியா படிக்க முடியாமல் போயிடுச்சுன்னா... இது தான் என்னோட கடைசி செமஸ்டர். இதுல போய் நான் நல்லா ஸ்கோர் பண்ணலைன்னால் இத்தனை வருஷ உழைப்பும் வீணாகப் போயிடுமே. அதனால ப்ளீஸ் ஒரு ஆறு மாசம் கல்யாணத்தை ஒத்திப் போடலாமே!'' என்று அவள் கெஞ்ச,

'நீ கேட்காமலே உன் விருப்பத்தை எல்லாம் நான் நிறைவேற்றணும்னு என்று காத்துக்கிட்டு இருக்கேன். ஆனால் முதன் முதலா நீ வாய்விட்டு என்கிட்டே கேட்பதை நிறைவேற்ற முடியாத சூழ்நிலையிலே இருக்கேனே! நான் என்ன செய்வேன்' என மனதில் புலம்பியவன் அவளிடம்,



''உனக்கு என்னால ஒரே ஒரு உறுதி மொழி தான் தரமுடியும். உன்னை எந்த விதத்திலும் நான் தொந்தரவு செய்ய மாட்டேன். இன்னும் சொல்லப் போனால் நீயா வந்து என்னிடம் சம்மதம் சொல்லும் வரை நான் கணவன் என்ற உரிமையை எடுத்துக்க மாட்டேன். இதை மட்டும் தான் என்னால உனக்கு உறுதி கொடுக்க முடியும். மத்தபடி நீ கேட்பது மாதிரி கல்யாணத்தைத் தள்ளி வைக்க முடியாது'' என்று சொன்னான்.

''எங்கப்பா நான் என்ன சொன்னாலும் கேட்பார். எனக்குக் கணவனாக வருபவரும் அப்படியே இருக்கணும்னு எதிர்பார்த்தேன். ஆனால் என் எதிர்பார்ப்பு வீணாகிப் போச்சு. உங்க இஷ்டப்படியே நடத்துங்க!'' என்று சொல்லி மடமடவென்று படி இறங்கிப் போய்விட்டாள்.

இங்கு சஹானாவும், மித்ரனும் பேசிக் கொண்டிருந்த அதே சமயம் மகாதேவன் வீட்டில் அர்ஜுன் அவரிடம் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தான்.

''ஏன் மாமா அக்காக்குப் பார்த்திருக்கும் மாப்பிள்ளை குடும்பம் நல்ல குடும்பம் தானா?''

''அதிலே உனக்கு என்னடா சந்தேகம். பணத்தைப் பெருசா நினைக்காதவங்க. மனுஷங்களை மதிக்கத் தெரிஞ்சவங்க'' என்று மகாதேவன் சொன்னதும்,

''அப்பாவைக் கட்டாயப்படுத்தி ஒத்துக்க வைச்சுட்டாங்களா?'' என்றான்.

'க்கும். உங்க அப்பன் தான் அவங்களைக் கட்டாயப் படுத்தினான்' என்று மனதில் நினைத்ததை வெளியே

சொல்ல முடியாதவராய், ''உனக்கு ஏன்டா இப்படி ஒரு சந்தேகம்?'' என்று கேட்டார்.

''இல்லை அப்பா ஏதோ வருத்தமா இருக்குற மாதிரியே இருக்கார். அவருக்குப் பிடிச்ச கல்யாணம் என்றால் முகத்திலே ஒரு சந்தோஷம் வேண்டாமா? என்னமோ டல்லா இருக்கார். அதான் கேட்டேன்.''

''நீங்க எல்லாம் சம்மதிப்பீங்களோ, மாட்டீங்களோ என்று டென்ஷனா இருந்து இருப்பான். நீ எதையும் நினைச்சு மனசைக் குழப்பிக்காமல் போய் பாடத்தை படி. ஏற்கனவே நாலு நாள் ரிலாக்ஸ் பண்ணியாச்சு'' என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தார்.

'டேய் வரதா! நீ நினைக்குற மாதிரி உன் பையன் அப்படி ஒண்ணும் சின்னவன் இல்லைடா. வளர்ந்துட்டான். பொறுப்பு கூடி இருக்கு' என்று நினைத்துக் கொண்டார்.

இங்கு சஹானா வீட்டில்...

மொட்டை மாடியில் இருந்து கீழே இறங்கிய மகள் தன்னிடம் நின்று பேசாமல் விருட்டென்று அவளது அறைக்குள் நுழைந்ததைப் பார்த்த வரதராஜன் தனது இயலாமையை நினைத்துப் பெருமூச்சு விட்டார்.

சஹானா கீழே சென்ற பின்னும் மித்ரன் சிறிது நேரம் அங்கேயே நின்றிருந்தான்.

'ம்ம்ம் இவளை எப்படி சமாளிக்கப் போகிறேன் என்று தெரியலையே! முதல் கோணல் முற்றிலும் கோணல் என்று ஆகிவிடக் கூடாது இறைவா!' என்று பிரார்த்தித்துக் கொண்டே கீழே இறங்கி வந்தான்.

ஆவலே வடிவாய் அவனது முகம் பார்த்த வரதராஜனிடம், ''அம்மா சொன்னபடி தை மூணாம் தேதியே கல்யாணம் வைச்சுக்கலாம் மாமா!'' என்று சொன்னவுடன்,



''ரொம்ப சந்தோஷம் மாப்பிள்ளை. உட்காருங்க. அமிர்தம் நீங்க வந்த உடனே கேசரி பண்ண ஆரம்பிச்சாள். இனிப்பான செய்தியை இனிப்போடு கொண்டாடலாம்'' என்று சொல்லி அவனை ஹாலில் அமர்த்திவிட்டு அடுக்களைக்குள் சென்று மனைவியிடம் விஷயத்தைச் சொல்ல விரைந்தார்.

அவர் தந்த கேசரியை ருசித்துவிட்டு மித்ரன் தன்னோட லாப் டாப் பேகுடன் கிளம்ப எத்தனிக்க வரதராஜன் அவனைக்கூட கவனிக்காமல் எதையோ மிகத் தீவிரமாகத் தேடிக் கொண்டிருந்தார்.

''என்ன மாமா தேடுறீங்க?''

''இல்ல மாப்பிள்ளை, நேத்தே உங்க அம்மா சஹானா போட்டோ கேட்டாங்க. அந்த ஆல்பம் இங்க தான் இருந்துச்சு. அதான் தேடுறேன்.''

மித்ரன் ஒரு வெட்கச் சிரிப்பை உதிர்த்துவிட்டு, ''மாமா நான் நேத்து போட்டோ வேண்டாம் என்று சொல்லும் போது அவ உங்க பொண்ணு. இப்போ என்னோட வருங்கால மனைவி. அதான் நீங்க தர வரைக்கும் நான் வெயிட் பண்ணாமல் நீங்க கிச்சனுக்குப் போன போது நானே சுட்டுட்டேன்'' என்று சொல்லித் தன் பேகில் இருந்து ஆல்பத்தை எடுத்துக் காட்டினான்.

''ஹா ஹா'' என்று வரதாஜன் சிரித்துக் கொண்டிருக்கும் பொழுது அர்ஜுன் உள்ளே வந்தான். என்ன தான் மகாதேவன் சமாதானம் செய்தாலும் அர்ஜுன் மனம் தெளிவடையாமலே தான் வந்தான். ஆனால் வீட்டை நெருங்கும் பொழுது கேட்ட தந்தையின் சிரிப்பு சத்தம் அவனது மனக் கலக்கத்தைப் பாதியாகக் குறைத்தது.

காலையில் அவர்கள் வந்து இறங்கியதில் இருந்து இப்பொழுது தான் தந்தை சிரிக்கவே செய்கிறார் என்ற

நினைப்புடனே உள்ளே வந்தவன் ஹாலில் இருந்த புதிய மனிதனைப் பார்த்துத் திகைத்தான்.

உள்ளே நுழைபவனைப் பார்த்து மித்ரன், "அர்ஜுன்..." என்று தயங்கி இழுக்க...

"ஆமா மாப்பிள்ளை, என் பையன் அர்ஜுன் தான்" என்று சொன்னவர் மகனிடம் திரும்பி,

"இவர் தான் நம்ம சஹானாவைக் கல்யாணம் பண்ணப் போகிறவர்" என்று சொன்னவுடன் அர்ஜுனின் மீதிக் கலக்கமும் மறைந்தது.

பணக்கார சம்பந்தம்... அவசர அவசரமாகத் திருமணம் என்றவுடன் மாப்பிள்ளையிடம் ஏதும் குறையோ என்று நினைத்துக் கலங்கிக் கொண்டிருந்த அர்ஜுன், ஆண்மையின் மொத்த உருவமாய் வந்து நிற்கும் மித்ரனைப் பார்த்ததும் கலக்கம் அகன்றவனாய் பெரிதாகப் புன்னகைத்தான்.

"அப்புறமா பார்க்கலாம் அர்ஜுன். மண்டபம் கிடைக்குதா என்று பார்க்கணும் நிறைய வேலை இருக்கு. நான் கிளம்புறேன்" என்று சொல்லி அனைவரிடமும் விடை பெற்றான். உள்ளே சென்ற சஹானா வெளியே எட்டியும் பார்க்கவில்லை.

இந்த அவசரக் கல்யாணத்தைப் பற்றி வயதில் சின்னவனான அர்ஜுன் ஆராய்ந்த அளவிற்குக் கூட வீட்டில் இருந்த இரு பெண்களும் ஆராயவில்லை. அமிர்தத்திற்கு கணவனை மீறிச் சிந்தித்துப் பழக்கமில்லை.

சஹானாவிற்குப் பிடிக்காத திருமணம் என்றதிலேயே பாதி மூளை மரத்துப் போனது. மித்ரனின் வற்புறுத்தலே தந்தையின் செயலுக்கான காரணம் என்று அவளே ஒரு முடிவிற்கு வந்துவிட்டாள்.



மித்ரன் சஹானா வீட்டிலிருந்து சென்ற ஐந்தாவது நிமிடமே வரதராஜனுக்கு போன் செய்து அரசியல் கூட்டத்திற்கென்று பதிவு செய்து வைத்திருந்த திருமண மண்டபம் கூட்டம் ரத்தானதால் அன்றைய தேதியில் ப்ரீயாக இருப்பதாகக் கூறி அவன் அதற்குப் பணம் கட்டச் செல்வதாகக் கூறினான்.

வரதராஜன் இதை வீட்டினரிடம் சந்தோஷமாகப் பகிர்ந்தார்.

# 7

சஹானா, தன் அறைத் தோழியான காவ்யாவின் வீட்டிற்குச் சென்று வரத் தீர்மானித்தாள். காவ்யாவின் வீடும் சென்னையிலே... அதுவும் சஹானா இருக்கும் ஏரியாவிற்கு அருகில் உள்ள ஏரியாவில் தான் உள்ளது.

தோழியிடம் தன் திருமணம் பற்றிக் கூறுவதற்காக அவள் அங்கு செல்ல... காவ்யாவின் பாட்டி இறந்து போனதால் அவர்கள் அனைவரும் ஊருக்குச் செல்வதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். அதனால் விவரத்தை தெரிவிக்காமலே சஹானா வீடு திரும்பினாள்.

அவள் வீடு வருவதற்கு ஐந்து நிமிடம் முன்பு தான் பார்வதி போன் செய்து தான் நேரில் சஹானாவைப் பார்க்க வரப் போவதாக அறிவித்திருந்தார்.

அதை சஹானாவிடம் அமிர்தம் சொன்னவுடன், அவளுக்கு ஆயாசமாக வந்தது. காலையில் பையன் வந்தான். இப்ப அம்மாவா? இந்த அம்மா என்ன

சொல்லக் காத்திருக்காங்களோ?! என்று பெருமூச்சு விட்டாள்.

ஆனால் பார்வதியைப் பார்த்த மாத்திரத்திலேயே தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டாள்.

இரு பெரிய பைகளை டிரைவர் உள்ளே கொண்டு வந்து வைத்துவிட்டு அகன்றதும் அன்னையின் கண் ஜாடையில் சஹானா பார்வதியின் காலில் விழுந்து நமஸ்கரித்தாள்.

அவளை ஆசிர்வதித்த பார்வதி அவள் தாடையை பிடித்து, ''எவ்வளவு அழகா இருக்க!'' என்று கொஞ்சினார், பின் அவளது நீண்ட பின்னலைப் பார்த்து, ''இவ்வளவு நீள ஜடையா!'' என்று வியந்தவர், ''கல்யாணம் முடிந்ததும் என் கூட என் சொந்தக்காரங்க வீட்டிற்கு வரியா?'' என்று கேட்டார்.

எதற்கு என்பது போல் சஹானா பார்க்க...

''இல்லை மா. அவ மகளுக்கு முடி அதிகம் என்று சொல்லி இன்னொரு பொண்ணை ஒரு கல்யாணத்திலே வைச்சு ரொம்ப கிண்டல் பண்ணிக்கிட்டு இருந்தாங்க அந்த அம்மாவும், மகளும். பாவம் அந்த பொண்ணு. முடி கம்மியா இருக்கிறதுக்கு அவ என்ன பண்ணுவாள்? முடி கம்மியா இருக்கலாம். மூளை தான் கம்மியா இருக்கக் கூடாது. நான் சொல்லுறது சரி தானே? அந்த அம்மா முன்னாடி நீ இப்படியும், அப்படியும் நாலு நடை நடந்துட்டு வரணும்'' என்று பார்வதி சொன்னதும் சஹானாவும், அர்ஜுனும் வந்த சிரிப்பை அடக்க ரொம்பவே பாடுபட்டனர்.

''அட பிள்ளைங்களா! சிரிப்பு வந்தா சிரிங்க. எதுக்கு அடக்குறீங்க?'' என்று பார்வதி கேட்டவுடன் அவர்கள் பக்கென்று சிரித்தனர்.



சிரித்துக் கொண்டே அர்ஜுன், ''ஏன் அத்தை! சும்மா நடந்தால் மட்டும் போதுமா? இல்லை இடையை வெட்டி வெட்டி நடக்கணுமா? ஏன் கேட்குறேன் என்றால் சஹானாவை இப்ப இருந்தே அதுக்குப் பயிற்சி எடுத்துக்கச் சொல்லணும் இல்ல'' என்றான்.

சிறிது யோசனைக்குப் பின், ''அது ரொம்ப செயற்கையா இருக்கும் அர்ஜுன். அதனால சாதாரண நடையே போதும்'' என்று சொன்னதும் அனைவருமே புன்னகைத்தனர்.

அவரது பழகும் தன்மையைப் பார்த்து அனைவரும் மனம் குளிர்ந்தனர்.

பார்வதி, ''மறந்தே போயிட்டேன் பாரு'' என்று சொல்லி ஒரு பையை எடுத்து அதன் மேல் பூவையும் வைத்து சஹானா கையில் கொடுத்தார்.

''முதல் முதலா பார்க்குறேன் இல்லையா? அதான் உனக்குப் புடவை வாங்கி வந்தேன். கிரிதர் தான் வாங்கலாம் என்று நினைச்சேன். ஆனா இப்போ ஒரு டைலரை வரச் சொல்லியிருக்கேன். அந்தப் பொண்ணு நமக்கு சீக்கிரமா தைச்சுக் கொடுக்கும். நாம முகூர்த்தப் புடவை எடுத்த ரெண்டாவது நாளிலே கல்யாணம் என்பதால் கல்யாண பிளவுஸை அவ்வளவு சீக்கிரமா யாரும் தைக்கத் தரமாட்டாங்க. பொங்கல் சமயம் வேற... அதான் இன்னைக்கு இந்த சேலைக்கான பிளவுஸை தைக்கக் கொடுத்து விடு. அவங்க தைக்கிற பிளவுஸ் உனக்குப் பிடிக்குதான்னு பாரு. திருத்தம் எதுவும் இருந்தால் இப்பவே செஞ்சுக்கலாம்'' என்று சொன்னார்.

''சரிங்க அத்தை'' என்று சொல்லி சஹானா பெற்றுக் கொண்டவுடன் பார்வதி இன்னொரு பையை அர்ஜுனிற்குப் பரிசளித்தார்.

''எனக்கு எதுக்கு அத்தை?'' என்று அர்ஜுன் கேட்டதற்கு.

''எனக்கு நீங்க ரெண்டு பேரும் ஒண்ணு தான் பா'' என்று சொன்னார்.

இன்னொரு பையில் இருந்த பழங்கள் மற்றும் இனிப்புகள் அடங்கிய பையை அமிர்தத்திடம் கொடுத்தார். பின் அவர்களோடு சகஜமாக சிறிது நேரம் உரையாடி விட்டுச் சென்றார். சஹானாவிற்கு காலையில் திருமணப் பேச்சு தொடங்கியதில் இருந்து உண்டான கலக்கம் மறைந்தது.

மாமியார்... திருமணத்திற்குப் பின் ஒரு பெண்ணிற்கு அமையும் மிக முக்கியமான உறவு! அவர் நல்லவராய் அமைந்ததில் மொத்த குடும்பத்திற்கும் பரம சந்தோஷம்.

பார்வதி சொன்னது போல சிறிது நேரத்தில் அந்த டைலர் பெண்ணும் வந்து அளவு எடுத்துவிட்டுச் சென்றாள். அன்றே தைத்தும் அனுப்பி வைத்தாள். முகூர்த்த பிளவுஸில் என்ன மாதிரி எம்பிராய்டரி செய்ய வேண்டும் என்று பேசி முடிவு செய்து கொண்டனர்.

பார்வதி வந்து சென்ற பின் அனைவர் முகத்திலும் ஒரு தெளிவு வந்தது.

மறுநாள் ஜனவரி ஒன்று... ஆங்கிலப் புத்தாண்டு!

மித்ரன் காலையில் எழுந்தவுடனே தன் மனைவியாகப் போகும் மங்கையின் முகத்தில் தான் விழித்தான். வருங்கால மாமனாரிடம் இருந்து சுட்டுவிட்டு வந்த ஆல்பத்தில் இருந்த ஒரு போட்டோவை பிரேமில் அடைத்துத் தன் படுக்கை அருகே உள்ள மேஜையில் வைத்திருந்தான்.

''சனா பேபி! ஹேப்பி நியூ இயர்'' என்று சொல்லி அந்த போட்டோவிற்கு முத்தம் கொடுத்தான். அதை அவளுக்குச் சொல்ல ஆசைப்பட்டுத் தன் பெயர் போட்டு அவளது அலைபேசி எண்ணிற்கு ஒரு வாழ்த்து எஸ்.எம்.எஸ். அனுப்பி வைத்தான்.



அனுப்பி வைத்த நொடியில் இருந்து அவளிடம் இருந்து வரும் பதிலுக்காய் காத்திருக்க ஆரம்பித்தான். அவள் போன் செய்து பேசுவாள் என்று அவனுமே எதிர்பார்க்கவில்லை. ஆனால் பதில் எஸ்.எம்.எஸ். ஆவது அனுப்புவாள் என்று ரொம்பவே நம்பி ஏமாந்து போனான்.

நேரில் சென்று வாழ்த்துச் சொல்லிவிட்டு வரலாம் எனத் தீர்மானித்தான். அங்கே செல்ல என்ன காரணம் சொல்லலாம் என யோசித்தவன்... இருக்கவே இருக்கு... கல்யாணப் பத்திரிகை வாசகம் சரி தானா என்று கேட்கப் போவது போல் பாவனை செய்யலாம் என்று தோன்ற, தான் வாங்கி வைத்திருந்த பரிசுகளோடு அவள் வீடு நோக்கிச் சென்றான்.

அவனை அந்த நேரம் எதிர்பார்க்காததால் அவளது வீட்டினர் பரபரத்துப் போயினர்.

''உட்காருங்க மாப்பிள்ளை!'' என்று சொன்ன கையோடு அடுக்களைக்குள் அமிர்தம் விரைந்தார். அதே வார்த்தையை வரதராஜனும் உதிர்த்துவிட்டு அடுக்களைக்குள் புகுந்து கொண்டார்.

''ஏதாவது கடையில் இருந்து வாங்கி வரணுமா? இல்லை வீட்டில் உள்ளதை வைத்துச் சமாளிக்க முடியுமா?'' என்று மனைவியிடம் விசாரணை மேற்கொண்டார்.

''எனக்கு ஒண்ணும் வேண்டாம் மாமா'' என்று சொன்ன மித்ரனின் வார்த்தையை அவர்கள் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

மித்ரன் ஹாலில் நின்று கொண்டிருந்த அர்ஜுனிடம் ஒரு வாட்ச்சைப் பரிசளித்து, ''ஹாப்பி நியூ இயர்!'' என்று வாழ்த்தினான்.

''எனக்கா மாமா?'' என்று மித்ரனைப் பார்த்துக் கேட்டவன், ''டேய் அர்ஜுன்! உனக்கு சுக்கிர திசை நடக்குதாடா? திடீர் என்று பரிசு மழையா பொழியுது'' என்று அவன் தன்னைத் தானே சத்தமாகக் கேட்டுக் கொள்ள என்னவென்று புருவம் உயர்த்தி மித்ரன் கேட்டதற்கு,

''இல்லை மாமா, நேத்து உங்க அம்மா டிரஸ் கொடுத்தாங்க. நீங்க இன்னைக்கு வாட்ச் கொடுத்து இருக்கீங்க. அதான்...'' என்று சொன்னவுடன்,

''ஓ! நான் நியூ இயருக்காக வாங்கிட்டு வந்தேன் டா'' என்று சொன்னான்.

அர்ஜுன் குனிந்து அந்த வாட்ச்சைப் பிரித்து ஆராய ஆரம்பிக்க தன் கையில் இருந்த இன்னொரு வாட்ச்சை சஹானாவிடம் நீட்டி அவளிடமும் புத்தாண்டு வாழ்த்து தெரிவித்தான்.

அவள் அதைக் கை நீட்டி வாங்கக்கூட முயற்சிக்கவில்லை. அவன் அவளது முகத்தில் தன் பார்வையைக் கூர்மையாகப் பதித்துக் காத்திருக்க அவள் சற்றும் அசைந்து கொடுக்கவில்லை. அந்த நேரம் மித்ரனின் கைப்பேசி சிணுங்க அவன் கையில் வைத்திருந்த வாட்ச்சை அங்கே இருந்த ஷோ கேஸில் வைத்துவிட்டு நகர்ந்தான்.

''இதோ வரேன்...'' என்று செல்போனில் யாரிடமோ சொல்லியவன் உள்பக்கம் திரும்பி, ''மாமா நான் கிளம்புகிறேன்'' என்று சொன்னான்.

வெளியே வந்தவரிடம், ''அர்ஜென்ட்டா ஒரு வேலை மாமா. நான் போயே ஆகணும். கிளம்புறேன். புத்தாண்டு வாழ்த்துக்கள் மாமா'' என்று சொன்னவன் அங்கே வந்து நின்ற அமிர்தத்திடமும் அதே வாழ்த்தைத் தெரிவித்து விட்டு அகன்றான். அவனுடன் கார் வரை சென்று வரதராஜன் அவனை அனுப்பி வைத்தார்.



'திருமணப் பத்திரிகை வாசகம் சரியா என்று கேட்க வந்தேன்' என்று மித்ரன் உருவாக்கிய பொய்யானக் காரணத்தைச் சொல்லும் அவசியம் கூட எழவில்லை. வந்த வேகத்திலேயே சென்றுவிட்டான்.

மித்ரன் ஒரு பிசினஸ் மேன். கூடவே திருமண வேலையும் சேர்ந்து கொண்டது. அதனால் அவன் உடனே சென்றது வரதராஜனுக்கோ, அமிர்தத்திற்கோ வித்தியாசமாகத் தெரியவில்லை. இன்னும் சொல்லப் போனால் சஹானாவிற்கே அவன் கோபத்தில் தான் உடனே சென்று விட்டான் என்பது புரியவில்லை. போன் வந்ததால் தான் அவன் சென்று விட்டதாக நினைத்தாள்.

அவன் சென்ற பின்னும் சஹானா அந்த வாட்ச்சைக் கண்டு கொள்ளவில்லை. அது அவன் வைத்து விட்டுப் போன இடத்திலேயே இருந்தது.

அன்று மாலை நான்கு மணிக்கு பார்வதி போன் செய்தார்.

''சொல்லுங்கம்மா'' என்று வரதராஜன் சொன்னதும்,

''சம்பந்தி கல்யாணப் பத்திரிகை அடிச்சு வந்திடுச்சு. நீங்க இப்போ கிளம்பி வடபழனி முருகன் கோவிலுக்கு வந்திடுங்க. கூடவே மகாதேவன் அண்ணனையும் கூட்டி வந்திடுங்க. நான் என் சார்பா அவருக்குத் தனியா போன் செய்து கூப்பிட்டுக்கிறேன். பத்திரிகையை வைச்சு சாமி கும்பிட்டு முடிச்சதும் கோயில்ல வைச்சு அவருக்கே முதல் பத்திரிகையை கொடுத்திடலாம். இன்னைக்கே பத்திரிகை கொடுக்கிற வேலையை ஆரம்பிச்ச மாதிரியும் ஆகிடும்'' என்றார்.

''நல்ல யோசனை மா. அப்படியே செஞ்சிடலாம். நாங்க கிளம்பி வரோம்'' என்று சொல்லி போனை வைத்தவர் விஷயத்தைச் சொல்லி அனைவரையும்

கிளம்பச் சொன்னார். பின் மகாதேவனை நேரில் அழைக்க அவர் வீட்டிற்குச் சென்றார். அதற்கு முன்பே பார்வதி அம்மா போன் செய்து விஷயம் தெரிவித்து இருந்தார்.

மகாதேவனும், அவர் மனைவியும் வருவதாகச் சொன்னதும் டிராவல்ஸ் கம்பெனி ஒன்றில் ஒரு குவாலிஸ் வண்டிக்கு ஏற்பாடு செய்துவிட்டு வரதராஜன் வீடு வந்து சேர்ந்தார்.

அமிர்தம் சஹானாவை, பார்வதி புதிதாக எடுத்துக் கொடுத்திருந்த மைசூர் சில்க் புடவையைக் கட்டச் சொன்னார். மயில் கழுத்து நிறப் புடவையை உடுத்தி வந்த தன் மகளின் அழகில் அமிர்தமே அசந்து தான் போனார். அமிர்தம் முத்து நெக்லஸையும், காதணியையும் தந்து அணிந்து கொள்ளச் சொன்னார்.

''பாப்பா இந்த மோதிரத்தைப் போட்டுக்கம்மா'' என்று சொல்லி வரதராஜன் ஒரு மோதிரத்தைப் பரிசளித்தார்.

'நேற்று இது எனது ஆணை என்று முதல் முறையாக கடுமையாக வார்த்தையைப் பிரயோகித்த பின் நானும் அவர் மீது கோபத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறேன். அப்பொழுதில் இருந்தே சமாதானம் வேண்டி என் முகத்தை ஒருவித தயக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். நான் கோபத்தைக் கைவிடலை என்றதும் பரிசெல்லாம் வாங்கிக் கொடுத்து சமாதானம் பண்ண நினைக்கிறார் போல! சரி நாமளும் எத்தனை மணி நேரத்துக்கு நம் கோபத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடியும்?' என எண்ணியவளாய் அவர் நீட்டிய பரிசை வாங்கிக் கொண்டாள்.

அவளுக்கு அம்மோதிரத்தை மிகவும் பிடித்திருந்தது. ''சூப்பரா இருக்குப்பா. ரொம்ப தாங்க்ஸ் பா. இதிலே என்ன கல்லுபா பதிச்சிருக்கு?'' என்றாள்.



மகள் தன்னிடம் சகஜமாகப் பேசியதில் பூரிப்படைந்தவர், ''ஜெர்கான் கல்லுமா'' என்றார்.

அமிர்தம் அவளது முடியைத் தளரப் பின்னி பூ வைத்து மகளுக்கு அவர் திருஷ்டி கழிக்க, ''ரொம்ப ஓவரா பண்ணாதீங்கம்மா'' என்று சிணுங்கினாள்.

வழியில் மகாதேவனையும், அவர் மனைவியையும் அழைத்துக் கொண்டு அவர்கள் கோவிலை சென்று அடைந்தார்கள்.

இவர்கள் சென்று இறங்கி உள்ளே நுழையும் பொழுதே மித்ரனும், பார்வதியும் ஏழெட்டு ஆண்களுடன் உள்ளே நுழைந்தார்கள். அவர்களெல்லாம் தன் கம்பெனி ஜி.எம்., பி.ஏ. ஆபிஸர்கள் என்று சொல்லி அவர்களை மித்ரன் அறிமுகப்படுத்தினான். அதே போல வரதராஜன் உடன் வந்தவர்களையும் தன் கம்பெனி ஆட்களுக்கு அறிமுகப் படுத்தினான். மகாதேவனும், வரதராஜனும் எல்லோருக்கும் ஒரு கும்பிடு போட்டார்கள். அவர்களும் பதில் வணக்கம் செலுத்தினார்கள்.

புதுவருடம் என்பதால் கோவிலில் கூட்டம் அதிகமாக இருந்தது. முருகன் சந்தனக் காப்பு அலங்காரத்தில் ஜொலி ஜொலித்தார்! பத்திரிகையை முருகனின் பாதத்தில் வைத்து அர்ச்சனை பண்ணச் சொல்லிவிட்டு அனைவரும் கண் மூடிப் பிரார்த்தித்தனர்.

கல்யாணம் நல்லபடியாக நடந்து மணமக்கள் சிறப்பான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதே அனைவரின் பிரார்த்தனையாக இருந்தது!

இறைவன் சந்நிதியில் அருகருகே தன் மகளும், வருங்கால மருமகனும் நிற்பதைப் பார்த்து... அவர்களது ஜோடிப் பொருத்தத்தைப் பார்த்து வரதராஜனுக்கு

மனசெல்லாம் நிறைந்தது. மனதாரக் கடவுளுக்கு நன்றி செலுத்தினார்.

அனைவரும் சாமி கும்பிட்டு வெளியே வந்து பிரகாரத்தைச் சுற்றத் தொடங்கினார்கள். அங்கே இருந்த மண்டபத்தில் அவர்கள் கார் டிரைவர் முத்து இரு பெரிய பைகளுடன் காத்திருந்தார். மித்ரன் அவர் அருகே சென்றான்.

ஒரு பெரிய தட்டில் கல்யாணப் பத்திரிகையோடு பழங்கள், சாக்லேட், வெற்றிலை, பாக்கு எல்லாம் வைத்து, வரதராஜனோடு சேர்ந்து மித்ரன் முதல் பத்திரிகையை மகாதேவனிடமும், அவர் மனைவியிடமும் நீட்டினான். அவர் வாங்கியதும் அவற்றை எல்லாம் போட்டுக் கொள்ள ஒரு பையையும் கொடுத்தான். மாப்பிள்ளை சின்ன விஷயத்தைக் கூடப் பார்த்துப் பார்த்துச் செய்வதாக வரதராஜன் பெருமிதம் அடைந்தார்.

அதே மாதிரி தன் அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்களுக்கு பார்வதியோடு சேர்ந்து பத்திரிகை வைத்தான்.

வரதராஜனோடு வந்த அனைவரையும் இரவு உணவிற்காக அருகே இருக்கும் ஒரு ஹோட்டலுக்கு முதலில் செல்லுமாறு அனுப்பி வைத்தான். பின் தன் அலுவலர்கள் எல்லோரையும் அனுப்பிவிட்டு பார்வதியுடன் அந்த ஹோட்டலைச் சென்று அடைந்தான். லாபியில் அவர்கள் அனைவரும காத்திருக்க,

அனைவரையும் பார்த்து ஒரு புன்னகையைப் புரிந்தவன் அர்ஜுன் அருகே சென்று அவன் தோள் மீது கை போட்டு, ''அப்புறம் புத்தாண்டு எல்லாம் எப்படி டா போச்சு?'' என்றான்.

''உங்க கிஃப்ட்டோட இல்ல ஆரம்பிச்சது. அதனால நல்லா தான் மாமா போச்சு. வாட்ச்சை நான் இன்னைக்கே



போட்டு விட்டேன். நல்லா இருக்கா பாருங்க...'' என்று அர்ஜுன் தன் கையை நீட்டிக் காண்பிக்க,

''சூப்பர் டா!'' என்று சொன்ன மித்ரன் சஹானாவின் கையை ஆராய்ந்தான். அவன் பரிசளித்த வாட்ச் அவள் கைகளில் இல்லை.

அவன் நிமிர்ந்து அவள் கண்களைச் சந்திக்க... அவனது பார்வையின் அர்த்தம் புரிந்தவளாய், ''பிடிச்சவங்க எது கொடுத்தாலும் நான் போட்டுக்குவேன். பிடிக்காதவங்க கொடுத்தால் தொட்டுக் கூடப் பார்க்க மாட்டேன்'' என்று அவனுக்கு மட்டும் கேட்குமாறு முணுமுணுத்துவிட்டு முன்னால் சென்று பார்வதியுடன் பேச ஆரம்பித்தாள்.

பார்வதியும், சஹானாவும் ஒரு மேஜையில் அருகருகே அமர மித்ரன் அவர்களுக்கு எதிராக வந்தமர்ந்தான். மீதம் உள்ள ஐவரும் பக்கத்து மேஜையில் அமர்ந்தனர். சஹானா பார்வதியிடம் ஏதேதோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தாள். மித்ரன் எதிரே உட்கார்ந்து கொண்டு அவள் பார்க்காத பொழுது அவளை அங்குலம் அங்குலமாக ரசித்துக் கொண்டிருந்தான்.

கோவிலில் தன் அலுவலக ஊழியர்கள் உடன் இருந்தாலும், அது கோவில்... அங்கு வேறு மாதிரி எண்ணங்களுக்கு இடமளிக்கக் கூடாது என்பதாலும், மித்ரன் சஹானாவின் புறம் திரும்பவில்லை. ஆனால் இப்பொழுது அவளைப் பார்ப்பதைத் தவிர தனக்கு வேறு முக்கிய வேலை எதுவுமில்லை என்பது போல் அவளையே ரசித்துக் கொண்டிருந்தான். ஆனால் அவளோ அவன் புறம் நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை.

சாப்பிட்டு முடித்து பில்லுக்குப் பணம் செலுத்தி முடித்த பொழுது பார்வதி சஹானாவின் மோதிரத்தைப்

பார்த்ததும் அவளது விரலைப் பிடித்துக் கொண்டே, ''மித்ரன் அளவு சரியா வாங்கிட்டு வந்திட்ட போல! அவ விரலுக்கு சரியா இருக்கே!'' என்று யதார்த்தமாகச் சொல்லிவிட்டார். அவருக்கு எப்படித் தெரியும் அந்த மோதிரம் அவளைச் சென்றடைந்த கதை!

பார்வதி குனிந்து சஹானாவின் விரல்களைப் பார்த்துக் கொண்டிருக்க, சஹானா மித்ரனைப் பார்வையாலேயே எரித்தாள்.

'வாட்ச்சை வேண்டாம் என்று சொன்னதால் மோதிரத்தை அப்பா மூலம் கொடுத்து விட்டாயா? இது என்ன ஏமாற்று வேலை? என்னைத் தோற்கடிக்கப் பார்க்கிறாயா!' என்று கேளாமல் கேட்டது அவள் பார்வை.

தன்னை முட்டாளாக்கி விட்டான் என்ற கோபத்தில் சஹானா தன் விரலை பார்வதியின் பிடியில் இருந்து உருவிக் கொண்டு அந்த மோதிரத்தைக் கழட்டி மேஜை மேல் வைத்து அவன் புறமாக நகர்த்தினாள்.

பார்வதி எழுந்து பக்கத்து டேபிளுக்குச் சென்றமர்ந்து திருமணம் குறித்துப் பேச ஆரம்பித்தார்.

ஹோட்டல் வாயிலில் வைத்து சஹானா மித்ரனை அவமானப்படுத்தும்படி பேசியும்கூட மித்ரன் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அவள் அன்று அணிந்திருந்த புடவையும், வரதராஜன் தந்ததாக அணிந்த மோதிரத்தையும் வாங்கியது 'தான்' என்ற காரணத்தினால் அவள் பேசியதற்கு வருத்தப்படவில்லை. புடவைக்கும், மோதிரத்திற்கும் அடித்த அதிர்ஷ்டம் வாட்ச்சிற்கு இல்லை போல என்று மட்டுமே எண்ணினான்.

ஆனால் அவள் இப்பொழுது செய்ததோ...



புது வருடமும் பொழுதுமாக ஒன்று ஏமாற்றம் அளிக்கிறாள். இல்லை என்றால் அவமானப்படுத்துகிறாள். என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள்? என்று மிதமிஞ்சிய கோபத்தில் மித்ரன் திளைத்தான்.

மேஜை மேல் அவள் வைத்த மோதிரத்தை எடுத்தவன் அவள் கண்களைப் பார்த்து, ''அப்போ உன் கண்ணுக்கு நான் சத்ருவாகத் தான் தெரியுறேன இல்ல. தாங்க்ஸ்'' என்று சொல்லி எழுந்து விறுவிறுவென்று ஹோட்டலை விட்டு வெளியேறிப் போய்க் கொண்டே இருந்தான்.

சஹானா செய்வதறியாது திகைத்தாள்!

மகன் வெளியே செல்வதைக் கண்ட பார்வதி அமர்ந்திருந்த மேஜையில் இருந்து எழுந்து வேறு பக்கம் நகர்ந்தவாறு மகனது அலைப்பேசிக்கு அழைப்பு விடுத்தார்.

போனை எடுத்தவன், ''அம்மா எனக்கு ஒரு அவசர வேலை வந்திடுச்சும்மா. நீங்க வீட்டுக்குப் போங்க...'' என்று சொல்ல ஆரம்பித்தவனை இடைமறித்து,

''எனக்கு அவ மோதிரத்தைக் கழட்டி வைச்சதும் தெரியும். உன் அவசர வேலை என்னவென்றும் தெரியும் மித்ரன். இப்படிப் பாதியில் சொல்லாமல் கொள்ளாமல் போகும் பழக்கத்தை நான் உனக்குக் கற்றுத் தரலை மித்ரன். நீ வரும் வரைக்கும் இந்த ஹோட்டலை விட்டு நான் வீட்டுக்குப் போகமாட்டேன்'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தார்.

அடுத்த நிமிடம் அவன் அவர் அருகே வந்து நின்றான். அவர்களை எல்லாம் வழி அனுப்பி வைத்தான். மறந்தும் சஹானாவின் பக்கம் திரும்பவில்லை.

காரில் ஏறியவுடன், ''என்ன முத்தண்ணே சாப்பிட்டீங்களா?'' என்று கேட்டான்.

"சாப்பிட்டாச்சு தம்பி" என்று அவர் பதிலளித்தார்.

"ஒரு தடவையாவது உள்ளே வந்து எங்க கூட சாப்பிடுங்க என்று சொன்னால் கேட்குறீங்களா? பக்கத்தில் உள்ள வேற ஏதாவது ஒரு ஹோட்டலில் போய் தான் சாப்பிடுவேன் என்று அடம் பிடிக்குறீங்க" என்று மித்ரன் அலுத்துக் கொண்டான்.

"தம்பி நீங்க ருசிக்குச் சாப்பிடுறவங்க. நானெல்லாம் பசிக்குச் சாப்பிடுபவன். எனக்கு அந்த ஹோட்டல் தான் தம்பி சரி வரும்" என்று சொல்லிவிட்டு வீடு நோக்கிக் காரைச் செலுத்தினார்.

வீடு வரும் வரை காரில் யாரும் யாருடனும் பேசவில்லை. வீட்டிற்குள் நுழைந்ததும் மாடி ஏறப் போன மித்ரனைப் பார்வதி தடுத்தார்.

"மித்ரன் அமைதியா இருப்பா. அவ அப்பா ஆபரேஷனுக்கு அப்புறம் உன்னை அவ புரிஞ்சுக்குவா. அது வரைக்கும் பொறுமையா இரு. உன்னை அவளுக்குப் பிடிக்காமல் எல்லாம் இல்லை. உன்னைப் பிடிக்கலைன்னா என் கூட எதுக்கு சிரிச்சுச் சிரிச்சுப் பேசுகிறாள்? அவ்வளவு சொல்லியும் நீ கல்யாணத்தைத் தள்ளி வைக்கலையே என்று தான் கோபமா இருக்காள். சரியாகிடும்பா" என்று சொல்லி நிறுத்தி அவன் முகம் பார்க்க,

"எனக்கும் புரியுதுமா" என்றதோடு மாடி ஏறித் தனது அறைக்குச் சென்று விட்டான்.

# 8

அடுத்த நாளிலிருந்து கல்யாணத்திற்கு பத்திரிகை வைத்து அழைக்கும் வேலையில் பார்வதியும், மித்ரனும் இறங்கினர். வடபழனி முருகன் கோவிலில் வைத்துத் தங்கள் ஜி.எம்., பி.ஏ. போன்றவர்களுக்கு பத்திரிகை கொடுத்திருந்தாலும் மீண்டும் ஒருமுறை அவர்கள் வீடு வரை சென்று குடும்பத்தோடு வரச் சொல்லி அழைப்பு விடுத்தனர். வீட்டில் வேலை செய்பவர்களுக்கும் அதே முறையில் அழைப்பு விடுத்தனர். மித்ரன் தனது திருமணத்தை முன்னிட்டு வீட்டு வேலையாட்களுக்கும், கம்பெனியிலும் போனஸ் வழங்கினான்.



மித்ரன் தன் கல்யாண விஷயத்தையும், தன் மனைவி பற்றியும் தெரிவித்துத் தன் ஹெச்.ஓ.டி.க்கு திருமணப் பத்திரிகையை அனுப்பி வைத்தான். அவன் தன்னால் வர முடியாது என்றும் ஒரு நாள் இருவரும் சேர்ந்து தன் வீட்டிற்கு வர வேண்டும் என்றும் அழைப்பு விடுத்திருந்தார்.

வடபழனி சென்று வந்த மறுநாளே ஒரு டாக்ஸி சஹானா வீட்டு வாசலில் வந்து நின்றது. அது தங்களுக்குத் தெரிந்த டாக்ஸி என்றும், திருமணம் வரை தினமும் காலை முதல் இரவு வரை அது அவர்களது உபயோகத்திற்காக அங்கேயே இருக்கும் என்றும் மித்ரன் தெரிவித்து இருந்தான். வரதராஜன் பேருந்தில் பயணம் செய்து அலைய வேண்டாம் என நினைத்தே அவன் அதை அனுப்பினான்.

சஹானா பத்திரிகைக்கு மஞ்சள் வைப்பது, தபாலில் அனுப்ப வேண்டியவர்களுக்கு முகவரி எழுதுவது என்று தன்னால் முடிந்த உதவிகளைச் செய்து கொண்டிருந்தாள்.

அமிர்தம் சஹானாவைப் பார்த்து, "உனக்கு எத்தனைப் பத்திரிகை மா வேணும்? தனியா எடுத்து வைச்சுக்கிட்டியா?" என்று கேட்டார்.

"எனக்கு எதுக்கு பத்திரிகை? நான் தான் யாரையுமே கூப்பிடப் போவதில்லையே?"

''என்ன மா சொல்கிறாய்?'' என்று அவர் அதிர,

''நான் தான் என்ன பிரச்சனை என்னன்னு உங்ககிட்டே அன்னைக்கே சொன்னேன் தானே? உங்க மாப்பிள்ளையும் காது கொடுத்துக் கேட்கலை... அவரை மாப்பிள்ளையாய் முடிவு பண்ணியவரும் கண்டுக்கலை.''

''அதுக்காக உன் நெருங்கிய பிரண்ட்ஸ்... அட்லீஸ்ட் காவ்யாவைக் கூடக் கூப்பிடப் போறதில்லையா?''

''அவளிடம் மட்டுமாவது விஷயம் சொல்லலாம்னு தான் போனேன். தெய்வமே சொல்ல விடாமல் தடுத்துடுச்சு. என் க்ளோஸ் பிரண்ட்ஸ் கிட்டே சொன்னால் என்னை க்ளோஸ் பண்ணாமல் விடமாட்டாங்க. நான் அவங்ககிட்டே எல்லாம் மினிமம் ஆறு மாசம் கழிச்சுத்தன் என் கல்யாணம் நடக்கும்ன்னு வீராப்பா சவுடால் விட்டேன். ஆனா... ப்சு... என் கல்யாணத்துக்கு என் பிரண்ட்ஸ் யாரும் வரக் கூடாதுங்கிறது என்னோட தலைவிதி போல!'' என்று அலுத்துக் கொண்டாள்.

''அப்பா பிரண்ட் பொண்ணு கல்யாணத்துல கூட அந்தப் பொண்ணுக்கு பிரண்ட்ஸ்ன்னு யாருமே வரலையாம். கல்யாணம் நடக்க இருந்த ஊரில் ஏதோ ஜாதி கலவரம்ன்னு 144 தடை உத்தரவு போட்டுட்டாங்கன்னு சொல்லி பயந்து போய் யாருமே வரலையாம். அது மாதிரி நினைச்சு உன்னை நீயே சமாதானம் பண்ணிக்கோம்மா'' என்று மகளைச் சமாதானம் பண்ண முயற்சித்தார்.

தாயின் பேச்சில் சமாதானம் அடையாமல் சஹானா ஒரு சலிப்புடனே அந்த இடம் விட்டு அகன்றாள்.

ஜனவரி ஐந்தாம் தேதி சஹானாவிற்கு கல்லூரி திறக்கப் போகிறார்கள் என்பதால் அவள் ஞாயிறன்று



ரயில் ஏறும் வரை மித்ரன் அவள் வீட்டுப் பக்கம் எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

ஆனால் வரதராஜனோடு அவ்வப்பொழுது பேசிக் கொண்டு தான் இருந்தான். அவரின் உடல் நிலையைக் கவனித்துக் கொள்ளச் சொல்ல மறக்கவில்லை. தினமும் இருமுறை அவரது உடல்நலம் குறித்துக் கேட்டறிந்து கொண்டான்.

சஹானா ஞாயிறன்று கிளம்பி கோவைக்குச் சென்றாள் அங்கே அவள் மறந்தும் தன தோழிகளிடம் தனது திருமண விஷயம் குறித்துச் சொல்லவில்லை. காவ்யாவிடம் மட்டுமாவது சொல்லலாம் என நினைப்பாள். நினைக்க மட்டுமே செய்வாள்! அவளிடம் மட்டும் சொல்லி... பின் அதற்கு வேறு மற்ற தோழிகள் கோபித்துக் கொள்வார்களோ என்ற எண்ணம் தோன்றும். பேசாமல் அமைதியாகி விடுவாள.

பொங்கலுக்குக் காவ்யா சென்னைக்கு வர மறுத்து விட்டாள். பாட்டி இறந்து சில நாட்கள் தான் ஆனதால் பெரிதாக எந்தக் கொண்டாட்டமும் இருக்கப் போவதில்லை. அதனால் நான் ஹாஸ்டலிலே இருக்கப் போகிறேன் என்று சொல்லி விட்டதால் சஹானா மட்டும் தனியாகப் பொங்கலுக்கு முதல் நாள் போகி அன்று சென்னை வந்து இறங்கினாள்.

இடைப்பட்ட இந்த பத்து நாட்களில் ஒரு நாள் கூட மித்ரன் அவளிடம் பேசவுமில்லை. எந்த எஸ்.எம்.எஸ்ஸும் அனுப்பவுமில்லை.

புத்தாண்டு அன்று சஹானாவிற்கு அவன் எஸ்.எம்.எஸ். மூலம் தன் எண்ணைத் தெரிவித்ததும் சஹானா அதை பதிந்து வைத்துக் கொள்ளவில்லை.

சென்னை வந்து இறங்கிய சில மணி நேரத்திலேயே சஹானாவின் எண்ணத்தில் மித்ரனைத் தவிர வேறொரு நினைவு இல்லாதபடி அவள் வீட்டினர் பார்த்துக் கொண் டனர்.

யார் வாயைத் திறந்து பேசினாலும் அவன் பேச்சாகத் தான் இருந்தது. கல்யாணம் செய்து கொள்ளப் போகும் தன்னைத் தவிர மீதம் உள்ள அனைவருக்கும் அவனைப் பற்றி அதிகம் தெரிந்திருப்பதாக சஹானா எண்ணத் தொடங்கினாள். ஏன் என்னிடம் மட்டும் அவன் பேசவே இல்லை என்று முதன் முறையாக ஒரு ஏக்கம் வந்தது.

மறுநாள் பொங்கல் திருநாள்! அன்று தான் திருமாங் கல்யமும், திருமணப் புடவையும் வாங்குவதாக இருந்தது. அதனால் காலையில் சீக்கிரத்தில் எழுந்து ஒரு வேகத் துடனே எல்லா காரியங்களும் நடந்தேறின. சர்க்கரைப் பொங்கல் வைத்து, புத்தாடை அணிந்து, சாமி கும்பிட்டு என்று அனைவரும் வேகவேகமாகக் கிளம்பி காலை ஒன்பதரைக்குள் நகைக் கடைக்கு வந்து சேர்ந்தனர்.

பார்வதியுடன் ஒரு உறவுக்காரப் பெண்மணியும் வந் திருந்தார். மித்ரன் வரவில்லை. பார்வதி தங்களது வழக்கப்படி தாலியைத் தன்னுடன் வந்த பெண்மணியைத் தேர்ந்தெடுக்கச் சொல்லி நல்ல நேரத்தில் அதை வாங் கினார். பின் சஹானாவை தாலிச் சங்கிலியைத் தேர்ந் தெடுக்கச் சொன்னார். அதிக கனம் வேண்டாம் என்று சொல்லி சஹானா ஐந்து சவரனில் இருந்த சங்கிலி ஒன்றைத் தேர்ந்தெடுத்தாள்.

''பொதுவா பத்து சவரனுக்கு மேல தான் வாங்குவோம். ஆனால் இந்தக் காலத்துப் பொண்ணுங்க யாரும் பெருசா போட விரும்புறது இல்லை. அதனால உனக்கு எப்படி



பிடிக்குதோ அப்படியே வாங்கிக் கொள்'' என்று பார்வதி சொல்லிவிட்டார்.

நகைக் கடை வேலை முடிந்தவுடன் பார்வதி தங்கள் காரிலேயே அந்த உறவுக்காரப் பெண்மணியை அவரது வீட்டிற்குத் திருப்பி அனுப்பி வைத்து விட்டார்.

''நீங்களே திருமாங்கல்யத்தை வாங்கி இருக்கலாமே! இதற்கு ஏன் வேறொருத்தரை வரச் சொன்னீங்க? நல்ல மனசு தான் மா முக்கியம். அந்த அம்மா முன்னாடி சொல்ல முடியாமல் தான் அவங்க போன பின்னாடி சொல்லு றேன்'' என்று அமிர்தம் வருத்தம் தெரிவித்தார்.

''உங்களுக்கு அந்த சென்டிமென்ட் இல்லாமல் இருக்கலாம். வேற யாராவது ஏதாவது சொன்னால்... எதுக்கு வம்பு என்று நினைத்தேன். சரி விடுங்க'' என்று பார்வதி அந்தப் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

புடவை எடுக்க போத்தீஸிற்குச் சென்றனர்.

''சஹானா பன்னிரெண்டில் இருந்து ஒன்றரை மணி வரை ராகுகாலம். அதனால புடவையை செலக்ட் பண்ண ஆரம்பி. ஆனால் ராகு காலம் தாண்டியபின் பில் போட்டுக்கலாம்'' என்று பார்வதி சொன்னவுடன்,

''சரிங்க அத்தை!'' என்று சொல்லி புடவை எடுப்பதில் முனைந்தாள்.

ஒரு ஐந்து புடவையைத் தேர்ந்தெடுத்தாள். அதிலிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுக்குமாறு அவள் தன் தாயை வேண்ட அவரோ மாப்பிள்ளை வந்து சொல்லட்டும் என்று சொல்லிவிட்டார்.

இவள் முகூர்த்த புடவையை ஆராயும் நேரத்தில் பார்வதி மருமகளுக்கு என்று புது வகையான பட்டு களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தார். அமிர்தமும்

தங்கள் மகளுக்குக் கொடுத்தனுப்புவதற்கு என்று தங்கள் சார்பில ஒரு நாலு புடவையை எடுத்து வைத்தார்.

இருவரும் சஹானாவிடம் காட்டி எது அவளுக்குப் பிடித்திருக்கிறது என்று கேட்டு அதையே பில் போட அனுப்பினர்.

''என்னம்மா எனக்கு மட்டுமே வாங்குறீங்க? உங்களுக்கு எல்லாம் எடுக்கலையா?'' என்று சஹானா தன் தாயிடம் கேட்க,

''எங்களுக்கெல்லாம் எடுத்துத் தைச்சும் வைச்சாச்சு. உனக்கும், மாப்பிள்ளைக்கும் தான் முகூர்த்த நாள் அன்று எடுக்கலாம் என்று காத்திருந்தோம்'' என்று விளக்கம் கூறினார்.

பன்னிரெண்டரை மணி ஆனதும் அவளை பார்வதி அங்கிருந்து சுரிதார் பிரிவிற்கு அழைத்துச் சென்றார். அப்பொழுது தான் மித்ரன் அங்கு வந்து சேர்ந்தான்.

''காலேஜிற்கு போட ஆறேழு சுரிதார் எடுத்துக் கொள்மா!'' என்று பார்வதி சொல்ல அவள் காலர் வைத்த சுரிதாராகப் பார்த்துப் பார்த்துத் தேர்ந்தெடுத்தாள்.

ஏன் என்று காரணம் கேட்டதற்கு தாலி செயினை மறைப்பதற்காக என்று சொல்லி விட்டாள்.

சுரிதாரைத் தேர்ந்தெடுப்பதில் மும்முரமாக இருந்தவள் மித்ரனின் வரவைக் கவனிக்கவில்லை. கவனித்த பின் அவன் தன்னிடம் வந்து ஏதாவது பேசுவான் என்று காத்திருந்தாள்.

அவன் அர்ஜுனிடம் ஏதோ வம்பு அளந்து கொண்டிருந்தான். அப்படி இல்லையெனில் வரதராஜனிடம் பேசிக் கொண்டிருந்தான். இவ்வளவு ஏன்... கடைச் சிப்பந்திடம் கூடப் பேசினான். ஆனால் சஹானாவின் புறம் தன்



பார்வையைக் கூடத் திருப்பவில்லை. அடுத்த அரை மணி நேரத்திலேயே தன்னை மட்டும் அவன் தவிர்க்கிறான் என்கிற விஷயம் அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது.

'மோதிரத்தைத் திருப்பித் தந்ததுக்காடா இன்னும் கோபமா இருக்கே?! (கையில் கொடுத்தால் தான் சஹானா அதற்குப் பெயர் தந்தது... இது மாதிரி டேபிளில் வைத்து நகர்த்தி விடுவதை யாரும் திருப்பித் தந்ததாகச் சொல்ல மாட்டார்கள்!) நீ என்னைத் தோறகடிக்க நினைத்தாய். நான் தோற்றுப் போக விரும்பாமல் உன்னிடம் திருப்பினேன். இது ஒரு குற்றமா?! இதனால் தான் நீ இத்தனை நாளா என் கூடப் பேசவே இல்லையே?!' என மனதுக்குள் கேட்டுக் கொண்டாள்.

ஒருவர் அன்பாய்த் தந்த பரிசைத் திருப்பிக் கொடுத்தால்... அது அவரை அவமானப்படுத்துவதாகும் என்பதை அன்றைய நிலையில் சஹானா உணரவில்லை. ஆனால் இன்றைய அவனது நிராகரிப்பு அவளுக்கு அதைத் தெள்ளத் தெளிவாகப் புரிய வைத்தது.

'ரொம்பப் பெரிய தப்பு பண்ணி விட்டோம் போலவே!' என்று நினைத்தவள் அவனிடம் அதற்காக மனிப்புக் கேட்கத் தக்க தருணத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தாள்.

சுரிதார் எடுத்து முடித்த பொழுது மணி ஒன்றரை ஆகி இருக்க மீண்டும் பட்டுப் பிரிவிற்குள் நுழைந்தனர். சஹானா தேர்ந்தெடுத்து வைத்திருந்த ஐந்து புடவையில் இருந்து ஒன்றை மித்ரனைத் தேர்ந்தெடுக்கச் சொன்னார்கள். அவன் பச்சை வண்ணப் புடவையைத் தேர்ந்தெடுத்தான். உடல் முழுவதும் ஜரிகை வேலைப்பாடுகளுடன் அம்சமாக இருந்தது. அனைவருக்கும் பிடித்திருக்கவே அதையே பில் போட்டு வாங்கினர்.

தங்கள் மகளுக்குக் கொடுத்தனுப்புவதற்கு என்று தங்கள் சார்பில ஒரு நாலு புடவையை எடுத்து வைத்தார்.

இருவரும் சஹானாவிடம் காட்டி எது அவளுக்குப் பிடித்திருக்கிறது என்று கேட்டு அதையே பில் போட அனுப்பினர்.

''என்னம்மா எனக்கு மட்டுமே வாங்குறீங்க? உங்களுக்கு எல்லாம் எடுக்கலையா?'' என்று சஹானா தன் தாயிடம் கேட்க,

''எங்களுக்கெல்லாம் எடுத்துத் தைச்சும் வைச்சாச்சு. உனக்கும், மாப்பிள்ளைக்கும் தான் முகூர்த்த நாள் அன்று எடுக்கலாம் என்று காத்திருந்தோம்'' என்று விளக்கம் கூறினார்.

பன்னிரெண்டரை மணி ஆனதும் அவளை பார்வதி அங்கிருந்து சுரிதார் பிரிவிற்கு அழைத்துச் சென்றார். அப்பொழுது தான் மித்ரன் அங்கு வந்து சேர்ந்தான்.

''காலேஜிற்கு போட ஆறேழு சுரிதார் எடுத்துக் கொள் மா!'' என்று பார்வதி சொல்ல அவள் காலர் வைத்த சுரிதாராகப் பார்த்துப் பார்த்துத் தேர்ந்தெடுத்தாள்.

ஏன் என்று காரணம் கேட்டதற்கு தாலி செயினை மறைப்பதற்காக என்று சொல்லி விட்டாள்.

சுரிதாரைத் தேர்ந்தெடுப்பதில் மும்முரமாக இருந்தவள் மித்ரனின் வரவைக் கவனிக்கவில்லை. கவனித்த பின் அவன் தன்னிடம் வந்து ஏதாவது பேசுவான் என்று காத்திருந்தாள்.

அவன் அர்ஜுனிடம் ஏதோ வம்பு அளந்து கொண்டிருந்தான். அப்படி இல்லையெனில் வரதராஜனிடம் பேசிக் கொண்டிருந்தான். இவ்வளவு ஏன்... கடைச் சிப்பந்தியிடம் கூடப் பேசினான். ஆனால் சஹானாவின் புறம் தன்



பார்வையைக் கூடத் திருப்பவில்லை. அடுத்த அரை மணி நேரத்திலேயே தன்னை மட்டும் அவன் தவிர்க்கிறான் என்கிற விஷயம் அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது.

'மோதிரத்தைத் திருப்பித் தந்ததுக்காடா இன்னும் கோபமா இருக்கே?! (கையில் கொடுத்தால் தான் சஹானா அதற்குப் பெயர் தந்தது... இது மாதிரி டேபிளில் வைத்து நகர்த்தி விடுவதை யாரும் திருப்பித் தந்ததாகச் சொல்ல மாட்டார்கள்!) நீ என்னைத் தோற்கடிக்க நினைத்தாய். நான் தோற்றுப் போக விரும்பாமல் உன்னிடம் திருப்பினேன். இது ஒரு குற்றமா?! இதனால் தான் நீ இத்தனை நாளா என் கூடப் பேசவே இல்லையே?!' என மனதுக்குள் கேட்டுக் கொண்டாள்.

ஒருவர் அன்பாய்த் தந்த பரிசைத் திருப்பிக் கொடுத்தால்... அது அவரை அவமானப்படுத்துவதாகும் என்பதை அன்றைய நிலையில் சஹானா உணரவில்லை. ஆனால் இன்றைய அவனது நிராகரிப்பு அவளுக்கு அதைத் தெள்ளத் தெளிவாகப் புரிய வைத்தது.

'ரொம்பப் பெரிய தப்பு பண்ணி விட்டோம் போலவே!' என்று நினைத்தவள் அவனிடம் அதற்காக மனிப்புக் கேட்கத் தக்க தருணத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தாள்.

சுரிதார் எடுத்து முடித்த பொழுது மணி ஒன்றரை ஆகி இருக்க மீண்டும் பட்டுப் பிரிவிற்குள் நுழைந்தனர். சஹானா தேர்ந்தெடுத்து வைத்திருந்த ஐந்து புடவையில் இருந்து ஒன்றை மித்ரனைத் தேர்ந்தெடுக்கச் சொன்னார்கள். அவன் பச்சை வண்ணப் புடவையைத் தேர்ந்தெடுத்தான். உடல் முழுவதும் ஜரிகை வேலைப்பாடுகளுடன் அம்சமாக இருந்தது. அனைவருக்கும் பிடித்திருக்கவே அதையே பில் போட்டு வாங்கினர்.

பின் அவனுக்கு பட்டு வேஷ்டி சட்டை வாங்கினர். ரிசப்ஷனுக்கு என்று சஹானா ஆகாய நீலக் கலரில் வெள்ளைக் கற்கள் பதித்த புடவையைத் தேர்ந்தெடுத்தாள். மித்ரன் அதற்கு மேட்சிங்காக கரு நீலக் கலரில் கோட் சூட் தேர்ந்தெடுத்தான். அவர்களது தைக்கப் பட வேண்டிய துணிகள் எல்லாம் தையல் கடைக்கு அனுப்பி வைத்தனர்.

மதியச் சாப்பாடை சாப்பிட அவர்கள் ஹோட்டலுக்குச் சென்றனர். ஒரு போன் வரவே அதைப் பேசிக் கொண்டே மித்ரன் பின் தங்கி விட்டான்.

பெரியவர்கள் மூவரும் ஒரு மேஜையிலும், சிறியவர்கள் மூவரும் ஒரு மேஜையிலும் அமர முடிவு செய்தனர்.

அன்றைய ஹோட்டல் சாப்பாட்டின் பொழுது செய்த தவறை, இன்றைய ஹோட்டல் சாப்பாட்டின் பொழுது சரி பண்ணிவிடலாம் என்று சஹானா காத்திருக்க... நடந்தது என்னவோ வேறாகிப் போனது!

அர்ஜுன், சஹானா அருகே மித்ரன் உட்காருவான் என்று நினைத்து அவளருகே உட்காராமல் அவளுக்கு எதிரே சென்று அமர்ந்தான். போன் பேசி முடித்து வந்த மித்ரனோ நேராகச் சென்று அர்ஜுனின் அருகில் அமர்ந்து கொண்டான்.

சர்வர் வந்து, ''என்ன சாப்பிடுகிறீர்கள்?'' என்று கேட்ட பொழுது மித்ரன் அர்ஜுனிடம் திரும்பி அதே கேள்வியைக் கேட்டான்.

அர்ஜுன், ''வெஜிடபிள் பிரியாணி'' என்று சொன்னவுடன்,

மித்ரன் சர்வரிடம் திரும்பி, ''ஒரு வெஜிடபிள் பிரியாணி, ஒரு மஷ்ரூம் பிரியாணி'' என்று சொல்லிவிட்டுக் குனிந்து தன் செல்போனை நோண்ட ஆரம்பித்தான்.



'நீ என்ன சாப்பிட விரும்புகிறாய்?' என்று சஹானாவிடம் கேட்கவும் இல்லை. அவளுக்காக என்று எதுவும் ஆர்டரும் செய்யவில்லை. சஹானாவிற்குக் கோபம் சுறுசுறுவென்று வந்தது. அர்ஜுன் தான் விக்கித்துப் போனான்.

''மாமா... அக்கா...'' என்று அவன் மித்ரனைப் பார்த்து இழுக்க... மித்ரன் நிமிரவில்லை. சரி நாமளே நிலைமையைச் சமாளிக்கலாம் என்று நினைத்த அர்ஜுன் சஹானாவிடம,

''உனக்கு என்னக்கா வேண்டும்?'' என்று கேட்டான்.

''எனக்கு ஒண்ணும் வேண்டாம்'' என்று அவள் சொல்லிவிட... சர்வர் முன்னால் எந்த விவாதமும் வைத்துக் கொள்ள விரும்பாமல் அவரை அர்ஜுன் அனுப்பி வைத்தான்.

'என்ன நடக்குது இங்கே?!' என்று அர்ஜுன் குழம்பிப் போனான்.

சாப்பாடு வரும் முன்னால் மித்ரன் எழுந்து சென்றான். பெரியவர்களிடம் ஏதோ சொல்லி விட்டுத் தன் தாயிடம் தனியாகக் கிசுகிசுத்து விட்டு அங்கிருந்து விடைபெற்றுச் சென்றான்.

அவனிடம் மன்னிப்புக் கேட்கவென்று சஹானா காத்திருக்க... அவன் புதுப் பிரச்சனையைக் கிளப்பி விட்டுச் சென்று விட்டதாக சஹானா நினைத்தாள்.

பார்வதி, ''நான் போய் என் மருமகள் பக்கத்திலே உட்கார்ந்து சாப்பிடப் போகிறேன். என் சாப்பாடு வந்ததும் அங்கே அனுப்பிடுங்க!'' என்று வரதராஜனிடமும், அமிர்தத்திடமும் சொல்லிவிட்டு சஹானா அருகே சென்று அமர்ந்தார்.

சாப்பாடு வந்ததும் மஷ்ரூம் பிரியாணியை சஹானா பக்கம் நகர்த்திய பார்வதி, ''சாப்பிடுமா!'' என்று சொல்ல, அவரிடம் மறுத்துக் கூற முடியாமல்... வேறு வழியின்றி அவள் அதைச் சாப்பிட ஆரம்பித்தாள்.

சாப்பிட்டு முடித்து அனைவரும் வெளியேற அர்ஜுன் பார்வதியிடம் ஏதோ கேட்பதற்கென்று தயங்கித் தயங்கி நின்றான். அப்பொழுது பார்வதியின் அலைப்பேசிக்கு அழைப்பு வந்தது.

எடுத்துப் பேசியவர், ''அவ சாப்பிட்டு முடிச்சிட்டாள். நீ போய் சாப்பிடு'' என்று சொன்னவர் அர்ஜுன் மீது பார்வையைச் செலுத்தி, ''அர்ஜுன் கூட ரெண்டு வார்த்தை பேசிட்டு வச்சிடு பா. அவன் தான் ரொம்பக் கவலைப் படுறான்'' என்று சொல்லி அலைப்பேசியை அர்ஜுனனிடம் நீட்டினார்.

பேசுவது மித்ரன் என்று புரிந்து கொண்டவன் அலைபேசியை வாங்கி, ''மா...மா...'' என்று இழுக்க,

''ஹேய் அர்ஜுன்! என்ன பயந்துட்டியா? சும்மா ஒரு லடாய். அவ்வளவு தான். எப்படியோ உங்க அக்காக்கு பிடிச்ச சாப்பாடை சாப்பிட வைச்சிட்டேனா! அதை மட்டும் பாரு. மிச்சதைப் பற்றி எல்லாம் நீ மனசைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே. சரியா?'' என்று கேட்டவுடன் அர்ஜுன் சமாதானம் ஆனான்.

வாடிய முகத்துடன் நின்று கொண்டிருந்த சஹானாவின் அருகில் சென்ற பார்வதி, ''என்னம்மா இன்னும் உங்க சண்டை தீர்ந்த பாடு இல்லையா? சரி.... நான் நாளைக்கு அவனை உன் வீட்டுக்கு சாயங்காலமா அனுப்பி வைக்குறேன். நீ பேசிச் சமாதானம் ஆகிக் கொள்'' என்று சொல்லி அவளை அனுப்பி வைத்தார்.



நடந்த எதுவும் தெரியாத வரதராஜனும், அமிர்தமும் அடுத்து செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

மறுநாள்... அதாவது கல்யாணத்திற்கு முன் தினம் மாலை...

மித்ரனை அழைத்த பார்வதி, ''கல்யாண பிளவுஸ் தைச்சு வந்திடுச்சுப்பா. நீ போய் இதை சஹானா கிட்ட... நல்லா கேளு... சஹானா கையிலே கொடுத்திட்டு வா'' என்று சொல்லி அனுப்பினார்.

மித்ரன் அவர் மீது கூர் பார்வை ஒன்றைச் செலுத்தினானே தவிர வேறு எதுவும் சொல்லவில்லை. அவன் சென்றதும் அவன் வரப் போவதை மருமகளுக்கு கர்ம சிரத்தையாய் போன் செய்து தெரிவித்தார்.

வெளியூரில் இருந்து வந்த சொந்தக்காரர்களின் வரவால் சஹானாவின் வீடே அமளி துமளிபட்டது.

மித்ரன் தன் சொந்தக்காரர்களுக்கு ஹோட்டலில் அறை ஏற்பாடு செய்திருந்தான். சஹானா குடும்பத்திற்கும் ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்ன பொழுது வரதராஜன் அதை மறுத்து விட்டார்.

தாங்கள் மண்டபத்தில் உள்ள அறைகளிலேயே தங்கிக் கொள்கிறோம் என்று சொல்லி விட்டார். மித்ரனும் சில விஷயங்களுக்குப் பிடிவாதம் பிடித்து அவரைச் சம்மதிக்க வைத்தான். சில விஷயங்களில் அவரின் தன்மான உணர்விற்கு மதிப்புக் கொடுத்து விட்டும் கொடுத்தான். இது அது போல் அவன் விட்டுக் கொடுத்த விஷயம்.

மாலை நான்கு மணிக்கே அவர்கள் அனைவரையும் மண்டபத்திற்குக் கூட்டிச் செல்லும் பொறுப்பை

வரதாராஜனும், மகாதேவனும் ஏற்று நடத்தினார்கள். வீட்டில் உறவினர்கள் வர ஆரம்பித்த உடனே அர்ஜுன் மகாதேவன் வீட்டிற்குச் சென்று தேர்விற்காகப் படிக்க ஆரம்பித்தான்.

மாலையில் மித்ரன் சஹானா வீட்டை வந்தடைந்த பொழுது பொருட்கள் எல்லாம் கலைந்து கல்யாண வீட்டிற்கே உரிய களேபரத்துடன் அவர்கள் வீடு காணப் பட்டது. அமிர்தமும், மகாதேவனின மனைவி மட்டுமே ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டே வீட்டை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்தனர். சஹானா தனது படுக்கை யறைக்குள் இருந்தாள்.

அமிர்தம் மித்ரனை வரவேற்று சோபாவில் உட்கார வைத்துவிட்டு மகாதேவனின் மனைவியோடு அடுக்களை நோக்கிப் போனார்.

''நான் வீட்டுக்குள் நுழைஞ்சதும் நீங்க கிச்சனுக்குள்ளே நுழைஞ்சுக்குறதே வாடிக்கையாப் போச்சு அத்தை'' என்று அவன் அவரைக் கிண்டல் அடிக்க, அவர் பதி லுக்குச் சிரித்துக் கொண்டே சென்று விட்டார்.

அவனது பேச்சுக் குரல் கேட்டு சஹானா வெளியே வந்தாள். அவனருகே அவள் வந்ததும் அவளை நிமிர்ந்தும் பாராது பார்வதி கொடுத்தனுப்பிய கவரை அவளிடம் நீட்டினான்.

அவன் தன்னை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லையே என்று மனதில் சிறு சுணக்கம் ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாது அவன் நீட்டிய கவரை வாங்கிக் கொண்டு அவனிடம் தன் இடது கையை நீட்டி, ''எனக்கு இந்த வாட்ச் அழகா இருக்கா?'' என்று கேட்டாள்.

பதில் ஒன்றும் சொல்லாமல் மித்ரன் எழுந்து வீட்டை விட்டு வெளியேறினான்.



சஹானா முகத்தில் அடிவாங்கியது போல் உணர்ந்தாள். அவன் கொடுத்த பரிசை வாங்கவில்லை என்று தானே அவனுக்குக் கோபம். மோதிரத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டோம்! சரி நம்மிடம் இருக்கும் வாட்ச்சை அணிந்து அவனைச் சமாதானப்படுத்தலாம் என்று அணிந்து வந்து காட்டினால்... விருட்டென்று போகிறான்!

போடா போ! நானும் பிடிவாதக்காரி தான்! இனி நீயா நானா என்று ஒரு கை பார்த்துவிடலாம் என்று பொருமிக் கொண்டு வாசலுக்கு முதுகு காட்டி சோபாவில் அமர்ந்து அவனுக்கு மனதில் அர்ச்சனை பண்ணத் தொடங்கினாள்.

'மாப்பிள்ளைக்கு டீயா, காபியா?' என்று கேட்பதற் காக வெளியே எட்டிப் பார்த்த அமிர்தம் மித்ரனைக் காணாது குழம்பினார்.

''மாப்பிள்ளை எங்கே சஹானா?'' என்று அமிர்தம் கேட்டவுடன் எண்ணெயில் இட்ட அப்பளமாய் பொரிய ஆரம்பித்தாள்.

''யாருக்குத் தெரியும்? என்னைக் கேட்டால்... தேடிப் பிடிச்சு இந்த மாப்பிள்ளையைக் கொண்டு வந்தாரே அப்பா... அவரைக் கேளுங்க'' என்று சொன்னவுடன், அமிர்தம் 'என்ன ஆச்சு இந்தப் பெண்ணிற்கு?' என்று விழித்தார்.

சஹானா நிறுத்தாது தன் பொருமலைத் தொடர்ந்தாள்.

''இல்லைன்னா நம்ம வீட்டுப் பெரிய மனுஷன் உயர்திரு அர்ஜுன் இருக்காரு இல்லை... அவரைக் கேளுங்க. விஷயம் தெரியும். ஏன்னா அவங்க எல்லாம் ஒண்ணுக்குள்ள ஒண்ணு இவ்வளோ நெருக்கம்'' என்று தனது இரு கை விரல்களையும் இறுக்கிப் பிணைத்துக் காட்டினாள்.

வாசலில் நிழலாட நிமிர்ந்து அங்கு பார்வையைச் செலுத்திய அமிர்தம் அங்கே மித்ரனைக் கண்டதும் துணுக்குற்றார். அவன் சஹானாவின் பேச்சைக் கேட்டு ரசித்துப் புன்னகைப்பதைக் கண்டதும் மனம் அமைதியுற... ஏதோ அவர்களுக்குள் செல்லச் சண்டை என்று புரிந்தவராய் மீண்டும் அடுக்களைக்குள் புகுந்து கொண்டார்.

தன்னைத் தாண்டி அம்மா யாரைப் பார்வையிடுகிறார் என்று சோபாவில் இருந்து எழுந்து திரும்பிப் பார்த்த சஹானா கையில் கவருடன் நின்று கொண்டிருந்த மித்ரனைக் கண்டதும் எந்த உணர்ச்சியையும் காட்டவில்லை.

அவளருகே வந்த மித்ரன் அவளது இடது கையைத் தூக்கி அவளது மோதிர விரலில் புத்தாண்டு அன்று அவள் திருப்பிக் கொடுத்த மோதிரத்தை அணிவித்தான். பின் கவரில் இருந்து ஒரு பூங்கொத்தை வெளியே எடுத்தான். இருபது சிகப்பு ரோஜாக்களை ஒன்றாகக் கட்டித் தயாரித்த பூங்கொத்தை அவளிடம் நீட்ட... ஒரு ஆச்சரியத்துடனே அவள் அதை வாங்க கை நீட்டினாள். அவளது கண்களைப் பார்த்துக் கொண்டே,

''ஐ லவ் யூ'' என்று சொல்லி அவளிடம் கொடுத்தான். அவள் அதே வரிகளை அவனைப் பார்த்துச் சொல்லவில்லை. ஆனால் அவளது மலர்ந்த முகம் அவளது விருப்பத்தை... அவளது காதலை அவனுக்கு அறிவித்தது.

அவளது கன்னத்தின் மீது படிந்திருந்த அவளது முடியைக் காதோரம் ஒதுக்கி விட்டுக் கன்னத்தைச் செல்லமாகத் தட்டி, ''நாளைக்குக் காலையில் மணமேடையில் பார்க்கலாம்'' என்று சொன்னான்.

முகமெங்கும் சந்தோஷம் பூக்க மெல்லத் தலையசைத்து அவனது கூற்றை அவள் ஆமோதித்தாள்.



''வரேன் அத்தை... வரேன் ஆன்ட்டி'' என்று அடுக்களையை நோக்கிக் குரல் கொடுத்தவன் அவர்களின் பதிலுக்குக் கூடக் காத்திருக்காமல் அங்கிருந்து சென்று விட்டான்.

'காபி கூடக் குடிக்காமலா போகிறீர்கள்' என்று கேட்பதற்காக அமிர்தமும், மகாதேவனின் மனைவியும் வெளியே வர அவன் அதற்குள் வெளியேறி இருந்தான்.

கைகளில் பூங்கொத்தையும், எண்ணங்களில் தனது வருங்காலக் கணவனையும் சுமந்தபடி கனவு உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டு இருந்த சஹானா மட்டுமே ஹாலில் இருந்தாள்.

அவளது நிலையைக் கண்ட இரு பெண்களும் சிரித்துக் கொண்டு அவளைத் தொந்தரவு செய்யாது தங்களது வேலையைத் தொடரச் சென்றனர்.

'ஓ! இந்தப் பூங்கொத்தை எடுக்கத் தான் கார் வரை சென்றார் போல! அதுக்குள்ளே இந்தப் பொண்ணு கோபப்பட்டு வார்த்தையை விட்டுவிட்டாள். இவளை நிதானமாகச் செயல்படச் சொல்ல வேண்டும். அதுதான் வாழ்க்கைக்கு நல்லது' என்று அமிர்தம் நினைத்துக் கொண்டார்.

அர்ஜுன் மகாதேவனின் வீட்டில் இருந்து தன் வீடு நோக்கி வரும்பொழுது மித்ரன் காரிலேறிக் கிளம்பிச் சென்றதைப் பார்த்தான். 'மாமா வந்துவிட்டுப் போகிறார். என்ன விஷயமாக இருக்கும்?' என்று யோசித்துக் கொண்டே உள்ளே வர...

சஹானாவின் மலர்ந்த புன்னகையும், அவள் கையில் இருந்த சிவப்புப் பூக்களும் அவனுக்கு அவர்களது லடாய் ஒரு முடிவிற்கு வந்ததைத் தெரிவித்தன. அவன் மனம் திருப்தி அடைந்தது.

சஹானாவும், மித்ரனும் பார்வதிக்குப் போன் செய்து 'தாங்க்ஸ்' சொன்னார்கள். எதற்கு என்று தெரிந்தால் அவர்களை வேறு எதுவும் பார்வதி கேட்டுக் கொள்ளவில்லை.



# 9

வெள்ளிக் கிழமை காலை 9.30 - 10.30 முகூர்த்தம். சஹானா வீட்டிலேயே தங்கிக் கொண்டு காலையில் குளித்துத் தயாராகிக் கிளம்ப முடிவு செய்திருந்தபடியால் அர்ஜுனும், அமிர்தமும் அவளுடன் தங்கி விட்டனர்.

சொந்தக்காரர்களைக் கவனித்துக் கொள்வதற்காக வரதராஜன் மண்டபத்திலேயே தங்கிக் கொண்டார். ஆனால் அவரது உடல் நிலை தெரிந்த மித்ரன், மகாதேவன், பார்வதி ஆகிய மூவரும் அவரை அதிகம் சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்திக் கொண்டே இருந்தனர்.

அதிகாலையில் சஹானா எழுந்து குளித்துத் தயாராகவும் அவளை அழைக்கவென்று பூக்களால் அலங்கரிக்கப்பட்ட மித்ரனின் கார் வாயிலில் வந்து நின்றது. கூடவே ஒரு குவாலிஸ் வண்டியும் வந்து நின்றது. மகாதேவனின் குடும்பத்தினரும் சேர்ந்து அவ்விரு வண்டிகளில் கிளம்பினார்கள். அவர்கள் வெகு சீக்கிரத்திலேயே மண்டபத்தை அடைந்தால மண்டபம் பரபரப்பில்லாமலே காட்சி அளித்தது.



அவள் மண்டபத்திற்குள் வந்த ஐந்தாவது நிமிடமே சாப்பாடு தட்டுடன், பட்டுப் புடவை சரசரக்க பார்வதி மணமகள் அறைக்குள் நுழைந்தார்.

''சஹானா முதலில் சாப்பிட்டு முடித்து விடு. அப்புறமா மேக்கப் போட ஆரம்பித்து விட்டால் உனக்குச் சாப்பிட டைம் இல்லாமல் போய்விடும்'' என்று சொல்லித் தட்டை நீட்ட,

''தாங்க்ஸ் அத்தை'' என்று சொல்லி சஹானா அதைப் பெற்றுக் கொண்டாள்.

சாப்பிட்டு முடித்ததும் அழகு நிலையப் பெண்கள் அவளுக்கு அலங்காரம் செய்ய ஆரம்பித்தனர்.

நேரம் ஆக ஆக மண்டபத்தில் கூட்டம் அலை மோதியது.

ஆனால் கம்பெனி ஆட்கள் ஒரு ஒழுங்கு முறையைக் கடைபிடித்துக் கூட்டத்தைச் சமாளித்துக் கொண்டிருந்தனர். மித்ரனின் திருமணத்தை முன்னிட்டு அன்று கம்பெனி விடுமுறை என்பதால் கம்பெனி ஊழியர்கள் அனைவரும் குடும்பத்தோடு வந்திருந்தனர்.

பெரிய வீட்டுக் கல்யாணம் என்பதால் வேலையும் நிறைய இருந்தது. அதை எடுத்துச் செய்ய ஆட்களும் நிறைய இருந்தனர்.

மணமேடையில் முதலில் சஹானா அமர்த்தப்பட்டாள். சில சடங்குகளுக்குப் பின் அவளிடம் முகூர்த்தப் புடவையைக் கொடுத்து அனுப்பி வைத்தார்கள். அதற்குப் பின் மித்ரனுக்கும் அவ்வாறே பட்டு வேஷ்டியைக் கொடுத்து அனுப்பி வைத்தார்கள்.

அதன் பின் பட்டு வேஷ்டி, சட்டை அணிந்த மித்ரன் முதலில் மேடை ஏறி அமர்ந்து மந்திரங்களைச் சொல்ல

ஆரம்பித்தான். அப்பொழுது மேடை ஏறி வரும் சஹானாவின் மீது பார்வையைப் பதித்தவன் இமைக்கவும் மறந்தான்.

அந்தப் பச்சைப் பட்டில் மரகதப் பாவையென அடியெடுத்து வைத்தவளின் அழகால் அடியோடு சாய்க்கப் பட்டான். மேடையின் மீது பார்வையைச் செலுத்திய சஹானா அவனது விழுங்கும் பார்வையில் முகம் சிவந்தாள். மெல்ல நடந்து வந்து அவனருகே அமர்ந்தாள். இருவரும் சேர்ந்து மந்திரங்களை உச்சரிக்க ஆரம்பித்தனர்.

அய்யர் தாலி எடுத்துக் கொடுத்து, ''கெட்டி மேளம்'' என்று குரல் கொடுக்க,

அதைக் கைகளில் வாங்கிய மித்ரன் கடவுளையும், கடவுளால் மாறின தந்தையையும் வேண்டிக் கொண்டு தன் மனம் கவர்ந்தவளின் கழுத்தில் கட்டினான். தாலி கட்டி முடித்தவுடன் வரதராஜனைப் பார்த்து, 'இப்பொழுது சந்தோஷமா?' என்று பார்வையாலேயே கேட்க... அவர் கண்களில் திரண்ட நீரோடு தனது தலையை ஆட்டி பரம சந்தோஷம் என்றார்.

அதுவரை எல்லாம் நன்றாகத் தான் போய்க் கொண்டிருந்தது. மாலை மாற்றச் சொன்ன பொழுது மித்ரனின் நண்பர்கள் செய்த கலாட்டாவால் சஹானாவின் மனநிலை மாறியது. அவர்கள் என்னவோ அனைத்துத் திருமணங்களிலும் நடப்பது போல் தங்களின் எல்லைக்கு உட்பட்டுத் தான் கலாட்டா செய்தார்கள்.

ஆனால் தோழிகள் என்ற பெயரில் யாருமே தன் அருகே இல்லாதது சஹானாவை வருத்தம் கொள்ளச் செய்தது. அந்த நிலை தனக்கு மித்ரனால் தானே



ஏற்பட்டது என்ற நினைப்பு தோன்றிய நொடியில் அவன் மீது கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

மனைவியின் முக மாற்றத்தை அளவெடுத்த மித்ரன், 'அதுக்குள்ளே என்னவாச்சு இவளுக்கு? ஷப்பா இவளைச் சமாதானப்படுத்தவே எனக்கு நேரம் சரியா இருக்கும் போலவே! மாமா எல்லாம் உங்களால் வந்தது' என்று மனதில் நினைத்துக் கொண்டான்.

மணவறையை மூன்று முறை சுற்றி வரச் சொன்னார்கள். அவள் தனது கையை நீட்டுவாள் என்று அவன் காத்திருக்க... அவள் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. இவளை நம்பினால் வேலைக்கு ஆகாது என்று நினைத்தவனாய் அவளது கை பற்றி அவளை இழுத்துக் கொண்டு மூன்று முறை சுற்றி வந்து சடங்கை நிறைவேற்றினான்.

எங்கே கையை உருவிக் கொள்வாளோ என்ற பயத்திலேயே இருந்ததால் மித்ரனுக்கு முதல் முறையாக மனைவியின் கை பற்றிய உணர்வு கூட இல்லாமல் போனது.

அதே மண்டபத்திலேயே அவர்கள் தங்கி விட்டதால் திட்டமிட்டபடியே மாலை ஆறு மணிக்கே வரவேற்பு நிகழ்ச்சி தொடங்கியது. வரவேற்பு முடிந்து அவர்கள் சஹானா வீட்டை அடையும் பொழுது மணி இரவு பத்துக்கு மேல் ஆனது. சஹானா, மித்ரன், வரதராஜன் அமிர்தம் என நால்வர் மட்டுமே வந்திருந்தனர்.

சஹானாவின் அறையை அமிர்தம் அலங்கரிக்க முற்பட மித்ரன் அவரைத் தடுத்து. ''அத்தை இப்போதைக்கு எந்த சடங்கும் வேண்டாம். நீங்க போய் தூங்குங்க'' என்று சொல்லி விட்டான்.

''சரிங்க மாப்பிள்ளை. நாங்களும் அர்ஜுனோடு மகாதேவன் வீட்டிலேயே தூங்கிட்டுக் காலையில் வரோம்'' என்று சொல்லி அவர்கள் இருவரும் வெளி யேறினர்.

இதைப் பார்த்த சஹானாவிற்கு 'அப்பாடா!' என்ற உணர்வே எழுந்தது. மித்ரன் ஏற்கனவே வாக்குக் கொடுத்திருந்த போதும் அவளுக்கு உள்ளுக்குள் ஒரு உதறல் இருந்து கொண்டே தான் இருந்தது. இப்பொழுது அந்த உதறல் மறைந்து நிம்மதி குடியேறியது.

அவர்கள் சென்றவுடன் கதவை அடைத்துவிட்டு வந்தவன் மனைவி எந்த நேரத்திலும் தன் மீது பாயத் தொடங்கலாம் என்றுணர்ந்து அவளது தாக்குதலைச் சமாளிக்கத் தயாரானான். அவள் ஒன்றும் பேசாது அமர்ந்திருக்க...

''உனக்கு என்ன கோபம்?'' என்று அவனே பேச்சு வார்த்தையை... ம்ஹூம் ஒரு சொற்போரைத் தொடங்கி வைத்தான்.

''நான் உங்களை எவ்வளவு கெஞ்சினேன். ஆறு மாசம் கழிச்சுக் கல்யாணம் வைக்கலாம் என்று... கொஞ்சமாவது என் பேச்சை மதிச்சீங்களா? இன்னைக்கு பாருங்க... உங்க பிரண்ட்ஸ் எல்லோரும் வந்திருக்காங்க. ஆனால் எனக்குத்தான்...'' என்று கோபமாகக் கத்திக் கொண்டிருந்தவள் சிறிது மூச்சு வாங்க...

நல்ல வேளை வீட்டில் யாரும் இல்லை. இந்த வாக்கு வாதத்தை எதிர்பார்த்தே அவன் தனது மாமனாரையும், மாமியாரையும் இங்கேயே தூங்குங்கள் என்று சொல்ல வில்லை.



'ஆக இது தான் உன் கோபத்திற்குக் காரணமா?' என நினைத்த மித்ரன் அவளைச் சமாதானப்படுத்த முனைந் தான்.

அவனைப் பேச விடாது தடுத்தவள், ''நீங்க எதுக்கு உங்க பிரண்ட்ஸை எல்லாம் கல்யாணத்துக்குக் கூப்பிட் டீங்க?'' என்றாள்.

மித்ரனுக்கு இது என்ன குதர்க்கமான பேச்சு என் றிருந்தது. நீயும் கூப்பிட்டு இருக்க வேண்டியது தானே என்று கேட்டால் பழைய பல்லவியே பாடுவாள். இவளை வேறு மாதிரிதான் அடக்க வேண்டும் என நினைத்து,

''நம்ம கல்யாணத்திற்கு எங்கப்பா வரப் போறதில்லை என்பதால் உங்கப்பாவையும் நீ கல்யாணத்திற்கு வர விடாமல் தடுத்திருக்க வேண்டியதுதானே!'' என்றான்.

''அதெப்படி...'' என்று தொடங்கியவளை இடை மறித்து,

''நீ சொல்வது நியாயம் என்றால் நான் சொல்வதும் நியாயம் தான்'' என்று சொல்லி பேச்சை முடித்தான்.

அவனது பேச்சில் இருந்து தான் கேட்ட கேள்வி எவ்வளவு சிறுபிள்ளைத்தனமானது என்று புரிந்ததால் அவள் அமைதியாக அமர்ந்திருந்தாள்.

''சனா...'' என்று கணவன் அழைக்க...

அந்த அழைப்பில் இருந்த அன்பு, காதல், செல்லச் சுருக்கம் என்று எதுவுமே அவளை இளக்கவில்லை.

''சரி நீ இப்படியே உட்கார்ந்திரு. நான் போய் தூங்கு றேன்'' என்று சொல்லி உள்ளே சென்று ஒரு கட்டிலில் ஏறிப் படுத்தான்.

அவன் பின்னோடு வந்தவள், ''அது என்னோட பெட் நீங்க அர்ஜுனோட பெட்டிலே ஏறிப் படுத்துக்கோங்க'' என்று பக்கத்து கட்டிலைச் சுட்டிக் காட்டினாள்.

''எனக்கு வேறொருத்தங்க பெட்டிலே படுத்தால் தூக்கம் வராது. அதனால நான் இங்கேயே தூங்குறேன். நீயே உன் தம்பி பெட்டிலே படு'' என்று சொல்லி அவளது படுக்கையிலேயே படுத்துக் கொண்டான்.

'நீயும் நானும் ஒன்று' என்று அவன் சொல்லாமல் சொல்லியது அவளது மூளையைச் சென்றடைய வில்லை. அவளது கோபம் அதை உணரவிடவில்லை.

'என் பெட்டில் மட்டும் தினமும் படுத்துத் தூங்கினா ராக்கும்? நான் என்ன சொன்னாலும் கேட்கக் கூடாது என்று முடிவு செய்து வைத்திருக்கார்' என்று பொருமிக் கொண்டே அர்ஜுனின் படுக்கையில் போய் படுத் தாள்.

காலையில் சீக்கிரம் எழுந்ததும், ரிஷப்ஷனில் அதிக நேரம் நின்றதும் அவளைச் சோர்வுறச் செய்ய அவள் படுத்த சில நொடிகளிலே தூங்கியும் விட்டாள். பதினைந்து நாட்களாக மிதமிஞ்சிய வேலைப் பளுவும், அன்றைய இரவில் வேறு எந்த எதிர்பார்ப்பும் இல்லாத காரணமும் சேர்ந்து கொள்ள மனைவியின் வரி வடி வத்தை ரசித்துக் கொண்டே மித்ரனும் கண்ணயர்ந் தான்.

காலையில் குளித்துத் தயாராகி நல்ல நேரம் பார்த்து அனைவரும் மித்ரன் வீட்டிற்குச் சென்றனர். ஒரு சில உறவினர்கள் அங்கு இருந்தார்கள். அர்ஜுனும், சஹானா வும் இன்று தான் மித்ரனின் வீட்டிற்கு வருகிறார்கள். அவர்கள் இருவரும் அவனது வீட்டின் பிரமாண்டத்தைக் கண்டு மலைத்தனர். பெரிய தோட்டமும் அங்கு பரா மரிக்கப்பட்ட செடிகளும் கண்ணைக் கவர்ந்தன.



சஹானாவைப் பூஜையறையில் விளக்கேற்றச் சொன்னார்கள். மேலும் சில சடங்குகளைச் செய்ய வைத்தனர். அன்று மாலை அனைவரும் சென்று விட சஹானாவிற்கு ஒரு விடுபட்ட உணர்வு வந்தது. அவள் தன் அத்தையுடனே பேசிக் கொண்டு சுற்றிக் கொண் டிருந்தாள்.

இரவு அவள் சாப்பிட்ட பின் பார்வதி அவளை மாடி யில் உள்ள மித்ரனின் அறைக்குப் படுக்க அனுப்பினார். அவள் மித்ரனின் அறையில் இருந்த திவானில் படுத்து விட்டாள். அவள் சென்ற பத்து நிமிடம் கழித்துத் தனது அறைக்குள் வந்த மித்ரன் தனது மனைவியைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டான்.

இவள் என் பக்கத்தில் படுத்தாலும் எனக்குக் கஷ்டம் தான். அவள் படிப்பு முடியும் வரை அவளை நெருங்கக் கூடாது என்று நான் எடுத்த முடிவிற்கு இது தான் நல்லது என்று எண்ணிக் கொண்டான்.

ஞாயிறன்று காலையில் தாலியை செயினில் கோர்த் துக் கொடுக்க பார்வதி ஆசாரியை வரவழைத்திருந் தார்.

''என்ன அத்தை அன்னைக்கு லஷ்மி காசு இன்னும் என்னவெல்லாமோ வாங்கினீங்க. இப்போ அதை எல் லாம் சேர்க்கலையா?'' என்று சஹானா வினவ,

''இந்த மூணும் தான் மா தாலி. அதெல்லாம் அவங்க அவங்க வசதிக்குத் தகுந்த மாதிரி சேர்த்துக்கிற உருப் படிகள்தான். நீ காலேஜ் முடிச்சு வந்த பின்னால் நல்ல நாள் பார்த்துக் கோர்த்துக்கலாம். எல்லாத்தையும்

கோர்த்தால் தாலி பெருசா தெரியும். அதான்... நீ படிப்பை முடிச்சிட்டு வா. அப்புறமா பார்த்துக்கலாம்'' என்று சொல்லிவிட்டார்.

அன்று இரவு அவள் ரயிலில் கோவைக்குப் புறப்பட வேண்டும் என்பதால் மாலையே பார்வதியிடம் விடை பெற்றுத் தன் தாய் வீடடிற்கு மித்ரனுடன் வந்து சேர்ந் தாள்.

பாப்பா இப்படிப் பார்க்கணும், அப்படி நடந்துக்கணும் என்று வரதராஜன் அறிவுரைகளை அள்ளி விட்டுக் கொண்டிருந்தார்.

மித்ரன் படுக்கையறைக்குள் சென்று அர்ஜுனிடம் பேசிக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் சஹானாவும் அங்கு வந்து அவர்களது பேச்சில் கலந்து கொண்டாள்.

அப்பொழுது மித்ரன், ''அர்ஜுன் இத்தனை நாளும் கல்யாண வேலை என்று சொல்லி சரியாப் படிக்காமல் இருந்து விட்டாய். இனிமேலாவது நல்லா படிக்கணும். நல்ல காலேஜிலே சீட் வாங்கணும்'' என்று சொன்ன வுடன் மித்ரனின் காதில்,

''உங்க வைஃபுக்கே நல்ல காலேஜிலே சீட்டும் கிடைச்சு ஒரு வேலையும் கிடைச்சிருக்குன்னா எனக்குக் கிடைக்காதா மாமா?'' என்று கேட்டுக் கண்ணடிக்க, மித்ரன் புன்னகைத்தான்.

''என்னைப் பற்றித் தானே ஏதோ சொன்னான்?'' என்று மித்ரனைப் பார்த்துக் கேட்டவள் தம்பியிடம் திரும்பி, ''என்னடா சொன்னாய்? ஏதோ நக்கலா சொல்லியிருக் காய்? அதுக்கு இவரும் சிரிக்கிறார்'' என்று மித்ரனைப் பார்த்து முறைத்தாள்.



''ஹேய் சஹானா, உன் கோழி முட்டைக் கண்ணை வைச்சு முழிச்சுப் பார்த்தால் மாமா பயந்திடுவார். அவர் பாவம் புதுசு. அவரை விட்டு விடு'' என்று அர்ஜுன் சொன்னவுடன்,

''எதுக்குடா என் கண்ணைப் பார்த்து நக்கல் பண்ணு கிறாய்?'' என்று அவள் அவனை அடிப்பதற்காகத் துரத்த அவன் அவள் பிடியில் அகப்படாமல் வெளியே ஓடி விட்டான்.

அர்ஜுன் வெளியேறியதும் படுக்கையில் உட்கார்ந்து அவள் கண்ணீர் விட...

''ஹேய் சனா! அவன் சின்னப் பையன் ஏதோ கிண்ட லுக்குச் சொன்னால்... அதைப் போய் ஏன் பெருசா எடுத்துக்கிறாய்?'' என்று மித்ரன் கேட்டவுடன்,

''அதில்லை. நாளைக்கு... பிரண்ட்ஸ்... எப்படி'' என்று துண்டு துண்டாக அவள் கூற,

''நாளைக்கு பிரண்ட்ஸை பேஸ் பண்ண கஷ்டமா இருக்கா?'' என்றான்.

அவள் ஆம் எனும் விதமாய் தலையாட்ட,

''நான் வேண்டும் என்றால் உனக்கு வீடு எடுத்துத் தரவா? அம்மாவும் நீயும் அங்கே இருக்கீங்களா? நான் இங்க தனியா மேனேஜ் பண்ணிக்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டே அவள் கண்ணீரைத் துடைத்து விட்டான்.

''வேற வினையே வேண்டாம். எங்கப்பன் குதிருக் குள்ளே இல்லை என்று சொல்லுற மாதிரி இல்ல அது இருக்கும்'' என்றாள்.

''சரி சனா. நடந்த எதையும் மாத்த முடியாது. ஒரு நாலு மாசம் எப்படியாவது சமாளி'' என்று சொன்ன வுடன் அரை மனதாகத் தலையாட்டினாள்.

அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது அவளை இனி எப்பொழுது காண்போமோ என்று மித்ரன் அவளைக் கண்களில் நிரப்பிக் கொண்டிருந்தான். ஆனால் அவன் புறம் அவள் திரும்பக்கூட இல்லை. அவளது சிந்தனை முழுவதும் தோழிகளின் மத்தியில் இன்னும் நாலு மாதங்களை எப்படிக் கடத்தப் போகிறோம் என்பதிலேயே உழன்றது.

அப்பொழுது தான் நினைவிற்கு வந்தவளாக, ''அப்பா நீங்க என்னைக் காலேஜிலே சேர்க்க வந்ததோட சரி. அதுக்கு அப்புறம் வரவே இல்லை. அம்மா இதுவரைக்கும் வந்ததே இல்லை. இதோ நானும் காலேஜ் முடிக்கப் போறேன். வரும் வெள்ளிக்கிழமை எங்க காலேஜில் கோல்டன் ஜூப்ளி பங்ஷன் வருது. ரெண்டு நாள் வெறும் கொண்டாட்டம்தான். உங்களால காலேஜுக்கு வந்து பங்ஷனில் கலந்துக்க முடியாது. ஆனா நான் அப்போ ப்ரீயா இருப்பேன். அதனால மருதமலைக்குப் போகலாம். ஊர் சுற்றிப் பார்க்கலாம். ப்ளீஸ் பா... நீங்களும் அம்மாவும் வாங்கப்பா'' என்றாள்.

அவள் சொன்ன பின்னால்தான் மித்ரனுக்கு பங்ஷன் பற்றிய நினைவே வந்தது. அட! இது நல்ல சான்ஸ் ஆச்சே! கண்டிப்பாகப் போயிடலாம்! என்று மனதுக்குள் முடிவு பண்ணினான்.

வரதராஜன், ''பார்க்கிறேன் மா'' என்று மட்டும் சொன்னார்.

அவளை ரயில் ஏற்றி விட்டவன் அவளுக்கு போன் செய்து, ''சனா இந்த நம்பரை ஸ்டோர் பண்ணிக் கொள். ஏதா இருந்தாலும் என்னைக் கூப்பிட்டுச் சொல். டேக் கேர்'' என்று சொன்னான்.



அதுதான் மித்ரனின் நம்பர் என்று சஹானா நினைத்துக் கொண்டாள். ஆனால் அது புது நம்பர். மனைவிக்கென்று பிரத்யேகமாக அவன் ஒரு எண்ணை வைத்துக் கொள்ள முடிவு செய்தான். எந்த மீட்டிங்கில் இருந்தாலும் அந்த எண்ணை மட்டும் ஸ்விட்ச் ஆஃப் செய்யக்கூடாது என்ற எண்ணத்தில்... அதாவது அவள் எப்பொழுதும் அழைத்தாலும் அவளுடன் தான் பேசத் தயாராக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் புது எண்ணை வாங்கினான். கோவைப் பயணத்தைப் பற்றி வரதராஜனைத் தனியாக அழைத்துப் பேசினான்.

''மாமா நான் டாக்டர் அங்கிள்கிட்ட முன்னாடி பேசும் போது அவர் நீங்கள் பயணம் எல்லாம் செய்யலாம் என்று தான் சொன்னார். ஆனால் நீங்க கடந்த பதினைஞ்சு நாளா அலைஞ்சு இருக்கீங்க. அதனால எனக்கு நீங்க கோவைக்குப் போறதிலே அவ்வளவா விருப்பம் இல்லை. நீங்க என்ன முடிவு பண்ணியிருக்கீங்க?'' என்று கேட்டான்.

''இல்லை மாப்பிள்ளை. எனக்குப் போகணும் என்று விருப்பமெல்லாம் இல்லை. ஆனால் நேத்து சஹானா சொல்லிட்டுப் போனதில் இருந்து அமிர்தம் தான் போலாமா என்று கேட்டுக்கிட்டே இருக்காள். என்னால என் உடல் நிலையைப் பற்றிச் சொல்லவும் முடியலை. இப்பவே விஷயத்தை அவளிடம் சொன்னால், அவ அழுதே அர்ஜுனுக்கு விஷயத்தைக் காட்டிக் கொடுத்து விடுவாள். படிக்குற பையனையும் படிக்க விடாமல் செஞ்சிடுவாள். அதான் ஒரே யோசனையா இருக்கு. என்ன செய்யலாம்?''

''மாமா உங்களுக்குத் தெரியுமா இல்லையா என்று தெரியலை. அந்த காலேஜில தான் நானும் படிச்சேன்.

பங்ஷனுக்கு என்னை எங்க ஹெச்.ஓ.டி. வரச் சொல்லி இருக்கார். வெள்ளி, சனி ரெண்டு நாள் பங்ஷன். ஆபிஸிற்கு ரெண்டு நாள் லீவ் போட முடியாதுன்னு நினைச்சு முதலில் போக வேண்டாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் இப்போ பங்ஷனுக்குப் போனால் சஹானாவைப் பார்க்கலாம் என்பதால் கோவை போக முடிவு எடுத்து இருக்கேன். நான் வேண்டுமென்றால் அத்தையை அழைச்சிட்டுப் போறேன். அவங்களுக்குத் துணைக்கு எங்க அம்மாவையும் கூட்டிட்டுப் போறேன். நீங்க ஆபிஸில் வேலை இருக்கு என்று சொல்லி இங்கேயே இருந்திடுங்க'' என்று யோசனை சொல்ல,

''நீங்களும் அந்தக் காலேஜ் தான் என்று மகாதேவன் சொன்னான் மாப்பிள்ளை. ஆனால் நான் தான் மறந்துட்டேன். நீங்க சொல்லுற யோசனை நல்லா இருக்க. அப்படியே செஞ்சிடலாம்'' என்று கூறினார்.

''ஆனா மாமா ஒரு கண்டிஷன். நாங்க ஊருக்குப் போவதை இப்பவே சஹானுக்குத் தெரியப்படுத்தக் கூடாது. சஸ்பென்ஸா இருக்கணும்'' என்று சொன்னவுடன் சிரித்துக் கொண்டே தன் சம்மதத்தை வரதராஜன் தெரிவித்தார்.

அதன்படியே அவர்கள் மூவரும் கோவைக்குப் பயணப்பட்டனர்.

## 10

பங்ஷனுக்கு முதல் நாள் ஹாஸ்டல் அறையில்...



கல் உப்பு, கலர் பொடி எல்லாவற்றையும் எடுத்து வைத்து நோண்டிக் கொண்டிருக்கும் சஹானாவைப் பார்த்துக் காவ்யா, ''சஹானா என்ன பண்ணப் போற?'' என்று கேட்டாள்.

''ப்ச்சு... ஒவ்வொரு தடவையும் ரங்கோலி போட கலர் மிக்ஸ் பண்ண நேரம் எடுத்துக்குதுதானே! அதான் இந்த முறை நாம நைட்டே கலர் மிக்ஸ் பண்ணி அதைத் தனித் தனி கவரில் போட்டு ஆடிட்டோரியம்க்கு எடுத்துட்டுப் போயிடலாம். நமக்கு டைம் மிச்சமாகும்'' என்று சொல்லிய சஹானா செய்தித் தாளை விரித்து அதில் கல் உப்பைப் பரப்பி தாங்கள் முடிவு செய்து வைத்திருந்த ரங்கோலிக்குத் தேவையான கலர்களை உப்புடன் சேர்த்துக் கலந்து தனித் தனியாக கவரில் எடுத்து வைக்க ஆரம்பித்தாள்.

அவளது தோழிகளும் அவளுக்கு உதவி செய்தனர்.

அப்பொழுது காவ்யாவிற்கு அவள் அம்மாவிடம் இருந்து போன் வந்தது. எடுத்துப் பேச ஆரம்பித்தாள்.

''ஹலோ அம்மா.''

''ஹலோ காவ்யா, நல்லா இருக்கியா? என்ன செஞ்சிக்கிட்டு இருக்க? படிச்சிக்கிட்டு இருக்கியா?''

''ஏன்மா தினமும் புக்கை எடுத்துப் படிக்க நான் என்ன ஸ்கூலிலா படிக்குறேன். காலேஜிலே படிக்கிறேன் மா. உப்பை வைச்சு கிண்டிக்கிட்டு இருக்கேன்.''

''உப்பா? இன்டக்ஷன் ஸ்டவ்வில் எதையாவது சமைக்கிறியா?''

''சமையலா? அதுவும் நானா? நல்லா கேட்டீங்க போங்க. நாளைக்கு பங்ஷனுக்கு ரங்கோலி போட உப்பில் கலரைச் சேர்த்துக்கிட்டு இருக்கேன்.''

''என்னது உப்பிலே ரங்கோலியா?''

''ஆமா மா. நாங்க எல்லாம் 10 அடிக்கு ரங்கோலி போடுவோமா. அதிலே கோலப் பொடி எல்லாம் வைச்சு கலர் கொடுக்க மாட்டோம். அரை மூடை கல் உப்பை வாங்கிட்டு வந்து அதிலே கலரைக் கலப்போம். அதைக் கோலத்தில் பரப்புறத்துக்கும் ஈஸியா இருக்கும். கல் உப்பு என்பதால் நல்லா மினுமினு என்று சூப்பரா இருக்கும்''-என்று சொன்னவள் வேறு சில விஷயங்களைப் பேசிவிட்டு அழைப்பைத் துண்டித்தாள்.

மறுநாள் காலை ஆறு மணிக்கே எழுந்து தயாராகி கவர்களை எல்லாம் அள்ளிக் கொண்டு ரங்கோலி போடத் தெரிந்த ஆறு பெண்களும் ஆடிட்டோரியம் வந்தடைந்தனர். முதலில் சாக்-பீஸால் கோலத்தை வரைந்தனர். அதன் பின் ஆரம்பம் ஆனது அவர்களது சோதனைக் காலம்.

முதலில் உள்புறம் இருப்பதற்கு உப்பைப் பரப்பி விடலாம் எனச் சொல்லி அதற்குரிய கலர் உப்பு அடங்கிய கவரை எடுத்த சஹானா நியூஸ் பேப்பரில் கொட்ட... அந்தோ பரிதாபம்!

அது பந்து மாதிரி ஒன்றாகத் திரண்டு அவளைப் பார்த்து இளித்தது. கல் உப்பைக் கை கொண்டு பிசறிக் கலர் சேர்த்தபோது அது தண்ணீர் விட்டதால் அவை ஒன்றோடு ஒன்று ஒட்டி 'உலகம் உருண்டை' என்று உருண்டை வடிவம் பெற்று அவளைப் பார்த்துக் கெக்கலித்தது.

அவளது முன் ஜாக்கிரதை எண்ணம் எல்லாம் சரி தான். அதை அப்படியே நியூஸ் பேப்பரில் பரப்பிய நிலையில் வைத்திருந்தால் பிரச்சனையாகி இருக்காது.



உடனே அதைக் கவரில் போட்டது தான் தப்பாகிப் போனது.

தோழிகளைப் பார்த்துப் பரிதாப லுக் விட்ட சஹானாவைப் பார்த்து காவ்யா, ''சகி, உன் மூளையை மியூசியத்துல தான் வைக்கணும்'' என்று நக்கலாகச் சொன்னாள்.

''நான் இதைச் செய்யும் போது வேடிக்கை பார்த்த நீ உன் மூளையை பேங்க் லாக்கரில் பூட்டி வைச்சிருந்தியோ?'' என்று படு நக்கலாக சஹானா திருப்பிக் கொடுத்தாள்.

''ஹி! ஹி! இதுக்குப் பேரு தான் கிவ் அண்ட் டேக் பாலிஸியோ?'' என்று காவ்யா சொல்ல அனைவரும் சிரிக்க ஆரம்பித்தனர்.

''உப்போ, கலர் பொடியோ வாங்கணும்ன்னா இப்ப எந்தக் கடையும் இந்த நேரத்திற்கு திறந்து இருக்காதே. என்ன பண்ணலாம்?'' என்று காவ்யா கேள்வி எழுப்ப,

''வேற வழி. இதை வைச்சுத் தான் சமாளிக்கணும்'' என்று சொல்லி சஹானா அதனுடன் போராடத் தயாரானாள்.

அந்தக் கோலத்தில், உப்பை உடைத்து (??) பரப்பி முடிக்கும் வரை 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று வள்ளுவரின் வரிகளை ஒருத்தி மேற்கோள் காட்டினாள் என்றால், 'துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா?' என்று இன்னொருத்தி பாடினாள்.

இப்படிக் கேலி செய்து சிரித்துக் கொண்டே அவர்கள் அந்தக் கோலத்தை முடித்துவிட்டு ஹாஸ்டல் சென்று குளித்து சாப்பிட்டுத் தயாராகி திரும்பவும் ஆடிட்டோரியம் வந்தனர்.

தோழிகளிடம் பேசிச் சிரித்துக் கொண்டே வந்த சஹானா வாசலில் தாங்கள் போட்ட கோலத்தை நின்று ரசிக்க ஆரம்பித்தாள்.

''நாம போட்ட கோலத்தை நாம தான் ரசிக்கணும் அப்படின்னு முடிவு பண்ணிட்டியா சகி? பொறுமையா ரசித்து விட்டு உள்ளே வா. நாங்க போறோம்'' எனச் சொல்லி அனைவரும் ஆடிட்டோரியத்திற்குள் நுழைந் தனர்.

அப்பொழுது பின்னிருந்து பெரிதாகச் சத்தம் கேட் கவும் என்னவென்று சஹானா திரும்பிப் பார்த்தாள். சில மாணவர்கள் எதற்காகவோ சப்தம் எழுப்பியவாறு சென்று கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது தூரத்தில் மித்ரன் நடந்து வருவதைப் பார்த்து சஹானா அதிர்ச்சி அடைந்தாள். 'இவர் எங்கே இங்கே? இது என்ன குடும்ப பங்ஷனா? இவர் வந்து கலந்து கொள்ள? அப்படியே இருந்தாலும் என்னிடம் சொல்லாமல் எப்படி வரலாம் எனக் கோபம் அடைந் தாள். அவனது இரு பக்கமும் நடந்த வந்த அவனது இரு நண்பர்களை அப்பொழுது தான் கவனித்தாள். இவங்க வேறா?' என்று நொந்து போனாள்.

மனைவியின் முகபாவனையைப் பார்த்து மித்ரன் உள்ளுக்குள் சிரித்த போதும் தன் முகத்தை இறுக்கத் துடனேயே வைத்துக் கொண்டான்.

அவளை நெருங்கிய போது, ''ஹாய் சஹானா!'' என மித்ரனின் இரு நண்பர்களும் சொன்னார்கள். மித்ரன் எதுவும் கூறவில்லை. மூவரும் நிற்காது அவளைத் தாண்டிச் சென்று கொண்டே இருந்தார்கள். சஹானா குழப்பத்துடனே அவர்களைப் பின் தொடர்ந்தாள்.



ஹெச்.ஓ.டி. அவர்களைக் கை குலுக்கி வரவேற்றார். அருகில் நின்று கொண்டிருந்த நான்காம் ஆண்டு மாணவர்களிடம், ''நம்ம காலேஜ் ஓல்டு ஸ்டூடண்ட்ஸ்'' என்று அறிமுகப்படுத்தினார்.

'என்னது ஓல்ட் ஸ்டூடண்டா?! இவரும் இங்க தான் படிச்சாரா?!' என்று சஹானா எண்ணிக் கொண்டிருக்கும் பொழுதே அவளது கைப்பேசி அழைத்தது. பங்ஷன் என்பதால் இரண்டு நாட்கள் காலேஜிற்குள் செல்போன் பேச அனுமதி அளித்திருந்தார்கள்.

அமிர்தம் தான் அழைத்திருந்தார்.

''சொல்லுங்கம்மா'' என்றதும், ''சஹானா அம்மா கோயம்புத்தூர் வந்திருக்கேன் டா. அப்பாக்கு ஆபிஸில் வேலை இருக்காம். அதனால அவர் வரலை. நானும் உங்க அத்தையும், மாப்பிள்ளை கூட வந்தோம். இப்ப மருதமலை கோவிலுக்குப் போகப் போறோம். நீ சாயந்திரம் பங்ஷன் முடிஞ்சதும் எங்க ஹோட்டலுக்கு வந்து விடு. நீ வெளியே வந்து எங்க கூட தங்குவதற்கு அப்பா உங்க வார்டனுக்கு பர்மிஷன் லெட்டர் அனுப்பி இருக்கார்'' என்று விபரம் முழுவதும் சொல்லி வைத் தார்.

அவள் தன் தோழிகள் இருக்குமிடம் தேடிச் சென்று அவர்களோடு பேச ஆரம்பித்தாள்.

மித்ரனைப் பார்த்துவிட்டு நவீன் அவனருகே ஓடி வந்தான்.

''பாஸ் வாங்க வாங்க. பங்ஷனுக்கு வந்தால் தான் வருவேன் என்று அன்னைக்கு டவுட்டா சொன்னீங்க! காலேஜ் உங்களை இழுத்திட்டு வந்திடுச்சு... பார்த்தீங் களா!'' என்றதும்,

''அப்படியா மித்ரன்?'' என்று அருகே இருந்த நண்பன் நக்கல் செய்ய ஆரம்பித்தான்.

அவனது நக்கலைக் கண்டு கொள்ளாது அவன் நவீனைத் தன் நண்பர்களுக்கும், தன் நண்பர்களை நவீனிற்கும் அறிமுகப்படுத்தினான்.

''பாஸ் நான் இன்னைக்கு ஒரு கடி ஜோக் சொல்லுறேன். நீங்க பதில் சொல்லுங்க'' என்று நவீன் ஆரம்பித்ததும், நண்பர்கள் அனைவரும் பதில் சொல்லத் தயாராகினர்.

''லவ் லெட்டருக்கும், எக்ஸாம்'க்கும் என்ன வித்தியாசம்?'' என்று நவீன் கேட்டவுடன்,

''லவ்லெட்டர் என்றால் மனசுக்குள்ள நிறைய இருக்கும். ஆனா எழுத வராது'' என்று மித்ரன் சொல்ல,

''எக்ஸாம் என்றால் மனசுக்குள்ள ஒண்ணுமே இருக்காது... ஆனா நிறைய எழுதுவோம்! எப்பூடிடிடி?'' என்று மித்ரனின் நண்பன் கேட்க,

''எப்படி பாஸ்?'' என நவீன் ஆச்சரியப்பட,

''ஏன் நவீன் உனக்குக் கேள்வியைக் காண்பிச்ச 'கூகுள்' எனக்குப் பதிலைக் காட்டாதா?'' என்று மித்ரன் புருவம் உயர்த்திக் கேட்க அனைவரும் சிரித்தனர்.

''ஓ.கே. நவீன். அப்புறம் பார்க்கலாம். ஓல்ட் ஸ்டூடண்ட்ஸ் யார் யார் வந்திருக்காங்க என்று ஒரு ரவுண்ட் பார்த்திட்டு வரோம்'' என்று சொல்லி நகர்ந்தனர்.

ஒரு மணி நேரம் கழித்து சஹானாவும், நவீனும் எதிர் எதிரே நின்று பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து மித்ரன் அவர்கள் அருகே சென்றான். அவன் வருவதை



இருவருமே கவனிக்கவில்லை. வந்தவன் சஹானாவின் பின்புறம் வந்து நின்றான். அதாவது நவீனுக்கு மட்டும் முகம் காட்டியவண்ணம் நின்று அவர்களின் பேச்சினைக் கேட்க ஆரம்பித்தான்.

சரியாக நவீன் அப்பொழுது தான் சஹானாவைப் பார்த்து, ''ஐ லவ் யூ'' என்றான்.

சஹானாவிற்கு ஒரு நொடி என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவன் சொன்னதைக் கேட்டுவிட்டுத் தான் எப்படி ரியாக்ட் செய்ய வேண்டும் என்றும் புரியவில்லை. 'இந்த இடத்தை விட்டு உடனே செல்!' என மூளை அறிவுறுத்த சடாரென்று திரும்பியவள் தான் யார் மீதோ மோதி விட்டோம் என்று தெரிந்த நொடி ''சாரி'' என்று சொல்லிக் கொண்டே நிமிர்ந்து அவர் முகம் பார்க்க... அவள் மித்ரனை அந்த இடத்தில் எதிர்பார்க்கவில்லை.

'எல்லாவற்றையும் கேட்டு விட்டுப் பேசாமல் இருக்கிறாரா?' என்ற எண்ணம் பிறந்தவுடன் மித்ரனை முறைத்த வண்ணம் அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

அவள் திரும்பிய நிலையில் மித்ரனை முறைத்ததால் நவீனால் அதைப் பார்க்க முடியவில்லை.

நவீன் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு தான் சஹானாவின் மீது தனக்கு ஒரு ஈர்ப்பு இருக்கின்றது என்பதைக் கண்டு பிடித்தான். அதை அவளிடம் சொல்லச் சரியான சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தான். இன்று சொல்லி விடலாம் என்று முடிவு செய்து துணிச்சலைத் திரட்டி அவன் வாய் திறந்து சொல்ல ஆரம்பிக்கும் பொழுது சரியாக மித்ரன் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான்.

அதனால் ஒரு நொடி சொல்லலாமா, வேண்டாமா என்று நவீன் தயங்கியது என்னவோ உண்மை. ஆனால் சந்தர்ப்பத்தை நழுவ விடாது சொல்லி முடித்து விட லாம் என நினைத்துத் தான், மித்ரன் அருகில் இருப்ப தையும் பொருட்படுத்தாது சொல்லி முடித்தான். சஹானா அவ்விடம் விட்டு அகன்றதும் நவீன் மித்ரனைப் பார்த்து அசடு வழிந்தான்.

மித்ரன் நவீனின் தோள் மேல் கைப்போட்டு, பேசிக் கொண்டே அவனைத் தனது வாடகைக் கார் நிறுத்தி யிருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றான்.

மித்ரன், ''என்ன நவீன், ரொம்ப நாள் காதலா?'' எனக் கேட்டான்.

''இல்ல பாஸ். இப்ப தான்... ஒரு மாசமா... இன் னைக்கு எப்படியும் சொல்லணும்ன்னு தோணுச்சு. அதான் நீங்க நின்னுக்கிட்டு இருந்ததைக் கூடக் கண்டுக் காமல் சொல்லிட்டேன். சாரி.''

''என்கிட்ட எதுக்கு நவீன் சாரி எல்லாம் கேட்குற. அது சரி நீ உன் வீட்டில ஒரே பையனா? உன்னை விடப் பெரியவங்க யாரும் இல்லையா?''

''ஏன் கேட்குறீங்க? எங்க வீட்டில மூணு பேர். முதல்ல அண்ணா, அக்கா ரெண்டாவது, நான் தான் லாஸ்ட்.''

''அக்கா இல்லைன்னா அண்ணா, ரெண்டு பேருல யாருக்காவது கல்யாணம் ஆகிடுச்சா?''

''ரெண்டு பேருக்குமே ஆகலை. அக்காக்குப் பார்த் துக்கிட்டு இருக்காங்க.''

''சோ உன் வீட்டில உனக்கு லைன் க்ளியர் இல்லை. உங்க வீட்டுல உன் லவ்வை ஏத்துக்குவாங்களா?''



''இப்போ எப்படி பாஸ் ஏத்துக்குவாங்க?''

''அப்போ வீட்டில சொல்ல மாட்டியா நவீன்?''

''சரியான நேரம் காலம் வரும் வரைக்கும் காத்திருப் பேன்.''

''நீ காத்திருப்பாய்... உனக்காக அந்தப் பொண்ணும், அவ வீட்டைச் சேர்ந்தவங்களும் காத்திருப்பாங்களா?''

''என்ன பாஸ், இப்படிக் கேட்குறீங்க. அவ கிட்ட போய் கேட்டுட்டு வரட்டுமா?''

''எல்லாத்திலேயும் அவசரமா நவீன். முதல்ல அவ உன் பிரப்போசலை ஏத்துக்கட்டும். மீதியை அதுக்கு அப்புறமா பார்க்கலாம்.''

''என்னை ஏத்துக்க மாட்டான்னு சொல்லுறீங்களா? எனக்கு என்ன குறைச்சல்?''

''அவ உன்னை ஏத்துக்கலை என்றால் உன்னிடம் குறை என்று ஏன் எடுத்துக்கிற. உன் வயசு பசங்களே இப்படித்தான். உங்களுக்கு ஏதாவது ஒரு பொண்ணை பிடிச்சு இருந்தால் உடனே அவளுக்கும் உங்களைப் பிடிச்சுப் போகணும்ன்னு ஆசைப்படுறீங்களே ஒழிய... அந்தப் பொண்ணு நம்மை ஏத்துக்க முடியாததுக்கு அவ பக்கம் உள்ள நியாயமான காரணம் என்னவென்று யோசிச்சுப் பார்க்க மாட்டேங்குறீங்க.''

''நீங்க சொல்லுறதெல்லாம் சரி பாஸ். எனக்கு எஸ் சொல்லுவாளா? இல்ல நோ சொல்லுவாளா? உங் களுக்கு என்ன தோணுது?''

''கண்டிப்பா நோ தான் சொல்லுவாள்.''

''ஏன் பாஸ் இப்படிச் சொல்லுறீங்க?''

''அவ போகும் போது மதுரையை எரிச்ச கண்ணகி மாதிரி கோபமா என்னைப் பார்த்து ஒரு முறை

முறைச்சுட்டுப் போனாள். அதை நீ பார்க்கலை நவீன். அவளுக்கு மட்டும் எரிக்குற சக்தி இருந்தால் என்னைச் சாம்பல் ஆக்கியிருப்பாள். ஹா ஹா'' என்று சிரிக்கும் மித்ரனைப் பார்த்து.

''உங்களை எதுக்கு முறைக்குறா? அவ என்ன லூசா? அடடா நான் தான் தெரியாம என் லவ்வைச் சொல்லிட்டேனா?'' என நவீன் நக்கலாகக் கேட்க,

''அடப்பாவி! இப்படி ஒரே நிமிஷத்திலே அவளை லூசுன்னு சொல்லிட்டியே! ஆனா ஒண்ணு நவீன் அவ ஹஸ்பண்ட் ஒரு லூசு தான்!''

''ஹஸ்பண்ட்? வருங்காலக் கணவரைச் சொல்லுறீங்களா?''

''ஹேய் மேன்! அவளுக்குக் கல்யாணம் ஆகிடுச்சு. அதுனால தான் அவள் உனக்கு நோ சொல்லுவாள் என்று சொன்னேன்.''

''வாட்ட்ட்ட்ட்?!'' என்று நவீன் எலெக்ட்ரிக் ஷாக் அடித்தவன் போலக் கத்தினான்.

''ஹேய் கூல்! எதுக்கு இவ்வளவு அதிர்ச்சி?''

''பாஸ், உங்களுக்கு எப்படித் தெரியும்? அவ ஹஸ்பண்ட் நிஜமாவே லூசா?''

''இல்லையா பின்னே? நீயே சொல்லு நவீன். தன் வைஃபுக்கு தன் கண் முன்னாலேயே ஒருத்தன் லவ் பிரபோஸ் பண்ணுவதைப் பார்த்த பின்னும், அவன் சட்டையைப் பிடிச்சு எகிறாமல், அவனுக்கு அட்வைஸ் கொடுத்துக்கிட்டு உட்கார்ந்திருப்பவனை லூசுன்னு சொல்லாமல் வேற எப்படிச் சொல்லுறது?'' என்று புருவம் உயர்த்திக் கேட்கும் மித்ரனை நவீன் புரிந்தும் புரியாத பாவனையோடு நோக்கினான்.



தன் வலது கையை நவீனிடம் நீட்டியவன், ''ஹலோ! ஐ ஆம் மித்ரன். சஹானாவோட ஹஸ்பண்ட்'' என்று தன்னை அறிமுகப்படுத்த பேந்தப் பேந்த விழித்துக் கொண்டே நவீன் தன் வலது கையை நீட்டிக் குலுக்கினான்.

தன்னுடைய கூற்றில் நவீனுக்கு நம்பிக்கை வரவில்லை என்பதைப் புரிந்து கொண்ட மித்ரன் காரில் வைக்கப்பட்டிருந்த தன்னுடைய லேப்-டாப்பைத் திறந்து தங்களது கல்யாண போட்டோக்களைக் காட்டினான்.

அதைப் பார்த்தவன், ''சாரி பாஸ். எனக்குத் தெரியாது. அதான் இப்படி ஒரு தப்பு நடந்திடுச்சு'' என்று நவீன் வருத்தம் தெரிவித்தான்.

''சாரி எல்லாம் தேவையில்லை நவீன். உனக்கு விஷயம் தெரியாது அப்படிங்கிறதால தான் நான் இவ்வளவு பொறுமையா பேசிக்கிட்டு இருக்கேன். நீ எனக்கு பிரண்டுங்கிறதால தான், நீ அவளை லூசான்னு கேட்டப்போ கூட என்னை லூசுன்னு சொல்லிக்கிட்டு நக்கல் பண்ணிக்கிட்டு இருந்தேன். ஆனால் என் வைஃப் விஷயத்திலே எல்லா நேரமும், எல்லோர்கிட்டேயும் பொறுமையா இருப்பேன்னு சொல்ல முடியாது.

உனக்கு இன்னமும் லவ் பண்ண வயசு வரலைன்னு தான் நான் சொல்வேன். கிடைச்ச வேலையில சேரணும் என்றால் எக்ஸாமிலே படிச்சு பாஸாகுறது தான் இப்போதைக்கு உன்னோட லட்சியமா இருக்கணும். உங்க வீட்டிலையும் உன்னை விடப் பெரியவங்க எல்லாம் இன்னும் கல்யாணம் ஆகாமல் இருக்காங்க. அதனால கொஞ்ச காலம் பொறுத்திரு. அப்பவும் நீ நேசிக்கிற

பொண்ணு உன்னை நேசிக்கணும் அப்படின்னு கட்டாயப்படுத்தாதே. அவ பக்கம் உள்ள நியாயங்களை அலசிப் பாரு. கட்டாயப்படுத்தி காதலை வரவைச்சால்... அது நிலைக்காது.

என்ன நவீன் ஓவர் அட்வைஸா இருக்கோ?'' என்று கேட்டு மித்ரன் தன் பேச்சை முடித்தான்.

''இல்ல பாஸ். சரியான நேரத்திலே சொன்ன சரியான அட்வைஸ் தான். சாரி அண்ட் தாங்க்ஸ்.''

''விடு நவீன். அப்புறம் ஒரு விஷயம். அவள் அப்பா ஹெல்த் கண்டிஷனால தான் நாங்க உடனே கல்யாணம் பண்ணும்படி ஆகிடுச்சு. அவர் ஹெல்த் கண்டிஷன் அவளுக்குத் தெரியாது. இன்னும் பத்து நாளில் அவருக்கு பை-பாஸ் சர்ஜரி பண்ணப் போறோம்.''

''ஓ! அப்படியா?''

''தயவு செய்து எங்க கல்யாண விஷயத்தை நீ வெளியே சொல்லாதே. அப்புறம் எல்லோரும் அவளை ஒதுக்கி வைச்சுடுவாங்க. அதான்... ப்ளீஸ்.''

''கண்டிப்பாச் சொல்லமாட்டேன்'' என்று மித்ரனிடம் வாக்குக் கொடுத்துவிட்டு நவீன் விடைபெற்றுச் சென்றான்.



# 11

பழைய நண்பர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கல்லூரி நாட்களை நினைவுகூர்ந்த வண்ணம் காலேஜை



சுற்றி வந்தனர். கலை நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்தனர்.

மாலை மங்கும் வேளையில் பார்வதி மகனது அலைப் பேசிக்கு அழைப்பு விடுத்தார்.

மித்ரன், ''சொல்லுங்கம்மா'' என்றவுடன்,

''பங்ஷன் முடிஞ்சிடுச்சாப்பா?'' என்று பார்வதி கேள்வி எழுப்பினார்.

''முடியப் போகுது மா. ஏன்மா?''

''வரும்போது சஹானாவைக் கூட்டிட்டு வந்திடுப்பா.''

''அம்மா என் கடமையை நான் கரெக்டாச் செய்வேன் மா. நீங்க சொல்ல வேண்டிய தேவையே இல்லை.''

''சரி பா'' என்று சொல்லி அலைப்பேசியைத் துண்டித்தார்.

மித்ரன் தன் பார்வையைச் சஹானா மீதே பதித்திருந்தான். அவள் தன் தோழிகளிடம் விடைபெற்று ஆடிட்டோரியத்தை விட்டு வெளியேறவும் மித்ரனும் கிளம்பினான். சஹானா கல்லூரியை விட்டு வெளியேறி பேருந்து நிறுத்துமிடத்திற்கு வந்து பேருந்திற்காகக் காத்திருக்கத் தொடங்கினாள்.

அப்பொழுது அவளருகே டாக்ஸி ஒன்று வந்து நின்றது. உள்ளேயிருந்து மித்ரன் அவளை ஏறிக் கொள்ளுமாறு சைகை செய்தான். அவளும் ஏறிக் கொண்டாள்.

காரை ஓட்டி வந்தவர் மித்ரனைப் பார்த்து, ''இவங்க தான் உங்க சம்சாரமா தம்பி?'' என்று கேட்டார்.

''ஆமாண்ணே'' என்றவன் சஹானா புறம் திரும்பி, ''நான் எப்போ கோவைக்கு வந்தாலும் இவர் டாக்ஸியில தான் போவேன்'' என்று அவரை அறிமுகப்படுத்தினான்.

மனைவி தன்னிடம் சகஜமாகப் பேசப் போவதில்லை என அறிந்த மித்ரன் ஓட்டுனருக்கு அது பலவித கற்பனைகளைத் தூண்டும் என நினைத்துத் தன் தொழில் சம்பந்தமான பேச்சுக்களையும், வேலைகளையும் செய்ய ஆரம்பித்தான்.

சஹானா தனது தாயையும், அத்தையும் கண்டு ஆர்ப்பரித்தாள்.

தன் தாயிடம், ''எத்தனை நாளா கூப்பிட்டேன். இப்ப எங்க அத்தை வந்து உங்களைக் கூட்டிக்கிட்டு வந்திருக்காங்க'' என்று சொன்னவள் தன் அத்தையிடம் தாங்க்ஸ் சொல்லவும் மறக்கவில்லை.

அனைவரும் சேர்ந்து இரவு உணவு முடித்துவிட்டு அறைக்குத் திரும்பினர். மித்ரன் இரு அறை ஏற்பாடு செய்திருந்தான். அமிர்தமும், பார்வதியும் ஒன்றில் தங்கி இருந்தனர். மித்ரன் மற்றொன்றில் தங்கி இருந்தான்.

மித்ரன் ராயல் சூட் ஏற்பாடு செய்திருந்தான். அது வரவேற்பறை, படுக்கையறை எனத் தனித் தனி பிரிவுகளாக இருந்தது. அறைக்குள் வந்த சஹானா கணவனை முறைத்த வண்ணம் சோபாவில் வந்து அமர்ந்தாள்.

''நீங்க என்ன நினைச்சுக்கிட்டு இருக்கீங்க?'' என்று எடுத்த உடனே அவள் குரல் உயர்த்தவும்,

''ஷ்... மெதுவாப் பேசு. இது ஒண்ணும் நம்ம வீடு இல்லை. உள்ளே பெட்ரூமுக்கு வந்து பேசு'' என சொல்லி படுக்கையறைக்குள் சென்றான். வேறு வழி இல்லாது அவளும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

''இப்பச் சொல்லு. என்ன உன் பிரச்சனை?''



''இன்னைக்குக் காலையில என் கிளாஸ் மேட் என்கிட்ட வந்து உளறினான் தானே! நீங்க எதுக்கு அங்க நின்னு வேடிக்கைப் பார்த்தீங்க?''

''நீ சொல்ல வருவது புரியலை. நான் அங்க நின்னிருக்கக் கூடாதுன்னு சொல்லுறியா?''

''ப்ச்சு. அவனை ஏன் நீங்க கேள்வி கேட்கலை?''

''அவனை நான் ஏன் கேள்வி கேட்கணும்? அப்படியே நான் கேள்வி கேட்டாலும், நீ யாரு என்னைக் கேள்வி கேட்க அப்படின்னு அவன் என்னைத் திருப்பிக் கேட்க மாட்டானா? நீ என் பொண்டாட்டின்னு என்னால சொல்ல முடியுமா?''

அவள் மௌனமாக இருந்தாள்.

''அவன் லவ்வை உன்கிட்ட தானே சொன்னான். அதை மறுப்பதும், ஆதரிப்பதும் உன் இஷ்டம். எனக்கு என்ன வந்தது? இவ்வளவு வக்கணையா என்னைக் கேள்வி கேட்குற இல்லை... அவன் கிட்டே நீ சொல்ல நினைப்பதைச் சொல்ல வேண்டியது தானே?''

''ஓ! நான் மறுப்பதும் ஆதரிப்பதும் என் இஷ்டமா? அதனால உங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லையா?

''எனக்கு என்ன வந்துச்சு? நீ அவன் லவ்வை ஆதரிச்சா உன் அப்பா தான் வருத்தப்படுவார். ஒண்ணு நம்ம பொண்ணைத் தப்பா வளர்த்துட்டோமோன்னு... இல்லைன்னா அவ இஷ்டத்துக்கு மீறி அவளை வலுக்கட்டாயமா கல்யாணம் செஞ்சு வைச்சுட்டோமோன்னு நினைச்சு அவர் தான் வருத்தப்படுவார்.''

''தப்பு செஞ்சதெல்லாம் நீங்க. நானும் என் அப்பாவும் வருத்தப்படணுமா? உங்க பண பலத்தைக் காட்டி

எங்கப்பாவை சம்மதிக்க வைச்சுட்டீங்க இல்லை'' என்று பொருமினாள்.

'இவள் இப்படியே என்னைத் திட்டிக்கிட்டே இருக்கட்டும். நவீனிடம் விஷயத்தைச் சொல்லி விட்டோம் என்று சொல்ல வேண்டாம். மேடம் ரொம்ப கோபத்துல இருக்காங்க. இப்பச் சொன்னா ஏன் சொன்னீங்கன்னு அதுக்கும் சண்டைக்கு வந்தாலும் வருவாள்' என நினைத்து ஒன்றும் சொல்லாமல் அமைதியானான்.

போட்டிருந்த சுரிதாரைக் கூட மாற்றாது முன்னறை சோபாவில் சென்று படுத்தாள். அவளின் சிறுபிள்ளைத் தனமான செயல் ஒரு நொடி சிரிப்பை வரவழைத்தது. அடுத்த நொடி தன் கல்யாண வாழ்வை எண்ணிக் கலங்கினான்.

'சரி நானாவது விஷயம் தெரிந்தவன். இவள் பாவம்!' என்று மனைவிக்காகப் பரிதாபப்பட்டான்.

தனக்குத் திருமணமான விஷயத்தை யாரிடமும் சொல்ல முடியாமல் தவிக்கிறாள். மாமாவின் ஆபரேஷன் முடிந்தவுடன் உண்மையை எடுத்துச் சொல்லுவோம். அவளுக்கு நம் மீது உள்ள கோபம் போய்விடும் என நினைத்தான். ஆனால் அவனுக்குத் தெரியவில்லை மறுநாளே தன்னுடைய முடிவைத் தானே மாற்றும்படி ஆகப் போகிறது என்று.

சஹானா காலையில் எழுந்து தயாராகியவுடன் மித்ரன் அவளை டாக்சியில் ஏற்றி முதலில் அனுப்பி வைத்தான்.

அதன் பின் சில பிசினஸ் சம்பந்தமான வேலைகளைச் சென்று முடித்துவிட்டு நேராகக் கல்லூரிக்குச் சென்றான். அவன் நவீனிடம் பேசச் சென்ற பொழுது எங்கிருந்தோ வேகமாக சஹானா அங்கு வந்து சேர்ந்தாள்.



''நவீன், சார் யாருன்னு உனக்குத் தெரியுமா? ஓல்ட் ஸ்டூண்ட்டாம். ஹெச்.ஓ.டி. சொன்னார்'' என்றாள்.

மித்ரனுக்குத் தன் மனைவி நவீனை வைத்துத் தன்னை வெறுப்பேற்ற முடிவு செய்திருக்கிறாள் என்று புரிந்தது. உள்ளுக்குள் சிரித்துக் கொண்டு வெளியே தனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை போன்ற பாவனையுடன் மனைவியின் கிண்டல்களைக் கவனிக்கத் தயாரானான்.

நவீனோ 'நேற்று நாம செய்த சொதப்பலினால் நம்மை வைச்சு இரண்டு பேரும் காமெடி பண்ணிச் சிரிக்குறாங்க' என்று நினைத்துக் கொண்டான்.

நவீன் பதில் ஏதும் சொல்லவில்லை.

சஹானாவும் அவனிடம் இருந்து பதிலை எதிர்பார்க்கவுமில்லை. அவளுடைய ஒரே நோக்கம் நவீனுடன் சேர்ந்து கொண்டு மித்ரனை வெறுப்பேற்ற வேண்டும். பின்னே நேற்று மித்ரன் தானே நவீனிடம் என்ன பதில் சொன்னாலும் தனக்கு ஒரு பாதிப்பும் இல்லை என்று சொன்னான். அதனால் அவள் தொடர்ந்து நவீனிடம் பேச ஆரம்பித்தாள்.

''உனக்கு விஷயம் தெரியுமா நவீன்? சாயங்காலம் நமக்கும் இவருக்கும் போட்டி இருக்கு. ஐ மீன் ஓல்ட் ஸ்டூடண்ட்ஸுக்கும் இப்பப் படிச்சுக்கிட்டு இருக்குறவங்களுக்கும் இடையிலே பாட்டுப் பாடணும் இல்லைன்னா டான்ஸ் ஆடணும் என்று போட்டி. ஹெச்.ஓ.டி. ஒரே ஒரு போட்டிக்கு மட்டும் பெர்மிஷன் கொடுத்திருக்கார். பிரசண்ட் ஸ்டூடண்ட்ஸ் சார்பா நானும் என் பிரண்ட்ஸும் சேர்ந்து டான்ஸ் ஆடப் போறோம்.

கல்சுரல்ஸ்க்காக ரெடி பண்ணி வைச்சிருந்த டான்ஸை நம்ம பசங்க போட்டிக்குன்னு ஒதுக்கி வைச்சுட்டாங்க. ஓல்ட் ஸ்டுடண்ட் சார்பா யாரோ டிரம்ப் கார்டாம்... அவர் தான் பாடப் போறாராம். இவங்க ஜெயிப்பாங்கன்னு நினைக்குற?'' என்று கேட்டுக் கொண்டிருக்கும் பொழுது மித்ரனின் நண்பன் அங்கு வந்து சேர்ந்தான்.

சஹானா டான்ஸ் ஆடப் போகிற விஷயம் அவன் காதில் தெளிவாக விழுந்தது. அதனால் அவன் மித்ரனின் காதில், ''சபாஷ்! சரியான போட்டி!'' என்றான்.

மித்ரனின் நண்பன் வந்தவுடன் சஹானா அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

'சனா பேபி, நீ டான்ஸ் ஆடப் போறியா? சொல்லவே இல்லை. அது சரி அவ உன்னிடம் எல்லாத்தையும் சொல்லி விட்டுத் தா  செஞ்சாளா?' என அவன் மனம் கேள்வி எழுப்பியது. அவள் சென்று மறையும் வரை அவனது பார்வை அவளையே தொடர்ந்திருந்தது.

அவள் சென்றதும் நவீன், ''அது யாரு டிரம்ப் கார்டு? என் அப்படி ஒரு பேரு வந்தது?'' என்று கேட்டான்.

மித்ரனின் நண்பன், ''சீட்டு விளையாடும் போது சரியான சமயத்திலே டிரம்ப் கார்டு... அதாவது துருப்புச் சீட்டை இறக்கி எதிரே விளையாடுறவங்களை தோற கடிப்போம் இல்லையா? அது மாதிரி நாங்க காலேஜ் படிக்கும் போது இன்டர் காலேஜ் கல்சுரலில் எல்லாம் அவன் மூலமா நாங்க கர்னாடக இசைப் பாடலுக்கும், மெல்லிசைக்கும் என ரெண்டு பரிசை வாங்கிட்டு வந்துடுவோம். அதனால மிச்ச காலேஜ் பசங்க வைச்ச பேரு தான் இந்த டிரம்ப் கார்டு.''

''ஓ! எல்லாம் சரி... அவர் யாருன்னு சொல்லலையே!''



''வேற யாரு? எங்க மித்ரன் தான்'' என்று தோளோடு அவனை அணைத்துக் கூற,

''சபாஷ்! சரியான போட்டி!'' என்று இம்முறை நவீன் சொன்னான். மூவரும் சிரித்துக் கொண்டனர்.

''ஆனா பாஸ் நேத்தே ஆர்கெஸ்ட்ரா முடிஞ்சு போச்சே. பாட்டுக்கு மியூசிக்... ஓ கரோக்கியா? அப்படியே பின்னணி இசையை மட்டும் ஒரிஜினல் பாட்டிலிருந்து எடுத்துப் போடப் போறீங்களா? நீங்க தான் பாடப் போறதா சஹானாவிடம் சொல்லாமல் சஸ்பென்ஸா வைச்சு இருக்கீங்களா?'' என்று நவீன் கேட்க, மித்ரன் அதை ஆமோதித்தான்.

மித்ரன் மனைவியின் நடனத்தை வீடியோ எடுக்க ஹெச்.ஓ.டி.யிடம் சென்று பர்மிஷன் கேட்டான். பலத்த யோசனைக்குப் பின் அவனைத் தன் அருகே நின்று வீடியோ எடுத்துக் கொள்ளும்படி கூறினார். அவனும் சந்தோஷமாக ஒத்துக் கொண்டான்.

ராதை மனதில் என்று தொடங்கும் 'சிநேகிதியே' படப் பாடலுக்கு நான்கு பெண்கள் நடனமாடினர். அந்தப் பாடலில் வருவது போலவே மேக்-அப் போட்டிருந் தார்கள். நடுவில் வந்து மேற்கத்திய இசைக்கு வேறு இருவர் வந்து ஆடினார்கள்.

மனைவியின் நாடகத்தைப் பார்த்தவன், 'இவ்வளவு நன்றாக ஆடுவாளா இவள்! நல்ல வேளை பின்னால் ஆடுபவர்கள் சொதப்பலாக ஆடுகிறார்கள். இல்லாவிட் டால் இவள் காட்டும் பாவத்திற்கு முன்னால் என் பாட்டு எடுபடாது போய்விடும் போலவே!' என நினைத்தான். அவளது நடன அசைவுகளில் சொக்கிப் போய் நின் றிருந்தான்.

அவள் குறை உயிர் கரையும்முன் உடல் மண்ணில் சரியும்முன்

கண்ணா கண்ணா நீ வா!

கண்ணீரில் உயிர் துடிக்க கண்ணா வா உயிர் கொடுக்க

என்ற வரிகளின் போது மனைவியின் முகத்தில் தோன்றும் பாவத்தை ஹேண்ட் கேமரா வழியாக ரசித்துப் பார்த்தவனுக்கு அவனது இரு கன்னத்தையும் பிடித்துக் கொஞ்ச வேண்டும் போல் தோன்றியது.

ஆடி முடித்தவள் மேடையில் நின்ற வண்ணம் கணவனைத் தேடினாள். அவளது தேடல் தனக்கானது என்று தெரிந்து கொண்ட மித்ரன் சிறகில்லாமலேயே பறந்தான். மேடையில் இருந்து இறங்கி முன் வரிசையில் அமர்ந்தாள்.

ஹெச்.ஓ.டி.யிடம் நன்றி தெரிவித்துவிட்டு அங்கிருந்து அகன்று தனது நண்பர்களுடன் சென்று நின்று கொண்டான். அவன் அருகில் வந்தவுடன் நண்பர்கள் குழு அவனைக் கிண்டல் செய்ய ஆரம்பித்தது.

"டேய் திடீர்ன்னு நம்ம ஆடிட்டோரியமே ஜொள்ளால் நிரம்பி வழியலை!" என்று ஒருவனும்,

"டேய் மித்ரா! தரையிறங்கு!" என்று ஒருவனும்,

"மச்சி வைஃப்க்கு விட்டுக் கொடுத்து எங்களை மண்ணைக் கவ்வ வைச்சிட மாட்டியே?" என்று சீரியசாக ஒருவனும் கூறினார்கள்.

"கண்டிப்பாக அப்படிச் செய்ய மாட்டேன். ஐ வில் கிவ் மை பெஸ்ட்" என்று மித்ரன் உறுதியளித்தான்.

'காலையிலே மேடம் வேற என்னிடம் சாலஞ்ஜ் பண்ணியிருக்காங்க. நானா அவளான்னு இன்னைக்கு



ஒரு கை பார்க்காமல் விடுறதா இல்லை' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அப்பொழுது மேடையில், "இப்போது ஓல்ட் ஸ்டுடண்ட் சார்பாக திரு மித்ரன் பாடுவார்" என்று அறிவிக்கப் பட்டது.

'மித்ரன்', 'டிரம்ப் கார்டு' என்ற கூச்சல்களுக்கு இடையே மித்ரன் மேடை ஏறினான்.

'இவரா டிரம்ப் கார்டு? எதுக்கு இந்த பேர் வந்தது?' என சஹானா குழம்பிப் போனாள்.

மித்ரனுடன் சேர்ந்து நண்பன் ஒருவனும் மேடையேறி நவீனிடம் சொன்ன டிரம்ப் கார்டுக்கான பெயர் காரணத்தை மைக்கில் கூறினான்.

'அவ்வளவு நல்லா பாடுவியா மேன் நீ! நீ என்ன தான் பாடுறேன்னு நானும் பார்க்கறேன்' என சஹானா மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

தக தக தக

தின தின தின

நக நக நக

என்ற விஸ்வரூபம் படப் பாடலை அவன் பாடத் தொடங்கியதும், 'இந்தப் பாட்டையா பாடப் போகிறார்? இதை கமலும், சங்கர் மகாதேவனும் சேர்ந்தல்லவா பாடினார்கள். இதை எப்படி இவர்...' என்று அவள் யோசித்துக் கொண்டிருக்கும் பொழுதே,

அதிநவனீதா அபிநயராஜா கோகுலபாலா கோடிபிரகாஷா

விரகநரகஞ்ரீ ரக்ஷக மாலா

எத்தனை முறை நான் ஏங்கிச் சாவேன்

இத்தவனை எனை ஆட்கொள்வாயா?

என்று அவன் மூச்சு விடாமல் பாடிக் கொண்டிருக்க கேட்டுக் கொண்டிருந்த சஹானா மூச்சடைத்துப் போனாள்.

உன்னைக் காணாது நான் இன்று நான் இல்லையே
விதை இல்லாமல் வேர் இல்லையே
நிதம் காண்கின்ற வான் கூட நிஜமல்ல
இதம் சேர்க்கும் கனா கூட சுகமல்ல
நீயில்லாமல் நான் இல்லையே!

அவன் பாட ஆரம்பித்ததும் ஆடிட்டோரியத்தில் இருந்த அனைவரும் அவனது குரலில் கட்டுண்டு அமைதி காத்தனர்.

முதல் முறையாக கணவனின் கம்பீரம் கண்ணில் பட்டு மனதில் நிழலோவியமாய் பதிந்தது!

சஹானா அவனின் குரலில், அவனது பாவத்தில் அசந்து தான் போனாள். பாடலின் நடுவே ஒரு முறையாவது தன்னை நிமிர்ந்து பார்க்க மாட்டானா என ஏங்கினாள்.

மித்ரனோ அவளைப் பார்த்தால் தன்னால் அடுத்த வரியைப் பாட முடியாது என்பதை நன்கு அறிந்ததினாலே அவள் புறம் செல்லத் துடித்த கண்களுக்குத் தடை விதித்துப் பாட்டில் லயித்தான். அப்படி இருந்தும்கூட

இது நேராமலே... நான்
உன்னைப் பாராமலே... நான்
இந்த முழுஜென்மம் போயிருந்தால்
என்று அதை எண்ணி வீண் ஏக்கம் ஏங்காமலே
உன்னை மூச்சாக்கி வாழ்வேனடி!

என்று பாடினான்.



ராதை கண்ணனை நினைத்துப் பாடுவதாக உள்ள அந்தப் பாடலில் 'உன்னை மூச்சாக்கி வாழ்வேனடா!' என்று வரும். ஆனால் மித்ரனோ தனது ராதையை நினைத்து அந்தக் கடைசி நான்கு வரிகளைப் பாடியதால் 'உன்னை மூச்சாக்கி வாழ்வேனடி' என்று பாடினான்.

அவன் பாடலைப் பாடி முடித்ததும் கரகோஷத்தால் அரங்கமே அதிர்ந்தது. அவன் தலை குனிந்து, ''தாங்க் யூ!'' என்று சொல்லி நிமிரவும் அவனது ஹெச்.ஓ.டி. மேடைக்கு வந்து அவனைத் தோளோடு அணைக்கவும சரியாக இருந்தது.

அவனிடம் இருந்த மைக்கை வாங்கி, ''இந்தக் குரலை கடந்த ஆறு வருஷமா நான் ரொம்ப மிஸ் பண்ணினேன் மித்ரன்'' என்று சொன்னவுடன் பழைய மாணவர்கள் பலத்த ஆரவாரம் செய்தார்கள்.

''ஆனால் நீ பாரதியார் பாட்டு பாடுவாய் என்று நினைத் தேன்'' என்று அவனிடம் சொன்னவர், பின் கூட் டத்தைப் பார்த்து,

''இந்தப் போட்டியில் யார் ஜெயித்தார்கள் என்று உங்களின் கரகோஷமே தீர்மானித்து விட்டது. போட்டி யில் வென்ற மித்ரனுக்கு அவனுடன் போட்டியிட்ட நான்காம் ஆண்டு மாணவி சஹானாவைப் பரிசு கொடுக்க மேடைக்கு அழைக்கிறேன்'' என்றார். மித்ரனைப் பார்த்து ஒரு ரகசியப் புன்னகை புரிந்தார்.

அவன் அவரது காதில், ''தாங்க்ஸ் அ லாட் சார்'' என்றான்.

மித்ரனின் நண்பர்கள் செய்த ஆரவாரத்தை விஷயம் அறியாதவர்கள் அவனது வெற்றிக்கான ஆரவாரமாய் எடுத்துக் கொண்டனர்.

மேடையில் இருந்தபடியே மித்ரன் தன் நண்பனுக்கு ஜாடை காட்டினான். அவனோ நான் அதைப் புரிந்து கொண்டேன் எனச் சொல்லும் விதமாக கேமராவை உயர்த்திக் காட்ட 'எமகாதகன்!' என நண்பனை மித்ரன் மனதில் சிலாகித்துக் கொண்டான்.

'அடடா! நம்மை வம்பில் மாட்டி விட்டுட்டாரே இந்த ஹெச்.ஓ.டி.' என்று முதலில் நினைத்த சஹானா, பின் அவனை அருகே சென்று பார்க்கும் வாய்ப்பை நழுவ விட மனசில்லாமல் சந்தோஷமாகவே மேடையேறிச் சென்றாள்.

சஹானா மேடை ஏற ஆரம்பித்ததும் மித்ரன் இமைக்கவும் மறந்து அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். இருவரது பார்வையும் ஒன்றை ஒன்று கவ்வி நின்றன.

சஹானா அவர்கள் கொடுத்த பரிசை வாங்கி அவன் கையில் கொடுத்தாள். பரிசு வாங்கின கையோடு அவள் புறமாய் தன் வலது கையை நீட்டினான். வேறு வழியின்றி அவளும் தனது கரத்தை நீட்ட அதைப் பற்றிக் குலுக்கினான். மணமேடையில் அக்னியை வலம் வரும்போது பற்றியது. அதன் பின்பு இன்று தான் மறுமுறை அவளது கையைப் பற்றும் சந்தர்ப்பம் அமைந்தது. அந்த தீண்டல் அவர்களின் உயிர் வரை சென்று தாக்கியது.

திருமண நாளன்று... அன்றைய மனநிலையில் மித்ரன் மீது அதிக ஆத்திரத்தில் இருந்ததாலோ என்னவோ அவனது தீண்டல் அவளைப் பாதிக்கவில்லை. ஆனால் இன்றோ...

சுற்றுப்புறம் உணர்ந்து மித்ரன் அவளது கையை விடுவித்து, ''ரொம்ப நல்லா டான்ஸ் ஆடினாய்'' என்று சொன்னான்.



பதிலுக்கு எதுவும் சொல்லத் தோன்றாதவளாய் வெறுமனே தலையை மட்டும் அசைத்து அந்த இடத்தை விட்டு அகன்று மேடையை விட்டு இறங்கினாள்.

சஹானாவிற்கு கணவன் தீண்டிய தனது வலது கையைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் தோன்றியது. அந்தக் கைக்கு முத்தம் கொடுக்க ஆசையாக இருந்தது. அதற்கு யாருமற்ற தனிமை தேவைப்பட்டது.

இந்தக் கும்பலில் அது எப்படிச் சாத்தியம் என எண்ணியவளாய் உடை மாற்ற ஹாஸ்டல் செல்வதாகக் கூறி ஆடிட்டோரியமை விட்டு வெளியே வந்தாள். ஆனால் அங்கும் அவளுக்குத் தனிமை கிட்டவில்லை. அவள் அங்கு போய் ஆடை மாற்றியவுடனே மித்ரனிடம் இருந்து அழைப்பு வந்து விட்டது. ஹாஸ்டலை விட்டு வெளியேறச் சொல்லி போன் செய்திருந்தான்.

## 12

அவள் தனது அறையை விட்டு வெளியே வரவும் அவளது வகுப்புத் தோழி ஒருத்தி, ''ஹேய்! என்னமா பாடினான் யா! அதை விட சூப்பர் பெர்சனாலிட்டி இல்ல?'' என்று உடன் வந்தவளிடம் பேசிக் கொண்டே சென்றாள்.

சஹானாவிற்கு தன் கணவனைப் பற்றி தான் பேசுகிறார்கள் என்று புரிந்தது.

அவள் மாடியில் இருந்து கீழே இறங்கி கேட்டை நோக்கிச் செல்லும் பொழுது வேறொரு பெண் தன்னுடன் வந்தவளிடம், ''அவர் நீயில்லாமல் நான் இல்லையேன்னு என்னைப் பார்த்துப் பாட மாட்டாரா என்று இருந்துச்சு தெரியுமா?'' என்று சொல்லிக் கொண்டு போனாள்.

அருகே இருந்து கேட்டுக் கொண்டிருந்த சஹானாவிற்கு பொறுமை பறக்க ஆரம்பித்தது.

முந்தைய தினம் மாதிரியே பஸ் நிறுத்தத்திலிருந்து காரில் ஏறி மித்ரனுடன் ஹோட்டலை வந்தடைந்தாள். முதல் நாள் கோபத்தில் இருந்ததால் அவனுடன் பேச அவள் பிரியப்படவில்லை. இன்று ஒரு வித மயக்கத்தில் இருந்ததால் பேச முயற்சி எடுக்கவில்லை.

அறைக்குள் வந்தவள் நேராக படுக்கையறைக்குள் சென்று நைட்டியை மாற்றி விட்டு வந்தாள். கழுத்தைச் சுற்றிக் கைகளால் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது பார்வதி அறைக் கதவைத் தட்டி விட்டு உள்ளே வந்தார்.

''என்னாச்சும்மா? கழுத்தைத் தடவிக் கொடுக்கிறாய்?'' என வினவினார்.

''ஒண்ணுமில்ல அத்தை. இந்த க்ளோஸ் நெக் சுரிதார் போடுறேனா... காத்து போகாமல் ஒரு மாதிரி இரிட்டேட்டிங்கா இருக்கு அத்தை. நீங்க சாப்பிட்டீங்களா?''

''நான் சாப்பிட்டேன் மா. நீங்க ரூமுக்குக் கொண்டு வரச் சொல்லிச் சாப்பிட்டுத் தூங்குங்க.''

''இல்லை அத்தை. நாங்க கீழே ரெஸ்டாரண்ட்டிலே சாப்பிட்டுவிட்டுத் தான் வந்தோம்.''



''நல்லது மா. நாளைக்கு காலேஜ் போகத் தேவையில்லை தானே. அதனால நல்லா தூங்கி பொறுமையா எழுந்திரு. குட்நைட்'' என்று சொல்லி விடைபெற்றார்.

மகன் புறம் பார்வையைச் செலுத்தியவர் அவன் போன் எனச் சைகை செய்வதைப் பார்த்துத் தன்னிடம் ஏதோ சொல்ல விரும்புகிறான் என நினைத்துத் தலையாட்டிய வண்ணம் சென்று தனது அறைக்குள் நுழைந்ததும் அவனை போனில் அழைத்தார்.

மித்ரன் கைப்பேசியை எடுத்துக் கொண்டு படுக்கையறைக்குள் நுழைந்தான். நாளை என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி அவரிடம் கலந்தாலோசித்து அழைப்பைத் துண்டித்தவன் மனைவியைப் பார்க்க வரவேற்பறைக்குச் சென்றான்.

அவள் யாரிடமோ போனில் பேசிக் கொண்டிருந்தாள்.

''நல்லா பாடினால் பாட்டை ரசி. உன்னை யாரு வேண்டாம் என்று சொன்னா? அதுக்கு எதுக்கு ஹேமா ஆளை ரசிக்குற?''

''.......''

''விஜய் டான்ஸை மட்டுமல்லாது ஆளையும் ரசிக்கிறாய் என்றால்... அவரு பப்ளிக் பிகர். இவர் அப்படியா?''

''..........''

''சரி நான் ஒண்ணும் சொல்லலை. நீ என்னமோ பண்ணித் தொலை. இப்போ போனை கட் பண்ணு'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தவள் அதைத் தூக்கி எறிந்தாள். அது பக்கத்து சோபாவில் போய் விழுந்தது.

'சனா, உனக்கு இவ்வளவு கோபம் வருமா? நீ மட்டும் போனைத் தரையிலே போட்டிருந்தாய்... அவ்வளவு தான்! சிதறு தேங்காய் தான்! ஒரு வேளை அதனால தான் சோபாவிலே போட்டியோ? என நினைத்துக் கொண்டிருந்தவனின் கவனத்தை சஹானாவின் குரல் கலைத்தது.

''அவளவள் என்னை வெறுப்பேத்துறாளுங்க! பாட்டை ரசிச்சதோட நிறுத்த வேண்டியது தானே? எதுக்கு பாடினவரையும் ரசிக்கணுமாம்? எல்லாம் இவரைச் சொல்லணும். இவருக்குப் பாட வேற பாட்டே கிடைக்கலையா? நீயில்லாமல் நானில்லையே! பாட்டைப் பாரு பாட்டை ஒவ்வொருத்தியும் என்னமோ அவளுக் காகத் தான் இவர் இருக்குறதா நினைச்சுகிட்டு பேசுறாளுங்க... இவர் பேசாமல் 'செந்தமிழ் நாட்டுத் தமிழச்சியே' பாட்டைப் பாடி இருக்கலாம் தானே?! எவளாவது இவரை ரசிப்பாளா?'' என்று கடுப்பாகித் திட்டித் தீர்த்தாள்.

அவளின் பேச்சைக் கேட்டவன் வந்த வழியே திரும்பிச் சென்று படுக்கையில் படுத்தான்.

'அடிப்பாவி நீ சொல்லுற பாட்டை நான் பாடினால் என் டோட்டல் இமேஜும் இல்லை பாழாகிடும். அட என் மக்குப் பொண்டாட்டி! நான் உன்னைப் பார்த்துத் தானே 'நீயில்லாமல் நானில்லையே' என்று பாடினேன். உன்னை நினைச்சுத் தானே அந்த கடைசி வரியில் வாழ்வேனடாக்குப் பதிலா வாழ்வேனடி என்று பாடி னேன்.

ஹேய்! எல்லோரும் நல்லா கேட்டுக்கோங்க... என் பொண்டாட்டியும் மக்கு தான் மக்கு தான் என்று ஊர் பூராவும் மைக் போட்டுச் சொல்ல வைப்பாள் போலவே!



நான் இப்போ அங்கே போனால்... ஒண்ணு அவ பிரண்டு மேல இருக்கிற கோபத்தை என் மேலே காட்டு வாள்.

இல்லை மேடமுக்கு புதுசா முளைச்சு இருக்குற பொஸசிவ் குணத்தால நம்ம கிட்ட இழைய முற்பட லாம். அது என்னோட பிரம்மச்சரிய விரதத்திற்கு ஆபத்தா முடியும். அதனால பேசாமல் இழுத்துப் போர்த்திட்டு தூங்கு மித்ரா!' என உள்மனம் இட்ட கட்டளையை நிறைவேற்ற முற்பட்டான்.

'யாரு அந்த ஹேமா? அம்மாடி ஹேமா, நல்லவேளை நீ நேரிலே இல்லை... அப்படி மட்டும் இருந்திருந்தால்... உன்னை கீமா உருண்டையாக்கி பொரிச்சு எடுத்திருப் பாள் என் பொண்டட்டி' என நினைத்துச் சிரித்துக் கொண் டான்.

நடனத்தின் போது மனைவி காட்டிய முகபாவனை யும், தன்னைப் பிறர் ரசிப்பதைக் கூடக் காணப் பொறுக்காத அளவிற்கு அவள் தன் மேல் வைத்திருக்கும் பாசமும் அவனைத் தூங்க விடாமல் இம்சித்தது. பதி னைந்து நிமிடங்கள் கடந்த நிலையில் அவனருகே சஹானா வந்து படுக்கும் அரவத்தை உணர்ந்தவன் திகைத்துப் போனான்.

இதற்கு முன்பு எல்லாம் தனியாகத் தானே படுப்பாள்! இன்று என்ன இது புதுப் பழக்கம்? என்று அவன் யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது அவள் தனது கையை அவன் மேல் போட்டாள்.

ஓஹோ சனா பேபி! நான் ஒண்ணும் பப்ளிக் பிகர் கிடையாது. நான் உனக்கே உனக்கு மட்டும் சொந்த

மானவன் தான். நீ பார்த்து ரசிக்கத் தான்டா நான். யாரோ எதுவோ சொன்னால் நீ ஏன் கலங்குகிறாய்? இப்படியெல்லாம் சொல்லி மனைவியைத் தேற்ற வேண்டும் என்று அவன் மனம் விரும்பியது. அவளின் நெருக்கம் வேறு சில உணர்வுகளைத் தூண்டியது.

இதில் எதைச் செய்வது என்று யோசித்த வேளையில், அவளின் படிப்பு முடியும் வரை அவளை எந்த விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என்று தான் முன்பு எடுத்த தீர்மானம் நினைவிற்கு வந்தது.

மேலும் மனைவி, இவன் எனக்குரியவன் என்ற உரிமைப் போராட்டத்தினால் மட்டுமே தன்னருகே வந்து படுத்திருக்கிறாள். மனம் ஒன்றிக் குடும்பம் நடத்த அல்ல என்ற எண்ணமும் தோன்ற, தூங்குவது போல் மிகவும் கஷ்டப்பட்டு நடித்தான்.

இவள் இப்பவே இப்படி வந்து ஒட்டிக் கொண்டு படுக்கிறாள். இந்த அவசரக் கல்யாணம் மாமாவால் தான் நடந்தது என்று சொன்னால் மேலும் நம்மிடம் நெருங்கு வாளோ? அவள் அப்படி மட்டும் செய்தால்... 'உன் படிப்பு முடியும் வரை உன்னை எந்த விதத்திலும் தொந் தரவு செய்ய மாட்டேன்' என்று நான் செய்து கொடுத்த சத்தியத்தைக் காப்பாற்ற முடியாமல் போய் விடுமோ?

அப்படியென்றால் அவள் படிச்சு முடித்த பிறகே நாம விஷயம் சொல்வோம். அதற்கு முன்பு அவளுக்கே நம் மேல ஒரு பிடிப்பு வந்தால் இரட்டை சந்தோஷம். என் குறைகளையும் பொருட்படுத்தாது என்னை என் மனைவி விரும்புகிறாள் என்றால் அதை விட வேறு என்ன வேண் டும்?! என்று அவனுக்குத் தோன்றியது.



அவள் தூங்கிய பின் அவளது நெற்றியில் மென்மை யாக முத்தமிட்டுவிட்டு படுக்கையை விட்டு எழுந்து சென்று சோபாவில் தூங்க ஆரம்பித்தான்.

காலையில் அவள் எழும் முன்பு சோபாவில் இருந்து எழுந்து அமர்ந்து பேப்பர் படிக்க ஆரம்பித்தான். அவளிடம் அவன் பெரிதாகப் பேச்சுக் கொடுக்க வில்லை.

காலையில் அமிர்தத்தையும், சஹானாவையும் அழைத் துக் கொண்டு பார்வதி நகைக் கடைக்குச் சென்றார்.

''இப்ப எதுக்கு அத்தை நகைக் கடைக்கு வந்து இருக் கோம்?''

''சொல்லுறேன் வா'' என்று சங்கிலி பிரிவிற்குள் சென்ற பார்வதி அவரே தேர்ந்தெடுக்க ஆரம்பித்தார்.

''மெல்லியதா இருக்கணும், அதே சமயம் நீளமா இருக்கணும்'' என்று பார்வதி கடைக்காரரிடம் தன் விருப் பத்தைத் தெரிவித்தார். அதே மாதிரி ஒன்றைத் தேர்ந் தெடுத்து வாங்கினார்.

அந்தக் கடையிலே இருந்த ஆசாரியை நோக்கிச் சென்று கொண்டே, ''உன் தாலி செயினை இன்னைக்கு மாத்திடலாம் மா'' என்றார்.

''எதுக்கு அத்தை?'' என்று விழித்த சஹானாவிடம்,

''அதை மறைக்க நீ க்ளோஸ் நெக் சுரிதார் எல்லாம் போட்டுக் கஷ்டப்பட வேண்டாம் மா. இப்போ வாங்கி யிருப்பது தாலி செயின் மாதிரியான டிசைன் கிடையாது. அதனால வெளியே தெரிஞ்சாலும் யாருக்கும் சந்தேகம் வராது. அது மட்டுமில்லாம நல்ல நீளமா வாங்கியிருப்ப தால் நீ ரவுண்ட் நெக் சுரிதார் போட்டாலும்கூட

பின்னாடி இழுத்துவிட்டு துப்பட்டாவோடு சேர்த்து பின் பண்ணி மறைச்சுக்கலாம்'' என்று சொல்லி அதை மாற்ற வைத்தார்.

''இதுக்காகவெல்லாம் மாத்தணுமா?'' என்று அமிர்தம் ஆட்சேபணை தெரிவிக்க...

''நாலு மாசத்துக்குத் தானே மா. அதுக்கு அப்புறம் மாத்திக்கலாம். அவ தாலியைப் போட மாட்டேன் என்று சொல்லலையே. அதனால நீங்க வீணா மனசைப் போட்டுக் குழப்பாதீங்க'' என்று சொல்லி பார்வதி அமிர்தத்தை அமைதிப்படுத்தி விட்டார்.

அவர்கள் திரும்பி ஹோட்டலுக்கு வந்த பொழுது மித்ரன் அங்கு இருக்கவில்லை. அவள் தனது பையை எடுத்துக் கொண்டு ஹாஸ்டலுக்குக் கிளம்பினாள். அம்மாவிற்கும், மாமியாருக்கும் காலேஜைச் சுற்றிக் காட்டினாள்.

மாலை அவளிடம் இருந்து அவர்கள் விடைபெற்றுச் சென்றனர். அவள் மித்ரன் வருவான் என்று ஆவலோடு எதிர்பார்த்தாள். ஆனால் அவனும் வரவில்லை. அவன் போன் காலும் வரவில்லை. எதையோ இழந்தது போல் உணர்ந்தாள்.

இரு நாட்கள் ஹோட்டலில் தங்குவதற்கு என்று எடுத்துச் சென்றிருந்த துணிகளை எல்லாம் அவள் பையில் இருந்து எடுத்துத் தனது ஷெல்ஃபில் அடுக்கி வைக்க ஆரம்பித்தாள். அதற்குள் இருந்த கவரைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தாள். உள்ளே ஐந்து ரவுண்ட் நெக் சுரிதார்கள் இருந்தது. 'இனி நீ க்ளோஸ் நெக் சுரிதார் போட வேண்டாம்' என்ற குறிப்பும் இருந்தது.



'நம்ம நகைக் கடைக்கு அனுப்பி விட்டுப் போய் வாங்கி இருப்பார் போல! கையிலே கொடுத்து இருக்கலாம் தானே! ஒரு வார்த்தை போயிட்டு வரேன் என்று சொல்லி இருக்கலாம் தானே!' என்று நினைத்துக் கொண்டாள்.



## 13

சென்னையில் வரதராஜனுக்கு ஆபரேஷன் பண்ணும் நாள் நெருங்கியது. முதல் நாளிலேயே அவரை ஆஸ்பிட்டலுக்கு வந்து சேர்ந்து விடுமாறு சொல்லியிருந்தார்கள்.

தனது ஆபரேஷனுக்காக வரதராஜன் மித்ரனிடம் பணம் கொடுத்தார். அவன் அதை வாங்க மறுத்த போது,

''மாப்பிள்ளை நான் என் பொண்ணுக்கு உங்க தகுதிக்கு ஏற்ற சீர் வரிசை செய்யலை. நீங்களும் உங்க அம்மாவும் எதுவுமே வேண்டாம்ன்னு சொல்லிட்டீங்க. இப்ப என் ஆபரேஷனுக்குக் கூட உங்களிடம் பணம் வாங்கினால் அது அவ்வளவா நல்லா இருக்காது மாப்பிள்ளை. ப்ளீஸ்...'' என்றார்.

அவரது உணர்வினைப் புரிந்து கொண்டு அவனும் அந்தப் பணத்தை வாங்கிக் கொண்டான்.

ஹாஸ்பிட்டலுக்கு கிளம்பும் நாள் அர்ஜுன் ஸ்கூலுக்குக் கிளம்பிச் சென்றதும் மித்ரனும், பார்வதியும்

அமிர்தத்திடம் விஷயத்தைப் பக்குவமாய் எடுத்துச் சொல்ல வந்திருந்தார்கள்.

''வாங்க மாப்பிள்ளை, வாங்க சம்பந்தி'' என்று வரவேற்ற அமிர்தம் குழம்பிப் போனார்.

'என்ன நடக்குது இங்கே? இவர் என்னாடான்னா ஆபிஸ் போகாமல் வீட்டிலே உட்கார்ந்து இருக்கார். மாப்பிள்ளையும், சம்பந்தி அம்மாவும் வேற காலையிலே வந்து இருக்காங்க. எல்லோர் முகத்திலும் மருந்துக்குக் கூட சிரிப்பில்லை. ஈஸ்வரா! என்ன பிரச்சனையா இருந் தாலும் நீ தான் காப்பாற்றணும்' என்று அமிர்தம் வேண்ட ஆரம்பித்தார்.

மித்ரன் அவரது கலங்கிய முகத்தைப் பார்த்து விஷயத்தை இதற்கு மேலும் தள்ளிப் போட முடியாது என்று உணர்ந்தவனாய், ''அத்தை, மாமாக்கு நாளைக்கு ஹார்ட் ஆபரேஷன் பண்ணலாம் என்று இருக்கோம்,'' என்று சொல்ல ஆரம்பித்து முடிக்கும் முன்பே, அமிர்தம் மயங்கி விழுந்தார்.

தண்ணீர் தெளித்து அவரை மயக்கத்தில் இருந்து வெளிவரச் செய்து விஷயம் சொல்லித் தேற்றும் முன்பு மித்ரனுக்கும், பார்வதிக்கும் பெரும் பாடாக இருந்தது.

'இவர் ஒருவரே இப்படி என்றால்... இன்னும் மீதம் இருக்கும் இரண்டு பேரை என்ன சொல்லித் தேற்றுவது என்று தோன்றியது. எப்படியும் அர்ஜுனுக்கு இன்னும் கொஞ்ச நேரத்தில் தெரிந்துவிடும். பேசாமல் சஹானா விற்கு ஆபரேஷன் முடிந்த பின்னால் சொல்லிக்கலாம். ஆபரேஷன் பண்ணியாச்சு. நல்லா இருக்கிறார் என்று சொல்லும் போது கண்டிப்பாக அதன் பாதிப்பு கம்மி யாகத்தான் இருக்கும்' என்று மித்ரன் முடிவு செய்தான்.



மருத்துவமனையில் அமிர்தத்தின் கூடவே பார்வதி இருந்தார். எதற்காகவும் அவரைத் தனியே விட்டுச் செல்லவில்லை. அது பெரிய மருத்துவமனை என்பதால் வரதராஜனுக்கு அவர்களே பத்தியச் சாப்பாடு கொடுத்துவிடுவதாகச் சொல்லிவிட்டார்கள். அதன் அருகிலேயே ஒரு ஹோட்டல் இருந்தது. அங்கேயே அனைவரும் சாப்பிட்டுக் கொள்ளலாம் என்பதால் வீட் டிற்குச் சென்று சமைக்க வேண்டிய தேவை இல்லாமல் போனது.

அர்ஜுனிற்கு விஷயத்தைச் சொல்லி மகாதேவன் அவனை மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்.

அர்ஜுனைப் பார்த்ததும் அமிர்தம் பெருங்குர லெடுத்து அழ ஆரம்பிக்க... அவரைப் பார்த்து அர்ஜுன் அழ... இவர்களைக் கண்டு வரதராஜன் மனம் கலங்க... பார்த்திருந்த மித்ரன், 'ஆகா! இவங்க எல்லோரும் சேர்ந்து அழுதே மாமாக்கு BP அதிகமாகிடும் போலவே! நாம தான் ஏதாவது செய்தாகணும்' என்று நினைத்துக் கொண்டு தன் குரலை உயர்த்தி,

''அத்தை! இப்ப அழறதை நிறுத்தப் போறீங்களா இல்லையா? நீங்க ரெண்டு பேரும் அழுது மாமாவை டென்ஷன் பண்ணிடாதீங்க. முடிஞ்சால் அவருக்குத் தைரியம் சொல்லுங்க. இல்லைன்னா அமைதியா இருங்க. இப்ப எல்லாம் இந்த சர்ஜரி ரொம்ப சாதாரண மாப் போச்சு'' என்று சொல்லியும் அவர் அழுகையை நிறுத்தாமல் தொடர....

''அத்தை நான் சஹானாவைக் கல்யாணம் பண்ணி னால் இந்த ஆபரேஷனை தைரியமா எதிர்கொள்வதா மாமா சொன்னார். அவர் என் மேலே நம்பிக்கை

வைச்சார். நீங்க கடவுளை நம்புங்க. எல்லாம் நல்லா படியா நடக்கும்'' என்று சொல்லிவிட்டு அர்ஜுனை அழைத்துக் கொண்டு வெளியே வந்தான்.

'மாமா' என்று சொல்லி அவன் தோள் மீது சாய்ந்து கண்ணீர் வடித்தவனிடம், ''அர்ஜுன் ஆண்பிள்ளையா தைரியமா அம்மாவைத் தேற்றுவதை விட்டுவிட்டு உன்னைத் தேற்ற ஆள் தேடலாமா? ஒண்ணும் பயம் இல்லைடா. ஆபரேஷன் பண்ணப் போற டாக்டர் ரொம்ப அனுபவம் வாய்ந்தவர். மாமாவோட பெரிய மனக் கவலையே சஹானா கல்யாணம் தான். அதுவும் நல்லபடியா முடிஞ்சிடுச்சு. அவர் தைரியமா இருக்காருடா. நீங்களும் தைரியமா இருங்க. நீ நல்லா படிக்கணும் அப்படிங்கிறது தான் இப்போதைக்கு அவரோட கவலை. அழாமல் நீ போய் படி. நாளைக்கு ஆபரேஷனுக்கு முன்னால வந்து பார்த்திட்டு நீ எக்ஸாமிற்கு போ. நான் இங்க தான் டா இருக்கப் போறேன். நான் பார்த்துக்குவேன். சரியா?'' என்று ஒருவாறு தேற்றி அவனை மகாதேவனோடு அனுப்பி வைத்தான்.

மித்ரனுக்குத் தன் மாமனார் ஏன் தன்னை ஆபரேஷனுக்கு முன் கல்யாணம் செய்து கொள்ளச் சொன்னார் என்று இன்று தெளிவாகப் புரிந்தது.

அதே நாள் இரவு கோவையில்...

முதல் நாள் திடீரென்று பெய்த மழையில் சஹானாவும், அவள் தோழிகள் எல்லோரும் சேர்ந்து நனைந்து கொட்டமடித்தனர். தனது நீள முடியைச் சரியாகக் காய வைக்காமல் விட்டதால் காலையில் எழும் போதே ஜுரமாக இருந்தது. அதையும் மீறி அவள் காலேஜிற்குச் சென்றாள்.



சஹானாவிடம் ஒரு பழக்கம் உண்டு. மாதக் கணக்கில் கூட வீட்டுப் பக்கம் செல்லாமல் இருந்துவிடுவாள். ஆனால் ஜுரம் என்று வந்துவிட்டால்.... உடனே அவளுக்குத் தாய் தந்தையைப் பார்க்க வேண்டும். அதே போல் இன்றும் அவளுக்கு ஊருக்குக் கிளம்ப வேண்டும் என்று தோன்றியது.

வரதராஜனை மருத்துவமனையில் சேர்த்து அவரைக் கவனிக்கும் மும்மரத்தில் யாரும் சஹானாவிற்கு போனில் பேச முயலவில்லை. சஹானாவும் ஜுரத்தோடு பேசினால் தன்னை நினைத்துப் பெற்றோர் வருந்தக் கூடும் என நினைத்துப் பேசவில்லை.

அவள் வெள்ளிக் கிழமை காலையில் சென்னை எக்ஸ்பிரஸில் பயணம் செய்ய முடிவு செய்தாள். அவளைத் தனியே அனுப்ப காவ்யாவிற்கு மனம் இல்லை. ஒரு நாள் விடுமுறை எடுத்தால் சனி, ஞாயிறையும் சேர்த்து தொடர்ந்து மூன்று நாட்கள் விடுமுறை கிடைக்கும் என்பதால் காவ்யா தானும் சென்னை செல்ல முடிவு எடுத்தாள். இருவரும் வார்டனிடம் சென்று ஊருக்குச் செல்ல அனுமதி வாங்கினார்கள்.

காலையில் அவர்கள் ரயில் ஏறி சென்னை வந்து கொண்டிருக்க...

இங்கே வரதராஜனை ஆபரேஷனிற்கு தயார் செய்து கொண்டிருந்தார்கள். அர்ஜுன் நேற்றை விட கொஞ்சம் தெளிவாக இருந்தான். மித்ரனின் ஆறுதல் வார்த்தைகள் அவனது வருத்தத்தை சிறிதளவேனும் குறைத்திருந்தது. தந்தையிடம் ஓரிரு வார்த்தைகள் பேசிவிட்டுத் தனது தேர்வை எழுதப் பள்ளிக்குக் கிளம்பினான்.

ஆபரேஷன் நல்லபடியாக முடிந்தது. அவரை CCU-வில் (Coronary Care Unit) வைத்திருந்தார்கள். சிறிது நேரத்திற்குப் பின் யாராவது ஒருவர் தான் அவரைப் பார்க்க அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

மித்ரன் பார்வதியை சிறிது நேரம் வீட்டில் ஓய்வு எடுத்துவிட்டு வரச் சொல்லியிருந்தான். மித்ரனும், அமிர்தமும் மட்டுமே மருத்துவமனையில் இருந்தார்கள்.

மதியம் இரண்டரை மணிக்கு சஹானாவும், காவ்யாவும் சென்னை வந்திறங்கினார்கள். சஹானாவை அவளது வீட்டில் விட்டுவிட்டுச் செல்ல காவ்யா முடிவெடுத்தாள். அதனால் இருவரும் ஒரு ஆட்டோவை அமர்த்தி சஹானா வீடு நோக்கிச் சென்றனர். அங்கே வீடு பூட்டியிருக்க.. பக்கத்து வீட்டினர் தகவல் தெரிவித்தவுடன் அவர்கள் இருவரும் மருத்துவமனைக்கு விரைந்தனர்.

தந்தையின் கைப்பேசிக்கு அழைக்க அது ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டிருப்பதாக வந்தது. தனது தாய்க்கு முயற்சி செய்ய அதிலும் அதுவே வந்தது. தனது கணவனுக்கு அழைக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றவில்லை.

ஐயோ அப்பாக்கு இவ்வளவு சீரியஸா இருக்கே... அம்மாவும் தம்பியும் எப்படிச் சமாளித்தார்கள். அவருக்கு ஏதாவது என்றால் நாங்கள் எப்படித் தாங்குவோம் என்றெல்லாம் பலவாறு சிந்தித்த சஹானா, தனது கணவனைப் பற்றியும் தனக்குத் திருமணமானது பற்றியும் மறந்து போனாள்.

அங்கே மருத்துவமனையில்... யாராவது ஒருத்தர் இன்னும் சிறிது நேரத்தில் உள்ளே சென்று



நோயாளியைப் பார்க்கலாம் என்று கூறியதால் மித்ரன் அமிர்தத்தை உள்ளே சென்று பார்த்து வருமாறு கூறினான்.

''அத்தை காலையிலே தான் ஆபரேஷன் முடிஞ்சு இருக்கு. அதனால நிறைய வயர், ட்யூப், மிஷின் என்று ஏகப்பட்ட சமாச்சாரம் அவரைச் சுற்றி இருக்கும். அதை எல்லாம் பார்த்து பயந்து போய் அழ ஆரம்பிக்கக் கூடாது. அழுதீங்க என்றால் அப்புறம் நாளைக்கு உங்களை CCU-க்குள் அனுமதிக்க மாட்டாங்க. அப்புறமா மாமா, ரூமுக்கு வரும் வரைக்கும் உங்களால் அவரைப் பார்க்க முடியாமல் போயிடும்'' என்று எச்சரித்து வைத்தான்.

''இல்லை மாப்பிள்ளை. நான் அழ மாட்டேன். இனி தைரியமா இருப்பேன்'' என்று அமிர்தம் சொன்னார்.

மருத்துவரின் அனுமதிக்காக இருவரும் CCU முன்பு காத்திருந்தார்கள். அங்கே இங்கே என்று விசாரித்துக் கொண்டு காவ்யாவும், சஹானாவும் அங்கு வந்து சேர்ந்தார்கள்.

தூரத்தில் சஹானாவைப் பார்த்துவிட்ட அமிர்தம், ''மாப்பிள்ளை அங்கே வருவது நம்ம சஹானா மாதிரி இல்லை. நீங்க அவளுக்குப் போன் செஞ்சு விஷயம் சொன்னீங்களா?'' என்று கேட்டார்.

''சஹானாவா?'' என்று ஆச்சரியத்துடன் அந்தப் பக்கம் பார்வையிட்டவன், ''அவள் தான் அத்தை. நான் எதுவும் போன் பண்ணலையே...'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது அம்மாவின் அருகில் வந்த சஹானா அழ ஆரம்பிக்க,

''என்னம்மா திடீரென்று வந்திருக்க? ஜூரமா?'' என்று அமிர்தம் கேட்கும் பொழுதே அவள் நிலை தடுமாறி விழ இருந்தாள்.

சட்டென்று மித்ரன் அவளைத் தாங்கிப் பிடித்து, ''நான் இவளை ரூமிற்குக் கூட்டிட்டுப் போறேன். நீங்க இருந்து உள்ளே போய் பார்த்திட்டு வாங்க'' என்று அமிர்தத்திடம் சொல்லிவிட்டு அவளைக் கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு தங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் அறை நோக்கிச் சென்றான். அவளது உடல் நன்றாகக் கொதித்தது.

'இவர் சீனியர் மித்ரன் இல்லையா? இவர்களுக்குத் தெரிந்தவரா? சகி ஏன் அன்றைக்குச் சொல்லவேயில்லை?' என்று குழப்பிப் போனவளாய் காவ்யா அவர்களைப் பின் தொடர்ந்தாள்.

அறைக்குள் நுழைந்த சஹானா பாத்ரூம் போய்விட்டு வரேன் என்று சொல்லி உள்ளே சென்று காலில் தண்ணீர் பட்டதால் கிடுகிடுவென்று நடுங்கிய வண்ணம் வெளியே வந்தாள்.

மித்ரன் அவளைப் படுக்கையில் படுக்க வைத்து அமிர்தம் கொண்டு வந்திருந்த யூகலிப்டஸ் தைலத்தை எடுத்து அவளது கைகளில், கால்களில் பரபரவென்று தேய்க்க ஆரம்பித்தான்.

தானும் சேர்ந்து உதவி செய்ய வேண்டும் என்று கூடத் தோன்றாதவளாய் காவ்யா அதிர்ந்து போய் நின்றாள்.

'என்ன நடக்குது இங்கே? சகி எப்படி ஒரு அந்நிய ஆடவனைத் தன்னைத் தொட அனுமதிக்கிறாள்?' என்று திகைத்துப் போய் நின்றாள்.

அப்பொழுது மித்ரன் காவ்யாவைப் பார்த்து, ''ஜுரம் எப்போல இருந்து இருக்கு?'' என்று கேள்வி எழுப்பினான்.



''நேத்துக் காலையில இருந்தே இருக்கு'' என்று காவ்யா சொன்னவுடன், சஹானா பக்கம் திரும்பி,

''அப்போ ஃப்ளைட் பிடிச்சு வந்திருக்க வேண்டியது தானே சஹானா? ஏன் டிரைனில் வந்தாய்?'' என்றான்.

கணவனை மருத்துவமனையில் பார்த்த பின்பு தான் சஹானாவிற்கு அவனது நினைப்பே வந்தது.

'ஓ! இவரும் இங்கு தான் இருக்கிறாரா? நம்ம கிட்ட அப்பாவின் ஆபரேஷன் விஷயம் சொல்லணும் என்று தோன்றவில்லை பாரு' என்று அவன் மீது கோபத்தில் இருந்தவள் அவன் இவ்வாறு கேள்வி கேட்டவுடன்,

''எனக்கு அந்த அளவுக்கு வசதி இல்லை'' என்றாள்.

அவளது பதிலில் ஒரு கணம் தேய்த்துக் கொண்டிருப்பதை நிறுத்தியவன் பின் அவளைப் பார்த்து, ''என்னிடம் சொல்லி இருக்க வேண்டியது தானே? நான் டிக்கெட்டுக்கு ஏற்பாடு செய்து இருப்பேனே?'' என்றான்.

காவ்யாவால் இதற்கு மேல் பொறுமையாகக் காத்திருக்க முடியாமல், ''இவர் உனக்குத் தெரிஞ்சவரா சகி?'' என்று கேட்டாள்.

மித்ரன் 'என்னிடம் சொல்லி இருக்க வேண்டியது தானே' என்று சொன்னவுடன் இவர் மட்டும் என்கிட்ட அப்பா பற்றிய விஷயம் சொன்னாரா? நான் மட்டும் சொல்லலை என்று குற்றம் சொல்கிறார் என்று கணவனுக்கு மனதில் வசைபாடிக் கொண்டிருந்தவளின் மூளை வரை காவ்யாவின் கேள்வி எட்டவில்லை. அதனால் அவள் பதில் அளிக்காது அமைதி காக்க...

மித்ரன் மனைவியின் பதிலுக்காய் காத்திருக்க...

காவ்யா இருவரையும் மாறி மாறிப் பார்க்க...

மித்ரன் காவ்யாவிடம் திரும்பி, ''தூரத்துச் சொந்தம் கொஞ்ச நேரம் பார்த்துக்கோங்க. நான் போய் டாக்டரைக் கூட்டிட்டு வரேன்'' என்று சொல்லி வெளியேறினான்.

அவன் சென்றவுடன் கண்விழித்துப் பார்த்த சஹானா அறையில் கணவனைக் காணாது தேடினாள்.

''என்ன பார்க்கிறாய் சகி?'' என்று காவ்யா கேட்டாள்.

''எங்க போயிட்டார்?''

அவள் மித்ரனைக் கேட்கிறாள் என்று புரிந்து கொண்ட காவ்யா, ''டாக்டரைக் கூப்பிட போயிருக்கார். ஏன் சகி அவர் உனக்குத் தூரத்துச் சொந்தம் என்று அன்னைக்கு சொல்லவே இல்லை?'' என்று காவ்யா கேட்டவுடன்,

''யார் எனக்கு தூரத்துச் சொந்தம்?'' என புரியாது எதிர்கேள்வி கேட்ட சஹானாவிடம்,

''அதான் சகி நம்ம சீனியர் மித்ரன்'' என்றாள்.

''அவர் எனக்கு தூரத்துச் சொந்தம் என்று உனக்கு யார் சொன்னது?'' என்று கேட்டு சஹானா விழிக்க,

அவளது கேள்வியில் குழம்பிப் போன காவ்யா, ''இப்போ கொஞ்ச நேரத்துக்கு முன்னால அவர் தான் சொன்னார்'' என்றதும்,

''அவரா அப்படிச் சொன்னார்? எவ்வளவு கொழுப்பு பாரு காவ்யா! வரட்டும் பேசிக்கிறேன்'' என்று சஹானா பொருமவும்,

''ஹேய்! அவர் உனக்குச் சொந்தம் இல்லையா? அப்புறம் எப்படி அவர் உனக்கு மருந்து தேய்க்கும் போது சும்மா இருந்தாய்?''

சஹானாவிற்கு தன் திருமண விஷயம் பற்றி தோழியிடம் சொல்லும் நேரம் வந்துவிட்டது என புரிந்தது.



''அவர் எனக்குச் சொந்தம் இல்லையாவா? ம்ஹூம்... எனக்கு மட்டுமே சொந்தமானவர்!'' என்று சொல்லிக் கொண்டே சுரிதாருக்குள் பின் செய்து மறைத்து வைத்திருந்த தாலியை வெளியே நீட்டி, ''அவர் தான் என் கணவர்!'' என்றாள்.

''என்னதுதுது கணவராஆஆஆ? அப்போ கிளி ஜோஸியம் பலிச்சிடுச்சா?!'' என்று காவ்யா அதிர்ந்து போனாள்.

சஹானா கடைசியில் பேசிய வசனம் மித்ரனின் காதில் விழுந்தது. சற்று முன் காவ்யாவின் கேள்விக்கு சஹானா பதில் அளிக்காத பொழுது அவனுக்கு எழுந்த கோபம் சட்டென்று வடிந்தது.

அவன் உள்ளே நுழைந்ததும் அவர்களது பேச்சு நின்றது. சில நொடிகளில் டாக்டர் வந்து பரிசோதனை செய்ய ஆரம்பித்தார்.

''மித்ரன் காய்ச்சல் அதிகமா தான் இருக்கு. அதை விடச் சோர்வு அதிகமா இருக்கு. அதனால் ஒரு பாட்டில் குளுகோஸ் ஏற்றச் சொல்கிறேன். மருந்து எழுதித் தரேன். கொஞ்ச நேரம் கழிச்சு வந்து பார்க்கிறேன்'' என்று சொல்லிச் சென்றார்.

''தாங்க்ஸ் டாக்டர்'' என்று சொல்லி அவரை வழி அனுப்பி வைத்தவன் தன் தாய்க்கு போன் செய்து பேச ஆரம்பித்தான்.

''அம்மா தூங்கி எழுந்துட்டீங்களா? சரி உடனே இங்கே ஹாஸ்பிட்டல் கிளம்பி வாங்க. சஹானா வந்திருக்காள்.''

''.........''

''நான் எதுவும் போன் பண்ணலை. அவளுக்கு நல்ல ஜூரம். இதே ஹாஸ்பிட்டல்ல தான் படுத்து இருக்காள். நீங்க இங்கேயே தங்குற மாதிரி கிளம்பி வாங்க. பக்கத்துல எங்கேயாவது உங்க ரெண்டு பேருக்கும் ரூம் போட்டுத் தரேன்'' என்று விவரம் சொல்லி போனை அணைத்தான்.

அப்பொழுது அர்ஜுனும், அமிர்தமும் உள்ளே நுழைந்தார்கள். அவர்களிடம் சஹானா, ''என்னம்மா நடந்துச்சு?'' என்று கேட்டாள்.

அவர்களை முந்திக் கொண்டு மித்ரன், ''வியாழக் கிழமை மாமா நெஞ்சு வலிக்குது என்று சொன்னார். அதான் இங்கே கூட்டிட்டு வந்தேன்'' என்று சொன்னவுடன் அமிர்தமும், அர்ஜுனும் அவனை ஆச்சரியமாய் பார்க்க அவன் அவர்களை கண் ஜாடை காட்டி அடக்கி விட்டுத் தனது பேச்சினைத் தொடர்ந்தான்.

''ஆபரேஷன் பண்ணி தான் ஆகணும் என்று சொன்னாங்க. சரி என்று சொல்லிட்டோம். ஆபரேஷன் முடிஞ்சதுக்கு அப்புறம் உன்கிட்டே சொல்லலாம் என்று பார்த்தோம். அதுக்குள்ளே நீயே வந்துவிட்டாய்.''

'மாப்பிள்ளை எது செய்தாலும் நன்மைக்கே' என்று நினைத்ததால் 'ஏன் மாப்பிள்ளை பொய் சொல்லுகிறீங்க?' என்று அமிர்தம் கேட்கவில்லை.

வயதில் சிறியவனான அர்ஜுனுக்கோ தன் மாமாவிற்குத் தெரியாதது எதுவும் இல்லை. அவர் ஒரு விஷயம் செய்தால் அதில் தனது அக்காவின் சந்தோஷம் அடங்கி இருக்கும் என்ற எண்ணம். அதனால் அவனுமே அமைதி காத்தான்.



சஹானாவின் பலகீனமான உடல்நிலையும், தாய் மற்றும் தம்பியும் மித்ரனின் கூற்றை மறுத்துக் கூறாததும், சொல்பவன் கணவன் என்றதாலும், மித்ரன் சொன்னவற்றை சஹானா ஆராய முற்படவில்லை. அதனால் தனது கல்யாணம் அப்பாவின் உடல் நிலைக் காரணமாக நடந்து இருக்குமோ என்ற சந்தேகம் அவளுக்கு எழவே இல்லை.

அப்பொழுது அவர்கள் வீட்டு டிரைவர் முத்து ஒரு கவரையும், பிளாஸ்கையும் கொண்டு வந்து கொடுத்தார். ஒரு தாங்க்ஸ் சொல்லி அதை வாங்கிய மித்ரன் அர்ஜுனிடம் அந்தக் கவரைக் கொடுத்து, ''நீங்க ரெண்டு பேரும் சாப்பிடுங்க'' என்று அவனையும் காவ்யாவையும் சுட்டிக் காட்டிக் கூற,

''இல்லை வேண்டாம்'' என்று காவ்யா மறுத்தாள்.

''இல்லை சாப்பிடுங்க. டிரைனில் சரியா சாப்பிட்டு இருக்க மாட்டீங்க'' என்று காவ்யாவிடம் சொன்னவன் அர்ஜுனிடம் திரும்பி, ''நீ சாப்பிட்டு முடிச்சிட்டுக் காரிலே போய் அவங்களை வீட்டிலே இறக்கி விட்டுட்டு அப்புறமா உங்க வீட்டுக்குப் போய் படி.'' என்றான்.

''சரிங்க மாமா'' என்றான் அர்ஜுன்.

''அத்தை நீங்க காபியைக் குடிங்க. நான் வெளியிலே வெயிட் பண்ணுறேன்'' என்று சொல்லி வெளியேறினான்.

தன் கணவன் ஒவ்வொருவருக்கும் இடும் கட்டளைகளை பார்த்துக் கொண்டிருந்த சஹானா இப்படி ஒரு ஆள் இந்த மாதிரி சமயத்தில் தன் குடும்பத்திற்கு மிகவும் அவசியம் தான் என்று எண்ணிக் கொண்டாள்.

அர்ஜுன் சாப்பிட்டு முடித்ததும் சஹானா தன் தாய் மற்றும் தம்பியிடம் சிறிது நேரம் வெளியே காத்திருக்கு மாறு சொல்லி அனுப்பிவிட்டு காவ்யாவிடம் தன் திருமணம் பற்றிச் சொல்ல ஆரம்பித்தாள்.

''பாட்டி இறந்து போனாங்க... நீ அன்னைக்கு சொல்லலை... ஓ.கே. ஆனால் ஏன் அதுக்கு அப்புறமும் சொல்லலை?'' என்று காவ்யா கேட்டவுடன்,

''எதுக்கு? என் தலைமுடியை வெட்டவும், போஸ்டர் ஒட்டவும் தான் நீங்க எல்லோரும் ரெடியா இருந்தீங் களே.. விட்டா எனக்குக் கரும்புள்ளி செம்புள்ளி குத்தி ஊர்வலம் விடத் தயாரா இருந்தீங்க...'' என்று சஹானா அன்றைய தனது கோபத்திற்கு இன்று வார்த்தை வடிவம் கொடுத்தாள்.

''நாங்க உன்னை விளையாட்டுக்குக் கிண்டல் பண்ணக் கூடாதா சகி?'' என்று கோபமாக ஆரம்பித்த காவ்யா கையில் குளுகோஸ் ஏற்றிக் கொண்டு சோர் வாய்ப் படுத்திருக்கும் தோழியின் உடல் நிலை கருதி தன் கோபத்தைக் கைவிட்டவளாய், ''சரி நாம இது விஷயமா அப்புறமா பேசலாம். இப்போ ரெஸ்ட் எடு'' என்றாள்.

''எனக்கும் புரியுது காவ்யா. நீங்க விளையாட்டுக்குத் தான் சொன்னீங்கன்னு... ஆனா என் பேச்சை அப்பாவும் கேட்கலை. இவரும் கேட்கலை. நான் ஏற்கனவே நொந்து போயிருந்தேன். என் நிலை புரியாமல் நீங்களும் கிண்டல் பண்ணியிருந்தீங்கன்னா நான் ரொம்பவே மனசொடிஞ்சு போயிருப்பேன். ஒரு வெறுப்பிலே தான் சொல்லலை.''

''சரி இப்பவாச்சும் நம்ம பிரண்ட்ஸ் கிட்டே சொல்ல லாம் தானே?''



''வேண்டாம். நம்ம ஓட்டை வாய் ஹேமா ஒருத்தி போதும்... ஒரு விஷயத்தை ஊர் பூராவும் தண்டோரா போட. என்னால சித்ரா பட்ட கஷ்டத்தைப் பட முடி யாது. அதனால நாம காலேஜ் முடியற வரைக்கும் யாரு கிட்டேயும் சொல்ல வேண்டாம் காவ்யா.''

''சரி. நான் வீட்டுக்குப் போய்விட்டு அப்புறமா நாளைக்கு வந்து அங்கிளைப் பார்க்கிறேன்'' என்று சொல்லி காவ்யா வெளியேறி அர்ஜுனுடன் கார் நிறுத்தி இருந்த இடத்திற்கு வந்தாள்.

காவ்யாவை நோக்கி வந்த மித்ரன், ''நீங்க என்னைக்கு ஹாஸ்டலுக்குத் திரும்பப் போகணும்?'' என்று கேட் டான்.

''ஞாயிற்றுக் கிழமை நைட் கிளம்பணும்'' என்று காவ்யா சொன்னவுடன்,

''நான் அன்னைக்கு நைட் கிளம்புறதுக்கு உங்களுக்கு டட்கல் டிக்கெட் வாங்கித் தரேன். உங்க வோட்டர் ஐ.டி. இல்லைன்னா டிரைவிங் லைசன்ஸ் நம்பர் தாங்க'' என்று கேட்டதும்,

''இல்லை நானே டிக்கெட் வாங்கி ஊருக்குப் போயிடு வேன்'' என்று காவ்யா மறுக்க...

''ப்ளீஸ் மறுக்காதீங்க. நீங்க இவ்வளவு தூரம் அவளைப் பத்திரமா கொண்டு வந்து விட்டு இருக்கீங்க... நீங்க உங்க ஹாஸ்டலுக்கு திரும்பிப் போற டிக்கெட்டைக் கூட நான் ஏற்பாடு செய்யலைன்னா எப்படி?'' என்றான்.

''சரி ஓ.கே. தரேன். ஆனா ஒரு கண்டிஷன்'' என்று காவ்யா சொல்லி நிறுத்த...

'என்ன?' என்பது போல் பார்த்தவனிடம், ''நீங்க என்னை மரியாதையா கூப்பிடக் கூடாது. நீ, வா,

போன்னு சொல்லுங்க. உங்களை விடச் சின்னவ தானே நான். எப்படி கூப்பிடுறதுன்னு பார்க்குறீங்களா? ம்ம்ம்.. நான் உங்களை அண்ணான்னு கூப்பிட்டால் உங்களுக்கு என்னை ஒருமையில் கூப்பிட ஈஸியா இருக்கும் தானே?'' என்று கேட்டாள்.

அவன் அவளை அதிசயமாகப் பார்த்துக் கொண்டிருக்க... அவளே தன் பேச்சைத் தொடர்ந்தாள்.

''இதுக்காக மட்டும் உங்களை அண்ணான்னு கூப்பிடட்டுமான்னு கேட்கலை. எனக்கும் சஹானாக்கும் அண்ணா கிடையாது இல்லையா? அதனால என்னோட கணவர் அவளுக்கு அண்ணா. அதே மாதிரி அவளோட கணவர் எனக்கு அண்ணா என்று நாங்க பேசி வைச்சு இருக்கோம். அதான்..'' என்று சொன்னவுடன்,

''ம்ம் எனக்கும் கூடப் பிறந்தவங்க யாரும் இல்லை. அனதால ஒரு தங்கச்சி ப்ரீயா கிடைச்சால் வேண்டாம்ன்னு சொல்ல மாட்டேன். ஆனா அதுக்குன்னு என் வைஃப்கிட்டே நாத்தனார் வேலை எல்லாம் செய்ய மாட்டே தானே? அப்படின்னா உன் டீல் ஓ.கே.'' என்று உடனடியாக ஒத்துக் கொண்டு அவளை ஒருமையில் அழைத்தான்.

''ஆகா! நாத்தனார் வேலையா? அப்படி ஒண்ணு இருக்கா? ஞாபகப்படுத்தினதுக்கு தாங்க்ஸ் அண்ணா. எப்பப் பார்த்தாலும் இந்த சகி என்னை ஓட ஓட விரட்டுவாள். இனிமேல் நான் என் நாத்தனார் பதவியை வைச்சு அவளை விரட்டுவேன் இல்ல'' என்று காவ்யா சந்தோஷப்படவும்,

''அப்போ நீ குத்து மதிப்பா தான் என்னை அண்ணான்னு சொன்னியா? நானா தான் நாத்தனார்



பற்றியெல்லாம் உளறிட்டேனா?'' என்று வடிவேலு பாணியில் மித்ரன் கேட்க மூவரும் சிரிக்க ஆரம்பித்தனர்.

அவளிடமிருந்து அவளது டிரைவிங் லைசன்ஸ் நம்பரை வாங்கிக் கொண்டு அவளை அர்ஜுனுடன் காரில் ஏற்றி அனுப்பி வைத்தான்.

எனக்கு அவ்வளவு வசதி இல்லை என்று சற்று முன் மனைவி சொன்ன வசனமே மித்ரனின் மனதில் ஓடிக் கொண்டிருந்தது. காலேஜ் பீஸ், மெஸ் பில் கட்ட வேண்டியது பற்றி எல்லாம் மாமாவிடம் விசாரித்தேனே! அவ பேரில் அவளுக்குச் செலவிற்குப் பணம் போட வேண்டும் என்று எப்படித் தோன்றாமல் போனது? எப்படி மறந்து போனேன்? என்று தன்னைத் தானே குட்டியவன் அவளிடம் அவளது அக்கவுண்ட் நம்பரை வாங்கி அதில் ஒரு இருபதாயிரம் பணம் போட்டான்.

பார்வதியும், அமிர்தமும் சஹானாவை கவனித்துக் கொண்டார்கள். மறுநாள் காவ்யா வந்த பொழுது அவளை சஹானா தன் மாமியாருக்கு அறிமுகப்படுத்தினாள்.

அமிர்தம் CCU-க்குச் சென்று பார்க்கும் பொழுது வரதராஜன் கண்விழித்துப் பார்த்து ஓரிரு வார்த்தைகள் பேசினார். அமிர்தம் நிம்மதியடைந்தார். வரதராஜனை CCU-வில் இருந்து ICU-விற்கு மாற்றினார்கள்.

மித்ரன் சொன்னபடியே காவ்யாவிற்கு டிக்கெட் வாங்கிக் கொடுத்தான். அவளிடம் தன் போன் நம்பரைக் கொடுத்து என்ன பிரச்சனையாக இருந்தாலும் தன்னை அழைத்துச் சொல்லும்படி சொன்னான்.

மித்ரன் சஹானாவை திங்கட்கிழமையும் லீவு போடச் சொல்லிவிட்டான். வரதராஜனை ஞாயிறு இரவு தான்

ICU-வில் இருந்து அறைக்கு மாற்றுவார்கள் என்பதால் அவள் தன் தந்தையுடன் ஒரு நாளாவது செலவு செய்யட்டும் என நினைத்தான். மேலும் அவள் கூடுதலாக ஒரு நாள் ரெஸ்ட் எடுத்தது போலவும் இருக்கும் என்று நினைத்தான்.

ஞாயிற்றுக் கிழமை இரவு வரதராஜனை அறைக்கு மாற்றினார்கள். வரதராஜன் மித்ரனின் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்கலங்கினார். அவரைச் சமாதானப்படுத்தியவன் தான் விஷயம் அனைத்தையும் சஹானாவிடம் சொல்லிவிட்டதாகப் பொய் உரைத்தான்.

சஹானா அவரை விட்டு அகலாமல் அவருடனே இருந்தாள்.

மித்ரன் சஹானாவிடம் தனியாகப் பேசுவதற்காக அவளை அறையை விட்டு வெளியே அழைத்துப் போனான். அன்று இரவு சஹானாவிற்கு டிரைனில் கோவை செல்ல டிக்கெட் எடுத்திருந்தான்.

ஆனால் அவனுக்கு அவளைத் தனியாக அனுப்ப மனமில்லை. ஒரு பக்கம் அலுவலகம்... இன்னொரு பக்கம் மருத்துவமனை வேலை என்று அவனால் சென்னையை விட்டு நகர முடியாத சூழல். இது பற்றிக் கேட்கத் தான் தனியாக அழைத்து வந்தான்.

''சனா, தனியாகப் போயிடுவியா? இல்லைன்னா அம்மாவை உனக்குத் துணைக்கு அனுப்பட்டுமா? உனக்கு ஃப்ளைட் டிக்கெட் எடுத்துத் தரட்டுமா? ஃப்ளைட்டிலே நீ தனியா போயிடுவியா? நீ இதுக்கு முன்னால ஃப்ளைட்டிலே போனதில்லை என்பதால் தான் நான் உனக்கு டிரைனில் டிக்கெட் போட்டேன்.



என்ன செய்யலாம் மா?'' என்று அவன் கேள்விக் கணைகளைத் தொடுக்க,

''நான் டிரைனில் தனியாப் போயிடுவேன்'' என்று ஒரே வரியில் அவள் பதிலை முடித்துக் கொண்டாள். அதன்படியே தனியே புறப்பட்டுச் சென்றாள்.

## 14

கோவையில் ஒருவித இயந்திர கதியில் நாட்கள் செல்வதாக சஹானா உணர்ந்தாள்.

சஹானா, ''காவ்யா நான் ஒரு கடி ஜோக் சொல்லுறேன் கேளு'' என்றதும் அவளருகில் வந்து காவ்யா அமர்ந்தாள்.

''ஹார்ட் அட்டாக் என்றால் என்ன தெரியுமா? அப்படின்னு ஒரு பையன் இன்னொரு பையனிடம் கேட்கிறான். அதுக்கு அவன் ஒரு அழகான பொண்ணு உன்னைப் பார்க்கும் போது உன் இரத்தம் சூடாகும். அவள் சிரித்தால் உன் பிபீ அதிகமாகும். அவள் உன் பக்கத்திலே வந்தால் உன் இதயத்துடிப்பு அதிகரிக்கும்... முகம் வியர்க்கும்.. நாக்கு உலர்ந்து போகும். அப்போ அவள் தன்னோட அழகான இதழைப் பிரித்து உன்னைப் பார்த்து, அண்ணா காந்திபுரத்துக்கு எந்த பஸ்ஸிலே போகணும் என்று கேட்கும் போது உன் ஹார்ட்டிலே டமால் என்று ஒரு சத்தம் கேட்கும் பாரு! அதுக்கு பேரு தான் ஹார்ட் அட்டாக்ன்னு சொன்னானாம்'' என்று சொன்னவுடன் இருவரும் சேர்ந்து நகைக்க ஆரம்பித்தனர்.

''அடிப்பாவி! நேத்து நைட் பிராஜெக்ட் வேலை செய்யுறேன் என்று சொல்லி நெட்டிலே இந்த ஜோக் கைத் தான் படிச்சிக்கிட்டு இருந்தியா?'' என்று கேட்டுச் சிரித்துக் கொண்டிருக்கும் பொழுது அவர்களின் கிளாஸ் மேட் மகி என்பவள் அங்கே வந்தாள்.

அவளின் வருத்த முகம் கண்டு அவர்கள் காரணம் கேட்க,

''இருந்து இருந்து எனக்கு இப்படி ஒரு ரூம்-மேட் அமைந்து இருக்க வேண்டாம்'' என்றாள் மகி.

''அது தான் நீ எப்பவும் பாடுவியே 'ரூம்-மேட் அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்!' என்று. அது எப்பவும் இருக்கிற கதை தானே? இன்னைக்கு என்ன புதுசா செஞ்சாள் உன் அருமை தோழி மே...க...லா'' என்று சஹானா கேட்டவுடன்,

''நாளைக்கு வரும் கேம்பஸ் இன்டர்வியூவில் நான் செலக்ட் ஆக மாட்டேன் என்று என்னை ரொம்பவே மட்டம் தட்டுகிறாள். உங்க எல்லோருக்கும் ஏற்கனவே நல்ல வேலை கிடைச்சிடுச்சு. இந்த சுமாரான வேலை யாவது எனக்குக் கிடைச்சால் தானே எங்க அம்மா அப்பாக்கு உதவியா இருக்க முடியும். நல்லதா நாலு வார்த்தை சொல்லாது போனாலும் இப்படிக் கிண்டல் செய்யாமலாவது இருக்கலாம் தானே?'' என்று மகி வருத்தப்பட்டாள்.

''இவ அடங்குற கேஸ் இல்லை...'' என்று மேகலாவை சஹானா திட்டிக் கொண்டிருக்கும் பொழுது அந்த மேகலாவே அங்கு ஆஜரானாள்.

அவள் மகியைப் பார்த்ததும், ''என்ன மா IAS எக்ஸாம்க்கு தயார் பண்ணிக்கிட்டு இருக்கியா?'' என்று



படு நக்கலாகக் கேட்க, சஹானாவிற்கு கோபம் வந்தது.

''ஏன் நீ ஏற்கனவே அந்த எக்ஸாம் எழுதி பாஸ் பண்ணிட்டியா என்ன?'' என்ற சஹானா திருப்பிக் கேட்க,

''நான் எல்லாம் இங்க படிக்க வேண்டியவளே இல்லை. ஐ.ஐ.டி.யில் படிக்க வேண்டியவள். என் போதாத வேளை.. உங்க கூட எல்லாம் படிக்க வேண்டியதாப் போச்சு'' என்று மேகலா அலுத்துக் கொள்ள,

''சரி மா... அதிபுத்திசாலி, நான் இப்போ கேட்கப் போற கேள்விக்கு நீ முப்பது நொடியில் பதில் சொல்லி விட்டாய் என்றால் நீ மெத்த படிச்ச மேதாவி என்று நான் ஒத்துக் கொள்கிறேன். என்ன சவாலுக்குத் தயாரா?'' என்று சஹானா கேட்டவுடன் மேகலாவும் ஒத்துக் கொண்டாள்.

''காவ்யா நான் கேள்வியைக் கேட்டு முடிச்சதும் உன் செல்போனில் இருக்கும் ஸ்டாப் வாட்ச்சை ஆன் பண்ணு. சரியா முப்பது நொடியிலே அவள் சொல்லுறாளான்னு பார்க்கலாம்'' என்று காவ்யாவிடம் சொன்னவள் கேள் வியைக் கேட்க ஆரம்பித்தாள்.

''Dhanya is the daughter of Kumar. So Kumar is the..... of Dhanya's father'' என்று சஹானா கேட்டு முடித்ததும் மேகலாவால் முப்பது நொடிகளில் பதில் சொல்ல முடியாததால் சத்தமில்லாமல் இடத்தைக் காலி பண்ணி னாள்.

அவள் சென்றதும் மகி, ''சஹானா அவள் பெரிய புத்திசாலி. அவளுக்கே பதில் தெரியாத அளவுக்கு கஷ்ட மான கேள்வியா?'' என்று கேட்டதற்கு,

''அவளுக்கு இன்னும் கொஞ்ச நேரத்திலே எப்படியும் பதில் தெரிஞ்சிடும் மகி. இப்போ அவளால சொல்ல முடியாததுக்குக் காரணம் செருக்கு.. மமதை.. 'தான்' என்ற அகங்காரம். சரி இப்போ உன் டைம் ஆரம்பம் ஆகுது. நீ முயற்சி செய்!'' என்று அவள் மகிக்கு முப்பது நொடிகள் அவகாசம் கொடுக்க மகியால் கண்டுபிடிக்க முடியவில்லை.

''அப்போ எனக்கும் செருக்கா?'' என்று பரிதாபமாகக் கேட்ட மகியைப் பார்த்து, இல்லை என்று தலை அசைத்து மறுத்த சஹானா,

''உனக்கு இருப்பது தாழ்வு மனப்பான்மை. அது உன்னைச் சரியான பதிலைச் சிந்திக்க விடாது. நீ அதை விட்டொழிந்தால் தான் உன்னால் சிறப்பாகச் செயல்பட முடியும். உன்னால முடியும் என்று பத்து முறை மனதுக்குள் சொல்'' என்று கட்டளையிட... அவளும் அதன் படியே செய்ய...

''இப்பொழுது முயற்சி செய்'' என்று சஹானா தனது கேள்வியைத் திருப்பிக் கேட்க இம்முறை பத்தே நொடிகளில்,

''ஹேய் அதுக்கு விடை name. சரி தானே சஹானா?'' என்று ஆர்ப்பரித்தாள்.

''அதே தான் மகி. உன்னால் முடியும் அப்படிங்கிற மந்திரத்தை நாளைக்கு இன்டர்வியூ போகும் முன்னாடி சொல்லிட்டுப் போ. உனக்குக் கண்டிப்பா வேலை கிடைக்கும்'' என்று சொல்லி அனுப்பி வைத்தாள்.

''எப்படி சஹானா திடீர் என்று இவ்வளவு அறிவாளியா மாறினே?'' என்று காவ்யா கேட்டவுடன் அவளை முறைத்துக் கொண்டே,



''நேத்து அர்ஜுன் போனிலே இந்த சவாலை எனக்கு வைச்சான். அதை நான் சரியான இடத்திலே உபயோகிச்சுட்டேன். மகியாவது 'மேகலா தொல்லை இனிமேல் இல்லைன்னு' காலேஜ் முடிஞ்சதும் போயிடுவாள். நாம தான் மாட்டிக்கிட்டோம். இந்த மேகலா தொல்லை நமக்கு வேலைக்குப் போற இடத்திலேயும் தொடரும்'' என்றாள்.

''அவளுக்கும் நாம சேரப் போற கம்பெனியில தானா வேலை கிடைக்கணும்? இந்த மேகலா மட்டும் ஏன் இப்படி இருக்காள்?'' என்று காவ்யா பெருமூச்சுவிட்டாள்.

''சரி விடு காவ்யா. நம்ம...'' என்ற சஹானா தொடங்கவும்,

''நம்ம கையிலேயே பாரு. அஞ்சு விரலும் ஒண்ணாவா இருக்கு என்று மொக்கை போடாதே.'' என்று காவ்யா அலறவும்,

''நான் அப்படி சொல்ல வரலையே. எதை வைச்சு நீ அப்படி நினைச்சே காவ்யா?''

''பொதுவா எல்லோரும் இந்த இடத்துல இப்படி தான் டயலாக் சொல்லுவாங்க சகி.''

''எல்லோரும் சொல்லுறதையே நாமளும் சொல்லிட்டா நம்ம கெத்து என்ன ஆகிறது?''

''சரி சகி, அப்போ நீ என்ன சொல்ல வந்தாய்?''

''நம்ம காலிலேயே பாரு. அஞ்சு விரலும் ஒண்ணாவா இருக்கு என்று கேட்க வந்தேன்'' என்று அவள் முடிக்கும் முன்னே காவ்யா அவளை மொத்த ஆரம்பித்துவிட்டாள்.

அன்று மாலை இருவரும் டி.வியில் வெகு நாட்களுக்குப் பின் ரோஜா திரைப்படத்தை முழுவதுமாக உட்கார்ந்து பார்த்தனர்.

படம் முடிந்து அறைக்கு வந்த பின் சஹானா சோகமாக இருப்பதைப் பார்த்த காவ்யா, ''என்னாச்சு சகி? ஒரே சோகமா இருக்க? காதல் ரோஜாவே எங்கே நீ எங்கே அப்படின்னு அரவிந்த்சாமி பாடுவது மித்ரன் அண்ணா பாடுற மாதிரியே இருந்துச்சா?'' என்று கண் சிமிட்டிக் கேட்க,

காவ்யாவைப் பார்த்து ஒரு வருத்தமான முறுவல் புரிந்த சஹானா, ''ஒரு வேளை எனக்கு கல்யாணம் ஆன விஷயம் தெரியாமல் இருந்திருந்தால்... நீ என்னைப் பார்த்து என்ன கேட்டு இருப்பாய்? நாட்டுல நடக்குற தீவிரவாதம் உன் மனசைப் பாதிச்சிடுச்சா சகி? இப்படித் தானே கேட்டிருப்பாய்? ஒரு பொண்ணுக்குக் கல்யாண மானால் அவளுக்குக் கணவனைத் தவிர்த்து வேறு சிந்தனையே வராதா? இல்ல வரக் கூடாதா? இதுக்குத் தான் நான் உங்க எல்லோர்கிட்டயும் என் கல்யாண விஷயத்தை மறைக்குறேன். அது தெரிஞ்சிடுச்சுன்னா உங்களுக்கு எல்லாம் நான் அது பற்றி மட்டும் தான் சிந்திக்கிறதா தோணும். இன்னும் சொல்லப் போனால் எனக்கு அந்த பாட்டைப் பார்க்கும் போது அரவிந்த்சாமி தான் தெரிஞ்சார். நீ சொல்லுறவங்க எல்லாம் ஞாபகத் துல வரலை...'' என்றாள்.

''ஆத்தா பரதேவதை! தெரியாம சொல்லிட்டேன். உன் லெக்சரை நிறுத்து'' என்று சொன்னவள் தன் கைப்பேசியை எடுத்து யாரிடமோ பேச ஆரம்பித்தாள்.

''ஏன் அண்ணா, இருந்திருந்து இவ தானா உங்க கண்ணுல பட்டாள். வேற நல்ல பொண்ணே கிடைக் கலையா? காதல் ரோஜாவே பாட்டைப் பார்த்தால் அரவிந்த்சாமி தான் தெரியுறாராம். உங்க ஞாபகம்



வரலையாம்... இப்படி ஒரு ஃபீலிங்க்ஸ் இல்லாத ஒருத்தியை போய் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்களே'' என்று மித்ரனிடம் பேச ஆரம்பித்தாள்.

அந்தப் பக்கம் அவன் சிரித்துக் கொண்டே, ''காவ்யா டி.வி.யிலே குர்குரே விளம்பரம் பார்த்து இருக்க தானே! கோணலா இருந்தாலும் என்னோடதாக்கும். அது மாதிரி ஃபீலிங்க்ஸே இல்லாமல் இருந்தாலும் அவ என் வைஃபாக் கும்'' என்றவுடன்,

''அப்ப கோணல்ன்னு சொல்லுறீங்களா?'' என்று காவ்யா சிரிப்புடனே கேட்க,

''நீ நாத்தனாரா இல்லை நாரதரா? குடும்பத்திலே கும்மி அடிச்சிட்டு போயிடாத மா தாயி!'' என்று அவன் அலற,

''சே சே நான் நல்லது தான் செய்வேனாக்கும். இப்பக் கூட பாருங்க ஃபீலிங்க்ஸே இல்லைன்னு சொன்ன உங்க வைஃப் முகத்திலே பொறாமைங்கிற உணர்ச்சி பொங்கி வழியுதாக்கும்'' என்று தான் மித்ரனுடன் பேச ஆரம்பித் ததில் இருந்து தன்னையே முறைத்துக் கொண்டிருக்கும் சஹானா மீது பார்வையைச் செலுத்தியவாறே கூறியவள் அவனிடம் பை என்று சொல்லி அழைப்பைத் துண்டித் தாள்.

அவள் அழைப்பைத் துண்டித்த சில நொடிகளில் சஹானாவின் போன் அலறியது.

''யாரு மித்ரன் அண்ணனா?'' என்று காவ்யா கேட்க ஆமாம் என்று சஹானா தலையாட்டியதும் அறை கதவைச் சாற்றிவிட்டு காவ்யா வெளியேறினாள்.

சஹானா போனை ஆன் செய்து காதில் வைத்தாள்.

''ஹலோ சனா, சாப்பிட்டியா?''

''ம்ம்ம்.''

''அத்தை மாமா கூட பேசினாயா?''

''ம்ம்ம்.''

''கோபமா இருக்கியா? அதுவும் என் மேலே?''

அதுவரை ம்ம்ம் கொட்டியவள் இப்பொழுது வெடித்தாள்.

''எனக்குக் கோபம் என்ற ஒன்று வந்தால்... அது உங்க மேல மட்டும் தான் வரும்.''

மித்ரன் தன் போனை தன் காதில் இருந்து அரையடி தள்ளி வைத்துக் கொண்டு சத்தமில்லாமல் சிரித்தான்.

''இப்படிக் கத்தினால் உன் தொண்டைக்கு எந்தப் பிரச்சனையும் வராமல் போகலாம் சனா. ஆனால் என் காது சவ்வு கிழிந்துவிடும்'' என்று சொன்னவன் அவளைச் சமாதானப்படுத்தி தன் பேச்சை முடித்தான்.

'சனா பேபி உனக்கு என் மேலே மட்டும் தான் கோபம் வருமா? அது ஏன் என்று சிந்தித்தாயா? உரிமை உள்ள இடத்திலே தான் கோபம் வரும். உனக்கு நான் ரொம்பவே ஸ்பெஷல் இல்லையா? ம்ம்ம்.. நீ மட்டும் என் பக்கத்திலே இருந்தால் அப்படியே உன்னை இறுக்கி அணைச்சு ஒரு உம்மா கொடுத்து இருப்பேன். இப்போ சும்மா தான் இருக்க வேண்டி இருக்கு. ம்ம்ம்' என்று மனதில் அலுத்துக் கொண்டான்.

அவன் ஒருமுறை கூட கோவைக்குச் சென்று அவளைப் பார்க்கவில்லை. அவனுக்கு அவளைப் பார்க்க வேண்டும் என்று தோன்றும் பொழுதெல்லாம் அவள் நடனமாடிய வீடியோக் காட்சி அல்லது திருமண வீடியோக் காட்சி என்று எதையாவது போட்டுப் பார்த்துக் காலம் தள்ளினான்.



நாட்கள் விரைந்தோடின. தினமும் குட் மார்னிங், குட் நைட் SMS'ஐ மறக்காமல் மித்ரன் அனுப்புவான். முடிந்த பொழுது சிறிது நேரம் மட்டுமே பேசுவான். அவளை எந்த விதத்திலும் தொந்தரவு செய்யக் கூடாது என்பதில் தெளிவாக இருந்தான்.

சஹானா மித்ரனுக்குப் போன் செய்து பேச மாட்டாள். ஆனால் அவன் பொன்விழா கொண்டாட்டத்திற்கு கோவை வந்து சென்றதில் இருந்தே அவளது மனதில் இவன் 'என்னவன்' என்ற உணர்வு அழுத்தமாகப் பதிந்து போனதால் தினமும் அவனது நிழலுருவத்திடம் பேச அவள் மறக்கவில்லை. கணவனுக்கு மிதுன் என்ற செல்லப் பெயரிட்டாள்.

அவளது மடிகணினியில் பாதுகாப்பாய் வைத்திருக்கும் கணவனது புகைப்படத்தை தினமும் பார்வையிட்டு அதனுடன் கொஞ்சுவதைத் தன் வழக்கமாக வைத்துக் கொண்டாள். நாளாக நாளாக அது அவளை அவனது புகைப்படத்தை முத்தமிடுவதில் கொண்டு வந்து நிறுத்தியது. ஒரு நாள் இல்லை ஒரு நாள் அந்த லேப்டாப்பே உயிர் பெற்று வந்து 'சீ என்னை எச்சில் பண்ணாதே!' என்று சொல்லும் அளவுக்கு அவளுக்கு மிதுன் பைத்தியம் பிடித்துத் தான் இருந்தது.

சஹானா மித்ரனுக்கு போன் செய்து பேசாது போனாலும் மாமியாருக்கு வாரம் மூன்று முறையாவது போன் செய்து பேசிவிடுவாள். இதில் பார்வதி பெருமை அடைந்தார் என்றால் அவர்களின் நெருக்கத்தைப் பார்த்து மித்ரன் சந்தோஷம் அடைந்தான்.

மே மாதம்... கல்லூரி முடியப் போகும் சமயம்...

கடைசி தேர்விற்கு நான்கு நாட்கள் விடுமுறை இருந்த பொழுது சஹானாவும், காவ்யாவும் சென்னை அனுப்ப வேண்டிய பொருட்களை எல்லாம் ஒதுக்கி வைத்தனர். மித்ரன் அவர்களின் விடுதிக்கு ஆள் அனுப்பி அவற்றை எல்லாம் நல்ல முறையில் பேக் செய்து சென்னைக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தான். அதனால் கடைசி தேர்வு முடிந்த பின் இருவரும் கையில் ஒரே ஒரு பையுடன் சென்னைக்குப் பயணப்பட்டனர்.

சஹானா சென்னைக்குக் கிளம்ப வேண்டிய நாள் அன்று மித்ரனுக்குத் தவிர்க்க முடியாத வேலைக்காக மும்பைக்குச் செல்ல வேண்டியிருந்தது.

அவனுக்குச் செல்ல மனமே இல்லை. மனைவி நாளை ஊர் திரும்புகிறாள். இத்தனை நாட்களாக அவளைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று கோவை வரை அவளை நேரில் சென்றும் பார்க்கவில்லை.

இப்பொழுது அவள் திரும்பி வந்ததும் தன் மேல் கோபம் ஏதும் மிச்சம் மீதி இருந்தால் கூடப் போக்கி விட்டு அவளுடன் இணைந்து வாழ அவன் காத்துக் கொண்டிருக்க... இந்த வேலை இப்படி நந்தியாய் குறுக்கிடுதே என்று அவனுக்கு ஆத்திரம் வரத் தான் செய்தது.

ஆனால் கடமை அழைக்க அவன் மும்பை பயணப்பட்டான். அவன் சஹானாவிடம் கூடத் தன் பயணத்தைப் பற்றித் தெரிவிக்கவில்லை. அவள் வந்து இறங்கிய சில மணி நேரத்தில் எப்படியும் வீடு வந்து சேர்ந்துவிடலாம். தான் மும்பையில் இருக்கும் விஷயத்தைச் சொல்லி



அவளையும் கவலை கொள்ளச் செய்ய வேண்டாம் என நினைத்தான்.

அவர்கள் ரயிலேறிய இரவு மித்ரன் வரதராஜனை அவரது கைப்பேசிக்கு அழைத்துப் பேசினான்.

''சொல்லுங்க மாப்பிள்ளை!''

''மாமா நான் வேலை விஷயமா மும்பை வந்து இருக்கேன். அதனால என்னால் சஹானாவைக் கூப்பிட நாளைக்கு ஸ்டேஷன் போக முடியாது. எங்க வீட்டு டிரைவர் முத்து காலையிலேயே காரை எடுத்திட்டு சஹானாவைக் கூப்பிட சென்ட்ரல் ஸ்டேஷன் போயிடுவார். நீங்க யாராவது போக விரும்புறீங்களா? அவரை முதலில் உங்க வீட்டுக்கு வரச் சொல்லவா?''

''இல்லை மாப்பிள்ளை. சேரன் எக்ஸ்பிரஸ் காலையில் ஆறரைக்குத் தான் வரும். அதனால அவளா தான் எப்பவுமே வீட்டுக்கு வருவாள். கோயம்புத்தூரில் இருந்து தனியா வரத் தெரிஞ்சவளுக்கு சென்ட்ரலில் இருந்து வரத் தெரியாதா அப்படின்னு கேட்பாள்.''

''ஹா ஹா அதுவும் சரி தானே மாமா.''

''அவளை நீங்க விட்டுக் கொடுப்பீங்களா? லக்கேஜும் கிடையாது. போதாதக் குறைக்கு நீங்க கார் வேற அனுப்பப் போறீங்க. அதனால நாங்க யாரும் போகலை மாப்பிள்ளை. அப்புறமா வந்து பார்த்துக்கிறோம்'' என்று சொல்லிவிட அவரிடம் சிறிது நேரம் பேசிவிட்டு மித்ரன் அழைப்பைத் துண்டித்தான்.

டிரைனில் ஏறியதும் தாங்கள் டிரைன் ஏறி விட்டதாக வீட்டிற்கு அழைத்துச் சொல்ல விரும்பிய சஹானா தன் செல்போனை எடுத்துப் பார்த்தாள். அது சார்ஜ் தீர்ந்து போய் அணைக்கப்பட்டு இருந்தது.

அதனால் காவ்யாவை விட்டே தனது வீட்டிற்கும் தகவல் சொல்லச் சொன்னாள்.

''சகி உங்க அப்பா கிட்ட சொல்லியாச்சு. அண்ணா கிட்ட சொல்ல வேண்டாமா? இரு டயல் பண்ணித் தரேன். நீயே பேசு'' என்றவள் மித்ரனின் எண்ணிற்கு முயற்சி செய்ய அது ஸ்விட்ச் ஆஃப் என்று வந்தது.

''அண்ணா போனும் வேலை செய்யலை'' என்று காவ்யா சொன்னதும், ''சரி காவ்யா காலையிலே பேசிக் கலாம்'' என்று சஹானா சொல்லிவிட்டாள்.



# 15

மும்பை வேலையை முடித்துக் கொண்டு இரவோடு இரவாக மனைவியைப் பார்க்கும் ஆவலில் காலை நான்கரை மணிக்கு எல்லாம் வீடு வந்து சேர்ந்த மித்ரன் பல் துலக்கிவிட்டு, டீ போட்டுக் குடித்துவிட்டு நேரத்தை நெட்டித் தள்ளிக் கொண்டிருந்தான்.

டிரைன் எங்கு வந்திருக்கு என்று கேட்கலாமா என்று யோசித்தவன் அவளது தூக்கத்தைக் கெடுக்கக் கூடாது என்று எண்ணியவனாய் அவளது அலைப்பேசிக்கு அழைக்கும் எண்ணத்தைக் கைவிட்டான். படுக்கையில் அமர்ந்தவன் அவனையும் அறியாது தூங்கியும் போனான்.

காலையில் சரியான நேரத்திற்கு சேரன் விரைவு வண்டி சென்னையை வந்தடைந்தது. காவ்யாவும், சஹானாவும் வெளியேறி கார் பார்க்கிங் வந்தடைந் தார்கள். சஹானா டிரைவரிடம் அவரது மற்றும் அவரது



குடும்ப உறுப்பினர்களின் நலனைப் பற்றி விசாரித் தாள்.

'மித்ரன் தம்பியை மாதிரியே அவரது மனைவியும் வேலையாட்களிடம் பாசமாகப் பழகுறாங்க' என்று மனதில் அவளைப் பாராட்டிக் கொண்டார்.

''சரி சகி. நான் கிளம்புறேன்'' என்று காவ்யா விடை பெற முயல,

''நீ எங்கே கிளம்புற? வா.. நான் இறங்கினதும் உன்னை இறக்கிவிடச் சொல்றேன்'' என்று சஹானா சொன்னதும் காவ்யா சிந்தனை வயப்பட்டாள்.

'இவ வீடு எங்க இருக்கு. நம்ம வீடு எங்கேயிருக்கு. இவங்க அம்மா வீடுன்னா... பக்கத்துப் பக்கத்து ஏரியா. அதனால இத்தனை நாள் ஒரே பஸ்ஸில் போவோம். ஆனா மித்ரன் அண்ணா வீடு இருக்கும் திருவான்மி யூருக்கும் எங்க ஏரியாவிற்கும் என்ன சம்பந்தம்? என்ன உளறுகிறாள்? டிரைவர் முன்னிலையில் இதை எப்படிக் கேட்க?' என்று காவ்யா குழம்பிக் கொண்டிருந்த வேளை யில்...

அவர்களது பையை டிக்கியில் வைத்துவிட்டு வந்த டிரைவர், ''மித்ரன் தம்பி மும்பை போகலைன்னா அவரே உங்களைக் கூப்பிட வந்திருப்பார் மா'' என்றார். டிரை வரின் கூற்றில் காவ்யா குழப்பம் நீங்கப் பெற்றாள்.

'ஓ! அண்ணா ஊரில் இல்லையா? அதனால தான் அம்மா வீட்டுக்குப் போகிறாளா' என நினைத்துக் கொண்டே காரில் ஏறி அமர்ந்தாள். அவளுக்கு முன்பே காரில் ஏறி அமர்ந்த சஹானாவிற்கு அவர் சொன்ன செய்தி காதில் விழவில்லை.

''காரில் ஏறியவுடன் முதல்ல என்னை இறக்கிவிட் டிட்டு அடுத்து என் பிரண்டை இறக்கிவிடுங்க அண்ணா. எங்க வீட்டுக்கு வழி தெரியும் தானே? ஹே! நீங்க தான் கல்யாண சமயத்திலும், எங்கப்பா ஆஸ் பிட்டலில் இருந்த போதும் நிறைய முறை வந்திருக் கீங்களே! நான் தான் மறந்து போய் கேட்கிறேன். அப்ப உங்களுக்கே வழி தெரியும் தானே?'' என்று கேட்க இப்பொழுது குழம்புவது டிரைவர் முத்துவின் முறையா யிற்று.

'அம்மா வீட்டுக்கா போகச் சொல்லுறாங்க? தம்பி ஊரில் இல்லாததால் அங்க போகச் சொல்லியிருப் பாரோ? நம்ம கிட்ட சொல்ல மறந்துட்டார் போல' என்று எண்ணியவராய்,

''எனக்குத் தெரியும்மா'' என்று சொல்லி அவளது தாய் வீட்டிற்கு வாகனத்தைச் செலுத்தினார்.

தோழிகள் இருவரும் பேசிக் கொண்டே வந்தார்கள். சஹானா வீடு வரும் முன்பே காவ்யா ஓரிடத்தில் வண்டியை நிறுத்தச் சொன்னாள்.

''ஏன் காவ்யா இங்க நிறுத்தச் சொல்லுற?''

''இல்ல சகி உனக்கே தெரியுமே. இங்கேயிருந்து எங்க வீடு வரைக்கும் ஷேர் ஆட்டோ ஓடுதே. நான் அதிலே போயிடுறேன். ப்ளீஸ்...'' என்க,

சஹானாவிற்கும் அவளது சங்கடம் புரிந்ததால் சரி என்று சொல்லி அவளை இறக்கி விட்டுச் சென்றாள்.

சஹானாவைப் பார்த்த அவள் அம்மாவிற்கு ஒரே சந்தோஷம். நீண்ட நாட்களுக்குப் பின் பார்த்ததால் மகள் ஏன் இங்கே வந்தாள் என்று அமிர்தத்திற்குக்



கேட்கத் தோன்றவில்லை. அவள் வீடு வந்து சேரும் பொழுது அவளது தந்தை அந்த நேரத்திற்கு வழக்கமாக அவர் செல்லும் வாக்கிங்கிற்குச் சென்றிருந்தார்.

மித்ரன் தூங்கி எழுந்து பார்க்கும் பொழுது நேரம் கடந்திருந்தது. வேகமாக மாடியில் இருந்து கீழிறங்கி வந்து கொண்டே மனைவியின் கைப்பேசிக்கு அழைக்க... அது ஸ்விட்ச் ஆஃப் என்று சொல்லியது.

அப்பொழுது தான் அவனைப் பார்த்த பார்வதி, ''மித்ரன், நீ எப்ப வந்தாய்? என்னை எழுப்பி இருக்கலாம் தானே?'' என்றார்.

''அம்மா நான் இப்ப தான் காலையிலே வந்தேன். உங்களைத் தொந்தரவு பண்ண வேண்டாம்ன்னு நானே டீ போட்டுக் குடிச்சிட்டேன்'' என்று சொல்லிக் கொண்டே டிரைவரின் எண்ணிற்கு அழைத்தான்.

''முத்தண்ணே கரெக்ட் டைமுக்கு போயிட்டீங் களா?''

''அதெல்லாம் சரியாப் போயிட்டேன் தம்பி. அவங்க அம்மா வீட்டில இப்பத் தான் இறக்கி விட்டேன். நம்ம வீட்டுக்குத் தான் போய்கிட்டு இருக்கேன்'' என்றார். மித்ரன் மும்பையில் இருப்பதாக எண்ணியவர் வீட்டிற் குத் தான் போய் கொண்டு இருக்கிறேன் என்று சொன் னார்.

''சரிங்கண்ணே!'' என்று சொல்லி அழைப்பைத் துண் டித்தவனின் மனம் சுருங்கியது.

'நாம இவளைப் பார்க்கலாம் என்று எண்ணி அவசர அவசரமா வீடு வந்து சேர்ந்தால்... இவ அங்க போய் இறங்கி இருக்காள். இவளை...' என்று கடுப்பானான்.

மகனின் முகமாற்றத்தைக் கவனிக்காத பார்வதி, "எங்க வரைக்கும் வந்திருக்காள் பா?" என்று கேட்டுக் கொண்டே அவனருகில் வந்தார்.

"ம்ம்ம் இன்னும் கிளம்பவே இல்லையாம். அதே இடத்திலேயே தான் இருக்காளாம்!" என்று இடக்காய் பதில் சொன்னான்.

"ஓ! பிரண்ட்ஸை விட்டு வர மனசில்லையா? நீ கூடத் தான் கடைசி பரீட்சை முடிஞ்சு ஒரு வாரம் உன் பிரண்ட்ஸோட ஊர் சுத்திட்டு மெதுவா வந்து இறங்கினாய். உனக்கு மறந்து போச்சா?"

"எனக்கு ஒண்ணும் மறக்கலை. ஆனா உங்க மருமகளுக்குத் தான் தனக்குக் கல்யாணம் ஆன விஷயம் மறந்து போச்சு."

"என்ன சொல்ல வருகிறாய்? எனக்குப் புரியலை."

"அவ பிரண்ட்ஸ் கூட ஊரைச் சுத்தலை. அம்மணி சென்னைக்கு வந்துட்டாங்க. நேரா அவங்க அம்மா வீட்டில போய் இறங்கிட்டாங்க."

"ஓ! அவ அப்பாக்கு ஆபரேஷன் பண்ணின பிறகு இப்பத் தானே ஊருக்கு வருகிறாள். அவர் கூட இருந்திட்டு ரெண்டு மூணு நாள் கழிச்சுத் தான் வரட்டுமே!"

"உங்க மருமகள் என்ன செஞ்சாலும் கரெக்ட்டா மா?"

"அவ நல்ல பொண்ணு பா. எல்லா பொண்ணுக்கும் பொறந்த வீட்டை மறக்குறது கஷ்டமான விஷயம் பா. அதிலும் உன் கல்யாணம் நடந்த சூழ்நிலை அவளை உன்கூட ஒட்ட விட்டாமல் செஞ்சிடுச்சு. அவ படிப்பு



முடியட்டும் என்று சொல்லி நீயும் எதையும் விளக்காமல் விட்டுவிட்டாய். இப்ப தான் படிப்பை முடிச்சுட்டாளே. இனிமேல் உன் பிரச்சனை எல்லாம் தீர்ந்திடும் பா."

"ம்ம்ம்" என்று முணங்கிக் கொண்டே மாடி ஏறிச் சென்றான். தன் தாய் கூறிய எந்த சமாதானத்தையும் அவன் மனம் ஏற்கவில்லை.

அப்பொழுது அவன் கைப்பேசி சிணுங்கியது. திரையில் வரதராஜனின் பெயரைப் பார்த்ததும் பெண்ணின் செயலுக்கு அப்பா விளக்கம் சொல்லப் போகிறாரா என்று எண்ணிக் கொண்டே தன் மனச்சோர்வு குரலில் தெரியாத வண்ணம், "ஹலோ மாமா!" என்று உற்சாகத்துடனே பேச ஆரம்பித்தான்.

"மாப்பிள்ளை, நான் இப்ப தான் வாக்கிங் போயிட்டு வந்தேன். இந்தப் பொண்ணு இங்க வந்து இறங்கிட்டாள்..." என்று தயங்கி இழுத்தார்.

"பரவாயில்லை மாமா. உங்க கூட ரெண்டு மூணு நாள் இருந்திட்டு அப்புறமா வரட்டும். நான் அம்மாவிடம் சொல்லிக்கிறேன் மாமா. எனக்கு வேற ஒரு போன் கால் வருது. அப்புறமா பேசறேன்" என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தான்.

மித்ரன் சொன்னதை வைத்து அவனுக்கு மும்பையில் வேலை முடியவில்லை போல... அது தான் சஹானாவை இங்கேயே இன்னும் மூன்று நாட்கள் இருக்கச் சொல்லி விட்டார் போல என வரதராஜன் நினைத்துக் கொண்டார்.

அதை தன் மனைவியிடம் சந்தோஷமாகப் பகிர்ந்தார்.

"அமிர்தம் மாப்பிள்ளைக்கு இன்னும் மும்பை வேலை முடியலை போல! சஹானா மூணு நாளுக்கு இங்கேயே

இருக்கட்டும்ன்னு சொல்லிட்டார். அவளுக்கு பிடிச்சதா சமையல் செய். ஏதாவது வேணும்ன்னா சொல்லு. நான் போய் வாங்கிட்டு வரேன்'' என்று படு உற்சாகமாய் கூறினார்.

அதற்கு நேர்மாறாக கேட்டுக் கொண்டிருந்த சஹானா உற்சாகம் இழந்தாள்.

'மும்பை போயிருக்காரா? எப்போ? ஏன் என்னிடம் சொல்லலை? காலையில் குளிச்சுச் சாப்பிட்டதும் அவரையும் இங்கே வரச் சொல்லி அவர் கூடவே அவர் வீட்டுக்குப் போகலாம்ன்னு நான் காத்திருக்க... இவர் மும்பை போய்விட்டாரா?

இது பற்றி நேற்றே சொல்லலாம் என நினைத்தால் என் செல்போன் சார்ஜ் இல்லாமல் ஸ்விட்ச் ஆஃப் ஆகிடுச்சு. காவ்யா போனில் இருந்து அழைத்தால் அவர் போனுக்கும் அதே நிலைமை. சரி வீட்டுக்கு வந்ததும் சொல்லிக்கலாம் என்று நினைத்தால்...

அவர் ரயில் நிலையத்துக்கு வராததற்கு இது தான் காரணமா? காவ்யா உடன் வருவதால் நானும் அவரை ரயில் நிலையத்தில் எதிர்பார்க்கவில்லை. அவளை நடுவிலே வைச்சுக்கிட்டு என்ன பேச முடியும்? அதனால் டிரைவரை அனுப்பி இருப்பார் என்று நினைத்தேன்.

இதற்காகவா நான் அவசர அவசரமா கோவையில் இருந்து வந்தேன்! இன்னும் பாதி பேர் ஹாஸ்டலில் தான் இருக்காங்க. இவரைப் பார்க்கத் தானே நான் ஓடோடி வந்தேன். எனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்' என நொந்து போனாள்.

காலை சாப்பாட்டிற்குப் பின் தான் மகளின் சோர்ந்த முகம் பெற்றவர்களின் கண்களுக்குப் பட்டது. ரயில்



பிரயாணமும், தேர்விற்குக் கண் விழித்துப் படித்ததும் தான் அவளது சோர்விற்குக் காரணம் என்று தாங்களாகவே ஒரு முடிவிற்கு வந்தார்கள். சஹானாவும் உண்மையைச் சொல்லவில்லை.

இதுவே இரண்டு நாள் தொடர்ந்தது. மூன்றாவது நாள் அவளை வற்புறுத்தி அர்ஜுன் ஒரு படத்திற்குக் கூட்டிச் சென்றான். இருவரும் ஸ்கூட்டியில் சென்றார்கள். பார்க்கிங்கில் ஸ்கூட்டியை நிறுத்த சஹானா சென்றாள்.

அதற்குள் அர்ஜுன் மட்டும் அந்த ஷாப்பிங் மாலில் நுழைந்தான். தூரத்தில் நடந்து வந்து கொண்டிருந்த மித்ரனைக் கண்ட அர்ஜுன் அவனருகே சென்று, ''மாமா, மும்பையில இருந்து வந்துட்டீங்களா?'' என்று ஆச்சரியத்துடன் வினவினான்.

''ம்ம்ம் வந்திட்டேன் டா. என்ன சினிமாவுக்கு வந்தியா? பிரண்ட்ஸ் கூட வந்தியா?''

''இல்ல மாமா. அக்காவும் நானும் தான் படம் பார்க்க வந்தோம். அக்கா ஸ்கூட்டியைப் பார்க் பண்ண போயிருக்காள். இப்போ நீங்க ஃப்ரீயா?''

''இல்லை டா. ஒரு பிரண்டுக்கு கிஃப்ட் கொடுக்க வாட்ச் வாங்க இங்க இருக்குற டைட்டன் ஷோ ரூம் வந்தேன். இப்போ ஆபிஸ் போகணும். ஏன் கேட்குற?''

''படம் பார்க்க ரெண்டு டிக்கெட் வாங்கினேன். நீங்க ஃப்ரீன்னா நீங்களும் அக்காவும் படத்துக்குப் போங்கன்னு சொல்லலாம்ன்னு பார்த்தேன்.''

''இல்லை டா. நீங்க பாருங்க. பத்திரமா வீட்டுக்கு போங்க. நான் வரேன்'' என்று சொல்லி நகர்ந்தான்.

தூரத்தில் தன் அக்கா வருவதைப் பார்த்த அர்ஜுன் அவர்கள் இருவரும் பேசட்டும் என நினைத்து அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

தூரத்தில் மித்ரனைப் பார்த்த சஹானா அதிர்ந்து போனாள். இவர் எப்போ வந்தார்? என நினைத்துக் கொண்டே அவனை நோக்கி நடந்தாள்.

அவனருகே வந்ததும், ''மும்பையிலே இருந்து எப்போ வந்தீங்க?'' என்று கேட்டாள்.

அவளைத் தீர்க்கமாகப் பார்த்துக் கொண்டே பதில் சொல்லாது அவளைக் கடந்து செல்ல முற்பட்டான். ஆனால் அவளோ தனது கரத்தால் அவனது கரத்தைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினாள்.

''என் கேள்விக்குப் பதில் சொல்லுங்க. மும்பையிலே இருந்து எப்போ வந்தீங்க?''

''நான் மும்பையிலே இருப்பதா உன்கிட்டே எப்போ சொன்னேன்?''

''எங்கப்பா சொன்னாரே...''

''அப்போ அவர்கிட்டே போய் கேளு!'' என்று சொல்லி அவளது கையை விலக்கிவிட்டுச் சென்றுவிட்டான். சஹானா விக்கித்துப் போய் நின்று விட்டாள்.

'என்ன இவர் இப்படிச் சொல்லுறார்? என் மேல் என்ன கோபம்? கோபத்தில் தான் மூணு நாளா போனும் பண்ணலையா? இவர் குரலைக் கேட்காமல் நான் இங்கே வாடிப் போய் நிற்கிறேன்... இவர் என்னடான்னா பார்த்தும் பார்க்காத மாதிரி போறார்? ஏன் மிதுன் இப்படி பண்ணுறீங்க?' என வருத்தப்பட்டாள்.

'காட்டாத காதல் எல்லாம் மீட்டாத வீணையைப் போல்' என்று ஒரு திரைப்படப் பாடல் வரி உண்டு



இவர்கள் இருவரும் காதல் எனும் வீணையைத் தூசி தட்டி அலங்கரித்து வைத்தார்களே தவிர அதை மீட்ட முயற்சிக்கவில்லை. காதல் என்பது உணர்வுப்பூர்வமாய் உணரக்கூடிய ஒரு விஷயமே! ஆனால் உணர்ந்ததை உணர்த்தவும் வேண்டும்.

அர்ஜுன் அவளைத் தியேட்டரின் உள்ளே அழைத்துச் சென்று இருக்கையில் அமர வைத்தான். அவளுக்கு படம் பார்க்கும் மூடு சுத்தமாக இல்லாது போனது. படம் ஆரம்பிக்கும் முன்பே அவள் வெளியேற அவளை அர்ஜுன் பின் தொடர்ந்தான்.

''ஹேய் சஹானா, என்ன ஆச்சு? நீ பாட்டுக்குச் சொல்லாமல் கொள்ளாமல் எழுந்து வெளியே வந்துவிட்டாய்?'' என்று அர்ஜுன் கேட்ட பிறகே தான் தியேட்டரை விட்டு வெளியேறிய விஷயமே அவளுக்கு உறைத்தது.

''அர்ஜுன், எனக்குத் தலை வலிக்குது. நீ வேண்டும் என்றால் இருந்து படம் பார்த்துவிட்டு வா. நான் வீட்டுக்குப் போறேன்'' என்றாள் சஹானா.

''எதுக்கு இப்போ என்னை மாமா ஆள் வைச்சு அடிக்குறதுக்கு ஏற்பாடு பண்ணுற? என்ன ஒரு நல்ல எண்ணம் சஹானா உனக்கு!'' என அவன் நக்கலடிக்க,

''என்னடா உளறிக்கிட்டு இருக்க?'' என்று அவள் எரிச்சல் பட...

''இப்ப தான் மாமா என்கிட்ட என் வைஃபை பத்திரமா வீட்டுக்கு கூட்டிட்டுப் போ என்று சொன்னார். நான் மட்டும் உன்னை இப்பத் தனியா அனுப்பினேன் என்றால் அவ்வளவு தான்'' என்று பயந்தவன் போல் நடித்தான்.

'ஆமா இந்தக் கரிசனத்திலே எல்லாம் குறைச்சல் இல்லை' என்று மனதுக்குள் கணவனை வசைபாடியவள் பார்க்கிங் நோக்கிச் சென்றாள்.

''தலைவலியோட நீ ஓட்ட வேண்டாம் சஹானா. நான் ஓட்டுறேன்'' என்று சொல்லி அர்ஜுன் வண்டி ஓட்ட அவர்கள் வீடு வந்து சேர்ந்தனர்.

''என்னடா மதியச் சாப்பாட்டுக்குத் தான் வருவோம் என்று சொல்லிட்டுப் போனீங்க... அதுக்குள்ளே வந்து நிக்குறீங்க'' என்று அமிர்தம் கேள்வி கேட்க சஹானா ஏதும் சொல்லும் முன் அர்ஜுன் அவளது தலைவலி பற்றி எடுத்துக் கூறி சஹானாவை மீண்டும் ஒரு முறை பொய் சொல்ல விடாமல் தடுத்துவிட்டான். சஹானா தனது அறைக்குள் சென்று மறைந்தாள்.

மனைவியைப் பார்த்ததும் மித்ரன் மிகவும் சோர்வாக உணர்ந்தான். ஆபிஸிற்குச் செல்ல வேண்டியவன் அங்கு சென்றால் தன்னால் வேலை எதுவும் செய்ய முடியாது என்று தோன்ற... காரை வீட்டிற்குத் திருப்பி னான்.

மகனை அந்த நேரத்தில் எதிர்பார்க்காத பார்வதி குழம்பிப் போனார்.

''என்னப்பா ஜுரமா?'' என்று கேட்டுக் கொண்டே அவன் கழுத்தில் கை வைத்துப் பார்க்க,

''அதெல்லாம் ஒண்ணும் இல்லம்மா. கொஞ்சம் டையர்டா இருக்கு. அவ்வளவு தான் மா.''

''இந்த புது பிராஜெக்ட் ஆரம்பம் ஆனதிலே இருந்தே ரொம்ப நேரம் கழிச்சு தான் வீட்டுக்கு வருகிறாய். வெளியூர் பிரயாணம் வேற... உடம்பைப் பார்த்துக்கோ



பா. நீ தெம்பா இருந்தால் தானே நாங்க ரெண்டு பேரும் தெம்பா இருக்க முடியும்'' என்று ஒரு தாயாய் பார்வதி வருத்தப்பட்டார்.

'நீங்க சொன்ன அந்த ரெண்டாவது நபர்... உங்க மருமகளிடம் தான் என் மனநிலையை மாத்தக் கூடிய மந்திரக்கோல் இருக்கு. அதை அவ புரிஞ்சுக்கலை. அதான் என் பிரச்சனையே' என மனதுக்குள் எண்ணி யவன் தன் தாயிடம்,

''இன்னும் ஒரு மாசம் கொஞ்சம் டைட்டா தான் மா இருக்கும். என் உடம்பை நான் பார்த்துப்பேன் மா. இப்பக் கூட பாருங்க.. வேலை பார்க்க முடியலை என்றதும் வீட்டுக்குத் தானே வந்து இருக்கேன். வம்புக்குன்னு அங்கேயே உட்கார்ந்து வேலை பார்க்கலையே? நீங்க என்னை நினைச்சுக் கவலைப்படாதீங்க மா'' என்று சொல்லி சோபாவில் சாய்ந்து கண்மூடினான்.

''நான் போய் உனக்கு ஏதாவது ஜூஸ் போட்டுக் கொண்டு வரேன்'' என்று கூறிக் கொண்டே அடுக்களை யில் நுழைந்தார்.

சரியாக அதே நேரம் அங்கே சஹானாவின் வீட்டில்...

''தலைவலின்னு சொல்லிட்டு உள்ளே போய் படுத் திருப்பேன்னு பார்த்தால் பேகைத் தூக்கிட்டு வந்து நிக்குற. எங்கம்மா கிளம்பிட்ட?'' என்று அமிர்தம் சஹானாவைப் பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்தார்.

''அம்மா நான் எங்க வீட்டுக்குக் கிளம்புறேன் மா'' என்று சஹானா சொன்னதும் அர்ஜுன் விசில் அடிக்க ஆரம்பித்தான்.

''உனக்குப் படம் பார்க்க முடியாமல் தலைவலி வந்த காரணம் இது தானா? பாரு சின்ன பையன்... நீ சொன்ன

பொய்யை நம்பி இவ்வளவு நேரமும் உனக்கு தலைவலி சரியாகணும்ன்னு சோறு தண்ணியில்லாமல் விரதம் எல்லாம் இருந்தேன்'' என்று சொல்லி சஹானாவிடம் இரண்டு அடிகளைப் பெற்றுக் கொண்டான்.

''என்னடா சொல்லுற? புரியும்படியா சொல்லு'' என்று அமிர்தம் கேட்டவுடன்,

''அம்மா கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நாங்க ஷாப்பிங் மாலில் மாமாவைப் பார்த்தோம். மாமா மும்பையில் இருந்து வந்திட்டார். அதான் அக்கா விடு ஜூட்ன்னு கிளம்பிட்டாள்.''

''ஓ! மாப்பிள்ளை வந்துட்டாரா? அப்பா ஆபிஸில் இருந்து வந்ததும் உன்னைக் கொண்டு போய் விடச் சொல்லவா?''

''இதுக்கு எதுக்குமா அப்பா? நானே போயிடுவேன்.''

''சரி அப்போ சாப்பிட்டதுக்கு அப்புறம் கிளம்பு.''

''ஏன் மா எங்க அத்தை எனக்கு சாப்பாடு போடமாட்டாங்களா?''

''அதுக்கில்லை மா. நான் ஏற்கனவே சமைக்க ஆரம்பிச்சுட்டேன். அதான்...''

''அம்மா ப்ளீஸ்... அதை இதைச் சொல்லி எனக்கு முட்டுக்கட்டை போடாதீங்க'' என்று சொல்லி சஹானா தன் முடிவில் உறுதியாய் இருக்க,

''அப்போ அர்ஜுன் நீ கூட போய்ட்டு வா'' என்று மகனைப் பார்த்து சொன்னவர், பின் மகளைப் பார்த்து, ''இரு ஒரு நிமிஷம். உங்க அத்தை வீட்டிலே இருக்காங்களான்னு கேட்டுத் தெரிஞ்சுக்கிறேன்'' என்று சொல்லி பார்வதிக்கு அழைத்தார்.



போனை எடுத்த பார்வதி, ''எப்படி இருக்கீங்க? என் மருமகள் எப்படி இருக்காள்?'' எனக் கேட்டார்.

''நாங்க எல்லோரும் நல்லா இருக்கோம். நீங்க நல்லா இருக்கீங்களா?'' என நலன் விசாரித்து முடித்தபின்,

''வீட்டிலே இருக்கீங்களா? எங்கேயாவது வெளியே போகப் போறீங்களா?'' என்று அமிர்தம் கேட்டவுடன்,

''வீட்டிலே தான் இருக்கேன். வெளியே போகும் வேலையும் இல்லை. ஏன் கேட்குறீங்க?'' என்று பார்வதி எதிர் கேள்வி கேட்டார்.

''சஹானாவும் அர்ஜுனும் அங்கே கிளம்பி வராங்க. அதான் நீங்க வீட்டிலே இருப்பீங்களான்னு கேட்டுத் தெரிஞ்சுக்கலாமேன்னு பார்த்தேன்.''

''தாராளமா வரச் சொல்லுங்க. நான் எங்கேயும் போகலை'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தார்.

''மித்ரன் விஷயம் தெரியுமா? என் மருமகள் இங்க வந்துக்கிட்டே இருக்காள்'' என்று பார்வதி சொன்னவுடன் மித்ரனின் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் பிரகாசம் தெரிந்தது.

'ஹேய் சனா பேபி! என் கோபம் உன்னை இந்த அளவுக்கு பாதிக்குதா? சினிமாவைப் பார்க்காமலே திரும்பிட்டியா? வெரி குட் என்று மனைவியைப் பாராட்டிக் கொண்டான்.

அவள் வருகிறாள் என்று தெரிந்தவுடன் மனச்சோர்வெல்லாம் நொடியில் காணாமல் போனது.

''சரி மா. நான் ஆபிஸுக்கு கிளம்புறேன்'' என்று சொல்லி எழுந்தான்.

''பொண்டாட்டி வரான்னு சொன்னவுடனே உற்சாகம் வந்திடுச்சா! அப்படியே இருந்து பார்த்திட்டுப் போக வேண்டியது தானே பா.''

''இல்ல மா. அவ வருவதற்கு இன்னும் குறைந்தது ஒரு மணி நேரம் ஆகும். அதுவரைக்கும் சும்மா தான் உட்கார்ந்து இருக்கணும். நான் போய் வேலையை முடிச்சிட்டு நைட்டு சீக்கிரம் வரப் பார்க்கிறேன்.''

''சரி பா. இந்த ஜூஸைக் குடிச்சிட்டுக் கிளம்பு'' என்று சொல்லி பழச்சாறை நீட்டினார்.

அதை வாங்கிப் பருகியவன், ''அம்மா நைட் எனக் காகச் சாப்பிடாமல் காத்திருக்க வேண்டாம். நான் சீக் கிரமா வர முயற்சிக்கிறேன்'' என்று சொல்லிக் கிளம்பி னான்.

ஒரு மணி நேரத்திற்குப் பின் சஹானாவும், அர்ஜுனும் வீடு வந்து சேர்ந்தார்கள்.

''வாங்க'' என்று வரவேற்றவர், ''முதலிலே சொல்லி இருந்தா காரோடு முத்துவை உங்க வீட்டுக்கு அனுப்பி இருப்பேனே மா'' என்றார்.

''பரவாயில்லை அத்தை'' என்று சஹானா சொன்னாள்.

''சரி முதல்ல சாப்பிட வாங்க'' என்று இருவரையும் அழைத்தார்.

''எந்த தைரியத்தில அத்தை என்னையும் சாப்பிடக் கூப்பிடுறீங்க?'' என்று அர்ஜுன் கேட்டவுடன் பார்வதி விழித்தார்.

''உங்க மருமகள் சாப்பிட்டதுக்கு அப்புறம் ஒண்ணும் மிச்சம் மீதி இருக்காது'' என்று அவன் காரணம் சொன்ன வுடன் சஹானா முறைத்தாள்.



அதையும் மீறி அவன் சொல்ல வந்ததைச் சொல்லி முடித்தான்.

''அத்தை எதுக்கும் அவ சாப்பிட ஆரம்பிக்கும் முன் னாடி கொஞ்ச சாப்பாட்டை உங்களுக்குன்னு எடுத்துத் தனியா வச்சுக்கோங்க'' என்று நக்கல் செய்தான்.

''நான் என்ன அவ்வளவாடா சாப்பிடுறேன்?'' என்று சஹானா குறைபட...

''உன் தலைமுடி நீளத்தைப் பார்த்தாலே நீ எவ்வளவு சாப்பிடுவேன்னு ஊருக்கே தெரியும்'' என்று பதிலுரைத் தான்.

''சஹானா மறக்காமல் அவன் காலடி மண்ணெடுத்துச் சுத்தி போடணும் மா'' என்று சொல்லி பார்வதி மரு மகளுக்கு ஆதரவுக் கரம் நீட்டினார்.

''ஆகா! மாமியாரும் மருமகளும் கூட்டணி அமைச்சுக் கிட்டாங்க. இனி நான் ஜகா வாங்க வேண்டியது தான். சரிங்க அத்தை நான் கிளம்புறேன்'' என்று அர்ஜுன் சொன்னவுடன்,

''சாப்பிட்டுப் போ அர்ஜுன்'' என்று பார்வதி மீண் டும் வலியுறுத்தினார்.

''மூணு நாளா மகளுக்காகன்னு எங்க வீட்டிலே ஸ்பெஷல் சமையல் அத்தை. இத்தனை நாளா ஒரு குரங்கு அதில் பங்குக்கு வந்துச்சு. இன்னைக்கு அது இல்லாததால எல்லாம் எனக்கே எனக்கு தான். அதனால நான் எங்க வீட்டிலேயே சாப்பிட்டுக்கிறேன்'' என்று அவன் சொன்னதும்,

''உனக்கு ரொம்ப தைரியம் அர்ஜுன். என் முன்னா லேயே என் மருமகளைக் குரங்குன்னு சொல்லுற?'' என்று பார்வதி அவனைப் பொய்யாகக் கண்டித்தார்.

''யாருக்கு முன்னாலையும் உண்மையைச் சொல்ல இந்த அர்ஜுன் தயங்கவே மாட்டான்'' என்று தன் சட்டைக் காலரைத் தூக்கிப் பெருமைப்பட்டுக் கொள்ள அவனை அடிக்க ஓடினாள் சஹானா.

பார்வதியின் குணம் இந்த ஐந்து மாதத்தில் அதிகம் தெரிந்ததினாலே அவர்கள் இருவரும் தங்கள் வீட்டில் வழக்காடுவதைப் போலவே வழக்காடினார்கள்.

''சரிங்க அத்தை நான் கிளம்புறேன். அக்காவைப் பார்த்துக்கோங்க'' என்று பார்வதியிடம் சொன்னவன் சஹானாவிடம் திரும்பி, ''வரேன் கா. அடிக்கடி போன் பண்ணு. முடிஞ்சப்போ வா'' என்று சொல்லிக் கிளம்பினான்.

அவன் சென்ற பின் இருவரும் சாப்பிட்டு முடித்தார்கள்.

''ரொம்ப டையர்டா தெரியுற சஹானா. மேலே உங்க ரூமிலே போய் தூங்கு'' என்று சொல்லி அவளை அனுப்பி வைத்தார்.



## 16

மேலே சென்றவள் தூங்க முற்படவில்லை. கணவனின் அறையில் நடமாடுவதே அவனருகில் இருப்பது போன்ற ஓர் உணர்வு உண்டாக அவள் அந்த அறையை சந்தோஷமாக சிறிது நேரம் வலம் வந்தாள். சிறிது நேரம் டி.வி. பார்த்தாள். மாலை ஆனதும் கீழே இறங்கிச்



சென்று பார்வதியுடன் பேசிக் கொண்டிருந்தாள். அவருக்குத் தன்னால் ஆன உதவிகளைச் செய்து கொண்டு பொழுதை நெட்டித் தள்ளினாள்.

கணவனின் வருகைக்காக ஆவலுடன் காத்திருந்தாள். இரவு எட்டரை மணிக்கு சஹானாவை பார்வதி சாப்பிட அழைத்தார்.

''இல்லை அத்தை. அவர் வரட்டுமே. நான் அப்புறமா சாப்பிடுறேன்.''

''புது பிராஜெக்ட் ஒண்ணு தொடங்கி இருக்கான் மா. அதனால ஒரு வாரமா நேரங்கழிச்சு தான் வீட்டுக்கு வரான். நம்மை கரெக்ட் டைமுக்கு சாப்பிடச் சொல்லி இருக்கான். நாம வெயிட் பண்ணினால் கோபம் வரும். சாப்பிட்டதுக்கு அப்புறம் வெயிட் பண்ணு.''

''இல்ல அத்தை. இன்னும் கொஞ்ச நேரம்...'' என்று அவள் இழுக்க...

''தினமும் பதினொரு மணிக்கு வரான் மா. சாவியைக் கையோடு கொண்டு போயிடுறான். என்னை எழுப்புறதும் இல்லை. அவனே திறந்து உள்ளே வரான். அப்படித் தான் அன்னைக்கு மும்பை போயிட்டு காலையில வந்து இருக்கான். இவன் வந்தது கூட எனக்குத் தெரியாது.''

''மும்பை போனாரா அத்தை? எப்போ போனார்?''

''நீ ஊரில் இருந்து வருவதற்கு முதல் நாள் போனான் மா. நீ வரேன்னு சொல்லி நைட்டோடு நைட்டா கிளம்பி காலையில நாலரை மணிக்கு வந்து சேர்ந்து இருக்கான். கொஞ்ச நேரம் அசந்து தூங்கிட்டான் போல. எழுந்து உனக்கு போன் பண்ணினான். உன் போன் ஸ்விட்ச் ஆஃப்ன்னு வந்துச்சு. நீ அங்க இறங்கிட்டேன்னு முத்து

சொன்னதும் அவன் முகம் ப்யூஸ் போன பல்பா மாறிப் போச்சு. அப்புறம் நான் தான் அவ அவங்க அப்பா கூட மூணு நாள் இருந்துட்டு தான் வரட்டுமேன்னு சொன்னேன்'' என்று அன்று நடந்ததை விளக்கினார்.

''ஓ!'' என்று மட்டும் சொன்னாள்.

'மிதுன் கண்ணா என்னைப் பார்க்க ஓடி வந்தியாடா? நான் தான் சொதப்பிட்டேனா? இல்லை இல்லை... மாப்பிள்ளை இன்னும் மும்பையிலே தான் இருக்கார்ன்னு அப்பா தான் தப்பா புரிஞ்சுக்கிட்டு சொதப்பிட்டார்' என நினைத்துக் கொண்டாள்.

பார்வதியின் வற்புறுத்தலின் பேரில் சாப்பிட்டுவிட்டு அவரைத் தூங்கச் சொல்லிவிட்டு திரும்பவும் மாடிக்குச் சென்றாள்.

திவானில் அமர்ந்து கொண்டு கையில் ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தாள். கடந்த மூன்று நாட்களாக கணவன் தனக்கு போன் கூட செய்யவில்லை என்று மனதை குழப்பிக் கொண்டு தூக்கம் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தவள், அவனது நடவடிக்கைகளுக்கு காரணம் தெரிந்ததாலே இன்று மனம் அமைதி அடைய பதினொரு மணிக்கு உட்கார்ந்த நிலையிலேயே தூங்க ஆரம்பித்தாள்.

இரவு பதினொன்றரை மணிக்கு படுக்கையறைக்குள் நுழைந்த மித்ரன் சுவற்றில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்த நிலையிலேயே தூங்கும் மனைவியைக் கண்டு பெரிதாகப் புன்னகைத்தான்.

அவளருகே சென்று அந்தப் புத்தகத்தை அப்புறப்படுத்தினான். அவளை நேராகப் படுக்க வைத்து போர்த்தி விட்டான். பல நாட்களுக்குப் பின் மனைவியை



அருகில் இருந்து ஆசை தீரப் பார்த்து ரசித்தான். அவளது தலையை வருடிக் கொடுத்தவன் அவளது நெற்றியில் முத்தமிட்டு விட்டு அங்கிருந்த விளக்கை அணைத்து விட்டுத் தானும் தனது கட்டிலில் ஏறிப்படுத்தான்.

மறுநாள் காலையில் சஹானா தூங்கி எழுந்து பார்க்கும் பொழுது மித்ரன் ஆபிஸிற்குக் கிளம்பிவிட்டிருந்தான்.

''அதுக்குள்ளவா அத்தை ஆபிஸ் போயிட்டார்? ஏன் அத்தை என்னை எழுப்பி இருக்கலாம் தானே?''என்று சஹானா பார்வதியிடம் குறைபட்டாள்.

''நான் தான் நேத்தே சொன்னேன் இல்லமா... இந்த புது பிராஜெக்ட் ஆரம்பிச்சதில் இருந்து இப்படித் தான் பண்ணுறான் என்று. அவன் தான் நீ நல்லாத் தூங்கட்டும். எழுப்ப வேண்டாம் என்று சொன்னான்'' என்றவரிடம் ஒன்றும் சொல்லாது மேலே ஏறித் தங்கள் அறைக்குள் சென்றவள் குளித்துத் தயாராக ஆரம்பித்தாள்.

அப்பொழுது அவனது கட்டில் மேல் ஒரு செல்போன் இருந்தது. இது யார் போன்? கணவன் வைத்திருப்பது ஆப்பிள் ஐ போன். இதுவோ சாதாரண மாடல் நோக்கியா போன். அதனால் இது அவனது இல்லை என நினைத்தவளாய் அதை அவனது அலமாரியில் வைத்து மூடினாள்.

கீழே சாப்பிடச் சென்றவள் அப்படியே தோட்டத்தில் சென்று உலாத்தினாள்.

ஏன் என்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் சென்று விட்டார்? எழுப்பிப் போயிட்டு வரேன் என்றாவது சொல்லியிருக்கலாம் தானே? அப்படி என்ன கோபம்?

என் மனம் அவர்பால் சாய ஆரம்பித்துவிட்டது என்று சொல்லலாம் என நான் துடித்துக் கொண்டிருக்கிறேன். அவரோ என்னைக் கண்டு கொள்ளாமல் வெறுப்பேற்றிக் கொண்டிருக்கிறார்.

ஒருவேளை நானே சென்று பேசணும் என்று எதிர்பார்க்கிறாரோ? நேரில் முடியலை என்றாலும் போனிலாவது பேசணும் என ஆசைப்படுகிறாரோ?

ஆனால் இதுநாள் வரை அவர் தானே போன் அல்லது SMS பண்ணுவார். நான் எப்பவாது தானே பேசுவேன். ஒருவேளை இத்தனை நாள் நான் காலேஜில படிச்சுக்கிட்டு இருந்ததால் எனக்கு அந்த சலுகை தந்தாரோ? இனிமேல் நான் தான் முன்வந்து பேசணுமோ? என பலவாறு எண்ணிக் குழம்பினாள்.

சரி ஒரு போன் தான் செஞ்சு பேசுவோமே என நினைத்தவளாய் அவனின் எண்ணிற்கு அழைக்க ரிங் போய் கொண்டே இருந்தது. அவன் எடுக்கவில்லை.

எப்படி எடுப்பான்? அந்த போனை தான் அவன் வீட்டில் விட்டு விட்டுப் போய்விட்டானே! அதைத் தான் இவளும் மாடியில் அலமாரியில் வைத்துப் பூட்டிவிட்டாளே?

அவளுக்குத் தெரிந்தது கணவனின் ஒரு எண் மட்டுமே. அதாவது மித்ரன் மனைவிக்கென்று வைத்திருக்கும் பிரத்யேக எண்.

புத்தாண்டு அன்று கொடுத்த இன்னொரு எண்ணைத் தான் இவள் பதிந்து வைத்துக் கொள்ளவே இல்லையே! பத்து நிமிட இடைவெளியில் ஐந்து முறை அவளும் சளைக்காமல் கூப்பிட்டுப் பார்த்து ஏமாற்றம் அடைந்தாள்.



சரி ஏதாவது மீட்டிங்கில் இருப்பார் என்று அப்பொழுதும் தன் மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

சிறிது நேரத்தில் காவ்யா வந்தாள். இவள் தோட்டத்தில் இருப்பதால் அவளும் அங்கேயே வந்து அந்த கல்பெஞ்சில் அமர்ந்தாள்.

''நல்லா குளுகுளுன்னு சூப்பரா இருக்கு இல்ல இந்த தோட்டம்!'' என சிலாகித்தாள்.

''என்ன காவ்யா? நாளைக்கு நீ ஊருக்குப் போறதால பிசியா இருப்பே என்று நினைத்தேன். பார்த்தால் இங்க வந்து நிக்குற?'' என ஆச்சரியமாக சஹானா கேட்கவும் காவ்யா அவளை முறைத்தாள்.

''ஹேய்! நீ இங்க ஏன் வந்தே?'' என்ற அர்த்தத்தில் கேட்கலை என்று சஹானா பதறவும்,

''ஓ! உனக்கு அப்படி வேற என்னைப் பார்த்துக் கேட்கலாம்ன்னு ஐடியா இருக்கா? இது எங்க அண்ணன் வீடு. நான் எப்ப வேணா வருவேன். நான் மட்டும் ஊருக்குப் போகப் போறது போல சொல்லிக்கிட்டு இருக்க? என்ன விஷயம்?'' என்று கேட்டவுடன் சஹானா விழித்தாள்.

இன்னும் நான்கு நாட்களில் காவ்யாவின் அக்காவிற்குக் கல்யாணம். மதுரைக்கு அருகே உள்ள அவர்களது சொந்த ஊரில் வைத்துத் திருமணம் நடக்க இருப்பதால் அனைவரும் நாளை கிளம்புகிறார்கள். சஹானாவும் அந்தக் கல்யாணத்திற்கு வரச் சம்மதம் தெரிவித்து இருந்தாள்.

ஆனால் கணவனின் கோபம் எதனால் என்றே தெரியாத இன்றைய நிலையில் எப்படி போவது? அதுவும் ஒரு வாரம்!

''என்ன அண்ணன் வேண்டாம்னு சொன்னாரா? நீ பெர்மிஷன் கேட்கிறாயா? இல்லை நான் கேட்கட்டுமா?'' என்று காவ்யா கேட்டவுடன் மறுக்க முடியாதவளாய் மீண்டும் ஒருமுறை கணவனின் கைப்பேசிக்கு அழைத்தாள்.

'அவர் போனை எடுக்கவில்லை' என்று சொல்லப் பிடிக்காமல், ''லைன் கிடைக்க மாட்டேங்குது'' என்றாள்.

''சரி நான் போட்டுப் பார்க்கிறேன்'' என்று காவ்யா தன் செல்போனில் இருந்து மித்ரன் எல்லோருக்கும் கொடுத்திருக்கும் பொது எண்ணிற்கு முயற்சித்தாள்.

போனை எடுத்து மித்ரன், ''ஹலோ'' என்று கூறியவுடன்,

''அண்ணா, இப்போ நீங்க தான் நாட்டாமை. சரியா விசாரிச்சுத் தீர்ப்புச் சொல்லுங்க. இந்த சகி முதல்ல என் கூட எங்க அக்கா கல்யாணத்துக்கு வரேன் என்று சொன்னாள். இப்போ ரொம்ப பிகு பண்ணுறாள். நீங்களே அவகிட்ட பேசுங்க'' என்று சொல்லி போனை சஹானாவிடம் தந்தாள்.

அவர்கள் பேசுவதற்கு தனிமையை ஏற்படுத்திக் கொடுக்க விரும்பிய காவ்யா தோட்டத்திலிருந்து வீட்டை நோக்கிச் செல்லத் தொடங்கினாள்.

கணவன் தனது அழைப்பை எடுக்காமல் காவ்யாவோடதை எடுத்தான் என்று தெரிந்தவுடனே சஹானாவிற்கு கோபம் கொப்பளித்தது. அதனால் அவள் ஒன்றும் பேசாது அழைப்பைத் துண்டித்தாள்.

அவன் மீண்டும் காவ்யாவின் எண்ணிற்கு முயற்சி செய்ய அவள் அந்த அழைப்பை மீண்டும் துண்டித்தாள்.



மித்ரன் அதை ஆராய்ச்சி செய்யும் அளவிற்கு அவனுக்கு நேரம் இல்லை. சரி நைட் வீட்டுக்குப் போய் என்னவென்று கேட்டுக் கொள்ளலாம் என நினைத்து அதைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டான். ஏற்கனவே காவ்யா தன் அக்காவின் திருமணம் குறித்துக் கூறி இருந்தும் வேலைப் பளு காரணமாக அவன் அந்தத் தேதியை மறந்துவிட்டான்.

காலையில் ஆபிஸ் வந்தவுடன் தான் மித்ரனுக்கு தான் இன்னொரு போனை எடுத்து வரவில்லை என்ற விஷயம் தெரிந்தது.

இந்த ஐந்து மாதத்தில் ஒரு நாள் கூட அவன் அதை விட்டுச் சென்றதே இல்லை. எப்பொழுதுமே அவன் பாக்கெட்டிலேயே தான் இருக்கும்.

சரி தேவை என்றால் சஹானா இன்னொரு எண்ணிற்கு அழைத்துப் பேசுவாள் என்று அவன் நினைத்துக் கொண்டான். தான் இரண்டு எண் வைத்திருப்பதே மனைவிக்குத் தெரியாது என்ற விஷயம் அவனுக்குத் தெரிந்திருந்தாலாவது ஏதாவது செய்திருப்பான். அதற்கும் வழி இல்லாமல் போனது.

ஐந்து நிமிட இடைவேளைக்குப் பின் வீட்டுக்குள் நுழைந்த சஹானா, ''உன்னுடன் ஊருக்குப் போகச் சொல்லிவிட்டார்'' என்று காவ்யாவிடம் சொல்லி அவளுடனே கிளம்பித் தன் தாய் வீட்டிற்குச் சென்றுவிட்டாள்.

இன்று இரவாது சீக்கிரமே சென்று மனைவியிடம் பேச வேண்டும் என்று முனைப்போடு வேலையில் ஈடுபட்ட மித்ரன் இரவு எட்டரை மணிக்கு ஆசையோடு வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

வீட்டுக்குள் நுழையும் பொழுதே, ''எங்கேம்மா சஹானா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தான்.

''காவ்யா கூட ஊருக்குப் போகச் சொல்லி பெர்மிஷன் கொடுத்தியாமே. அவங்க வீட்டில் இருந்து வேன் நாளைக்குக் கிளம்புதாம். அதனால் அம்மா வீட்டில் இருந்தால் போவது ஈஸின்னு சொல்லிட்டு காவ்யா கூடவே கிளம்பிப் போய்விட்டாள்'' என்று பார்வதி சொன்னதும் தனக்கு ஏற்பட்ட வருத்தத்தையும், ஏமாற்றத்தையும் தாய் அறியாது மறைத்தான்.

சாப்பிட்டேன் என்று பேர் பண்ணிவிட்டு மேலே தனது அறைக்குச் சென்றவன், 'ஏன் சனா இப்படி பண்ணுற? என்கிட்ட நீ அனுமதி கேட்க வேண்டாம். அட்லீஸ்ட் தகவலாவது சொல்லணும் என்று தோன்றவில்லையா?' என நினைத்து மறுகினான்.

அலமாரியில் இருந்து தனது ரெண்டாவது போனை எடுக்கும் பொழுது அது கை தவறி கீழே விழுந்து அதிலிருந்து பேட்டரி தனியாகத் தெறித்து விழுந்தது.

அதை எடுத்து சரி பண்ணிப் போடும் பொழுது மனைவியின் ஞாபகத்தில் இருந்தவன் எதை எதையோ அழுத்தினான். அதனால் அதில் பதிவாகி இருந்த மிஸ்டு கால்களைப் பார்க்கத் தவறினான்.

சஹானா மித்ரனுக்குப் போன் செய்து பேசவில்லை. அவள் மீது இருந்த வருத்தத்தில் மித்ரனும் அவளைக் கூப்பிடவில்லை. ஒரு வாரம் வரையும் கூட மனைவி தன்னை அழைக்கவில்லை என்றதும் அந்த வருத்தம் கோபமாக உருவெடுத்தது.

அர்ஜுன் 1160 மதிப்பெண்கள் எடுத்திருப்பதாகச் சொல்லி மித்ரனுக்கு போன் செய்தான். மித்ரன் பரிசுப் பொருளோடு வந்து பார்த்து அவனை வாழ்த்திவிட்டுச் சென்றான். எந்தக் கல்லூரியைத் தேர்ந்தெடுக்கலாம் என்று அவர்கள் கலந்து ஆலோசித்தார்கள்.



காவ்யாவின் அக்கா கல்யாணத்துக்குச் சென்ற சஹானா சென்னை திரும்பும் முதல் நாள் வேலை விஷயமாக மித்ரன் சிங்கப்பூர் சென்றான். ஆனால் அதை சஹானாவிற்கும் தெரிவிக்கவில்லை. வரதராஜனுக்கும் தெரிவிக்கவில்லை.

சஹானா காலை ஆறு மணி வாக்கில் சென்னை வந்து சேர்ந்தாள். அவள் வந்து சேர்ந்த அன்று காலை பத்து மணிக்கு வரதராஜனின் வீட்டு எண்ணிற்கு மித்ரன் அழைத்தான்.

''மாமா மித்ரன் பேசுறேன். சஹானா பத்திரமா வந்துட்டாளா?'' என்று கேட்டான்.

''காலையிலே ஆறு மணிக்கு எல்லாம் வந்துட்டாள் மாப்பிள்ளை!'' எனச் சொன்னதும்,

''சரிங்க மாமா. பிசினஸ் லன்சுக்காக வந்தேன். வர வேண்டிய ஆளுங்க வந்துட்டாங்க. அப்புறமா பேசுறேன்'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தான்.

வரதராஜன் குழப்பத்தில் ஆழ்ந்தார். பத்து மணிக்கு லன்ச் சாப்பிடப் போகிறாரா? என்ன சொல்கிறார் என்று புரியலையே என நினைத்துக் கொண்டார்.

சிங்கப்பூரில் இருக்கும் மித்ரனுக்கோ அது மதியம் 12.30 மணி என்பது அவருக்கு எப்படித் தெரியும்!

அப்பொழுது காவ்யா யாருடனோ கைப்பேசியில் பேசிக் கொண்டே சஹானாவின் வீட்டிற்குள் நுழைந்தாள்.

''சரிங்க அண்ணா. எனக்கு சாக்லேட் மறக்காமல் வாங்கிட்டு வாங்க'' என்று சொல்லிக் கொண்டே அழைப்பைத் துண்டித்தாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த வரதராஜனிடம், ''மித்ரன் அண்ணா தான் பேசினார். கல்யாணம் நல்ல படியா நடந்துச்சான்னு விசாரிச்சார் அங்கிள்'' என்றாள்.

''ஓ! இப்ப தான் இங்க போன் பண்ணி வைச்சார். அது சரி எதுக்கு சாக்லேட் வாங்கிட்டு வரச் சொன்னாய்?'' என்று சந்தேகம் கேட்கவும்,

''சிங்கப்பூர் போயிருக்கார். பாரின் சாக்லேட் சாப்பிட லைன்னா எப்படி அங்கிள்?'' என்று காவ்யா கேட்டதும் அதுவரை அவர்களது பேச்சினைக் கவனித்துக் கொண்டிருந்த சஹானா அதிர்ந்தாள். சத்தமில்லாமல் தன் அறைக்குள் சென்று மறைந்தாள்.

'சிங்கப்பூரா?!!!! மிதுன், நான் காலேஜ் முடிச்சு வந்ததில் இருந்தே என்கூட சரியா பேச மாட்டேங்கு நீங்க. சொல்லாமல் மும்பை போறீங்க... நான் போன் பண்ணினால் எடுக்க மாட்டேங்குறீங்க.. ஆனால் காவ்யா பண்ணினால் எடுக்குறீங்க. அந்தக் கோபத்திலே நான் காவ்யா வீட்டு விசேஷத்துக்கு போனேன் என்று இப்போ நீங்க என்னிடம் சொல்லாமல் சிங்கப்பூர் போயிருக்கீங்களா? ஏன் மிதுன் என் மேல் அவ்வளவு கோபமா?' என்று சஹானா தனக்குள்ளேயே மறுகினாள்.

வரதராஜனும் குழம்பித் தான் போனார்.

''மாப்பிள்ளை சிங்கப்பூர் போயிருக்காரா? எனக்குத் தெரியாதே? ஒருவேளை சஹானாகிட்ட சொல்லிட்டுப் போனாரோ'' என்று காவ்யாவைப் பார்த்துச் சொன்னவர்,



''சஹானா'' என்று குரல் கொடுத்து அவளை வெளியே அழைத்தார்.

தன்னை நிலைப்படுத்திக் கொண்டு வெளியே வந்தவள், ''என்னப்பா? எதுக்குக் கூப்பிட்டீங்க?'' என்று தந்தையைப் பார்த்துக் கேட்டவள் தோழியைப் பார்த்து, ''என்னங்க மேடம் ரெஸ்ட் எடுக்காமல் ஊரைச் சுத்த வந்துட்டீங்க?'' என்று கேட்டாள்.

''நான் ஒண்ணும் ஊர் சுத்த வரலை. கல்யாணப் பலகாரம் கொடுத்துட்டு வரச் சொல்லி அம்மா அனுப்பினாங்க. இந்தா பிடி. ஆன்ட்டி எங்கே காணோம்?''

''அம்மா கோவிலுக்குப் போயிருக்காங்க'' என்று சஹானா காவ்யாவிடம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே,

''மாப்பிள்ளை சிங்கப்பூரா மா போயிருக்கார்?'' என்று வரதராஜன் மகளைப் பார்த்துக் கேட்டார். அவரது கேள்வியிலேயே உனக்குத் தெரியுமா என்ற கேள்வி தொக்கி நின்றது.

''ம்ம்ம் ஆமாம் பா. சிங்கப்பூர் தான் போயிருக்கார். நான் தான் சொல்ல மறந்துட்டேன்'' என்று சொல்லி அவரைச் சமாளித்தாள்.

காவ்யா சிறிது நேரத்தில் விடைபெற சஹானா பார்வதிக்குப் போன் செய்து, ''எப்படி அத்தை இருக்கீங்க?'' என்று விசாரித்தாள்.

''நான் நல்லா இருக்கேன் சஹானா? நீ எப்படி இருக்கே? நான் காலையிலேயே உனக்குப் போன் பண்ணலாம்ன்னு நினைச்சேன். மித்ரன் ஊருக்குப் போயிட்டதால அவன் திரும்பி வரும் வரைக்கும் என்னைக் கம்பெனிக்குப் போகச் சொல்லி இருக்கான். அதான்

வேலையிலே மறந்துட்டேன்''என்று பார்வதி சொன்ன வுடன்.

''பரவாயில்லை அத்தை. நீங்க வேலையைப் பாருங்க'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தாள்.

ரெண்டு பேருமே வீட்டில் இல்லை. அங்க போய் என்ன செய்வது? சரி அவர் வரும் வரைக்கும் இங்கேயே இருக்க வேண்டியது தான் என முடிவு செய்தாள்.

இத்தனை நாளாக கையில் அவனது எண் இருந்தது. ஆனாலும் ஒரு கோபத்தில் அவனுக்கு பேசவில்லை. இப்போ கோபம் மறைந்து அந்த இடத்தில் வருத்தம் மட்டுமே இருக்கு. ஆனால் அவனது சிங்கப்பூர் எண் தெரியவில்லை. தன் நிலையை எண்ணி மனம் நொந் தாள்.

அவனது பிரிவு அவளை ரொம்பவே வாட வைத்தது. அதிலும் அவன் பேசாமலே இருந்தது வேறு அவளது வேதனையை அதிகரிக்கச் செய்தது.

அந்த சமயத்தில் தான் அமிர்தம் பாத்ரூமில் வழுக்கி விழுந்தார். வலது கையில் நல்ல அடிபட்டிருந்தது. காலி லும் சுளுக்கு இருந்தது. அவரை உடனடியாக மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றார்கள். நல்ல வேளை ஆபரேஷன் செய்யத் தேவையில்லை என்று கூறிவிட் டார்கள்.

ஆனால் மாவு கட்டு போட்டு நன்றாக ஓய்வு எடுக்கும் படி சொன்னார்கள். சஹானாவும் அர்ஜுனும் தான் திண்டாடிப் போனார்கள். வரதராஜன் மகளது திருமணம், தனது ஆபரேஷன் என்று ஏற்கனவே தேவைக்கு அதிகமாய் விடுமுறை எடுத்திருந்ததால் அவர் அமிர்தம் மருத்துவமனையில் இருந்த இரண்டு நாட்கள் மட்டுமே



விடுமுறை எடுத்தார். அதன் பின் அவர் அலுவலகம் செல்ல ஆரம்பித்தார்.

மேலும் அர்ஜுனை கல்லூரியில் சேர்ப்பதற்காக வேறு விடுமுறை எடுக்க வேண்டிய தேவை இருந்த தால் அனைவரும் அவரை வற்புறுத்தி அலுவலகம் அனுப்பி வைத்தார்கள்.

பார்வதி வந்து நலன் விசாரித்தார். வீட்டு வேலை செய்வதற்கு மகாதேவனின் மனைவி மூலம் ஆள் ஏற்பாடு செய்துவிட்டுச் சென்றார். அவருக்குமே கம்பெனி வேலை இருந்ததால் அவரால் அதிக நேரம் வந்து கவ னித்துக் கொள்ள முடியவில்லை.

மித்ரன் இருந்திருந்தால் இன்னும் நன்றாக இருக்கும் என்று சஹானாவிற்கு அவனை ரொம்பவே தேடியது.

அவன் அவ்வப்போது வரதராஜனுக்கு அழைத்து அமிர்தத்தின் உடல் நலத்தினை விசாரித்துக் கொண்டு தான் இருந்தான்.

சஹானா தன் தாய் சொல்லச் சொல்ல சமையல் என்ற பெயரில் எதையோ செய்து கொண்டிருந்தாள். அர் ஜுனும் தன்னால் முடிந்த உதவியைச் செய்து கொடுத் தான். வீட்டுத் தலைவி படுத்துவிட்டால் அது எவ்வளவு தலைவலியைக் கொடுக்கும் என்பதை அனுபவத்தில் சஹானா தெரிந்து கொண்டாள்.

அமிர்தம் விழுந்து பத்து நாட்கள் கழித்து அவரை செக்-அப்பிற்காக அர்ஜுனும் வரதராஜனும் அழைத்துச் சென்றிருந்தார்கள். சஹானா தலைக்குக் குளித்துவிட்டு பதினொரு மணி அளவில் காலைச் சாப்பாட்டை தட்டில் வைத்துக் கொண்டு எதிரே உள்ள சுவற்றை வெறித்த வண்ணம் அமர்ந்திருந்தாள்.

வீட்டின் மரக்கதவு திறந்து இருந்தது. கிரில் கேட் மட்டும் பூட்டி இருந்தது.

அந்த சமயம் தான் தனது அத்தையைப் பார்க்க நாடு திரும்பி இருந்த மித்ரன் வந்தான்.

வாசலுக்கு நேராக தான் அவள் உட்கார்ந்திருந்தாள். வெகு நாட்களுக்குப் பின் மனைவியைப் பார்த்தவன் பார்த்துக் கொண்டே இருந்தான். அவளைக் கூப்பிடவோ அழைப்பு மணியை அழுத்தவோ முயலவில்லை.

அவளைப் பார்க்கப் பார்க்க அவனது கோபம் எல்லாம் வடிந்து மனைவியை இழுத்து அணைக்க வேண்டும் என்ற தாபமே மேலோங்கி இருந்தது.

முதலில் கண்ணில் படாத அவளது மெலிவும், சோர்வும் பின்பே அவன் கண்ணில்பட, 'என்ன இவள் இப்படி இருக்கிறாள்? அத்தையைக் கவனிக்கிறேன் என்று தன்னைக் கவனிக்காமல் விட்டுவிட்டாளா?' எனக் கவலைப்பட்டவன் தனது காதலை எல்லாம் தனது குரலில் தேக்கி, ''சனா...'' என்று அழைத்தான்.

உணர்ச்சி வசப்பட்டு இருந்ததால் அவனது குரல் சரியாக வெளி வரவில்லை. ஆனால் அந்த சின்ன சத்தத்திற்கு சஹானா உடனே திரும்பினாள். சத்தமா அது?? அமுத கானம் அல்லவா?!

சடாரென்று திரும்பியவள் கணவனைக் கண்டதும் முகம் பிரகாசமுற, ''வந்துட்டீங்களா?'' என்றவாறே ஓடி வந்தாள்.

அவளது ஆனந்தத்தைக் கண்டு அவனது அகமும், முகமும் ஒருங்கே மலர்ந்தது!

''ம்ம்ம்... கேட்டைத் திற'' என்று சொன்ன பிறகே ஓடிச் சென்று கை கழுவி விட்டு வந்து கேட்டைத் திறந்து விட்டாள்.



அவன் உள்ளே சென்று கையில் வைத்திருந்த கவரை சோபாவில் வைத்தவன், ''வீட்டிலே யாரும் இல்லையா?'' என்று கேட்டான்.

''இல்லை ஆஸ்பிட்டல் போயிருக்காங்க'' என்று சொல்லிக் கொண்டே கேட்டையும், கதவையும் பூட்டியவள் திரும்பி வந்து கணவனை அணைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

மித்ரன் இதை எதிர்பார்க்காததால் திகைத்தும், திணறியும் போனான்.

மார்பில் புதைந்திருந்தவளின் முகத்தை நிமிர்த்த முயற்சித்துக் கொண்டே, ''என்னாச்சு சனா? அத்தைக்கு ரொம்ப முடியலையா?'' என்று கேள்வி எழுப்பினான்.

முகத்தை நிமிர்த்தாமலே தலை அசைத்து மறுத்தாள்.

''அப்ப மாமா ஏதாச்சும் திட்டினாரா?''

இல்லை எனும் விதமாக இப்பவும் தலையை இடவலமாக ஆட்டினாள்.

பள்ளியில் உடன் பயிலும் மாணவர்களோடு சண்டை போட்டுவிட்டு வீட்டிற்கு வந்து தாயைப் பார்த்ததும் அழும் குழந்தையைப் போல தம்பியிடம் ஏதாவது சண்டை போட்டுவிட்டு என்னைப் பார்த்ததும் அழுகிறாளோ என்று எண்ணியவனாய்,

''அர்ஜுன் கூட சண்டை போட்டியா?'' என்று கேட்டுப் பார்த்தான்.

''இல்லை'' என்று வாய் திறந்து பதிலளித்தாள்.

நமக்குத் தெரிந்த எல்லா கேள்வியும் கேட்டாச்சே? இன்னும் என்ன பாக்கி இருக்கு என நினைத்தவனுக்கு பளிச்சென்று ஒரு எண்ணம் உதயமானது. ஒருவேளை

அப்படி இருக்குமோ? கேட்டுப் பார்க்கலாமா, வேண்டாமா என்ற மனப் போராட்டத்திற்குப் பின் மெதுவாக,

''டூ யூ மிஸ் மீ சனா?'' என்று ஒரு வித எதிர்பார்ப் போடு கேட்டு நிறுத்த...

ஆமாம் என்று வார்த்தையால் சொல்லாமல் தனது இறுகிய அணைப்பினால் தெரிவித்தாள்.

அதுவரை அவளை ஆறுதல் படுத்தும் விதமாக அவளது தலையை வருடிக் கொடுத்துக் கொண்டிருந் தவன் அதனைக் கைவிட்டுவிட்டு அவளை இறுக்கி அணைத்தான். அவனது அணைப்பு மேலும் மேலும் இறுகிக் கொண்டே போனது.

அவனுக்கு அடுத்த கேள்வியாக 'டூ யூ லவ் மி?' என்று கேட்க வேண்டும் என்று ஆவலாக இருந்தது. ஆனால் இரு வேறு காரணங்களுக்காகக் கேட்காமல் தவிர்த் தான். எதிர்பார்த்த பதில் கிடைக்கவில்லை என்றால் அந்த ஏமாற்றத்தைத் தன்னால் தாங்கிக் கொள்ள முடியாது என்று தோன்றியது.

ஒருவேளை அவள் 'ஆமாம் நான் உங்களைக் காதலிக்கிறேன்!' என்று சொல்லிவிட்டால் தன்னால் அவளை இங்கேயே விட்டு வைக்க முடியாது என்று தோன்றியது. அதே சமயம் நான் கோப முகம் காட்டிய போதே என்னுடைய பிரிவு இவளை இந்த அளவிற்கு வருந்தச் செய்கிறது என்றால் காதலைப் பகிர்ந்த பின்... 'நான் அலுவலகத்தில் புது பிராஜெக்ட் விஷயமாக ரொம்ப பிஸியா இருக்கேன். எப்போ தூங்க வருவேன் என்றே தெரியாது' என்று சொன்னால் அதை அவளால் தாங்க முடியுமா? என்றும் எண்ணினான்.



சரி அவளாக வந்து சொல்லும் வரைக் காத்திருப் போம். இல்லாவிட்டால் பிராஜெக்ட் வேலை முடியும் அன்று நாமே கேட்டுவிடலாம் என நினைத்தான்.

அவளது கூந்தலில் முகம் புதைத்தவன் அப்பொழுது தான் அவளது கூந்தலின் ஈரம் உணர்ந்தான்.

மனமே இல்லாமல் அவளிடம் இருந்து விலகியவன், ''சனா தலையை காய வை. ஜுரம் வந்திடப் போகுது. அதுக்கு முன்னாடி சாப்பிடு. இது காலைச் சாப்பாடு சாப்பிடும் நேரமா சனா? உன் உடம்பை பத்திரமா பார்த் துக்க மாட்டியா?'' என்று கடிந்தவாறே அவளை டைனிங் டேபிள் அருகே அழைத்துச் சென்றான்.

அவளை சாப்பாட்டின் முன் அமர வைத்தவன், ''சாப்பிடு... நாளையில் இருந்து அம்மாவை வரச் சொல்றேன். எனக்கு இந்த பிராஜெக்ட் வேலை ஜூலை முதல் வாரம் வரை தொடரும். அதனால என்னால உன்னை அடிக்கடி வந்து பார்க்க முடியாது. அத்தையைக் கவனிச்சுக்குற அதே நேரம் உன்னையும் கவனிச்சுக்கோ'' என்று சொல்லிக் கொண்டு இருக்க... அவள் கணவனது முகத்தை ஆசை தீரப் பார்த்துக் கொண்டே தட்டிலிருந்த மீதிச் சாப்பாட்டை சாப்பிட ஆரம்பித்தாள்.

அப்பொழுது அவனது கைப்பேசிக்கு ஒரு அழைப்பு வர, மித்ரன் எழுந்து போய் சோபாவில் உட்கார்ந்து பேச ஆரம்பித்தான்.

சாப்பிட்டு முடித்து வந்த சஹானா தரையில் அவனருகே அமர்ந்து அவனது மடி மீது தன் தலையைச் சாய்த்தாள். அவன் அவளது கூந்தலுக்குள் தனது கை விட்டு அளைந்தான். பட்டின் மென்மையாக இருந்த கூந்தலில் இருந்து கையை எடுக்க மனமில்லாமல்

அவனது கை அங்கேயே நிலைத்தது. அவளது கூந்தலுக்குள் தனது கையை அளைய விட்டாறே தனது பேச்சினைத் தொடர்ந்தான்.

கணவன் தன்னிடம் நேரில் கோபப்படுவனோ என்று நினைத்து வருந்திக் கொண்டிருந்தவள் அவன் தன்னிடம் முகம் திருப்பாமல் சகஜமாகப் பேசவும் நிம்மதி அடைந்தாள். அவனது இறுக்கமான அணைப்பும் அவளது மனக்காயத்தை முற்றிலுமாகப் போக்க அவள் எல்லையில்லா ஆனந்தம் அடைந்தாள்.

தாயின் உடல் சுகவீனத்தால் பழக்கமற்று செய்யும் வேலைகள், கணவனை நினைத்துப் பல நாள் தூங்காதது, தற்போது அவன் தலை கோதுவதால் உண்டான சுகம் என அனைத்தும் சேர்ந்து கொள்ள அவன் மடி மீது தலை சாய்ந்திருந்தவள் அப்படியே கண் அயர்ந்தாள்.

பத்து நிமிடங்களுக்கு மேலாக நீடித்த உரையாடலுக்குப் பின் மனைவியைக் குனிந்து பார்த்தவன் அவள் தூங்கியதைக் கண்டவுடன், 'இவள் சரியாகத் தூங்கவும் இல்லையா? என்ன தான் செய்கிறாள்? பேசாமல் நம்ம வீட்டுக்கே கூட்டிக் கொண்டு போய்விடலாமா?' என ஒரு நொடி நினைத்தான்.

பின் அத்தைக்கு எப்படியும் ஒரு பெண் துணை தேவைப்படுமே என நினைத்தவன் அந்த நினைப்பைக் கைவிட்டான்.

அயர்ந்து தூங்கும் அவளை எழுப்பவும் மனசில்லாமல்... அதே சமயம் அலுவலகம் செல்ல வேண்டிய கடமையும் இருப்பதால் வேறு வழியின்றி அவளை உலுக்கி எழுப்பினான்.

''சாரி தூங்கிட்டேனா?'' என்று பதறி அவள் எழ,



''அதனால ஒண்ணும் இல்லை. நைட்டிலே சரியாத் தூங்குறதில்லையா? நல்லா தூங்கணும் சனா. நான் ஆபிஸ் கிளம்புறேன். இந்தக் கவரில் சிங்கப்பூரில் இருந்து சில திங்க்ஸ் வாங்கிட்டு வந்தேன். நீயே பார்த்து எல்லோருக்கும் கொடு'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே மருத்துவமனை சென்றவர்கள் திரும்ப, அமிர்தத்திடம் சிறிது நேரம் பேசிவிட்டுக் கிளம்பினான்.

## 17

மறுநாளில் இருந்து பார்வதி தினமும் சஹானா வீட்டிற்கு வந்தார். குறைந்தது இரண்டு மணி நேரங்களாவது மருமகளுடன் செலவழித்தார். அவர் வரும் போதே மதிய சாப்பாட்டிற்கான காய், குழம்பு எல்லாவற்றையும் வேலையாட்கள் மூலம் செய்ய வைத்து எடுத்து வந்துவிடுவார். அதனால் சஹானாவிற்கு வேலைகள் ரொம்பவே குறைந்தது.

மித்ரன் தன்னால் முடிந்த பொழுதெல்லாம் ஐந்து நிமிடங்களாவது வந்து எட்டிப் பார்த்து விட்டுச் சென்றான். அதனால் மனதிலும் உற்சாகத்துடனே சஹானா வளைய வந்தாள்.

அவளை வேலையில் சேரச் சொல்லி அவளை வேலைக்கு எடுத்திருந்த கம்பெனியில் இருந்து இ-மெயில் வந்திருந்து. ஜூன் மாதக் கடைசியில் வந்து சேருமாறு தகவல் வந்திருந்தது.

அதைச் சந்தோஷமாக பெற்றோரிடம் பகிர்ந்தாள்.

''அப்பா நான் தான் அர்ஜுன் கிட்ட விஷயத்தைச் சொல்வேன். நீங்க யாரும் சொல்லக் கூடாது'' என்று ஆர்ப்பரித்தாள்.

அதன்படியே அவளே தம்பியிடம் தகவல் தெரிவித்தாள். பார்வதிக்கும் மறக்காமல் போன் செய்து விஷயத்தைப் பகிர்ந்தாள்.

வரதராஜன் தன் மாப்பிள்ளையைத் தனியாகச் சந்தித்துப் பேச விரும்பினார். எப்போ வந்து சந்தித்தால் அவருக்கு வசதிப்படும் என்று கேட்க எண்ணி அதற்காக மித்ரனின் கைப்பேசிக்கு வீட்டு எண்ணில் இருந்து மனைவியை அழைக்கச் சொன்னார்.

அமிர்தம், ''எனக்கு நம்பர் மனப்பாடமாகத் தெரியாதுங்க'' என்று சொல்லி கார்டுலஸ் போனைத் தன் இடது கையால் நீட்ட,

''நான் சொல்லுறேன், நீ டயல் பண்ணு'' என்று சொன்னவர்,

''94....'' என்று தொடங்க...

அருகே இருந்து கேட்டுக் கொண்டிருந்த சஹானா, ''என்னப்பா சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஒரு நம்பர் சொல்லுறீங்க'' என்றாள்.

''என்னம்மா சொல்லுற? நான் கரெக்ட்டா தானே ஆரம்பிச்சேன்'' என்று கேட்கவும்,

''அவர் நம்பர் 72... என்று தானே பா ஆரம்பிக்கும்'' என்றாள்.

அப்பொழுது அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டே அங்கு வந்த அர்ஜுன், ''அப்பா சரியா தான்



சொல்லுகிறார். நீ தான் வேலைக்குப் போகப் போகிற குஷியில என்னமோ உளறிக்கிட்டு இருக்கிறாய்'' என்று தந்தைக்கு ஆதரவு தெரிவித்தான்.

''நான் ஒன்னும் உளறலை. நீங்க போய் உங்க செல்போனை எடுத்துச் சரி பாருங்க'' என்று சொன்னதும், உள்ளறையிலிருந்து தனது கைப்பேசியை வரதராஜன் எடுத்து வந்து காட்டினார்.

அவள் குழம்பிப் போய் விழித்தாள். அப்போது காவ்யா அவர்கள் வீட்டிற்குள் நுழைய விஷயம் அவளிடமும் தெரிவிக்கப்பட்டது. காவ்யா அவளது கைப்பேசியில் இருந்து பார்த்துவிட்டு வரதராஜன் சொல்வதுதான் சரி என்று சொல்ல சஹானா குழப்பத்தின் உச்சிக்கே சென்றாள்.

சரி கைப்பேசியைத் தான் கையில் எடுத்தாச்சே என்று நினைத்த வரதராஜன் அதிலிருந்தே மித்ரனின் எண்ணிற்கு அழைக்க ''நீங்கள் அழைக்கும் எண் ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டுள்ளது' என்று வந்தது.

அப்பொழுது தனது படுக்கையறையில் இருந்து தனது கைப்பேசியை எடுத்து வந்த சஹானா, ''நான் சொல்லுற நம்பர் தான் சரி. நான் இப்போ அந்த நம்பருக்கு போன் போடுறேன் பாருங்க'' என்று மித்ரன் மனைவிக்கென்று வைத்திருந்த பிரத்யேக எண்ணிற்கு அழைத்தாள்.

நான்காவது ரிங்கிலேயே அவன் போன் எடுக்கவும், ''ஒரு நிமிஷம் அப்பா உங்ககிட்டே ஏதோ கேட்கனுமாம்'' என்று சொல்லித் தனது கைப்பேசியை அவள் வரதராஜனிடம் நீட்ட... அவர் அதை வாங்கி காதில் வைத்து, ''மாப்பிள்ளை...'' என்று சொன்னவுடன்,

''மாமா, நான் முக்கியமான மீட்டிங்கிலே இருக்கேன். உங்களைக் கொஞ்ச நேரம் கழிச்சு நானே கூப்பிடுறேன், சரி மாமா'' என்று சொல்லி அவரது பதிலுக்காகக் கூட காத்திருக்காமல் அழைப்பைத் துண்டித்தான்.

வரதாராஜன் எதுவும் பேசாது சஹானாவிடம் கைப் பேசியை நீட்டவும், ''என்னப்பா ஒண்ணும் பேசலையா?'' என்று கேட்டவுடன் மித்ரன் சொன்னதைச் சொன்னார்.

''ஓ!'' என்று மட்டும் சஹானா சொன்னாள்.

அப்பொழுது காவ்யா, ''இதிலிருந்து என்ன தெரியுது?'' என்று சஹானாவிடம் கேட்கவும்,

''ம்ம்... அவர் மீட்டிங்கில் இருக்கார்ன்னு தெரியுது. பச்சைப் புள்ளைக்குக் கூடத் தெரியும். நீ என்னமோ பெருசா கண்டுபிடிச்ச ரேஞ்சுக்கு பில்ட்-அப் கொடுக்கிறாய்?'' என்றதும் காவ்யா தலையில் அடித்துக் கொண்டாள்.

''பச்சைப்புள்ளையாவே இருக்கியே சகி? உன்னை எங்கண்ணன் எப்படி தான் ஆயுசுக்கும் சமாளிக்கப் போறாரோ?'' என்றதும்,

''ஐயடா! இவளும் இவ அண்ணனும் அறிவு ஜீவிகள். நான் மட்டும் முட்டாள். விஷயத்தைச் சொல்லுன்னு சொன்னால்... என்ன என்னமோ கதை அளக்கிறாள்.''

''நாங்க எல்லோரும் வைச்சிருக்க அண்ணனோட செல் நம்பர் ஸ்விட்ச் ஆஃபில் இருக்கு. எங்க யாரிடமும் இல்லாத புது நம்பர் உன்னிடம் மட்டுமே இருக்கு. அந்த எண்ணிற்குப் போன் பண்ணினால் மீட்டிங் நடுவிலும் போனை எடுத்து பதில் சொல்லுகிறார். இப்பவாச்சும் உனக்கு விஷயம் புரியுதா?'' என்று காவ்யா கேட்டு நிறுத்த...



சஹானாவிற்கு அப்பொழுது தான் அந்த விஷயம் புரிய வந்தது. ஆச்சரியமும், இன்ப அதிர்ச்சியும் ஒருங்கே நேர்ந்தது!

அதன் பின்பு காவ்யா பத்து நிமிடங்கள் என்ன பேசினாள் என்று கேட்டால் தெரியாது என்று சொல்லும் அளவில் தான் அவளுடன் சஹானா அமர்ந்திருந்தாள்.

அவள் சென்றவுடன் தனது அறைக்குள் விரைந்தவள் ஏதோ எண்ணம் தோன்ற மித்ரன் தனக்கு புத்தாண்டு அன்று அனுப்பி வைத்த எஸ்.எம்.எஸ். இருக்கிறதா என்று சரி பார்க்க ஆரம்பித்தாள்.

நல்ல வேளையாக அது அழிக்கப்படாமல் இருந்தது.

அது தந்தை சற்று முன் கூறிய எண்ணிலிருந்து வந்து இருந்தது. அப்போ அன்று ரயில் நிலையத்தில் இந்த எண்ணைப் பதிவு செய்து கொள் என்று அவர் கொடுத்தது தான் இந்த எனக்கே எனக்கான இரண்டாவது எண்ணா? அந்த நோக்கியா போன் அன்று வீட்டில் விட்டு விட்டுப் போயிருந்தாரே அது தான் அந்த போனோ?

'மட்டி மடச்சி... வீட்டிலே இருக்குற போனுக்கு அழைத்துப் பார்த்துவிட்டு அவர் எடுக்கலை என்று அவருடன் கோபித்துக் கொண்டு ஒன்றுமே பேசாமல் காவ்யா வீட்டுக் கல்யாணத்துக்கு போன என்னை... என்ன செஞ்சால் தகும்? அவர் சிங்கப்பூருக்குச் சொல்லாமல் போனதில் தப்பே இல்லை.

இந்த லட்சணத்துல அவர் திரும்பி வந்த அன்னைக்கு நாம பெருந்தன்மையா அவரை மன்னிச்சுடலாம்ன்னு வேற நினைச்சேன். எப்படித் தான் என்னைப் பொறுத்துக்கிறாரோ?

மிதுன் உன்னைப் பார்த்தா எனக்கே பாவமா தான்டா இருக்கு!' என்று மனதுக்குள் கொஞ்சிக் கொண்டாள்.

வரதராஜன் குழம்பித் தவித்தார். தன் கணவன் தனக்கென்று தனி எண் வைத்திருக்கிறார் என்ற விஷயம் கூட இவளுக்குத் தெரியவில்லை என்றால் இவர்களுக்குள் எதுவோ சரி இல்லையோ?

அவர் மித்ரனிடம் சஹானா வேலைக்குச் செல்வதில் அவனுக்கு ஆட்சேபனை ஏதும் இருக்கிறதா என்று கேட்கத் தான் ஆபிஸ் சென்று தனியாகச் சந்தித்துப் பேச முடிவு பண்ணி இருந்தார். இப்பொழுது இந்த விஷயத்தையும் மாப்பிள்ளையிடம் கேட்டுத் தெளிவுபடுத்த வேண்டுமோ என யோசிக்க ஆரம்பித்தார்.

சொன்னபடியே மித்ரன் சிறிது நேரத்தில் போனில் அழைத்துப் பேசினான். அதன்படி மாலையில் அவர் மித்ரனைச் சந்திக்கச் சென்றார்.

அவர் உள்ளே நுழைந்ததுமே அலுவலகத்தில் உள்ளவர்கள் அவரை மரியாதையாக அழைத்துச் சென்று மித்ரனின் அறைக்குள் விட்டனர்.

''வாங்க மாமா. உட்காருங்க!'' என்று இருக்கையைக் காட்டினான். அவருக்கென்று பழச்சாறு வந்தது.

''குடிங்க மாமா!'' என்று உபசரித்தவன் அவர் அதைப் பருகி முடிக்கும் வரை எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. அவரே தொடங்கட்டும் என்று அவன் காத்திருக்க... எப்படி தொடங்குவது என்று அவர் தயங்கினார்.

அவரது தயக்கம் புரிந்தவனாய், ''எதுவா இருந்தாலும் சும்மா கேளுங்க மாமா'' என்று சொன்னான்.

அவன் கொடுத்த ஊக்கத்தில், ''சஹானா வேலைக்குப் போகுறதிலே உங்களுக்கு விருப்பமா இல்லையான்னு கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்ன்னு வந்தேன்'' என்றார்.



'இதை மட்டும் உங்க மகள் கேட்டால் அவ்வளவு தான். அவளோட கடிச்ச மாம்பழ லோகோ என்ன ஆகுறது? சனா உங்க அப்பா உனக்கு ஆப்பு வைக்க நினைக்கிறார்' என மனதுக்குள் நினைத்தவன் வரதராஜனைப் பார்த்து,

''அவ தாராளமா வேலைக்குப் போகட்டும் மாமா. அவ வெளி உலகம் என்றால் என்னவென்று தெரிஞ்சுக்கணும் மாமா. இல்லைன்னா உங்களை மாதிரி நானும் என் வைஃபுக்கு உலக ஞானமே தெரியாதுன்னு கையைப் பிசைஞ்சுகிட்டு நிக்கணும். அப்படி ஒரு நிலையிலே என் வைஃபை நான் நிறுத்த மாட்டேன்.''

அவர் ஒன்றும் சொல்லாது அவனையே பார்த்திருக்க அவன் தனது பேச்சினைத் தொடர்ந்தான்.

''நீங்க செஞ்ச அதே தப்பை நான் செய்ய மாட்டேன் மாமா. நீங்கன்னு இல்லை... நாட்டிலே பாதி ஆம்பிளைங்க இந்தத் தப்பைத் தான் செய்யுறாங்க. தனக்கு என்ன கடன் இருக்கு, எந்தெந்த பாங்கிலே கணக்கு இருக்கு, என்னவெல்லாம் இன்சூரன்ஸ் போடப்பட்டு இருக்கு... இப்படி அடிப்படைத் தகவல்களைக் கூட மனைவியிடம் தெரிவிக்காமல் 'தான்' தான் மொத்தக் குடும்பத்தையும் தாங்கணும் என்று நினைக்குறாங்க.

நான் தெரியாமல் தான் கேட்குறேன். அன்னைக்கு எந்த தைரியத்திலே நீங்க என்னை உங்க பொண்ணுக்கு மாப்பிள்ளையா தேர்ந்தெடுத்தீங்க? மகாதேவன் அங்கிள் சொன்னதை வைச்சா? அவருக்குக் கூடத் தெரியாமல் எனக்கு இன்னொரு முகம் இருக்கலாமே? உங்களை நம்பி உங்க பொண்ணு தன்னுடைய வருங்காலக்

கணவனைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை ஒப்படைத் தான். ஆனால் நீங்க அதைச் சரியாச் செஞ்சீங்களா மாமா? அவசரம் போகுதுன்னு மாப்பிள்ளையைத் தேடிப் பிடிச்சு முடிச்சுட்டீங்க. ஏதோ உங்க நல்ல நேரம் நான் நல்லவனா இருக்கப் போய் தப்பிச்சிட்டீங்க. என்ன மாமா என்னை நல்லவன்னு நான் சொல்லிக்கலாமா?'' என்று கேட்டான்.

ஒரு தீவிரத்துடன் தனது பேச்சினைக் கேட்டுக் கொண்டிருக்கும் தன் மாமனாரை இலகுவாக்கவே அவன் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டான். அது மிகச் சரியாகவே வேலை செய்தது.

புன்னகைத்துக் கொண்டே, ''நீங்க நல்லவர் மட்டும் இல்ல மாப்பிள்ளை. தகப்பனுக்குப் பாடம் சொன்ன என் முருகன் நீங்க! நீங்க சொல்ல வந்ததை நிறுத்தாதீங்க மாப்பிள்ளை. சொல்லி முடிங்க'' என்று அவர் சொன்னதும் அவன் மீண்டும் தொடர்ந்தான்.

''நாளைக்கு என குடும்பம் உட்கார்ந்து சாப்பிடும் அளவுக்கு எனக்குச் சொத்து இருக்கு மாமா. ஆனால் அதைக் கட்டிக் காக்குற திறமை என் வைஃபுக்கு வரனும். இப்ப எங்க அம்மாவையே எடுத்துக்கோங்க... நான் சிங்கப்பூர் போயிருந்த போது அவங்க தான் கம்பெனியை வந்து பார்த்துக்கிட்டாங்க. எங்க அப்பா அப்படி டிரைனிங் கொடுத்து வைச்சிருக்கார். அவர் இறந்த போது கூட கம்பெனியை என்னால தனியா கவனிச்சுக்க முடியும்ங்கிற நம்பிக்கை வரும் வரைக்கும் எங்கம்மா தான் உனக்கு உறுதுணையா இருந்தாங்க. அதனால சஹானா கண்டிப்பா வேலைக்குப் போகட்டும் மாமா'' என்று சொன்னவுடன்,



''நீங்க சொல்லுறது சரி மாப்பிள்ளை. ஆனால் உங்க கம்பெனியே இவ்வளவு பெருசா இருக்கும்போது அவ இன்னொருத்தருக்கு கீழே வேலை பார்ப்பது உங்களுக்கு கௌரவ...'' என்று தான் சொல்ல வந்ததைப் பாதியிலே அவர் நிறுத்த...

''இதுல கௌரவ குறைச்சல் என்ன மாமா இருக்கு? அவ இங்க வந்தால் அவளால எதையுமே கத்துக்க முடியாது. ஒரு நல்ல தொழிலாளியால தான் நல்ல முதலாளியா இருக்க முடியும் என்று எங்கப்பா சொல்லுவார். காலேஜ் முடிச்சதும் நான் ரெண்டு வருஷம் வெளியே போய் வேலைப் பார்த்துட்டு வந்த பிறகு தான் என்னை எங்கப்பா இந்தக் கம்பெனியிலே நுழைய விட்டார். அதனால அவ வெளியவே போய் வேலை செய்யட்டும். ரெண்டு வருஷ ஒப்பந்தம் முடிஞ்ச பின்னால் கூட அவ எங்கே வேலை பார்க்கணும் அப்படின்னு அவதான் முடிவு எடுக்கணும்'' என்று முடித்துக் கொண்டான்.

இவ்வளவு தீர்க்கமா, தீர்மானமாகப் பேசுபவரிடம் போய், 'உங்களுக்கும் என் பொண்ணுக்கும் இடையில் ஏதாவது பிரச்சனையா?'' என்று எப்படிக் கேட்பது என்று தயங்கினார். ஆனால் ஒரு பெண்ணைப் பெற்ற தகப்பனாகக் கேட்காமல் இருக்கவும் முடியாமல் ஒரு தயக்கத்துடனே மருமகனின் முகம் பார்க்க,

''என்ன மாமா இன்னும் ஏதாச்சும் கேட்கணுமா? எதுக்கு இத்தனை தயக்கம்? உங்க வயசுக்கு நீங்க என்கிட்ட தயங்கி நிக்கக்கூடாது மாமா. சும்மா கேளுங்க'' என்றதும்,

''வந்து உங்களுக்கும்... வந்து சஹானாக்கும்... என் பொண்ணுக்கு நான் ஏதாவது அட்வைஸ் பண்ணணுமா

மாப்பிள்ளை?'' என்று சுற்றி வளைத்துக் கேட்டு முடித்தார்.

அவர் தன்னிடம் என்ன கேட்க நினைக்கிறார் என்று புரிந்து கொண்டவன் 'ஹா ஹா' என்று சிரித்துக் கொண்டே, ''உங்க பொண்ணுக்கு அட்வைஸ் பண்ண என்கிட்ட எதுக்கு மாமா பெர்மிஷன் கேட்குறீங்க? ஒரு வேளை நீங்க என் வைஃபுக்கு அறிவுரை சொல்லணும் என்று நினைச்சால் அது தேவைப்படாது மாமா. உங்க வீட்டிலே நான் விட்டு வைச்சிருப்பது என் வைஃபை. உங்க பொண்ணை இல்லை'' என்று சொன்னதின் மூலம் எனக்கும் என் மனைவிக்கும் இடையில் யாரும் பஞ்சாயத்துப் பண்ணத் தேவையில்லை. என் பிரச்சினையை நானே பார்த்துக் கொள்வேன் என்று சொன்னான்.

வரதராஜனோ மனதில், 'அவ என் வைஃப் உங்க பொண்ணு இல்லைன்னு சொன்னதுக்கு அப்புறம் கேட்குறதுக்கு என்ன இருக்கு?' என்று நினைத்தவராய், ''ரொம்ப சந்தோஷம் மாப்பிள்ளை'' என்று தழுதழுத்தார்.

''மாமா எதையாச்சும் நினைச்சு மனசைப் போட்டுக் குழப்பிக்காதீங்க. சஹானா பற்றிய எந்தக் கவலையும் உங்களுக்கு வேண்டாம் மாமா. அவளை நான் நல்ல படியா பார்த்துப்பேன். என்னை நம்புங்க'' என்று சொன்னதும்,

''உங்களை நம்பாமல் நான் வேற யாரை மாப்பிள்ளை நம்பப் போறேன். கொஞ்ச நேரத்துக்கு முன்னால நீங்களே சொன்ன மாதிரி மகாதேவன் பேச்சை நம்பியே பொண்ணைக் கொடுத்தவன் நான். இப்போ அஞ்சாறு மாசமா உங்களைப் பக்கத்தில் இருந்து பார்க்குறேன்.



உங்களை எனக்குத் தெரியாதா. சரி மாப்பிள்ளை நான் இதுக்கு மேல உங்க டயத்தை வேஸ்ட் பண்ண விரும்பலை. நான் வரேன்'' என்று கிளம்பினர்.

''சரிங்க மாமா. நீங்க கிளம்புங்க. முத்தண்ணன் கூட காரிலேயே போயிடுங்க'' என்று சொல்லி அவரைக் காரில் ஏற்றி அனுப்பி வைத்தான்.

## 18

வரதராஜன் சென்ற சிறிது நேரத்தில் காவ்யா போன் செய்து வேலை விவரத்தை உரைத்தாள். தங்கள் வீட்டில் இருந்து ஆபிஸ் வெகு தொலைவு என்பதால் அலுவலகத்திற்கு அருகே உள்ள ஏரியாவில் ஒரு ஹாஸ்டலில் தங்க இருப்பதாகத் தகவல் தெரிவித்தாள். அடுத்த அரை மணி நேரத்தில் நவீனும் போன் செய்து வேலை விவரம் தெரிவித்தான்.

மித்ரனுக்கு சஹானா மட்டும் தன்னிடம் விவரம் சொல்லாதது கோபத்தை உண்டு பண்ணியது.

'இவளுக்கு என்ன தான் பிரச்சனை?! அன்னைக்கு என்னடான்னா காவ்யா வீட்டு கல்யாணத்துக்குப் போறேன்னு சொல்லாமல் போனாள். அப்புறமா ஓடி வந்து கட்டிப் பிடிச்சு அழுதாள். சரி நெருங்கி வராள்னு நினைச்சுக்கிட்டு இருந்தால்... இப்போ இப்படி? இவளைப் புரிஞ்சுக்கவே முடியலையே?' என அலுத்துக் கொண்டான்.

அங்கு சஹானாவோ தன் கணவன் தன்னைத் தவிர்க்கவில்லை. தன்னை ரொம்பவே நெருக்கமாக நினைக்கிறார் என்ற பூரிப்பில் சிறகில்லாமல் பறந்து கொண்டிருந்தாள். அந்த சந்தோஷத்தில் அவளுக்குத் தலை கால் புரியாத போது கணவனுக்கு வேலை விபரம் சொல்ல வேண்டும் என்ற விஷயமா ஞாபகத்தில் இருக்கும்?

மித்ரன் அன்று இரவு வீடு திரும்பிய பொழுது பார்வதியும் சஹானாவின் வேலை விபரத்தைப் பற்றிப் பேசினார்.

'ஆக அம்மாவுக்கு போன் பண்ணி பேசி இருக்கிறாள். நம்ம கிட்டே தான் சொல்லலை. ம்ம்ம்... மாமியாரோட ஒத்துப் போகும் அளவுக்குக் கூட நம்மளோட ஒத்துப் போக மாட்டாள் போல!' என நொந்து போனான்.

அமிர்தத்திற்கு மாவு கட்டை நீக்கிவிட்டார்கள். எலாஸ்டிக் பேண்ட் மட்டும் போடச் சொல்லியிருந்தார்கள்.

வேலைக்குச் சேரும் முதல் நாளே சஹானா, மித்ரனின் வீட்டிற்கு ஆவலுடனே வந்தாள். அன்று ஞாயிறு என்பதால் அவன் வீட்டில் இருப்பான் என்று ஆவலோடு இவள் வர... மித்ரன் அன்றும் அலுவலகம் சென்று விட்டான். சஹானா சோர்ந்து போனாள். அவனுக்காகக் காத்திருந்து காத்திருந்து கடுப்பாகித் தூங்கப் போனாள்.

வேலையில் சேரும் முதல் நாள் என்பதால் சஹானா காலையில் வேகமாகவே எழுந்து தயாராக ஆரம்பித்தாள். அவள் எழும் பொழுது மித்ரன் தூங்கிக் கொண்டிருந்தான். அவள் குளித்துவிட்டு வரும் பொழுது தான் எழுந்தான். அவளது அப்பா ஏழு மணிக்கு அவளை கைப்பேசியில் அழைத்தார்.



''பாப்பா எழுந்து குளிச்சிட்டியா மா?''

''நான் குளிச்சிட்டேன் பா. பத்து மணிக்குத் தான் போகணும். இருந்தாலும் முதல் நாள் இல்லையா... அதான் சீக்கிரமே போயிடலாம்ன்னு ரெடியாகிட்டேன்.''

''இந்த வேலை உனக்குப் பிடிச்ச மாதிரி அமைய என்னோட வாழ்த்துக்கள் மா. இரு அம்மா பேசணுமாம்.''

''சரி பா'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே கைப்பேசி அமிர்தத்தின் கைக்கு மாறியிருந்தது.

''சஹானா, நல்லபடியா காலேஜை முடிச்ச மாதிரி இந்த வேலையையும் சிறப்பா செய்ய என் வாழ்த்துக்கள்மா.''

''சரி மா'' என்று சஹானா சொல்லிக் கொண்டிருக்கும்போதே கைப்பேசியை அர்ஜுன் கைப்பற்றினான்.

அர்ஜுன், ''ஆல் தி பெஸ்ட்'' என்று கத்தினான்.

''தாங்க்ஸ்டா'' என்று சஹானா சொன்னவுடன்,

''நீ எதுக்குத் தாங்க்ஸ் சொல்லுற? உன்னை எல்லாம் மேய்க்கப் போற கம்பெனிக்கு இல்ல நான் ஆல் தி பெஸ்ட் சொன்னேன்'' என்றான்.

''என்னைக் கட்டி மேய்க்க நான் என்ன ஆடா இல்ல மாடா?''

''சே சே! உன்னைப் போய் அப்படிச் சொல்வேனா சஹானா?''

''ஆடு நனையுதேன்னு ஓநாய் அழாதே?! நீ சொல்லுறது நம்புற மாதிரி இல்லையே டா!''

''உன்னை ஆடுன்னு சொல்லிட்டா, உன்னைக் கட்டிக்கிட்ட எங்க மாமாவும் இல்ல ஆடாகிடுவார். அதனால சொல்ல மாட்டேன் என்று சொன்னேன்.''

''இது கொஞ்சம் நம்புற மாதிரி இருக்கு டா. அப்ப கூட பூனைக்குட்டி இன்னும் முழுசா வெளியே வரலை

போல இருக்கே!'' என அவள் மீண்டும் அதிசயம் காட்டிக் கேட்க.

''அவரை ஆடு மாடுன்னு சொல்லிட்டால் அவரை ஹீரோ வொர்ஷிப் பண்ணுற நானுமில்ல சேர்ந்து மாட்டிடுவேன். அதான்.''

''இப்ப சொன்னியே இது நம்புற மாதிரி இருக்குடா.''

''ஆமா சஹானா ஆடு, மாடு, ஓநாய், பூனை என்று ஒரே மிருகத்தோட பேரா சொல்லிக்கிட்டு இருக்கியே... நீ என்ன மிருகக்காட்சி சாலையிலே இருக்கியா?''

''மிருகக்காட்சி சாலையில் எல்லாம் இல்லை. ஆனால் ராத்திரி எல்லாம் தூங்காமல் முழிச்சுக்கிட்டு வேலை பார்க்கிற ஒரு இராக்கோழி கூட உட்கார்ந்துகிட்டு இருக்கேன்.''

''பேய் முதல் நாள் ஆபிஸ் போறவளிடம் போய் எதுக்குடா வம்பு வளர்க்கிற?'' என்று அமிர்தத்தின் குரல் பின்னணியில் கேட்டது. அமிர்தத்தின் குரலால் சஹானா சொன்ன 'இராக்கோழி' என்ற வார்த்தை அர்ஜுனின் காதில் விழவில்லை.

''ஓ.கே. சஹானா. ஆல் தி பெஸ்ட். வேலையில ஏதாவது பிரச்சனைன்னா மாமாகிட்டயோ, எங்ககிட்டயோ வந்து சொல்லு. சொல்லாமல் மறைக்காதே'' என்று அர்ஜுன் சொன்னதைக் கேட்டு அமிர்தம் 'இவன் ஏன் இப்படி பயமுறுத்துகிறான்?' என நினைத்தார்.

ஆனால் சஹானாவும் அவள் தந்தையும் அவனின் பாசத்தைக் கண்டு மகிழ்ந்து போனார்கள்.

''தாங்க்ஸ் டா'' என்று உள்ளார்ந்த குரலில் கூறியவள் அழைப்பைத் துண்டித்தாள். அவர்கள் அனைவரின்



உற்சாகம் அவளையும் தொற்றிக் கொண்டது. மிகுந்த உற்சாகத்துடனும், புன்னகையுடனும் வளைய வந்தாள்.

மித்ரன் கையில் பேப்பரோடு அங்கு தான் உட்கார்ந்திருந்தான். அவளது பேச்சைக் கவனித்தவன்...

'அடிப்பாவி இராக்கோழியா? ஏன்டி சொல்ல மாட்டே?! நான் இப்ப எழுந்து வந்தேன் என்று வை... நீ இன்னைக்கு ஆபிஸ் போய் ஜாயின் பண்ண மாட்டாய். காலையில இருந்து இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் நடந்து போய் ஆளைக் கொல்லுறாள். நானே என்னைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு பேப்பர் படிக்கிறேன் பேர்வழின்னு அதுல தலையைக் கொடுத்துட்டு உட்கார்ந்து இருக்கேன்.

எனக்கு ஆபிஸிலே ஆயிரம் வேலை இருக்கு. நீ முதன் முதலா ஆபிஸ் போறியேன்னு தான் அதையெல்லாம் விட்டுட்டு உட்கார்ந்து இருக்கேன். நீ என்னைப் பார்த்து இராக்கோழின்னு நக்கலா பண்ணுற... இந்த வெள்ளிக்கிழமையோட இந்த பிராஜெக்ட் வேலை முடியுது. அதுக்கு அப்புறம் வச்சுக்கிறேன் என் கச்சேரியை' என மனதில் அவளுக்குப் பதில் சொல்லிக் கொண்டான்.

சஹானா தன் நீண்ட கூந்தலைக் காய வைத்துப் பின்னலிட்ட பின் கீழிறங்கிச் சென்றாள்.

பார்வதி அவளைப் பார்த்தவுடன், ''என்னம்மா ரொம்ப பரபரப்பா இருக்கியா? வா, வா! இன்னைக்கு முதல் நாளுங்கிறதால கேசரி பண்ணியிருக்கேன். இந்த இனிப்பான கேசரி மாதிரி உன் வேலை நாட்கள் எல்லாம் இனிப்பாக் கழிய என் வாழ்த்துக்கள் மா'' என்று சொல்லி அவளுக்குக் கேசரியைப் பரிமாறினார்.

. மாமியார் வாழ்த்துச் சொன்னதும் சஹானா நெகிழ்ந்து போனாள்.

''உங்க வாழ்த்துக்கும், உங்க கேசரிக்கும் ரொம்ப தாங்க்ஸ் அத்தை'' என்றாள்.

அப்பொழுது தான் மித்ரன் தனக்கு இதுவரை வாழ்த்துச் சொல்லவில்லை என்ற உண்மை அவளுக்கு உறைத்தது. ஒரு வேளை கிளம்பும் போது சொல்வாரோ என்று தனக்குள்ளே கேட்டுக் கொண்டாள்.

சாப்பிட்டு முடித்து மாமியாரின் சொல்லுக்கிணங்க சாமி படத்துக்கு முன் விழுந்து கும்பிட்டு அவள் கிளம்பும் வரைக்கும் கூட மித்ரன் வாயைத் திறக்கவில்லை. காரில் ஏறி அவள் கிளம்பும்பொழுது அவள் அத்தை தான் வெளியே வந்து கையாட்டினார். மத்ரன் எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

ஒரு ஏமாற்றம் தன்னுள் பரவுவதை அவளால் உணர முடிந்தது. ஏன் ஒரு வார்த்தை சொன்னால் குறைந்தா போயிடுவார். வெளியே வந்து வழியாவது அனுப்பி இருக்கலாம் தானே!

'நீ எத்தனை நாள் அவன் ஆபிஸ் செல்லும்பொழுது வெளியே சென்று வழி அனுப்பினாய் சஹானா?' என்று மனசாட்சி கேள்வி எழுப்பியது. 'அவர் ஆபிஸுக்குத் தினமும் தான் போகிறார். நான் அப்படியா? இன்னைக்குத் தானே முதல் முறையாகப் போகிறேன்' என்று அதற்குப் பதில் சொன்னாள்.

காலையில் இருந்த உற்சாகம் எல்லாம் வடிந்து போனது. மித்ரனின் கோபம் தன்னைப் பாதிக்கும் என்பது அவள் அறிந்ததே. ஆனால் அவனின் பாராமுகம் கூடத் தன்னை இந்த அளவுக்குப் பாதிக்கும் என்பதை அன்று தான் புரிந்து கொண்டாள்.



காவ்யாவின் ஹாஸ்டலைக் கடந்து தான் அலுவலகம் செல்ல வேண்டும் என்பதால் தினமும் காவ்யா சஹானா வுடனே காரில் செல்வது என்று முடிவாகி இருந்தது. ஒரு சோகமான மனநிலையிலேயே காவ்யாவின் ஹாஸ்டலைச் சென்று அடைந்தாள்.

காவ்யா உற்சாகத்துடனே காரில் ஏறினாள்.

''சகி ரொம்ப சந்தோஷமா இருக்கு இல்ல. எனக்குக் காலையில இருந்து ஒரே பரபரப்பா இருக்கு'' என்று காவ்யா சொன்னதும் அவளோட உற்சாகத்தில் கொஞ்சம் சஹானாவிடம் வெளிப்பட ஆரம்பித்தது. இருந்தாலும் முழு உற்சாகம் திரும்பவில்லை.

''என்ன சகி. டென்ஷனா இருக்கா? ஹேய் கூல் யா! நாம கண்டிப்பாக் கலக்குவோம்.''

''ம்ம்ம்... கொஞ்சம் டென்ஷனா தான் காவ்யா இருக்கேன். நீ சொன்ன மாதிரி நாம கலக்குவோம்'' என்று தோழியின் கூற்றை ஆமோதித்தாள்.

''காலையில இருந்து எல்லோரும் விஷ் பண்ணித் தள்ளிட்டாங்க. மித்ரன் அண்ணா கூட ஆல் தி பெஸ்ட் அப்படின்னு எஸ்.எம்.எஸ். பண்ணினார்.'' என்று காவ்யா சொன்னவுடன் சஹானாவின் மனநிலை காற்று போய் பலூனாய் ஆனது.

தோழியின் மாற்றத்தைக் கவனிக்காமல் காவ்யா சளசள்வென்று பேசிக் கொண்டே வந்தாள்.

அவர்களது கம்பெனி வாயிலில் கார் நின்றதும் இருவரும் கீழே இறங்கினார்கள். அப்பொழுது நவீன் இவர்களை நோக்கி வந்தான்.

''ஹாய்! என்ன காவ்யா ஓ.சி. கார் சவாரியா? எல்லாம் பாஸ் புண்ணியத்துல'' என்றான்.

''என்னடா ஓ.சி.ன்னு சொல்லுற?'' என்று காவ்யா கேட்டதும்,

''ஓ.சி.யை ஓ.சின்னு சொல்லாமல் வேற எப்படி சொல்ல முடியும்? நம்ம பாஸ் கண்டிப்பா உங்ககிட்ட இதுக்குக் காசு வசூல் பண்ண மாட்டார். அதுவும் நீ சஹானாவோட க்ளோஸ் பிரண்ட் வேற.''

''இப்ப சொன்னியே இது கரெக்ட். பிரண்ட்ஷிப்புக்கு இடையில ஓ.சிங்கிற வார்த்தை எங்கேயிருந்துடா வந்துச்சு? அது சரி யாரைக் கொள்ளக் கூட்டத் தலைவன் ரேஞ்சுக்கு பாஸ்ன்னு சொல்லுற?'' என்று காவ்யா கேட்டவுடன், 'லூசா நீ!' என்பது போல் நவீன் அவளை ஒரு பார்வை பார்த்தான்.

பின், ''வேற யாரைச் சொல்லப் போறேன்?'' சஹானாவோட ஹஸ்பண்ட் நம்ம சீனியர் மித்ரன் தான் என் பாஸ்'' என்று அவன் சொல்லி முடிக்கும் முன்,

''என்ன?'' என்று இருவரும் கோரஸாகக் கத்தினர். வருத்தத்தில் இருந்ததால் சஹானாவின் குரல் அவ்வளவாக வெளிவரவில்லை. காவ்யாவின் கூச்சலில் மறைந்து போனது என்றும் சொல்லலாம்.

''எதுக்குக் காவ்யா இவ்வளவு அதிர்ச்சி காட்டுற? எனக்குப் புரியலை?'' என்று நவீன் நிஜமாகவே புரியாத பாவனையில் கேட்டான்.

''சஹானாக்குக் கல்யாணம் ஆன விஷயம் உனக்கு எப்படித் தெரியும்?''

''பாஸ் தான் சொன்னார். இரு காவ்யா... நானே முழுசா சொல்லி முடிச்சுடுறேன். நான் நம்ம கோல்டன் ஜூபிளி பங்ஷன்ல வச்சு நம்ம சஹானாகிட்ட பிரபோஸ்



பண்ணினேனா? உடனே என்னைத் தள்ளிக்கிட்டுப் போய் உண்மையைச் சொன்னார். எனக்கு நல்ல விதமா அறிவுரை சொல்லி... எனக்கு அப்பப்போ போன் பண்ணி கைட் பண்ணுவார். இன்னைக்குக் கூட காலையிலேயே எஸ்.எம்.எஸ். மூலமா விஷ் பண்ணினார்.''

'பங்ஷன் சமயம் இவள் தான் என் மனைவி என்று இவனிடம் காலையிலே சொல்லிவிட்டு... நாம நைட் கேட்டபோது ஒண்ணும் தெரியாத மாதிரி என்ன சண்டை போட்டார்?' என்று கணவனை மனதில் திட்டத் தொடங்கியிருந்த சஹானா கணவன் நவீனுக்கும் எஸ்.எம்.எஸ். அனுப்பியிருக்கிறான் என்று தெரிந்தவுடன் கொதிநிலைக்கே போய்விட்டாள்.

'ஊரிலே உள்ளவங்களுக்கெல்லாம் வாழ்த்துச் சொல்லத் தெரியும். ஆனா கண்ணுக்கு முன்னால இருந்தவளுக்கு ஒரு டாட்டா கூடக் காட்டத் தெரியாது. இதை இப்படியே விடக் கூடாது என்றெண்ணியவளாய் அவர்கள் இருவரையும் பார்த்து, ''நீங்க முன்னால போங்க. நான் ஒரு போன் பேசிட்டு வரேன்'' என்று சொல்லிப் பின் தங்கினாள்.

கணவனின் கைப்பேசிக்கு அழைத்ததும் முதல் ரிங்கிலேயே போன் எடுக்கப்பட்டது.

''உங்க மனசிலே என்ன நினைச்சுக்கிட்டு இருக்கீங்க?'' என்று எடுத்த எடுப்பிலேயே பொரிய ஆரம்பித்தாள்.

'உன்னைத் தான் நினைத்துக் கொண்டு இருக்கேன்' என மனதில் நினைத்தவன், ''என்ன விஷயம்? முதல்ல அதைச் சொல்லு'' என்றான்.

''நவீன் கிட்ட கல்யாண விஷயத்தை பங்ஷன் சமயமே சொல்லியிருக்கீங்க. ஆனா அன்னைக்கு நான் கேட்டப்போ அது பற்றி ஒன்றும் சொல்லாமல் ஏன் என்கிட்ட வாதாடுனீங்க?''

''ஓ! இது தான் விஷயமா!' என்றெண்ணியவன், ''இப்போ நான் அவன் கிட்ட கல்யாண விஷயம் சொன்னதுக்கு கோபமா? இல்ல அதை உன்கிட்ட வந்து சொல்லலை என்று கோபமா?'' என்று கேட்டவுடன்,

''நான்...'' என்று சொல்ல ஆரம்பித்தவளை,

''நான் சொல்லி முடிச்சிடுறேன். என் முன்னாடியே வந்து ஒருத்தன் என் மனைவியைக் காதலிக்குறேன் என்று சொல்லுவான். அதைப் பார்த்துக்கிட்டு எப்படி என்னால சும்மா இருக்க முடியும் என்று நீ நினைக்கிறே? அதான் நவீனிடம் விஷயத்தைச் சொன்னேன். அதே மாதிரி உன்கிட்ட ஏன் சொல்லலை என்று கேட்டால்... நான் ஏன் சொல்லணும்? அன்னைக்கு உன்கிட்ட சொன்னதைத் தான் நான் இன்னைக்கும் சொல்லுறேன். அவன் சொன்னதை மறுப்பதோ, ஆதரிப்பதோ உன் விருப்பம்'' என்றான்.

''சரி அதை விடுங்க. இவங்க ரெண்டு பேருக்கும் வேலையில சேரப் போறாங்க என்று எஸ்.எம்.எஸ். மூலமா விஷ் பண்ணியிருக்கீங்க. நானும் தானே இன்னைக்கு வேலையில சேரப் போறேன். உங்களுக்கு என்கிட்ட எதுவும் சொல்லத் தோணலை இல்லை?'' என்று அடுத்த சண்டைக்குத் தயாரானாள்.

''அவங்க ரெண்டு பேரும் இன்னைக்கு வேலையில சேரப் போவதா எனக்குப் போன் பண்ணி சொன்னாங்க. நீ என்கிட்ட எப்பவாவது சொன்னியா?'' என்று கேட்டு அழைப்பைத் துண்டித்தான்.



'சந்தோஷமா பேசுவாள் என்று போனை எடுத்தால்... என்னைக்கோ நடந்த விஷயத்தைப் பேசி மனுஷனை மூட் அவுட் பண்ணுறாள்' என்று ஒரு நிமிடம் நினைத்தவன், மறு நொடியே, 'சே! முதல் முதலா வேலைக்குச் சேரப் போறவளிடம் போய் தேவையில்லாத விஷயங்களைப் பேசி மனசைப் புண்படுத்தி விட்டோமே' என்று நினைத்த அடுத்த நொடியே மனைவியின் கைப்பேசிக்கு அழைப்பு விடுத்தான்.

''ஹலோ சஹானா! சாரி டா. நான் இப்பப் போய் அப்படிப் பேசியிருக்க வேண்டாம். மனசை சந்தோஷமா வைச்சுக்கோ. வருத்தப்படாதே. சரியா?'' என்று அவன் சொன்னவுடன்,

'இப்பக் கூட வாழ்த்துச் சொல்லணும்ன்னு தோணுதா பாரு!' என மனதில் திட்டியவள்,

''ம்ம்... ஓ.கே. பிரண்ட்ஸ் பக்கத்திலே வந்துட்டேன். அப்புறம் பேசுறேன்'' என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தவள் சுய அலசலில் ஈடுபட்டாள்.

'நாம வேலையில் சேரப் போவதை யார் யாரிடம் எல்லாம் சொன்னோம்?' என்று அவள் யோசித்துப் பார்க்க அந்த லிஸ்ட் நீண்டு கொண்டே போனது. ஆனால் அதில் கணவன் பெயர் இல்லாது போனதும் சஹானா மனம் சங்கடப்பட்டாள்.

'எப்படிச் சொல்லாமல் போனோம்? அப்பாவோ, மாமியாரோ சொல்லியிருப்பாங்க என்று நினைத்தோம் அப்படின்னு சொல்லக் கூடாது. நான் தான் அர்ஜூனிடம் சொல்வேன். நீங்க யாரும் சொல்லக் கூடாது என்று பெற்றோரிடம் கட்டளையிட்டோமே! அதே மாதிரி இவரிடமும் நானல்லவா சொல்லியிருக்க வேண்டும்?!'

என்று சஹானா எண்ணியவுடன் அவளுக்குக் கண் களில் கண்ணீர் தேங்கி நின்றது.

பிறர் பார்க்கும் முன் தன் கண்ணீரைத் துடைக்க எண்ணி, ஹேண்ட் பேக்கில் இருந்து கர்ச்சீப்பை எடுத்தாள். அப் பொழுது தான் அதன் உள்ளேயிருந்த வாழ்த்து அட் டையைப் பார்த்தாள். அதன் மேல் ஒற்றை சிவப்பு ரோஜா செல்லோ டேப்பால் ஒட்டப்பட்டிருந்தது. அந்த சிவப்பு ரோஜாவே வாழ்த்தை யார் அனுப்பி இருப்பார் கள் என்று அவளுக்கு விளக்கியது. நடுங்கும் கரங்களால் அதனைப் பிரித்தாள்.

'நீ உன் வேலையிடத்தில் வெற்றி பெறவும், வரும் நாட்கள் வசந்தமாய் அமையவும் வாழ்த்தும், உன் மித்ரன்' என்று எழுதிக் கையெழுத்திட்டிருந்தான்.

அதைப் படித்ததும் 'தாங்க்ஸ் மிதுன்' என உதடுகள் உச்சரித்தன. விரல்கள் 'உன் மித்ரன்' என்ற எழுத்துக்களை வருடிக் கொடுத்தன.

செய்ய வேண்டியதைச் சரியான நேரத்திலே செஞ்சு முடிச்சிட்டு ஒண்ணும் தெரியாத மாதிரி நம்ம கிட்டே வாதம் பண்ணுவதே இவருக்கு வேலையாப் போச்சு என்று சந்தோஷமாக அலுத்துக் கொண்டாள்.

முகத்தில் புன்சிரிப்போடும், கண்களில் நீரோடும் கணவனை அழைத்தாள். இம்முறை நான்கைந்து ரிங் போன பின்னும் கூட அவன் எடுக்கவில்லை. ஒரு வேளை நாம கார்டைப் பார்த்துட்டு போன் பண்ணுவோம் என்று நினைத்து கொஞ்ச நேரத்திற்கு முன்பு போனைக் கையிலேயே வைத்திருந்தாரோ என்று நினைத்துக் கொண்டிருந்த பொழுது மறுமுனையில் போன் எடுக் கப்பட்டது.



''ஹலோ'' என்ற மித்ரனின் குரலில் சஹானாவிற்கு அழுகை தான் எட்டிப் பார்த்தது. வார்த்தை வரவில்லை.

''ம்'' என்ற சொல்லோடு ஒரு மெல்லிய விசும்பல் கேட்டவுடன்,

''சனா, என்ன ஆச்சுடா? ஏதாவது பிரச்சனையா? நான் அங்க வரட்டுமா?'' என்று அவன் பதட்டத்துடன் கேள்விகளை அடுக்க,

''ம்ஹூம். கார்ட்...'' என்று அவள் திக்க...

''ஓ! இப்பத் தான் கார்டைப் பார்த்தியா அதுக்கா அழுற? நான் என்னமோ ஏதோன்னு பயந்துட்டேன். கண்ணைத் துடைச்சிட்டு சிரிச்ச முகமா போய் வேலை யில சேரணும். சரியா ஆல் தி பெஸ்ட்'' என்றான்.

''ம். தாங்க் யூ'' என்று சொல்லி அழைப்பைத் துண் டித்து மலர்ந்த முகத்துடன் காவ்யாவின் அருகில் சென்று அமர்ந்தாள்.

''என்ன ஆச்சு சகி? வெயிலும், மழையும் ஒரே நேரத்திலே உன் முகத்திலே வந்து வந்து போகுது?''

''ஒண்ணுமில்லை'' என்று சொல்லி இரு கண்களை யும் சிமிட்டி, உதடுகளை இழுத்துப் புன்னகைத்தாள்.

''என்ன அண்ணா கூட ஊடலும், கூடலுமா?''

சஹானா அதற்கும் ஒரு புன்னகையைப் பதிலாகத் தந்தாள்.

நவீனும் வந்து சேர்ந்து கொள்ள இவர்கள் மூவரும் பேசிக் கொண்டு இருக்கும்போது மேகலா வந்தாள். காவ்யா அவளுக்கு உட்கார இடம் விட்டு நகர்ந்து அமர அவளோ ஒரு ஏளனப் பார்வையுடன் அவர்களைக் கடந்து போனாள்.

நவீன், ''எப்படி யா இவளோட எல்லாம் ஹாஸ்டலில் காலம் தள்ளினீங்க?'' என்று சொல்லிக் கொண்டே, 'ஊப்' என்று வாய் வழியாகக் காற்றை வெளியேற்றினான்.

''நாங்க கண்டுக்குறதே இல்லை நவீன். நம்ம காலேஜ் மேட்டே என்று தான் ஒரு கரிசனத்திலே தள்ளி உட்கார்ந்தேன். சரி போறா விடு'' என்று காவ்யா சொன்னாள்.

# 19

முதல் நாள் பொழுது நன்றாகப் போனது. ஆனால் ஒரே ஒரு இடறல் 'மனோகரன்' என்ற ரூபத்தில் வந்தது. M.E. படித்து முடித்து விட்டு இவர்களோடு புதுசா வேலையில் சேரப் போகும் அவன் சஹானாவைப் பார்த்து ஏகத்திற்கும் வழிந்து கொண்டிருந்தான்.

முதல் நாள் வேலையை வெற்றிகரமாக முடித்து விட்டு ஆசை ஆசையாய் அவள் வீடு திரும்பி கணவனின் வருகைக்காய் காத்திருக்க... அவள் தூங்கும் வரையிலும் அவன் வரவில்லை. காலையில் எழுந்து பார்க்கும் பொழுது படுக்கையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். அவள் குளித்துச் சாப்பிட்டுக் கிளம்பும் வரைக்கும் அவன் எழுந்திருக்கவில்லை.

எத்தனை மணிக்கு வந்து தூங்கினார் என்று தெரியலையே? எழுப்புவதா வேண்டாமா? கணவனிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாது ஆபிஸ் செல்லவும் மனசில்லாமல் செய்வதறியாது அவன் படுக்கை அருகே அவள் நிற்க...



சரியாய் அந்த நேரம் கண் விழித்த மித்ரன் மனைவியைப் பார்த்து, ''என்னம்மா ஆபிஸ் கிளம்பிட்டியா?'' என்றான். அவன் குரலில் அளவுக்கு அதிகமாய் அலுப்பிருந்தது.

''ம்ம்... நீங்க எப்போ வந்தீங்க?''

''இப்பத்தான் மா கொஞ்ச நேரத்திற்கு முன்னால் வந்தேன்.''

''என்ன காலையிலே தான் வந்தீங்களா? தூங்கவே இல்லையா? அப்படி என்ன பெரிய வேலை? உங்களை யாரு அப்படிக் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கச் சொன்னா? சரி நான் வேற பேசிப் பேசி உங்க தூக்கத்தைக் கெடுக்க விரும்பலை. நல்லா தூங்கி எழுந்து மதியத்துக்கு மேல ஆபிஸ் போனால் போதும். இல்லைன்னா இன்னைக்குப் போகாதீங்க'' என்று கோபமாகச் சொன்னவளின் பேச்சில் இருந்த பாசம் புரிந்தவனாய் ஒரு புன்னகையுடனே தலையாட்டிக் கொண்டு தலையணையில் முகம் புதைத்தான்.

அவள் அறையை விட்டு வெளியேறியதும் இன்டர்காமில் தன் தாயை அழைத்தான்.

''அம்மா நான் இப்பத் தான் காலையிலே வந்தேன். அதனால ஒரு பதினொரு மணிக்கு எழுந்து அதுக்கு அப்புறமா சாப்பிட்டு ஆபிஸ் போறேன்'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே பார்வதியின் அறைக்குள் சஹானா மூச்சிரைக்க நுழைந்தாள்.

வந்தவள், ''அத்தை அவர் காலையில தான் வந்து தூங்குறார். அதனால அவரை எழுப்பாதீங்க. அவரா எழுந்து வந்து ஆபிஸ் கிளப்புறேன் என்று சொன்னாலும்

போக விடாதீங்க'' என்று சொன்னதும் பார்வதி தலையை ஆட்டினார்.

அவர் தலையாட்டலைப் பார்த்தவள், ''என்கிட்ட தலை யாட்டின மாதிரி உங்க பிள்ளை வந்து ஆபிஸ் போறேன் என்று சொல்லும் போது இதே மாதிரி தலையாட்ட மாட்டீங்க தானே?'' என்று கேட்கவும் பார்வதி முதலில் தலையை மேலும் கீழுமாய் ஆட்டிப் பின் சுதாரித்தவ ராய் இட வலமாய் ஆட்டினார்.

''ஏதாவது ஒரு பக்கம் தலை ஆட்டுங்க'' என்று அவள் சொல்ல...

இன்டர்காம் மூலம் அவள் பேச்சைக் கேட்டுக் கொண் டிருந்தவன், ''அம்மா நான் போனை வைக்குறேன். நீங்க உங்க மருமகளைச் சமாளிங்க'' என்று ஒரு சிரிப்பு னுடனே சொல்லிப் போனை வைத்தான்.

இந்தப் பக்கம் பார்வதியும் போனைக் கீழே வைத்தார். அப்பொழுது தான் அதைக் கவனித்த சஹானா, ''அச்சச்சோ போன் பேசிக்கிட்டு இருந்தீங்களா? யார் கூட அத்தை?'' எனப் பதறினாள்.

''மித்ரன் தான் மா. தூங்கப் போறேன். எழுப்பாதீங் கன்னு சொல்லிக் கொண்டு இருந்தான். நான் அவனைப் பார்த்துக்கிறேன். நீ ஆபிஸ் கிளம்பு'' என்று சொல்லி அவளைக் கிளப்பினார். சஹானா தன் அத்தை பார்த்துக் கொள்வார் என நம்பி ஆபிஸ் கிளம்பினாள்.

ஆபிஸில் மனோகரின் ஜொள்ளு அளவு மீறிப் போவ தாக இருந்தது. காவ்யாவிடம் அவள் அதைப் பற்றிப் புலம்பினாள்.

''மித்ரன் அண்ணா கிட்ட சொல்லுவோமா?'' என்று காவ்யா கேட்டவுடன்,



''சே சே! நாம என்ன சின்னக் குழந்தைங்களா? இதைக் கூடச் சமாளிக்கத் தெரியாதவங்களா? நானே சமாளிச்சுக்குவேன். அதுவுமில்லாமல் கொஞ்ச நாளா அவரைப் பார்க்கவே முடியுறதில்லை தெரியுமா? வேலையில ரொம்ப பிஸியா இருக்கார். இதில நான் வேற அவரைத் தொந்தரவு பண்ண விரும்பலை'' என் றாள்.

சரி என்று காவ்யாவும் ஒத்துக் கொண்டாள்.

புதனன்று ஆபிஸில் இருந்து வீடு வந்த சஹானா ஏதோ யோசனையுடனும், சோர்வுடனும் காணப்பட்டாள்.

அவளைக் கவனித்துக் கொண்டிருந்த பார்வதி அவளிடம் என்னவென்று காரணம் கேட்டார்.

''அத்தை என் பழைய தாலி செயினை காலேஜ் முடிச்சு வந்ததும் மாத்திடலாம்னு சொன்னீங்க தானே! அதை இப்போ மாத்திடுவோமா? நீங்க அதிலே கோர்க்க லஷ்மி காசு இன்னும் என்னன்னவோ வாங்கி வச்சிருந் தீங்களே! அதையும் கோர்த்திடலாமா?'' என்று கேட் டாள்.

''சரி மா செஞ்சிடலாம்.''

''அ..த்..தை'' என்ற தயங்கி இழுத்தவள், ''நாளைக்கே... அதுவும் நான் ஆபிஸ் போகும் முன்னால மாத்திட லாமா? நாளைக்கு நாள் நல்லா இருக்கா?'' என்றாள்.

பார்வதி அவளை யோசனையாக அளவிட்டாரே ஒழிய காரணம் கேட்கவில்லை.

''சரி மா. நாளைக்கு சுப முகூர்த்த நாள் தான். ஆசா ரியை வரச் சொல்றேன். நீ சொல்லுற மாதிரியே காலை யில் மாத்திடலாம்.''

மறுநாள் காலை அவள் தூங்கி எழுந்து குளிச்சு வெளியே வரும் பொழுது மித்ரன் எழுந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான்.

''அப்பாடா எழுந்துட்டீங்களா? குளிச்சுக் கிளம்பி கீழே வரீங்களா? சாமி கும்பிடணும்'' என்று சொன்னதும் மறுத்துப் பேசாது அவன் எழுந்து குளிக்கக் கிளம்பினான்.

அவன் குளித்துக் கீழே வந்த பொழுது ஆசாரி அவளது பழைய செயினில் அவளது தாலி மற்றும் ஏனைய வற்றைக் கோர்த்து முடித்திருந்தார்.

திடீரென்று காலங்கார்த்தாலே தாலிச் செயினை மாற்ற வேண்டிய அவசியம் என்ன என்று குழம்பிய மித்ரன் தன் தாயைப் பார்த்து, 'என்ன விஷயம்' என்பதுபோல் புருவம் உயர்த்த, அவரோ 'எனக்கும் தெரியாது' என்பது போல் உதட்டைப் பிதுக்கினார்.

ஆசாரியை அனுப்பி வைத்த பின் அந்தத் தாலி செயினை பூஜையறையில் சாமிக்கு முன்பு வைத்துக் கும்பிட்டார்கள். சாமி கும்பிட்டு முடித்ததும் சஹானா மித்ரனிடம், ''இதை என் கழுத்தில் போட்டு விடுங்க'' என்று தாலியைச் சுட்டிக் காட்ட அவனும் அவ்வாறே செய்தான்.

அவன் தாலிச் செயினை அணிவித்ததும் சஹானா பார்வதியின் காலில் விழுந்து வணங்கினாள். பார்வதியும் அவளை ஆசிர்வதித்து விபூதி பூசிவிட்டார். சஹானா குங்குமச் சிமிழை எடுத்துக் கொண்டு தங்கள் அறைக் குள் சென்றாள்.

ஒரு நாளும் இல்லாத திருநாளாய் அன்று புடவை அணிந்தாள். டிரஸிங் டேபிள் முன் நின்று கிளம்பிக் கொண்டிருந்தாள் தன் விரல்களால் குங்குமத்தை



எடுத்தவள் வகிட்டில் வைப்பதா வேண்டாமா என்று சடுகுடு ஆடிக் கொண்டிருந்தாள்.

மித்ரன் நடப்பவற்றை அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு தீர்மானத்திற்கு வந்தவள் போல் வகிட்டில் குங்குமத்தை வைத்தாள். அது அவளுக்கு மேலும் அழகு சேர்ப்பதாக மித்ரனுக்குத் தோன்றியது.

இன்றாவது கணவனிடம் தங்களுக்கு இடையில் இருக்கும் பிரச்சனைகளைப் பேசித் தீர்த்து ஒரு சமாதான உடன்படிக்கைக்கு வர வேண்டுமென சஹானா ரொம் பவே ஆசைப்பட்டாள்.

மித்ரனின் அருகே வந்தவள், ''இன்னைக்காவது சீக்கிரமா வருவீங்களா?'' என்று கேட்டாள்.

அவளது குரலிலும், முகத்திலும் தெரிந்த ஆர்வத் தைக் கண்டவன் ஒரு கணம் கண் மூடித் திறந்தான். அவளைக் கைப் பிடித்து அழைத்துச் சென்று படுக்கை யின் நுனியில் அமர வைத்துத் தானும் அவள் அருகில் அமர்ந்தான்.

பின் மெதுவான குரலில், ''இல்லைம்மா. இன்னைக்கு நைட் நான் வீட்டுக்கு வருவதே சந்தேகம் தான்'' என் றான்.

அவள் முகம் சுருங்கிப் போனவளாய், ''எனக்கு நாளையில் இருந்து நாலு நாள் லீவ். இன்னைக்கு ஆபிஸ் போயிட்டு வந்த பிறகு செவ்வாய்க் கிழமை போனால் போதும்'' என்றாள்.

''சாரி மா. வெள்ளிக் கிழமையோட... அதாவது நாளை யோட இந்த வேலை முடிஞ்சிடும். அதனால தான்

இன்னைக்கு வீட்டுக்கு வரமாட்டேன் என்று சொல்லுறேன். பேசாமல் நீ இன்னைக்கு ஆபிஸ் முடிஞ்சதும் உன் அம்மா வீட்டுக்குப் போயிடுறியா? நான் உன்னை சனிக்கிழமை வந்து கூப்பிட்டுக்கிறேன். இங்க இருந்தால் உனக்கு போர் அடிக்கும்'' என்றான்.

அவள் அமைதியாக இருக்க... அவளது அமைதியும் அதில் தொக்கி நின்ற அவளது எதிர்பார்ப்பும் அவனுக்கு நன்றாகவே புரிந்தது. ஆனால் அவள் கேட்பதை செய்ய முடியாமல் வேலைப்பளு அவனை அழுத்தியது.

''என்னடா... இன்னும் ரெண்டு நாள் தானே! அட்ஜஸ்ட் பண்ணிக்கோடா'' என்று அவள் கையை அழுத்திக் கொடுத்துக் கெஞ்சலாகப் பார்க்க,

''சரி'' என்று மனசே இல்லாமல் சொன்னவள் அவனிடம் விடைபெற்று ஆபிஸ் கிளம்பினாள்.

வழக்கம்போல் காவ்யாவின் ஹாஸ்டலில் அவளை ஏற்றிக் கொண்டு ஆபிஸ் நோக்கி போகும் பொழுது காவ்யா சஹானாவின் காதில், ''என்ன சகி அந்த மனோகரைப் பார்த்து உன் ஜொள்ளு அருவியை நிறுத்துன்னு சொல்லாமல் சொல்லப் போகிறாயா?'' என்று கிசுகிசுத்தாள்.

டிரைவர் இருந்ததால் இருவருமே அதற்கு மேல் அது பற்றிப் பேசவில்லை.

ஆபிஸில் அவள் வகிட்டில் வைத்திருந்த குங்குமத்தைப் பார்த்ததுமே மனோகர் வாயடைத்துப் போனான். அவனது கண்களில் தோன்றிய ஏமாற்றமும், அவனது ஒதுக்கத்தையும் கண்ட சஹானா தான் திட்டமிட்டபடியே காரியங்கள் நடந்தேறுவதாக மகிழ்ந்து போனாள்.



ஆனால் அவளது மகிழ்ச்சிக்கு ஆயுள் சொற்பமே என்று அவளது தோழி (?) மேகலா வந்து புரிய வைத்தாள்.

சஹானா மேகலாவைப் பார்த்த பொழுது பெரிதாக ஒன்றும் நினைக்கவில்லை. ஆனால் மேகலா பேச ஆரம்பித்த பிறகே தான் மனோகரைச் சரி கட்ட நினைத்தோமே தவிர மற்றவர்களை எப்படி மறந்து போனோம் என்று எண்ணும்படி செய்தாள்.

''ஹேய் என்ன இது வகிட்டிலே குங்குமம்? இப்ப எல்லாம் கல்யாணம் ஆகாத பொண்ணுங்க கூட வகிட்டிலே குங்குமம் வச்சுக்கிறாங்க. கேட்டால் பேஷன் என்று சொல்லிக்கிறாங்க. எப்படி உங்க வீட்டிலே இதுக்கு ஒத்துக்கிட்டாங்க? எங்க அம்மாவா இருந்தால் கன்னத்திலே சப்பென்று அறைஞ்சிருப்பாங்க'' என்று மேகலா சொன்னதும் சஹானா விக்கித்துப் போனாள்.

அப்பொழுது தான் சஹானா கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியைப் பார்வையிட்டவள், ''தாலி செயினைக் கூட பேஷன் என்ற பேரிலே போட்டு இருக்கியா? அவ்வளவு அல்ட்ரா மாடர்னா நீ? என்னமோ நம்ம காலேஜிலேயே நீ தான் ரொம்ப அடக்கமான பொண்ணுன்னு பந்தா விட்டுக்கிட்டுத் திரிவாய்? இப்ப எங்கே போச்சு அந்த அடக்கம் எல்லாம்? வேலைக்கு வர ஆரம்பிச்ச ரெண்டாவது நாளிலேயே காத்துல பறக்க விட்டுட்டாயா?'' என்று அவள் எகத்தாளமாய் கேட்டாள்.

அவள் பேசப் பேச நிலைமையை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என சஹானா ரொம்பவே குழம்பிப் போனாள். மேலும் அது ஆபிஸ்... புது இடம்... அங்குள்ள அனைவருமே புதியவர்கள் என்பது வேறு சஹானாவைப் பதிலுக்குச் சண்டையிட விடாமல் தடுத்தது. அது மேகலாவிற்கு இன்னமும் வசதியாகிப் போனது.

கொஞ்சம் கூட நாகரீகம் இல்லாமல் அந்தச் சங்கிலியை வெளியே உருவியவள் அதில் கோர்க்கப்பட்டிருந்த தாலியைப் பார்த்து அதிர்ந்து போய், ''உனக்குக் கல்யாணமே ஆகிடுச்சா? எப்போ?'' எனக் கேட்டாள்.

முதல் முறையாக சஹானா வாய் திறந்து, ''ஜனவரியில்...'' என்றாள்.

''ஜனவரியிலா? காலேஜ் படிக்கும் பொழுதேவா? அப்ப ஏன் யாரையும் கூப்பிடலை? ஒரு வேளை பணக்காரக் கிழவன் எவனாவது உன் அழகில மயங்கி ரெண்டாம் தாரமா கட்டிக்கிட்டானா?'' என்று தனது வெகு நாளைய கடுப்பைத் தீர்த்துக் கொண்டாள்.

''மேகலா'' என்று அவள் கத்த ஆரம்பிக்கும் பொழுது அவர்களது மேலதிகாரிகள் வர பேச்சு அத்தோடு நின்றது.

மனோகர் சஹானாவைப் பார்த்த பார்வையில் ஏளனம், எகத்தாளம் எல்லாம் நிறையவே இருந்தது. சஹானா கூசிப் போனாள். விஷயம் அறிந்த காவ்யா கொதித்தாள்.

''அவளை ஏன் சகி சும்மா விட்டாய்? இவளை இப்படியே விட்டால் நாளைக்கு என்ன வேண்டுமானாலும் செய்வாள்?''

''அதுக்காக அவ கூட ஆபிஸில் குடுமிப்பிடி சண்டையா போடச் சொல்கிறாய்?'' என்று கேட்டு சஹானா ஒருவாறு காவ்யாவை அடக்கினாள்.

எந்த ஒரு சிக்கல் தன் வாழ்வில் வந்தாலும் அதற்கு மித்ரனை காரணகர்த்தாவாக்கி இது நாள் வரைத் திட்டிக் கொண்டிருந்தவள் முதல் முறையாக அவன் தன் அருகில் இருந்திருந்தால் தனக்கு இப்படி ஒரு அவமானம் நடக்கவிட்டு இருக்க மாட்டான் என்று நம்பினாள்.



இத்தனைக்கும் இந்த அவமானமே அவளது திடீர் கல்யாணத்தினால் தான் வந்தது என்ற போதிலும்... அந்த திடீர் கல்யாணம் கணவனது பிடிவாதத்தினால் தான் நடந்தது என்று இன்று வரை அவள் எண்ணிக் கொண்டிருக்கும் சூழ்நிலையிலும், மித்ரனை அவள் குற்றவாளியாக்கிப் பார்க்கவில்லை.

மாலையில் அவளுக்குத் தன் தாய் வீட்டிற்குச் செல்லவே பிடிக்கவில்லை. ஆனால் இன்று இரவு வீடு வர மாட்டேன் என்று மித்ரன் சொன்னதால் அங்கு போயும் ஒன்றும் ஆகப் போவதில்லை என்று நினைத்துத் தாய் வீட்டிற்கே சென்றாள்.

நான்கு நாட்கள் விடுமுறை என்பதால் காவ்யாவும் ஹாஸ்டலுக்குச் செல்லாமல் தனது வீட்டிற்குச் சென்றாள்.

சஹானாவின் சோர்வைப் பார்த்த அவளது அப்பா, ''என்ன பாப்பா வேலை ரொம்ப கஷ்டமா இருக்கா?'' என்று கேட்டார்.

''அதெல்லாம் இல்லைபா'' என்று சொல்லித் தனது அறைக்குள் முடங்கினாள்.

அன்று இரவே அவளுக்குக் காய்ச்சல் வந்தது.



## 20

காலையில் சஹானாவை அவளது தந்தை மருத்துவமனைக்கு வரச் சொல்லி வற்புறுத்திய பொழுது, ''லேசா தான் பா காய்ச்சல் அடிக்குது. ஒரு க்ரோசின் போட்டால்

சரியாகிடும்'' என்று சொல்லி அவள் மருத்துவமனைக்குச் செல்ல மறுத்து விட்டாள்.

ஆனால் நேரம் ஆக ஆக அவளால் இங்கு இருக்க முடியவில்லை. கணவனைப் பார்க்க முடியாவிட்டாலும் அவன் நடமாடிய இடத்தில் நடமாடினால் கூடப் போதும் என்ற எண்ணம் தோன்ற தனது தந்தையை வற்புறுத்தி தன்னைத் தன் வீட்டிற்குக் கூட்டிச் செல்ல வைத்தாள்.

இரவு எட்டரை மணிக்கு மித்ரன் காரில் வீட்டிற்கு வந்து இறங்கினான். அவனுக்கு ஒரே அலுப்பாய் இருந்தது. ஒரு வழியாக அவனது பிராஜெக்ட். அன்றோடு முடிவடைந்தது. அப்படியே கார் சீட்டில் சாய்ந்து சில நிமிடங்கள் கண் மூடி அமர்ந்தான். அப்பொழுது தான் தன் கைப்பேசியை இன்னமும் தான் இயக்கவில்லை என்ற நினைவு அவனுக்கு வந்தது. அதை எடுத்து அவன் இயக்கவும், அது சிணுங்கவும் சரியாக இருந்தது. வரதராஜன் தான் அழைத்திருந்தார்.

''ஹலோ! சொல்லுங்க மாமா.''

''மாப்பிள்ளை ரொம்ப பிஸியா இருக்கீங்களா?''

''ஆமா மாமா, கொஞ்சம் வேலை ஜாஸ்தி. அதான் மதியத்தில் இருந்தே போனை ஸ்விட்ச் ஆஃப் பண்ணி மிருந்தேன். ரொம்ப நேரமா கூப்பிடுறீங்களா மாமா? சாரி.''

''ஐயோ சாரி எல்லாம் எதுக்கு சொல்லுறீங்க. நீங்க எப்ப மாப்பிள்ளை வீட்டுக்குப் போவீங்க?''

''வீட்டு வாசல்ல நின்னுக்கிட்டு தான் மாமா பேசுறேன். எதுக்கு மாமா கேட்குறீங்க?''



''இல்லை மாப்பிள்ளை சஹானாக்கு உடம்பு இப்பக் கொஞ்சம் பரவாயில்லையா என்று கேட்கத்தான் கூப்பிட்டேன்.''

''சஹானாக்கு உடம்பு சரியில்லையா? எப்போல இருந்து? ஏன் என்கிட்ட சொல்லவே இல்லை. அது சரி அவ அங்க தானே மாமா இருக்காள். நீங்க என்கிட்ட விசாரிக்குறீங்க'' என அவன் பதட்டத்துடன் தன் கேள்விகளை அடுக்கினான்.

''மாப்பிள்ளை பதட்டப்படாதீங்க. சாதாரண ஜுரம் தான். மதியமே அவ உங்க வீட்டுக்குப் போகணும் என்று அடம் பிடிச்சாள். நான் தான் மாப்பிள்ளை டாக்ஸி பிடிச்சு கொண்டு வந்து விட்டேன். அதான் இப்போ எப்படி இருக்காள் என்று தெரிஞ்சுக்கத்தானே போன் பண்ணினேன்.''

''நீங்க அம்மாக்கு போன் போட்டுக் கேட்டு இருக்கலாமே மாமா? ஏன் இதுக்கெல்லாம் தயங்குறீங்க?''

''இன்னும் கொஞ்ச நேரம் நீங்க போன் எடுக்கலை என்றால் அவங்களுக்குத் தான் மாப்பிள்ளை கூப்பிட்டிருப்பேன்.''

வீட்டினுள் நுழைந்தவாறே, ''சரி மாமா. நான் அம்மா கிட்டயே கொடுக்குறேன். நீங்க அவங்க கிட்டயே விசாரிங்க'' என்று கூறிக் கொண்டே அவனது கைப்பேசியைத் தாயிடம் கொடுத்தவன்,

''அம்மா, மாமா லைனில இருக்கார். சஹானா பத்தி விசாரிக்குறார்'' என்றான்.

''சொல்லுங்க சம்பந்தி... சஹானாக்கு ஜுரம் குறைஞ்சிடுச்சு. எங்க பாமிலி டாக்டர் வந்து பார்த்துட்டு மாத்திரை எல்லாம் கொடுத்தார். சாப்பிட்டு முடிச்சிட்டு.

மாத்திரையும் போட்டுத் தூங்குறேன் என்று மாடிக்குப் போய்விட்டாள்'' என்று அனைத்து விவரங்களையும் வரதாராஜன் கேட்கும் முன்பே பார்வதி சொல்லி முடித்தார்.

''ஓ! தூங்கப் போய்விட்டாளா? ஜுரம் குறைஞ்சிடுச்சில்ல. அது போதுங்கம்மா. நான் போனை வைக்குறேன். நீங்க மாப்பிள்ளையைக் கவனியுங்க'' என்று சொல்லி வரதாராஜன் அழைப்பைத் துண்டித்தார்.

''எப்படி மா இருக்காள்? டாக்டர் அங்கிள் என்ன சொன்னார்?'' என்று மித்ரன் தன் பங்குக்கு விசாரணையைத் தொடங்க,

''உன் மாமாக்குச் சொன்ன அதே பதில் தான் உனக்கும். அவ நல்லா தான் இருக்காள். நீயே மேலே போய் பார்த்திட்டு டிரஸ் மாத்திட்டு சாப்பிட வா'' என்று சொல்லி அவனை அவனது அறைக்க அனுப்பி வைத்தார்.

மித்ரன் இரண்டு இரண்டு படிகளாகத் தாவித் தனது அறைக்குள் நுழைந்தான். அறையில் இருந்த இருட்டுக்குக் கண்கள் பழக சில நொடிகளானது. அதன் பின் அவன் தன் மனைவி வழக்கமாகப் படுத்து உறங்கும் திவானை நோக்கித் தன் பார்வையைத் திருப்ப அங்கே அவள் இல்லாது ஒரு நொடி குழம்பியவன் அவசரமாகத் தன் கட்டிலின் பக்கம் பார்வையைத் திருப்ப, சஹானா அங்குதான் உறங்கிக் கொண்டிருந்தாள்.

மித்ரனுக்குத் தான் காண்பது கனவா இல்லை நினைவா என்ற குழப்பம் வந்தது.

'நம் கட்டிலில் படுத்து இருக்காள் என்றால் அவள் மனது நம்மை விரும்ப ஆரம்பித்து விட்டதா?' என ஒரு நொடி மகிழ்ந்தவன், அடுத்த நொடியே 'ஒரு வேளை மயங்கிக் கட்டிலில் விழுந்து விட்டாளோ?' என பயந்து போய் அவளருகில் விரைந்து சென்றான்.



அவளது கழுத்தில் கை வைத்து இன்னமும் ஜுரம் இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்தான். அவனை அவன் தொட்ட வினாடி 'ம்' என்ற மெல்லிய முனகல் அவளிடம் இருந்து பிறந்து அவனது பயத்தைப் போக்கியது.

அவள் மயங்கவில்லை என்று தெரிந்து கொண்ட பின்பே மனைவியை நன்றாகப் பார்வையிட்டான். அங்கு அவன் கண்ட காட்சி அவனுக்கு வியப்பை அளித்தது. ஒரு பெரிய லேமினேட் செய்யப்பட்ட போட்டோவை அணைத்தவாறு தூங்கிக் கொண்டு இருந்தாள். எடுத்துப் பார்த்தால் அதில் இருந்தது மித்ரன். அந்த போட்டோவை அருகில் இருந்த மேஜையில் வைத்தான்.

'இதன் அர்த்தம் என்ன?' என்று பலவிதமாய் யோசித்தவனுக்கு ஒரே விடை தான் கிடைத்தது.

மனைவி தன்னை விரும்ப ஆரம்பித்து விட்டாள்! இது ஆசை கொண்ட மனதின் எண்ணமோ என்று ஒரு நொடி தன் கண்டுபிடிப்பின் மீதே அவனுக்குச் சந்தேகம் வந்தது.

எப்பொழுதும் உடல் நிலை சரியில்லாவிட்டால் அவள் தனது பெற்றோரின் அருகில் தானே இருக்க விரும்புவாள்! அப்படிப்பட்டவள் இன்று அங்கேயிருந்து கிளம்பி இங்கே வந்து இருக்காள் என்றால் என்னை அவள் ஏற்றுக் கொண்டதாகத்தானே அர்த்தம்?

அவர்களைவிட என்னருகே இருப்பதையே அவள் மனம் விரும்புகிறது என்று புரிந்த வினாடி மித்ரனுக்கு 'யாஹூ' என்று கத்த வேண்டும் போல் இருந்தது.

மனைவியின் உடல்நிலை அவனைக் கத்த விடாமல் செய்தது. அவள் அருகே சென்று படுத்தவன் மனைவியின் மலர் முகத்தை முன் எப்பொழுதையும் விட ஆசையுடனும், காதலுடனும் ரசித்துப் பார்த்தான்.

மனைவியின் உடல்நிலை அவனுக்குக் கட்டுப்பாடு விதிக்க அவன் அதைத் தகர்த்தெறிந்து அவளது நெற்றியில் மென்மையாக முத்தமிட்டான். பின் தான் அதிகம் நேசிக்கும் அவளது கண்களில்... அதாவது மூடிய இமைகளில் முத்தமிட்டான்.

அப்பொழுது அவள் தூக்கத்தில் உளற ஆரம்பித்தாள். "அப்படியில்லை மேகலா... நான் கல்யாணம் சொல்லலை... மனோகர்" என்று ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் ஏதேதோ உளறினாள்.

'என்ன சொல்கிறாள்?' என்று மித்ரன் யோசித்துக் கொண்டிருக்கும் பொழுதே, "நான் அடக்கமானவள் தான்" என்று விசிக்க ஆரம்பித்தாள்.

திடீரென்று அவள் உடல் நடுங்கியது. "மிதுன்" என்று கூறிக் கொண்டே தன் மீது ஒட்டிப் படுத்தவளின் முதுகைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் படுத்தினான். அவள் மீண்டும் தூக்கத்தின் பிடியில் சென்றவுடன் அவளின் அச்சத்திற்கான காரணத்தை அறிந்து கொள்வதே தனது முதல் வேலை என நினைத்தவன் அவளை மென்மையாக அணைத்து அவளது நெற்றியில் முத்தமிட்டுப் பின் விலகினான்.

நமக்குத் தெரியாமல் என்னவோ நடந்து இருக்கு. யார் அந்த மேகலா, மனோகர், மிதுன்? ஆபிஸில் தான் ஏதோ பிரச்சனை போல! இவள் வேறு நேற்று காலங்கார்த்தாலே தாலியை மாற்றினாள். வகிட்டில் குங்குமம் வைத்தாள். என்னவாக இருக்கும்?



இவளை இப்போது எழுப்பிக் கேட்பதற்குப் பதிலாக காவ்யாவிடம் கேட்கலாம். அவளுக்குக் கண்டிப்பாகத் தெரிஞ்சு இருக்கும் என நினைத்தவனாய் அவளது கைப்பேசிக்கு அழைத்தான்.

"சொல்லுங்கண்ணா!"

"காவ்யா நீ தான் சொல்லணும். நேற்று ஆபிஸில் என்ன நடந்தது?"

சஹானா தன்னைத் தடுக்கவில்லை என்றால் முதல் நாளே காவ்யா மித்ரனுக்கு போன் செய்து விஷயம் சொல்லியிருப்பாள். அவள் தடுத்ததால் மட்டுமே சும்மா இருந்தவள் இப்பொழுது மித்ரன் போன் செய்து கேட்டவுடன் அதற்கென்றே காத்திருந்தார் போல் நடந்த அனைத்தையும் விவரமாக எடுத்துரைத்தாள்.

காவ்யாவிடம் இருந்து விவரத்தை அறிந்தவன், "காவ்யா நான் கொஞ்ச நேரத்தில் உன்னைத் திருப்பிக் கூப்பிடுறேன் மா" என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தான்.

அடுத்துத் தான் செய்ய வேண்டியது என்ன என்று யோசித்து ஒரு முடிவிற்கு வந்தான். அது தொடர்பாக சிலருக்குப் போன் செய்தான். பின் மீண்டும் காவ்யாவை அழைத்தவன்,

"காவ்யா சஹானா இப்போ என்ன இ-மெயில் ஐடி உபயோகப்படுத்துகிறாள்?" எனக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

"இப்போ அது எதுக்குண்ணா?"

"இல்லைம்மா... நாளைக்கு ஈவினிங் எங்களோட மேரேஜை உங்க பிரண்ட்ஸுக்கு எல்லாம் அறிவிக்கலாம் என்று பார்க்கிறேன்."

"சூப்பர் ஐடியா அண்ணா. உங்க மேடம் ஒத்துக்கிட்டாங்களா?"

"இல்லம்மா... அவளிடம் நாளைக்கு சாயங்காலம் சொல்லிக்கலாம். நீ தான் எனக்கு ஹெல்ப் பண்ணனும்."

"உங்க இரண்டு பேருக்கு இல்லாத ஹெல்ப்பா? நான் என்ன செய்யணும் என்று சொல்லுங்க. நாளைக்குப் பார்ட்டி என்று சொல்லுறீங்க. பார்ட்டிக்கு ஹால் கிடைக்குமா? நடுவில இருபத்து நாலு மணி நேரம் கூட இல்லையேண்ணா! இது சாத்தியப்படுமா?"

"அதெல்லாம் ஏற்பாடு பண்ணிட்டேன் மா. திங்கட் கிழமை கவர்மெண்ட் ஹாலிடே அப்படிங்கிறதால தொடர்ந்து மூணு நாள் லீவ். அதனால வெளியூர்ல வேலைக்குப் போயிருக்கவங்க கூட சென்னைக்கு வந்து இருப்பாங்க. நாளைக்கே பார்ட்டியை வைச்சுக்கலாம். எனக்கு இப்ப தெரிய வேண்டியது எல்லாம் உன் காலேஜ் பிரண்ட்ஸோட மெயில் ஐ.டி. அப்புறம் இங்க ஆபிஸில பழக்கமானவங்களோட மெயில் ஐ.டி. முக்கியமா அந்த மனோகரன் மற்றும் மேகலா மெயில் ஐ.டி. இந்த லிஸ்டை என் மெயில் ஐ.டிக்கு உடனே அனுப்பு மா" என்று சொல்லித் தனது மெயில் ஐ.டியை அவளுக்குக் கொடுத்தான்.

"அஞ்சே நிமிஷத்திலே அனுப்புறேன்" என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தாள்.

பின் அவன் நவீனுக்கு அழைத்து விஷயம் சொல்லி அவனது நண்பர்களின் மெயில் ஐ.டியை அனுப்பச் சொன்னான்.

விஷயமறிந்த நவீன், "பாஸ் அந்த மேகலா எல்லாம் திருந்தாத கேஸ். நீங்க கேட்ட மெயில் ஐ.டியை நான் அனுப்பி வைக்குறேன்" என்றான்.



"அனுப்பி வை நவீன். நான் ஏற்கனவே காவ்யா கிட்டயும் மெயில் ஐ.டி. கேட்டு இருக்கேன். நீயும் அனுப்பு. அப்புறம் முக்கியமான விஷயம் நான் தான் சஹானா கணவன் என்று யாருக்கும் சொல்லாதே. விஷயம் தெரிஞ்சால் அந்த மேகலா வர மாட்டாள். அவள் அங்கு வந்து சங்கடப்பட்டு நிக்கணும். அதை என் வைஃப் பார்க்கணும்" என்று ஒரு தீவிரத்துடன் சொல்ல அதை நவீன் ஆமோதித்தான்.

கீழே இருந்து அம்மா அழைக்கும் குரல் கேட்டு மித்ரன் தன் லாப்-டாப்பை எடுத்துக் கொண்டு கீழிறங்கிப் போனான்.

பார்வதி, "என்னப்பா இன்னமும் டிரஸ் கூட மாத்தலை. சஹானா நல்லா இருக்கா தானே?" என்று கேட்டார்.

நடந்த விஷயங்களைச் சுருக்கமாக அவரிடம் கூறியவன் தான் அதற்காகச் செய்ய இருக்கும் ஏற்பாடுகளைப் பற்றியும் அவரிடம் எடுத்துரைத்தான்.

"நல்லபடியா நடத்துப்பா. எப்பவோ செய்ய வேண்டியது. நாம தான் யோசிக்காமல் விட்டுட்டோம் போல. சரி சாப்பிட்டுவிட்டு அப்புறமா வேலையை ஆரம்பி" என்று சொல்லி அவனைச் சாப்பிட வைத்தார்.

காவ்யா கொடுத்த சஹானாவின் yahoo மெயில் ஐ.டியைத் தட்டியவன், 'பாஸ்வேர்ட் என்ன வைத்திருப்பாள்?' என யோசிக்க ஆரம்பித்தான். ஒரு வேளை நம்ம பேரை வைத்து இருப்பாளோ என நினைத்து 'மித்ரன்' என்று கொடுத்துப் பார்த்தான். அது தவறு என்று சொன்னது.

'டேய் மித்ரா! இது மூன்று மாதத்திற்கு முன்னால் தொடங்கியதாகக் காவ்யா சொன்னாளே... அப்படி

இருக்கும் போது எப்படி அவள் உன் பெயரை பாஸ்வேர்டாக வைத்து இருப்பாள்! அப்படியே வைச்சிருந்தாலும் 'சத்ரு' என்று தான் வைத்திருப்பாள் என நினைத்த மாத்திரத்தில் அவன் கை அதையே பாஸ்வேர்ட் ஆகத் தட்டியிருந்தது. அதுவும் தவறென்று வந்ததும், 'அப்பாடா' என அகமகிழ்ந்து போனான்.

'என்னமோ உன் பொண்டாட்டி உன்கிட்ட 'ஐ லவ் யூ' சொன்ன ரேஞ்சுக்கு இல்ல ஃபீல் பண்ணுற!' என்று உள்ளிருந்து ஒரு குரல் கேட்டதைச் சட்டை செய்யாதவனாய் 'பர்கெட் பாஸ்வேர்டை' கிளிக் செய்து செக்யூரிட்டி கேள்விகளுக்குப் பதில் அளிக்கத் தயாரானான்.

(ஒரு மெயில் ஐ.டி.யை நாம் தொடங்கும் பொழுது நம்மோட மெயிலைப் பிறர் அறியாமல் பாதுகாக்க நம்மை ரகசிய வார்த்தை (பாஸ்வேர்ட்) பயன்படுத்தச் சொல்வார்கள். ஒருவேளை பின்னாளில் நாமே அந்த ரகசிய வார்த்தையை மறந்து போய் நம்மால் நமது மெயில் ஐ.டி.யைத் திறக்க முடியாத நிலை வரும் என்பதற்காக மெயில் ஐ.டி.யை உருவாக்கும் பொழுதே இரு செக்யூரிட்டிக் கேள்விகளுக்கு நம்மை பதில் சொல்லச் சொல்வார்கள். அதைச் சரியாகச் சொல்லி விட்டால் ரகசிய வார்த்தை இல்லாமலே நம்மால் அதனுள் நுழைய முடியும். மித்ரன் இப்பொழுது அந்த செக்யூரிட்டி கேள்விகளுக்குத் தான் பதில் சொல்லத் தயாரானான்.)

முதல் கேள்வியாய் 'உங்களின் செல்ல பெயர் என்ன?' என்ற கேள்வி வந்தது. 'சனா' என்று டைப் அடிக்கத் துடித்த கைகளை அடக்கியவன், சில நொடிகளில் தன் மாமனார் தனது மனைவியை அழைக்கும் 'பாப்பா' என்ற பெயரை டைப் செய்தான்.



அது சரியான விடை என்று காட்டியது. அடுத்த கேள்வி உங்கள் கணவரின் பெயர் என்ன என்று கேட்டது.

'ஆகா இது லேசான கேள்வி ஆச்சே!' என்று எண்ணிக் கொண்டு அவன் தனது பெயரை டைப் செய்ய அது தவறு என்று காட்டியது.

டக்-அவுட் ஆன பேட்ஸ் மேன் நிலைக்குத் தள்ளப் பட்டான். தான் எளிது என்று நினைத்த கேள்விக்குத் தனக்கு முட்டை மார்க் கிடைத்ததும் சில நொடிகள் அடுத்தது என்ன என்று சிந்திக்கும் திறனை இழந்தான். பின் தன்னைச் சுதாரித்துக் கொண்டு சிந்தனை வயப் பட்டான்.

விளையாட்டுக்குக் கூடத் தன் மனைவி வேறொரு பெயரைப் பதிவு பண்ணியிருக்க மாட்டாள் என அவன் உறுதியாக நம்பினான். பின் எப்படித் தவறென்று சொல்கிறது என யோசித்துக் கொண்டிருக்கும் பொழுதே அவனுக்கு விஷயம் புரிபட்டது.

'டேய் மடையா! அவ உனது முழுப் பெயரைத் தான் பதிவு செய்திருக்க வேண்டுமா? சுருக்கமாக அல்லது செல்லமாக ஏதாவது பதிந்து வைத்திருப்பாள் என்ற எண்ணம் தோன்றியவுடன் தனது செல்லப் பெயர் சுருக்கத்தை ஆராய ஆரம்பித்தான்.

மித்ரனை எப்படிச் சுருக்கலாம்? இதுவரை அவள் நம்மை ஒரு முறை கூடச் செல்லமாக அழைத்ததில்லையே! என்ன பெயராக இருக்கும்? சற்று முன் படுக்கையறையில் மிதுன் என்று சொன்னாளே... அது நம்மையா? மித்ரனின் சுருக்கமா இந்த மிதுன்?!

சோதித்துப் பார்க்க எண்ணியவனாய் 'மிதுன்' என டைப் செய்ய அது சரியான விடை என்று சொல்லி

அவனுக்குள் ஒரு சந்தோஷ ஊற்றைக் கிளப்பியது. ஒரு கணம் கண் மூடி அது தந்த இன்பத்தை அனுபவித்தான்.

மூன்று மாதங்களுக்கு முன்பே நம் பெயரைச் செல்லமாகச் சுருக்கியிருக்கிறாள் என்றால்... அப்பவே அவளது மனசுக்குள் நாம புகுந்து விட்டோம் போலவே! கள்ளி இத்தனை நாளாக நம்மிடம் மறைத்திருக்கிறாள். ஒரு வேளை அவளே அதை உணரவில்லையோ? அப்படியும் இருக்குமோ?

எது எப்படியாகினும் அவளை உடனே சென்று அணைக்க வேண்டும் என்று அவன் கைகளும், உடலும் பரபரத்தன. மனைவியின் உடல் நிலையும், செய்ய வேண்டிய வேலைகளும் அவனது உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வந்தன.

தனது திருமண வரவேற்பிற்கு வருமாறு சஹானாவின் பெயர் போட்டு ஒரு அழைப்பிதழை தயார் செய்தான். அதில் தேதி, இடம், நேரம் என சகலத்தையும் குறிப்பிட்டான்.

காவ்யா அனுப்பியிருந்த மெயில் ஐ.டி.களுக்கு மனைவியின் பெயரில் தான் தயாரித்த அழைப்பிதழை அனுப்பினான். பின் லாப்-டாப்பை மூடி விட்டுத் தனது அறைக்குள் சென்றான்.

மனைவியின் அருகில் படுத்தவன், ''சனா பேபி, நீ எதை நினைச்சும் கவலைப்படாதே. உன் மிதுன் எல்லாத்தையும் பார்த்துக்குவான்'' என்று சொல்லி அவளது நெற்றியில் முத்தம் கொடுத்தவன் அவளை மென்மையாக அணைத்துக் கொண்டு தூங்க முயற்சித்தான்.



# 21

மனைவி அருகில் படுத்திருந்ததால், அவனுக்குள் ஏற்பட்ட உணர்வுப் போராட்டத்தினால் அவனால் உடனே தூங்க முடியவில்லை. நடுநடுவே வேறு விழித்துப் பக்கத்தில் படுத்திருப்பவளின் கழுத்தில் கை வைத்துப் பார்த்துக் கொண்டே இருந்தான். ஜுரம் திரும்ப வரவேயில்லை. அதனால் அதிகாலையில் அசந்து தூங்க ஆரம்பித்தான்.

முதல் நாள் இரவு சீக்கிரமே தூங்கச் சென்ற காரணத்தினால், காலையில் முதலில் சஹானா தான் கண் விழித்தாள்.

கணவனது அணைப்பில் தான் இருப்பதை உணர்ந்தவள் வெட்கம் அடைந்தாள். கூடவே ஒரு பாதுகாப்பு உணர்வு தோன்ற மேலும் அவனிடம் ஒண்டிக் கொண்டாள். தூக்கத்திலேயே அவன் அவளை மேலும் இறுக்கி அணைக்க தன்னுள் ஒரு இதம் பரவுவதை உணர்ந்தாள். அந்த சுகத்தை கண் மூடி அமைதியாக அனுபவித்தாள்.

ஆறு மணிக்குக் கண் விழித்த மித்ரன் சஹானா கண் விழித்து இருப்பதைப் பார்த்து, ''குட் மார்னிங் மா. இப்போ எப்படி இருக்கிறாய்?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்தான்.

''இப்போ நல்லா இருக்கேன்'' என்று அவள் சொன்னவுடன் குளியலறைக்குள் சென்று மறைந்தான்.

குளித்து விட்டு வந்தவனைப் பார்த்து, ''அதுக்குள்ள எங்கே கிளம்பிட்டீங்க? நேத்தோடு வேலை முடிஞ்சிடும் என்று சொன்னீங்க தானே?'' என்று கேட்டவுடன்,

''கொஞ்சம் வேலை பாக்கி இருக்குமா. இத்தனை நாள் மாதிரி ரொம்ப எல்லாம் நேரமாகாது. சீக்கிரமா வந்திடு றேன். நேற்று உன் மொபைலை தெரியாமல் கீழே போட்டுட்டேன். வேலை செய்யலை. ரிப்பேர் பண்ணி எடுத்துட்டு வரேன். நீ ரெஸ்ட் எடுமா. வரேன்'' என்று அவள் தலையை ஆறுதலாய் அழுத்திவிட்டு அவசர அவசரமாகக் கிளம்பிச் சென்றான்.

அவளிடம் நின்று நிதானமாகப் பேசினால் தான் ஏதாவது உளறி விடுவோமோ என்று பயந்து போய் அவளைத் தவிர்த்துவிட்டு ஓடினான். இராத்திரியே அவளது லேப் டாப்பை தனது அலமாரியில் வைத்துப் பூட்டிவிட்டான். மறக்காமல் அலமாரிச் சாவியைக் கையோடு எடுத்துச் சென்று விட்டான்.

காலை ஏழரை மணிக்கு எல்லாம் மாப்பிள்ளைத் தங்கள் வீட்டுக் கதவைத் தட்டவும், சஹானாவின் பெற்றோர் குழம்பித்தான் போனார்கள்.

''வாங்க மாப்பிள்ளை!'' என்று வாய் வரவேற்ற போதும் மனம் குழம்பித் தவித்தது.

'இவ்வளவு சீக்கிரம் வந்திருக்காரே... அதுவும் தனி யாக! சஹானாக்கு உடம்பு சரியில்லையோ?' என அமிர்தம் யோசித்தார் என்றால்,

வரதராஜனோ, 'பொண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் ஏதும் தகராறா?' என்று யோசிக்க ஆரம்பித்து விட்டார்.

மெதுவாக, ''சஹானா எப்படி இருக்கா மாப்பிள்ளை?'' என்று அமிர்தம் கேட்டார்.



''அவளுக்கென்ன நல்லா கும்பகர்ணியா தூங்கி எழுந்து நல்லா தான் இருக்காள்'' என்று அவனது கேலிப் பேச்சில் பெற்றோர் இருவரும் நிம்மதி அடைந்தனர்.

''மாமா, ஒரு சின்ன பிரச்சனை...'' என்று அவன் தயங்கி இழுக்கவும், பெரியவர்களின் முகம் இருளடைந்தது.

அவர்களின் முகபாவனையைக் கண்டவன், ''ஆஹா மாமா, அனுமன் 'கண்டேன் சீதையை'ன்னு சொன்ன மாதிரி பிரச்சனை எங்களுக்கு இடையே இல்லை அப்படின்னு தான் நான் முதலில் தொடங்கி இருக்கணும் போல... ரிலாக்ஸ், ரிலாக்ஸ்'' என்று சொன்னவன் சஹானா ஆபிஸில் நடந்தவற்றையும் அதற்குத் தான் எடுத்திருக்கும் பதில் நடவடிக்கைப் பற்றியும் எடுத் துரைத்தான்.

''ஓ! அதுனால தான் அவளுக்குக் காய்ச்சல் வந் திடுச்சா மாப்பிள்ளை? இப்போ எப்படி இருக்காள்?'' என வரதராஜன் கேட்டார்.

''நல்லா தான் மாமா இருக்காள். நீங்க ரெண்டு பேரும் சீக்கிரம் ரெடியாகுங்க. இப்ப எங்கம்மா காரிலே இங்க வந்திடுவாங்க. நீங்க மூணு பேரும் நேரா காவ்யா வீட்டுக்குப் போங்க...'' என்று சொல்ல ஆரம்பித்தவனை இடைமறித்த அமிர்தம்,

''காவ்யா ஹாஸ்டலிலே தானே மாப்பிள்ளை இருப் பாள்?'' என்றார்.

''இல்ல அத்தை. நான்கு நாள் தொடர்ந்து லீவு என்ப தால் அவ ஹாஸ்டலில் இருந்து வீட்டுக்குப் போய்விட் டாள். நீங்க இன்னைக்குப் பங்ஷனுக்கு அவங்க வீட்டில் உள்ளவங்களை முறைப்படி கூப்பிடுங்க. அப்புறம் காவ் யாவும் உங்க கூட வருவாள். சஹானாவோட நெருங்கிய

பத்து பிரண்ட்ஸுங்க வீட்டுக்கு மட்டும் நேரில் போய் நீங்க அழைக்கணும். மீதி பேருக்கு எல்லாம் மெயில் பண்ணியாச்சு'' என்று விவரம் தெரிவித்தான்.

அங்கு நின்றிருந்த அர்ஜுனிடம் திரும்பி, ''போன முறை எங்க கல்யாணத்தப்போ உனக்கு ரிவிஷன் எக்ஸாம் நடந்ததால உன் பிரண்ட்ஸ் யாரையும் கூப்பிட முடியலைன்னு வருத்தப்பட்டியே டா. இப்போ எல்லோரையும் வரச் சொல்லு. சாயந்திரமா உங்களுக்கு ஒரு வேன் வரும். அதிலேயே எல்லோரையும் கூட்டிக் கிட்டு வந்திடலாம். கம்பெனியில் இருந்து ஒருத்தர் ஹெல்புக்காக வேனில் வருவார். அதனால உங்களை இறக்கி விட்டுட்டு அடுத்து வரவங்களை அவரே திரும்ப வந்து கூட்டிட்டு வந்திடுவார். என்ன அர்ஜுன் இப்ப சந்தோஷமா?'' என்று கேட்டான்.

''ரொம்ப தாங்க்ஸ் மாமா'' என்று அர்ஜுன் மகிழ்ந்து போனான்.

''அப்புறம் வேலை நிறைய இருப்பதால் இப்ப ஷாப்பிங் போய் புதுத் துணி எதுவும் எடுக்க முடியாது. சாரி'' என மித்ரன் சொல்லவும்,

''எதுக்கு மாப்பிள்ளை புதுசு?'' என பெரியவர்கள் இருவரும் ஒரு சேர ஆட்சேபக் குரல் எழுப்பினார்கள்.

அர்ஜுனோ, ''அம்மா, மாமா சொல்ல வரும் விஷயம் என்ன தெரியுமா? அக்காக்கு மட்டும் ஸ்பெஷல் டிரஸ் தயாராகுது. உங்களுக்கெல்லாம் நோ'ன்னு அர்த்தம். என்ன மாமா, சரியா சொல்லிட்டேனா?'' என்று கண் சிமிட்டிக் கேட்க,

அவனது கேள்வியில்... கேலியில் பலமாகச் சிரித் தவன், ''பாதி கரெக்ட் அர்ஜுன். சஹானாக்கு மட்டும்



புதுசு தான். ஆனால் அது அடுத்த மாசம் வரும் அவள் பெர்த் டேக்காக நான் ஏற்கனவே ரெடி பண்ணி வைச்சது. இனிமேல் ரெடி பண்ணப் போறதில்லை. சரி பேச நேர மில்லை. சீக்கிரமாக் கிளம்புங்க'' எனச் சொல்லி வெளி யேறப் போனவனை,

''மாப்பிள்ளை, ஏதாவது சாப்பிட்டுட்டுப் போங்க'' என்று அமிர்தம் தடுத்தார்.

''அத்தை அதுக்கெல்லாம் இப்போ டைம் இல்லை. இன்னொரு நாளைக்கு உங்க விருந்து உபச்சாரம் எல்லாம் வச்சுக்கலாம். அப்புறம் சொல்ல மறந்திட்டேன். இந்த விஷயம் எதுவும் சஹானாக்குத் தெரியாது. அவ போனில் யாரும் அவளைக் கூப்பிடக் கூடாதுன்னு அவ போனை ரிப்பேர்ன்னு சொல்லி எடுத்திட்டு வந்து ஸ்விட்ச் ஆஃப் பண்ணிட்டேன். நீங்க அவகிட்ட பேச ணும் என்றால் வீட்டு நம்பருக்குக் கூப்பிடுங்க.'' என் றான்.

''இவ்வளவு அவசரமா இன்னைக்கே செய்யணுமா மாப்பிள்ளை? உங்க அம்மாவையும் அலைய விடுறீங்க...'' என அமிர்தத்தின் கேள்விக்கு,

''இன்னொரு தடவை இன்னொருத்தர் அவளிடம் கல்யண விஷயம் பற்றி பேசும் முன் நாம முறைப்படி அறிவிச்சுடணும் அத்தை. இதை நாம எப்பவோ செஞ்சிருக்க வேண்டியது. சரி.. பரவாயில்லை. அப்புறம் நான் போகும்போது மகாதேவன் அங்கிளுக்கும் சொல் லிட்டுப் போறேன். இது பிரண்ட்ஸுக்கான ரிசப்ஷன் தான். ஆனா எல்லோரையும் கூப்பிட்டுவிட்டு அவரை மட்டும் விட்டுட்டால் அது நல்லா இருக்காது'' என்று சொல்லிக் கிளம்பினான்.

'தன் மகளுக்காக ஒவ்வொரு விஷயத்தையும் பார்த்துப் பார்த்துச் செய்யும் மாப்பிள்ளை கிடைத்தது தங்களது அதிர்ஷ்டமே!' என இருவரும் எண்ணினர்.

சஹானாவை இன்டர்காமில் கீழே வரச் சொல்லி பார்வதி அழைத்தார். வெளியே கிளம்பத் தயாராய் இருந்தவரைப் பார்த்து, 'இவருக்கு இந்நேரத்தில் என்ன வேலை வந்தது?' என்று நினைத்துக் கொண்டாள்.

''சஹானா நான் கொஞ்சம் கோவிலுக்குப் போயிட்டு வரேன் மா. சாப்பாடு எல்லாம் தயாரா இருக்கு. சாப்பிடு. நாங்க ரெண்டு பேரும் இல்லை என்றவுடன் சாப்பிடாமல் இருந்திடாதே. நல்லா தூங்கி ரெஸ்ட் எடு'' என்று சொல்லி விடைபெற்றார்.

சஹானாவிற்குப் பொழுதே போகவில்லை. மதியம் மூன்று மணி அளவில் காவ்யா சஹானாவை அவளது வீட்டு எண்ணிற்கு அழைத்துப் பேச ஆரம்பித்தாள்.

''ஹாய் சகி எப்படி இருக்கே? நம்ம க்ளோஸ் பிரண்ட்ஸ் எல்லாம் இன்னைக்கு மீட் பண்ணலாம்ன்னு பிளான் பண்ணியிருக்கோம். அதனால நீயும் கிளம்பி வந்திடு'' என்று சொன்னவுடன்,

''நானா? நான் வரலை காவ்யா'' என்று சஹானா மறுக்க,

''ஏன் வரலைங்குற? போனை வேறே ஸ்விட்ச் ஆஃப் பண்ணி வைச்சிருக்க. என்ன ஆச்சு?'' என்று ஒன்றும் தெரியாதவளைப் போல் காவ்யா கேள்விகளை அடுக்கினாள்.

''என் போனை நான் ஸ்விட்ச் ஆஃப் செய்யலை. என் போன் ரிப்பேர். எனக்கு நேத்தெல்லாம் ஜுரமா இருந்துச்சு...''



''ஜுரமா? டாக்டர்கிட்டே போனியா?''

''ம்ம் டாக்டர் வந்து செக் பண்ணிப் பார்த்தார். இப்ப சரியாகிடுச்சு.''

''ஓ! இப்ப நல்லா இருக்கே என்றால் வரலாம் தானே சகி. நாங்க ஆசை ஆசையா ப்ளான் பண்ணினோம் தெரியுமா?''

''இல்லை காவ்யா. எனக்கு யாரையும் பார்க்கவே பிடிக்கலை. சங்கடமா இருக்கு.''

''ஏன் பிடிக்கலை? அந்த மேகலா சொன்னதினாலா? நான் ஒண்ணும் அவளைப் பார்க்கக் கூப்பிடலையே!''

''இல்லை...'' என்று மறுக்கத் தொடங்கியவளை இடைமறித்து,

''என் பிரண்ட்ஷிப்பை மதிக்கிறதா இருந்தால் நீ கண்டிப்பா வரே...'' என்று சொன்னவள் எங்கு வரவேண்டும் என்பதையும் சொல்லி அழைப்பைத் துண்டித்தாள்.

காவ்யா அவர்கள் சந்திக்கப் போகும் இடத்தின் பெயராக மித்ரன் விருந்துக்கென்று ஏற்பாடு செய்திருக்கும் ஹாலுக்குப் பக்கத்தில் இருக்கும் ஷாப்பிங் மாலைக் குறிப்பிட்டாள்.

'போவதா, வேண்டாமா?' என்று சஹானா பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருந்த பொழுது மித்ரன் அறைக்குள் நுழைந்தான்.

மாலை நான்கு மணிக்கு அறைக்குள் நுழைந்த கணவனை சஹானா ஆச்சரியமாக ஏறிட்டாள். சீக்கிரம் வந்து விடுவேன் என்று அவன் சொன்னதை பிசினஸ் மேன் பேச்சு அலுவலகம் போனால் போச்சு!' என்ற ரீதியில் அவள் எடுத்துக் கொண்டதால் அவனை இவ்வளவு சீக்கிரமாக எதிர்பார்க்கவில்லை.

''சனா பேபி, நீ இப்படி கண்ணை விரிச்சுப் பார்த்தால் நான் அதிலேயே விழுந்துடுவேன்'' என்று சொல்லி அவளது கண்களில் அவள் அறிந்த முதல் முத்தத்தைப் பதித்தான்.

அவள் கண் மூடி அந்த இன்பத்தை ரசித்துக் கொண்டிருக்க சஹானாவின் கைப்பேசி அலறியது. காவ்யா தான் அழைத்திருந்தாள். ஒரு அசுவாரஸ்யத்துடன் போனை எடுத்துப் பேச ஆரம்பித்தாள்.

''காவ்யா, நான் வரலை. இப்பத் தான் இவர் வீட்டுக்கு வந்திருக்கார்'' என்று சொன்னவுடன்,

''அண்ணா இருக்காரா? அண்ணா கிட்ட போனைக் கொடு'' என்று அவளை வற்புறுத்தி போனை மித்ரனிடம் கொடுக்கச் செய்தாள்.

'ஹலோ' என்று மித்ரனின் குரலைக் கேட்டவுடன், ''அண்ணா நான் என் ரோலைக் கரெக்ட்டா செஞ்சுட்டேன். இனி நீங்க தான் அவளை அங்கே இருந்து கிளப்பிக்கிட்டு வரணும். அதுலதான் இருக்கு உங்க சாமர்த்தியம்'' என்று சொல்லி சிரித்துக் கொண்டே அழைப்பைத் துண்டித்தாள்.

''என்ன சனா பிரண்ட்ஸ் கெட் - டுகெதருக்கா போக மாட்டேன் என்று சொன்னாய்? ஏன்? நான் வந்துட்டதாலா? ஆனால் நான் இப்போ திரும்பவும் அம்மா கூட வெளியே போகப் போறேன் மா. நான் வர ஒரு ஏழு மணி ஆகும். எப்படியும் நீ வீட்டில் தனியா தானே இருக்கணும். அதை விட உன் பிரண்ட்ஸைப் போய் பார்த்திட்டு வரலாம் தானே?'' என்று சொல்லி அவளைச் சம்மதிக்க வைத்தான்.



காவ்யா வேறு 'எனது நட்பை மதிப்பதென்றால் வந்து சேர்' என்று சொன்னாள். இவரும் போ என்று சொல்கிறார். சரி போவோம் என மனமே இல்லாமல் சஹானா கிளம்பினாள்.

அவள் சம்மதித்தவுடன் தன் அலமாரியைத் திறந்து அதிலிருந்து ஒரு கவரை எடுத்தவன் அதை அவளிடம் கொடுத்து, ''இந்த சாரியைக் கட்டிக்கிட்டுப் போறியா?'' என்று கேட்டான்.

பிரித்துப் பார்த்தவளுக்கு அந்தப் புடவையை ரொம்பவே பிடித்திருந்தது. அது பீச் (வெளுத்த கனகாம்பரம்) கலரில் வெள்ளை கற்கள் பதித்த டிசைனர் புடவை. ரொம்பவும் ஆடம்பரமாகத் தோன்றாத வகையிலும், அதே சமயம் சாதாரணமாகவும் இல்லாமல் மிக நன்றாகவே இருந்தது. அதற்குரிய ரவிக்கையும் தைக்கப்பட்டு தயார் நிலையில் இருப்பதைப் பார்த்தவளுக்கு ரொம்ப முன்னாடியே கணவன் தனக்காக வாங்கி வைத்திருந்தது புரிந்தது.

ஒரு புன்னகையுடனே, ''ம்... இதையே கட்டிக்கிறேன்'' என்றாள்.

''தாங்க்ஸ் டா'' என்று சொல்லி அங்கிருந்து நகர்ந்தான்.

அரை மணி நேரம் கழிந்த பின், கதவைத் தட்டி உள்ளே வர அனுமதி கேட்டான்.

''உள்ளே வாங்க'' என்ற குரல் கேட்டவுடன் உள்ளே நுழைந்தவன் மனைவியின் அலங்காரத்தில் மெய் மறந்து நின்றான். அவனது பார்வையில் வெட்கியவளாய் சஹானா தலை குனிந்தாள்.

சில நொடிகளில் தன்னை நிலைப்படுத்தியவன் அவளருகே சென்று ஒரு நகை டப்பாவை கொடுத்து அதை அணிந்து கொள்ளுமாறு சொன்னான். அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தாள். உள்ளே இரு பெரிய வைர காதணிகளும், ஒரு வைர நெக்லஸும் இருப்பதைப் பார்த்தவள், 'இதை எப்படி காலேஜ் ப்ரண்ட்ஸைப் பார்க்கப் போகும் இந்த விசேஷத்துக்கு அணிய முடியும்?'' என்று எண்ணினாள்.

''இதை எப்படிங்க நான் போட...'' என்று மறுத்துச் சொல்ல ஆரம்பித்தவளை ஒரு கை காட்டி தடுத்து,

''இதை நீ போடணும் அப்படிங்கிறது என்னோட ஆசை. போடுறதும் போடாததும் உன்னோட விருப்பம்'' என்று சொல்லி அந்த இடத்தை விட்டு அகன்றான்.

'என்ன இப்படி சொல்லிட்டுப் போறார்? இதைப் போட்டுக்கிட்டுப் போனால் ரொம்ப ஓவரா இருக்காதா? எல்லோரும் என்னைப் பட்டிக்காடுன்னு நினைக்க மாட்டாங்களா? நான் என்ன கல்யாண ரிஷப்ஷனுக்கா போகப் போறேன்? புரிஞ்சுக்காம பேசினால் என்ன பண்ணுவது என்று அவளுக்குச் சலிப்பாக இருந்தது.

ஆனால் அவனது ஆசையைப் பூர்த்தி செய்யும் விதமாக அவள் அதையே அணிந்து கொள்ள முடிவெடுத்தாள். முதலில் காதணியை அணிந்தாள். டிரஸ்ஸிங் டேபிளின் முன் நின்று பார்வையிட்டாள். அதன் ஒளிவீச்சு அவளது கன்னத்தில் பட்டுத் தெறித்தது. தன் முகத்தை இப்படியும், அப்படியும் அசைத்துப் பார்த்து ரசித்தாள். அந்தக் கம்மல் அவள் முகத்திற்கும் அவள் உடுத்தி இருந்த புடவைக்கும் மிகப் பொருத்தமாக இருப்பதைக் கண்டு கணவனின் ரசனையை மனதினுள் பாராட்டிக் கொண்டாள்.



கழுத்தில் அந்த நெக்லஸை அணிந்தாள். 'விலை உயர்ந்த பொருள்... அதை விட கணவனின் அன்புப் பரிசு... சரியாகக் கொக்கியை மாட்டி இருக்கோமா என்று அவரைச் சரி பார்க்கச் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் நழுவிக் கீழே விழுந்து தொலைந்துவிடும்' என்று நினைத்துக் கொண்டாள்.

அப்பொழுது மித்ரன் அறைக்குள் நுழைந்தான்.

''நீங்க கொஞ்சம் இந்தக் கொக்கியைச் சரியா மாட்டி விடுங்க'' என்று டிரஸ்ஸிங் டேபிள் முன் நின்றவாறே சொன்னாள்.

அவளருகே வந்தவன் அவளது நீண்ட கூந்தலை ஒதுக்கி, அவளது கழுத்தில் இருந்த நகையின் கொக்கியை சரி பார்க்க ஆரம்பித்தான். கணவனின் விரல்கள் தன் மேல் பட்டவுடன் அவளது மேனி கூசிச் சிலிர்த்தது. மித்ரனின் விரல்களோ அவளது பட்டு மேனியில் இருந்து நகர மறுத்தது. நிமிர்ந்து கண்ணாடியில் தங்களது பிம்பத்தைப் பார்வையிட்டான். மனைவியின் வெட்கம் ததும்பிய முகம் அவனை இம்சித்தது. அவளை பின்னோடு அணைத்து அவளது கன்னத்தோடு கன்னம் வைத்து இழைந்தான்.

சில நிமிடங்கள் இந்த மோன நிலை நீடிக்க... கண் விழித்துப் பார்த்தவன் மனைவியின் கிறங்கிய தோற்றத்தில் மேலும் கிறங்க... ஆனால் செய்ய வேண்டிய வேலைகள் நினைவிற்கு வர அவளது கன்னத்தில் தன் இதழ் பதித்து நிமிர்ந்தவன் அவளிடம் இருந்து விலகி அவளைக் கீழே அழைத்துச் சென்றான்.

''நாங்களும் அந்தப் பக்கமாகத் தான் போறோம். அதனால நானே உன்னைக் கொண்டு வந்து விடுறேன்''

என்று சொல்லி அவளையும், தயாராகக் காத்திருந்த தாயையும் அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

# 22

மித்ரன் தனது 'ஆடி' காரை வெளியே தயாராக நிறுத்தி இருப்பதைப் பார்த்த சஹானா, 'இதை இவர் தானே ஓட்டுவார். டிரைவரை ஓட்ட அனுமதிக்க மாட்டாரே' என்று நினைத்துக் கொண்டே,

''என்னங்க நீங்க ஓட்டப் போறீங்களா? முத்தண்ணன் இல்லையா? அந்தக் காரையும் காணலை...'' என்று கேட்டாள்.

''அண்ணன் அந்தக் காரை மெக்கானிக் ஷெட்டுக்கு எடுத்துட்டுப் போயிருக்கார் மா'' என்று பொய் சொன்னான். அந்தக் கார் சஹானா வீட்டிற்கு அவர்களது தேவைக்காகச் சென்றிருந்தது.

பார்வதி பின்னால் சென்று அமரவும், சஹானாவும் பின்னிருக்கைக்குச் செல்ல பார்வதி அவளை முன்னே சென்று ஏறும்படி பணித்தார். அவர் சொல்படியே அவள் முன்னே ஏற அவர்கள் மூவரும் பொதுவான விஷயங்களைப் பேசியபடியே சென்றார்கள்.

பார்ட்டி நடக்கும் ஹால் இருக்கும் வளாகத்திற்குள் சென்று கார் நின்றதும் ஒன்றும் சொல்லாது பார்வதி காரில் இருந்து இறங்கிச் சென்றார்.

என்ன அத்தை சொல்லிக்காமல் கிளம்புறாங்க என்று ஆச்சரியமாகப் பார்த்தவள் கணவனிடம் திரும்பி,



''சரிங்க நீங்க அத்தை கூடப் போங்க. நான் பக்கத்தில் உள்ள ஷாப்பிங் மால் தான் போகணும். நான் நடந்து போய்க் கொள்கிறேன்'' என்று சொல்லி சஹானா இறங்க முற்பட்டாள்.

அவளது கை பற்றி தடுத்து நிறுத்தியவன், ''ஒரு நிமிஷம். நான் உன்கிட்ட கொஞ்சம் பேச வேண்டியிருக்கு'' எனறான்.

என்ன விஷயம் எனப் புரியாமல் பார்த்தவளிடம், ''உன் பிரண்ட்ஸ் பக்கத்து மாலில் இல்லை. மேலே உள்ள ஹாலில் தான் இருக்காங்க. இது உங்க பிரண்ட்ஸ் கெட் -டுகேதர் இல்லை. நாம ஹோஸ்ட் பண்ணுற பார்ட்டி, நடந்து முடிந்த நம்ம கல்யாணத்தை உன் பிரண்ட்ஸிடம் அறிவிக்கத்தான் இந்தப் பார்ட்டி'' என்றான்.

அவனது பேச்சில் அதிர்ந்தவளின் கைகள் நடுங்கியது. கைகள் சில்லிட்டுப் போக ஆரம்பிக்கவும் அவளது கைகளைப் பிடித்திருந்தவன், ''இப்போ தேவை இல்லாமல் எதுக்கு சனா பயப்படுகிறாய்? நீ இப்படி எல்லாம் பயப்படுவாய் என்று தான் நான் காலையிலேயே இதை உன்கிட்ட சொல்லலை. எனக்கும் அம்மாக்கும் இந்த பார்ட்டியை ஏற்பாடு செய்யுற வேலை இருந்துச்சு. அதனால எங்களால உன் கூட வீட்டில் இருக்க முடியாது. நீ தனியா பயந்துக்கிட்டு இருப்பாய் என்று நினைத்துத் தான் இப்ப வந்து சொல்லுறேன்'' என்று சொல்ல அவள் அவனை நிமிர்ந்து கூடப் பாராது கலங்கிப் போய் அமர்ந்திருந்தாள்.

மனைவியின் கலங்கிய முகத்தைப் பார்த்தவன் அவளைத் தேற்ற எண்ணி, ''நிமிர்ந்து என் கண்ணைப் பாரு'' என்று அவளை வற்புறுத்தித் தனது கண்களைப் பார்க்க வைத்தான்.

அவள் ஒன்றும் பேசாது அவனை நிமிர்ந்து பார்க்க....

அவன் அவள் கண்களை நேராக நோக்கியவாறே, ''என் மேலே உனக்கு நம்பிக்கை இருக்கு தானே?'' எனக் கேட்க,

''ம்ம்ம் உங்களை மட்டும் தான் நான் நம்புவேன். நேத்து கூட நீங்க என் பக்கத்திலே இல்லையேன்னு தான் நினைச்சேன்'' என்றாள்.

மனைவியின் கூற்றில் முகம் பிரகாசமுற, ''அப்புறம் ஏன்டா உனக்குத் தேவையில்லாத பயம். நான் பார்த்துக் கிறேன்.''

''உங்களுக்கு எப்படித் தெரிஞ்சது? காவ்யா உங்க கிட்ட ஏதாவது சொன்னாளா?''

''இல்லை. நீ தான் ஜுரத்திலே எல்லாம் சொன்னாய். அதன் விளக்கத்தைத் தான் காவ்யா சொன்னாள்.''

''அந்த மேகலா...'' என்று அவள் இழுக்க,

''அவ எல்லாம் மனுஷ உணர்வுகளை மதிக்கத் தெரியாத ஒரு ஜந்து. அவளைப் பார்த்து நீ அலட்சியம் தான் காட்டணுமே ஒழிய பயந்து நடுங்கக் கூடாது. அவளுக்கும் ஸ்பெஷல் இன்விடேஷன் போயிருக்கு. பார்த்துக்கலாம் டா. முறையா என்னைக்கோ அறிவிச்சு இருக்கணும். தேவையில்லாத பேச்சுக்களைத் தவிர்த்து இருக்கலாம். ம்ம்... சரி இனி வருவதையாவது தடுப் போமே!'' என்று பதிலளித்தான்.

''எல்லாம் என்னால தானே?''

''அதை விடு. இப்போ எதை நினைச்சும் கவலைப் படாதே. முகத்தை சிரிச்ச மாதிரி வைச்சுக்க'' என்று சொல்லி டாஷ் போர்டைத் திறந்து அதில் இருந்த குங்குமச் சிமிழை அவள் புறம் நீட்டினான்.



அவன் என்ன சொல்ல வருகிறான் எனப் புரிந்து கொண்டவளாய் அதில் இருந்த குங்குமத்தை எடுத்துத் தன் வகிட்டில் வைத்துக் கொண்டாள். அவளுக்கு விரலைத் துடைக்க காரில் இருந்த டிஷ்யூ பேப்பரை எடுத்துக் கொடுத்து விட்டுக் காரில் இருந்து இறங்கினான்.

தூரத்தில் காவ்யா இவர்களை நோக்கி வந்து கொண் டிருந்தாள். திரும்பி மனைவியைப் பார்க்க... அவள் காரினுள்ளே இருந்தாள். காரில் இருந்து இறங்காமல் என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்று பார்வையிட் டான். அவளோ கார் கண்ணாடியில் தான் சற்று முன் வைத்த பொட்டை நேர் செய்து அழகு பார்த்துக் கொண் டிருந்தாள்.

அருகில் காவ்யா வரவும், சஹானா காரில் இருந்து வெளியேறினாள்.

''வாங்கண்ணா. என்ன சொல்லுறா என் லூசு பிரண்ட்?'' என்று காவ்யா கேட்டவுடன், அவளை சஹானா முறைத்துப் பார்த்தாள்.

''நாலு வருஷம் முன்னால வரைக்கும் நான் நல்லா தாங்க இருந்தேன். என்னைக்கு காவ்யா கூட சேர ஆரம்பிச்சேனோ அன்னைக்கே என் மறை கழண்டு போச்சுன்னு சொல்லுறாள்'' என்று மித்ரன் காவ்யாவின் காலையே வார,

''ஆகா! ஒண்ணு கூடிட்டாங்கய்யா! ஒண்ணு கூடிட் டாங்க'' என்றவள் சஹானாவின் புறம் திரும்பி, ''செம அழகா இருக்கே சகி! இந்த புடவை உனக்கு ரொம்பப் பொருத்தமா இருக்கு'' என்று பாராட்டினாள்.

அவளது பாராட்டைக் கேட்டுப் புன்னகைத்த வண் ணம் சஹானா கணவனை நோக்கினாள். மனைவியின்

கண்களைச் சந்தித்தால் நம்மால் வேறு எதைப் பற்றியும் சிந்திக்க முடியாது என்று தெரிந்ததினாலே அவன் தன் பார்வையை அவள் புறம் திருப்பாது காவ்யாவைப் பார்த்து, ''காலையில இருந்து நீ போன் அட்டெண்ட் பண்ணியே வெறுத்துப் போயிருப்பியே!'' என்றான்.

''ஐயோ! அந்தக் கொடுமையை ஏன் கேட்குறீங்க. கேள்வி மேல கேள்வி கேட்டு என் காதுல ஓட்டை போட்டு விட்டாங்கன்னா பார்த்துக்கோங்க. பேசாமல் போனை ஸ்விட்ச் ஆஃப் பண்ணிடலாமான்னு கூட யோசிச்சேன். அப்புறமா என்னை விட்டுட்டு இவளை வேற எந்த வழியிலாவது பிடிக்க முயிற்சி எடுப்பாங்களோன்னு தான் பல்லைக் கடிச்சுப் பொறுத்துக்கிட்டேன்.''

''சாரி மா. எல்லோரையும் பாமிலியோட வரச் சொன்னியா? வீடு தூரமா இருக்குறவங்களுக்கு எல்லாம் வண்டி ஏற்பாடு பண்ணியிருக்கிறதா சொல்லிட்டே தானே?''

''எல்லாத்தையும் நீங்க தான் மெயில் பண்ணிட்டீங்களேண்ணா. நானும் என் பங்குக்குப் போனிலும் சொல்லிட்டேன்.''

''ஹே! ரொம்ப தாங்க்ஸ் காவ்யா'' என்று சஹானா சொன்னவுடன்,

''என்னது தாங்க்ஸா?!'' என்று அவள் அலறவும், சஹானா 'நாம அப்படி என்ன தப்பா சொல்லிட்டோம்' என்று புரியாது விழித்தாள்.

''அடிப் பாவி! நான் செஞ்ச வேலைக்குச் சின்ன தாங்க்ஸ் சொல்லி சமாளிச்சுடலாம்ன்னு பார்த்தியா? மகளே, ஒழுங்கு மரியாதையா எனக்குக் கல்யாணம்



ஆகும்போது எல்லா வேலையையும் இழுத்துப் போட்டுச் செய்யுற... இல்ல...'' என்று மிரட்டினாள்.

அவளது மிரட்டலைக் கேட்டு சஹானா சிரித்துக் கொண்டே, ''செஞ்சுட்டா போச்சு!'' என்று சொன்னாள்.

காவ்யா, ''அண்ணா, எல்லோருமே சஹானா ஹஸ்பண்ட்... அதாவது நீங்க எப்படி இருப்பீங்கன்னு தெரிஞ்சுக்கத்தான் ரொம்ப ஆர்வமா இருக்காங்க'' என்றாள்.

''அடடா! நீ இதை முதல்லயே சொல்ல வேண்டாமா காவ்யா. நான் எனக்கு ஒரு இன்ட்ரோ சாங்கை கவிஞர் வாலியிடம் எழுதச் சொல்லி ரஹ்மான் கிட்ட மியூசிக் போட்டு வாங்கியிருப்பேனே! இப்ப வந்து சொல்லுறியா மா. டூ லேட்'' என்று அங்கலாய்த்தான்.

சஹானா, ''ஏன் சார்க்கு சினிமால வந்த பாட்டெல்லாம் ஆகாதா? புதுசு தான் வேணுமோ?'' என்று மித்ரனைப் பார்த்துச் சொன்னவள் காவ்யாவிடம், ''அங்க மியூசிக் சிஸ்டம் ஆப்பரேட் பண்ணுறவர்கிட்ட போய் ஏதாவது ராமராஜன் பாட்டை இவர் நுழையும் போது போடச் சொல்லணும்'' என்றாள்.

''இது தேவையாண்ணா?'' என்று காவ்யாவும்,

''எனக்கு இருக்குற ரசிகர் கூட்டத்தைப் பார்த்துப் பொறாமைப் படாதே சனா'' என்று மித்ரனும் கூற, அவனுக்கு ஒரு முறைப்பைப் பரிசாகக் கொடுத்தாள் அவனது மனம் கவர்ந்தவள்.

திடீரென்று நினைவிற்கு வந்தவனாய் மனைவியைப் பார்த்து, ''ஹேய்! சொல்ல மறந்துட்டேன். உன் மெயில் ஐ.டி.யில இருந்து தான் எல்லோருக்கும் மெயில் பண்ணினேன். நீ பாட்டுக்கு யாராச்சும் கேட்கும் போது முழிக்காதே'' என்றான்.

''என் ஐ.டியா? பாஸ் வேர்ட் எப்படிக் கண்டு பிடிச்சீங்க? செக்யூரிட்டி கொஸ்ட்டினா?'' என்று கேட்க அவன் ஆமோதிப்பாய் தலையசைத்த நொடி, மித்ரனின் கைப்பேசி சிணுங்கியது.

''நீங்க மேலே ஹாலுக்குப் போங்க!'' என்று சொல்லி அவர்களுக்கு விடை கொடுத்தவன் அந்த அழைப்பை ஏற்றுப் பேச ஆரம்பித்தான்.

'மிதுன்' என்ற செல்லப் பெயரை எப்படிக் கண்டு பிடித்தார்? என்று சஹானா குழம்பியவளாய் கணவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே காவ்யாவுடன் நடந்தாள்.

மித்ரன் என்ன என்பது போல் புருவம் உயர்த்திக் கேட்க, ஒன்றுமில்லை என்று தலையசைத்த வண்ணம் சென்றாள்.

காவ்யாவுடன் செல்லும் பொழுது, ''நம்ம பிரண்ட்ஸ் யார்கிட்டயும் இவரைப் பற்றிச் சொல்லலையா? ஏன்?'' என்று கேள்வி எழுப்பினாள்.

''இல்லை சகி. அண்ணா என்ன முடிவு பண்ணி வைச் சிருக்காங்கன்னு தெரியாமல் நான் எதுவும் சொல்லக் கூடாதுன்னு சொல்லவில்லை.''

''ஓ! உன்னை எல்லோரும் ரொம்பத் திட்டினாங் களா?''

''அப்படி எல்லாம் இல்லை. நீ கல்யாணத்துக்குப் போனியா காவ்யான்னு தான் எல்லோரும் முதல்ல கேட்டாங்க. எனக்கும் விஷயம் தெரியாது என்பதிலேயே பாதி சமாதானம் ஆகிட்டாங்க.''

''ம்ம்... நம்ம க்ளோஸ் பிரண்ட்ஸ் எல்லாம் ரொம்ப கடுப்பா இருப்பாங்க இல்ல...''



''அதெல்லாம் இல்லை. இவ்வளவு தூரம் யோசித்த அண்ணன் அதை யோசிக்காமல் இருப்பாரா? அவங்க எல்லோருக்கும் நாங்க எல்லோரும் நேரில் போய் அழைத் தோமாக்கும்!''

''நாங்கன்னா... யாரெல்லாம்?''

காலையில் இருந்து நடந்தது அனைத்தையும் காவ்யா அவளிடம் பகிர்ந்தாள்.

மேலே சென்று பார்த்த பொழுது அவள் குடும்பத்தினர் அனைவரும் அங்கே நின்றிருந்தார்கள். ஆங்காங்கே சபாரி சூட் அல்லது டை கட்டி என்று நன்றாக உடை யணிந்த கம்பெனி ஆட்கள் நின்று கொண்டு வேலை களை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தனர்.

இயற்கைப் பூக்கள் கொண்டு மேடையை அலங்கரித் தார்கள். மெல்லிய ஒலியில் பாடல் ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தது. நான்கு பெரிய டி.வி.களை வைத் திருந்தார்கள். அதில் எந்தக் காட்சியும் ஒளிபரப்பப்பட வில்லை.

''சகி, அண்ணா உன்னை உங்க அம்மா கூடவோ, அத்தை கூடவோ இருக்கச் சொன்னார். மேடையில் கல்யாண விஷயம் அறிவிக்குற வரைக்கும் எந்த பிரண்டு கூடவும் உன்னைப் பேச வேண்டாம்ன்னு சொல்லச் சொன்னார்'' என்று காவ்யா சொன்னதற்கு,

''ம்ம் சரி'' என்று பதில் சொன்னவள் தனக்காக அவர் எந்த அளவுக்கு மெனக்கெடுறார் என்ற நினைத்துப் பெருமிதம் அடைந்தாள்.

ஒவ்வொருவரையும் இன்முகத்துடன் வரவேற்று அமர வைத்து அவர்களது விருப்பம் அறிந்து பழச்சாறோ அல்லது காபியோ வழங்கப்பட்டது.

மித்ரன் மேகலாவும், மனோகரனும் வருகிறார்களா என்பதிலேயே குறியாக இருந்தான். அவனுக்கு காவ்யா ஏற்கனவே அவர்களது குருப் போட்டோவில் மேகலாவைக் காட்டியிருந்தாள்.

மேகலா ரொம்பவே திண்ணக்கத்துடன் வந்தாள். நேற்று சஹானா தனக்குத் திருப்பிக் கொடுக்காமல் சும்மா சென்றதாலேயே அவள் தனது கண்டுபிடிப்பு சரியே என்று எண்ணினாள். அதாவது சஹானாவின் கணவன் ஒரு பணக்காரக் கிழவன் என்று உறுதியாக நம்பினாள்.

சஹானாவை எள்ளி நகையாடவே அவள் மெனக்கெட்டு இந்த பங்ஷனுக்கு வந்தாள்.

மனோகரன் என்ன தான் நடக்குது என்று பார்ப்போமே என்ற ஆர்வத்தில் வந்தான். உள்ளே நுழைந்ததுமே வருகிறவர்களை வரவேற்கும் ஆட்களின் ஆடையே... இவர்களே இப்படி என்றால்... சஹானாவின் கணவன் பெரிய பணக்காரனாகத் தான் இருப்பான் என்று மனோகரனை எண்ண வைத்தது.

அனைவரும் சஹானாவின் கணவனைத் தான் தேடித் தேடிக் களைத்தார்கள். மித்ரனோ அந்த ஹாலுக்குள் நுழையவே இல்லை. அனைத்தையும் பின் இருந்து இயக்கிக் கொண்டு இருந்தான்.

மனோகரனும், மேகலாவும் வந்து விட்டார்கள் என்பதை காவ்யா மித்ரனுக்குப் போன் செய்து தெரிவித்தாள். சரியாக ஏழு மணிக்கு சஹானாவின் தந்தை மேடை ஏறினார்.

அவர் மேடை ஏறியவுடன் அவரை யார் எனறு அறியாத மேகலா, 'இந்த மேகலாவா கொக்கா? நான் தான் சொன்னேன் இல்ல... சஹானா கணவன் கிழவனாகத் தான் இருப்பான் என்று' என நினைத்து மனம் குதூகலம் அடைந்தாள்.



வரதராஜனுக்கு மைக் வழங்கப்பட்டது. அவர் மைக்கைப் பிடித்துப் பேச ஆரம்பித்தார்.

''எல்லோருக்கும் வணக்கம் நான் தான் சஹானாவோட அப்பா'' என்று சொன்னதும் மேகலாவின் முகம் ஏமாற்றத்தால் சுருங்கியது. ஆனால் அப்பொழுதும் அவள் தன் நம்பிக்கையைத் தளர விடவில்லை. சஹானா கணவன் வரட்டும் அப்புறம் பார்க்கலாம் என நினைத்துக் கொண்டாள்.

வரதராஜன் தன் பேச்சினைத் தொடர்ந்தார்.

''என் பொண்ணு கல்யாணம் ஜனவரி மாசம் நடந்தது. அவசர அவசரமா நடந்தது. அதனால உங்க யாருக்கும் சொல்ல முடியலை. கல்யாணம் ஆகிடுச்சுன்னு தெரிஞ்சா அவ கூட சரியாப் பேசாமல் நீங்க எல்லாம் அவளை ஒதுக்கி வைச்சிடுவீங்களோன்னு நினைச்சுத் தான் உங்க யாரையுமே... ஏன் என் பொண்ணோட ரூம் மேட்டைக் கூட நாங்க கூப்பிடலை.

இப்படி அவசரமா, யாருக்கும் தெரியாமல் அப்படி ஒரு கல்யாணம் ஏன் பண்ணுனீங்க... இந்தக் கேள்வி தானே உங்க எல்லோர் மனசிலும் இப்போ ஓடுது. சொல்லுறேன...

டிசம்பர் மாசக் கடைசியில் என மனைவி, பிள்ளைங்க எல்லோரும் கோயிலுக்கு டூர் போயிருந்தாங்க. அப்போ எனக்கு ஹார்ட் அட்டாக் வந்தது. அது எனக்கு வந்த ரெண்டாவது அட்டாக்'' என்று சொன்னதும் கேட்டுக் கொண்டிருந்த சஹானா திடுக்கிட்டாள்.

'அப்பா என்ன புதுக் கதை சொல்கிறார்!' என நினைத்தவள் அவரின் பேச்சினைக் கவனிக்க ஆரம்பித் தாள்.

''பை-பாஸ் சர்ஜரி பண்ணனும் அப்படின்னு சொன் னாங்க. பிரஷர், சுகர்ன்னு எல்லா வியாதியும் இருந்த தால எங்கே பிழைக்காமல் போயிடுவேனோன்னு பயம் வந்திடுச்சு. உலக ஞானம் இல்லாத மனைவி, கல்யாண வயசிலே பொண்ணு, ஸ்கூல் படிப்பைக் கூட முடிக்காத பையன்... இவங்களை யார் பார்த்துக்குவாங்கன்னு ரொம்ப கவலையாகிப் போச்சு.

எனக்குக் கூடப் பொறந்தங்க யாரும் இல்லை. என் மனைவிக்கு ஒரே ஒரு அண்ணன் மட்டும்தான். ஆனால் அவரும் கூட அமெரிக்காவிலே இருக்கார். ஓரளவுக்குத் தான் நான் பணம் சேர்த்து வைச்சிருந்தேன். எடுத்துச் செய்ய ஆள் வேண்டுமே! என் குடும்பப் பொறுப்பு களைச் சுமக்க பொறுப்பான நபர் வேண்டுமேன்னு கதி கலங்கி நின்னேன்.

'ஒரு வாசல் மூடினால் மறுவாசல் திறப்பான் இறை வன்'ன்னு சொல்லுவாங்க. அதே மாதிரி என்னைப் படுக் கையில் தள்ளின ஆண்டவன் என் மாப்பிள்ளையைக் கண்ணிலே காட்டி என்னை எழுப்பி உட்காரவும் வைச் சான்.

நான் ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகியிருந்த சமயம் என் நண்பன் மகாதேவன் தான் என்னைப் பார்த்துக் கிட்டான். அவனிடம் என் பொண்ணு கல்யாணத்தைப் பற்றி புலம்பின போது தான் அவன் மாப்பிள்ளையைப் பத்தின விவரங்களை என்னிடம் சொன்னான்.

டேய் வரதா! சஹானா கல்யாணம் பத்தி கவலைப் படாதே. எனக்குத் தெரிஞ்ச பையன் இருக்கான்...



ரொம்ப நல்ல குடும்பம், நல்ல குணம், நல்ல வசதின்னு எல்லா சிறப்பும் உள்ள வரன். அவன் நம்ம சஹானாவை காலேஜிலே பார்த்து இருக்கான். அவனுக்குப் பிடிச் சிருக்கு அதனால அவ கல்யாணத்தைப் பத்தி நீ மனசைப் போட்டுக் குழப்பிக்காதேன்னு சொன்னான்.

நான் உடனே மாப்பிள்ளையை வீட்டுக்கு வரச் சொன் னேன். அவரும் வந்தார். என் பொண்ணை என் ஆப ரேஷனுக்கு முன்னாலே கல்யாணம் பண்ணிக்கிறீங் களான்னு கேட்டேன்.

ஆனா அவர் உங்க பொண்ணைத் தான் நான் கண் டிப்பாக் கல்யாணம் பண்ணுவேன். நீங்களும் உடம்பு தேறி வாங்க. அவளும் படிச்சு முடிக்கட்டும். அதுக்கு அப்புறம் கல்யாணத்தை வைச்சுக்கலாம்ன்னு சொன் னார்.''

வரதராஜன் மடை திறந்த வெள்ளம் போல் தனது மனதில் உள்ளவற்றை நிறுத்தாது கொட்டிக் கொண்டு இருந்தார். தவறே செய்யாது... தங்கள் குடும்பத்திற்கு உதவி செய்த தன் கணவனை என்னவெல்லாம் சொல்லி யிருக்கிறோம் என நினைத்தவுடன் சஹானாவின் கண் களில் கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

''ஆறு மாதம் கழித்துக் கல்யாணம் செய்து கொள் கிறேன் என்று சொன்ன என் மாப்பிள்ளையிடம் ஒரு தகப்ப னோட நிலையில இருந்து யோசிச்சுப் பாருங்கன்னு சொல்லி... அவரை வற்புறுத்தி சம்மதிக்க வைச்சேன். என் உடல் நிலையை என் வீட்டினரிடம் இருந்து கூட மறைச்சிட்டோம். மாப்பிள்ளையின் ஜாதகத்திலே குரு பலன் முடியப் போகுதுன்னு பொய் சொல்லி கல் யாணத்தை உடனடியா முடிச்சிட்டோம்.

சும்மா சொல்லக்கூடாது. என் மாப்பிள்ளையும் அவங்க அம்மாவும் எனக்காக எவ்வளவோ விட்டுக் கொடுத் தாங்க. சம்பந்தி அம்மாக்கு இருப்பதோ ஒரே மகன். தன் மகன் கல்யாணதைத எப்படி எல்லாம் நடத்தணும் என்று ஆயிரம் கற்பனை பண்ணி வச்சு இருந்திருப்பாங்க. ஆனால் எனக்காக அதை எல்லாம் ஒதுக்கி வைச்சிட்டு அவசர அவசரமா இந்தக் கல்யாணத்தை பண்ணி வைச் சாங்க'' என்று சொல்லி முன்னிருக்கையில் அமர்ந்திருந்த பார்வதியை நோக்கிக் கை கூப்பினார்.

கேட்டுக் கொண்டிருந்த அனைவரும் நெகிழ்ந்து போய் அமர்ந்திருந்தனர்.

பார்வதி வரதராஜனைப் பார்த்துக் கைகளைக் கீழே இறக்குங்கள் என்று சைகை செய்தார். அங்கிருக்கும் மருமகளைச் சமாதானம் செய்யவும் மறக்கவில்லை.

''சஹானா நீ இப்போ அழுதாய் என்றால் மித்ரன் பட்ட கஷ்டத்துக்கு எல்லாம் பலன் இல்லாமல் போயி டும். அழாமல் சிரிச்ச முகமா இரு'' என்று சொல்லிக் கொண்டு இருக்கும் பொழுதே அவளது கைப்பேசிக்கு வந்த மித்ரனின் குறுந்தகவலும் அதையே வலியுறுத்த அவள் தனது கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''இப்போ என் மாப்பிள்ளையை உங்களுக்கு அறி முகப்படுத்துறேன்'' என்று வரதராஜன் சொன்னதும் மேடைக்கு அருகில் இருந்த கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த மித்ரன் மேடை ஏறினான்.

பார்த்துக் கொண்டிருந்த மேகலா 'இவனா?! இவனா சஹானாவின் கணவன்?!' என ஸ்தம்பித்துப் போய் அமர்ந்திருந்தாள். கல்லூரியில் அவன் பாடிய பாடலைக்



கேட்டு ஜொள்ளு விட்டக் கூட்டத்தில் அவளும் ஒருத்தி ஆயிற்றே!

சஹானா மேகலா பக்கம் திரும்பாது போனாலும் காவ்யா அவளை ஒரு ஏளனப் பார்வை பார்க்கத் தவற வில்லை!

வரதாராஜனிடம் இருந்து மித்ரன் மைக்கை வாங்கினான். வரதாராஜன் கீழிறங்கிப் போனார். மித்ரன் பேச ஆரம் பித்தான்.

''ஹாய் எவ்ரிஒன். உங்களில் சில பேருக்கு என்னைத் தெரியும். நான் தான் மித்ரன். உங்களை எல்லாம் கல்யாண சமயத்தில் கூப்பிட முடியாமல் போயிடுச்சு. சாரி. இந்த ரிசப்ஷனை உங்க காலேஜ் முடிஞ்ச உடனே நடத்தணும் என்று நான் முடிவு செய்து வைச்சிருந்தேன். ஆனால் என்னோட ஒரு புது ப்ராஜெக்ட் வேலையினால் நான் ரொம்ப பிஸியாகிட்டேன். அந்த வேலை நேத்து தான் முடிஞ்சது. அப்படி என்ன பிராஜெக்ட்ன்னு உங் களுக்குத் தோணலாம். அது பற்றித் தெரிஞ்சுக்கணும் என்றால் அடுத்த இந்தியா டுடே பத்திரிகையைப் பாருங் கள். அது பற்றிய செய்தியும், எனது பேட்டியும் அதில் வரும்'' என்று அவன் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே மேகலா எழுந்து வெளியே செல்ல ஆரம்பித்தாள்.

அவளை மித்ரனின் அலுவலக ஆட்கள் தடுத்து ஏதோ பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்த மித்ரன்... 'அவள் ஒரு விருந்தாளி... அதனால் அவளைச் சாப்பிட்டு விட்டுச் செல்லுமாறு உபசரித்துக் கொண்டு இருப்பார்கள்' என்று புரிந்தவனாய், தனது அலுவலகத்தாரை அவளை வெளியேப் போகவிடுமாறு மேடையில் நின்ற வண் ணமே சைகை செய்தான்.

என்னவென்று திரும்பிப் பார்த்த சஹானா அடைந்த நிம்மதிக்கு அளவே இல்லை. மேகலா விட்டால் போதும் என்று வெளியே விரைந்தாள்.

மித்ரன் தனது பேச்சினைத் தொடர ஆரம்பித்தான்.

''உங்களை எல்லாம் முதலிலேயே கூப்பிட்டுச் சொல் லாததுக்கு நானும், எனது மனைவியும் உங்க கிட்டே சாரி கேட்டுக்கிறோம்'' என்று சொன்னவன் சஹானா புறம் தனது கையை நீட்டி அவளை எழுந்து வருமாறு சைகை செய்தான்.

சஹானா மேடை ஏறி அவன் அருகே வந்து நிற்கவும் 'கெட்டி மேளம், கெட்டி மேளம்' என்ற குரல் ஒலித்தது. எல்லோரும் திகைத்துப் போய் பார்க்க... அந்த ஹாலில் வைக்கப்பட்டிருந்த நான்கு தொலைக்காட்சிகளிலும் மித்ரன் சஹானாவின் சங்குக் கழுத்தில் தாலி கட்டும் காட்சி ஒளிபரப்பப்பட்டது.

ஐந்து நிமிடங்கள் மட்டுமே வீடியோ காட்சி ஒளி பரப்பப்பட்டது. அதன் பின்பு அந்த நான்கு தொலைக் காட்சிகளிலும் அவர்களது திருமணம் மற்றும் ரிசப்ஷன் போட்டோக்கள் ஒவ்வொன்றாக வந்த வண்ணம் இருந்தது.

அவன் பேசி முடித்ததும் அவளது தோழிகள் அனை வரும் மேடை ஏறி அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித் தனர். சஹானா அவர்களிடம் மன்னிப்பை வேண்ட அனைவரும் அவளை அதை மறந்து விடுமாறு கூறிவிட் டனர். பின் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக அவர்களோடு போட்டோ எடுத்துக் கொண்டனர்.

'நல்லவேளை! சஹானா கணவன் நம்மை ஆள் வைத்து அடிக்கவில்லை' என மனோகரன் நினைத்துக்



கொண்டான். ஆனால் ஆள் வைத்துத் தான் ஒருவரை அடிக்க வேண்டுமா என்ன?!

ஆள் வைத்து அடிக்க மித்ரன் என்ன ரவுடியா? தாதாவா? அவன் பிசினஸ் மேன்! ஒருவரை எப்படி வீழ்த்த வேண்டும் என்ற சூட்சமம் தெரிந்தவன். தனது கம்பீரத் தால், பொறுப்பேற்றுக் காரியங்களை நடத்தும் விதத் தால், தனது பணபலத்தால், தன் மனைவிக்கு நேர்ந்த அவமானத்திற்கு சொற்கள் மூலம் எந்த பதிலடியும் கொடுக்காது தனது அதிவேக நடவடிக்கை மூலம் பதிலளித்த விதத்தால், இனி மனோகர் போன்றவர்களை தன் மனைவியின் அருகே கூட செல்ல முடியாமல் செய்து இருக்கிறானே! இது போதாதா?

பஃபே முறையில் சாப்பாடு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அனைவரையும் சாப்பிடச் சொல்லி மித்ரன் உபசரித்துக் கொண்டிருந்தான். அவனது அலுவலகத்தைச் சேர்ந்தவர்களும் அதைத் தான் செய்து கொண்டிருந் தனர். இருப்பினும் வந்தவர்களுக்கு மரியாதை கொடுக் கும் பொருட்டு தனிப்பட்ட முறையில் அவனும் கவனித்துக் கொண்டான்.

தனது குடும்பத்தினரையும் சாப்பிடச் சொன்னான். சஹானா தயங்க...

''நீ போய் சாப்பிட ஆரம்பி. நான் வந்து சேர்ந்துக் கிறேன்'' என்று சொல்லிவிட்டான்.

அரை மனதாக அவள் காளான் பிரியாணியை எடுத்து வந்து கரண்டியால் அளைந்துக் கொண்டிருக்க... அவளருகே வந்த மித்ரன் அவள் புறம் கை நீட்டி அவளது தட்டை வாங்கிச் சாப்பிட ஆரம்பிக்க அருகில் நின் றிருந்த பார்வதியும், அமிர்தமும் கண்டு கொள்ளாது

தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தனர். சஹானா வெட்கிப் போனாள். போதாத குறைக்கு அவன் வேறு அவளது காதில், ''இப்போதைக்கு இதைச் சாப்பிடுறேன்'' என்று கண்ணடித்துச் சொல்லிவிட்டுச் சென்றான்.

வெட்கத்தில் அவள் சிவந்து போய் நின்றாள். அதன் பின் தனது தோழிகளுடன் சென்று அரட்டை அடித்த வண்ணம் கணவனை ஒரு ஓரப் பார்வை பார்த்துக் கொண்டே ஒரு ஆர்வத்துடனே சாப்பிட ஆரம்பித்தாள்.

மித்ரன் தனது நண்பர்கள், காவ்யாவின் பெற்றோர், நவீன், சஹானா உடன் படித்த ஆண் நண்பர்கள் என்று அனைவரிடமும் சென்று பேசிக் கொண்டிருந்தான்.

அப்பொழுது முக வாட்டத்துடன் காணப்பட்ட அர்ஜுனைக் கண்டு அவனருகே சென்று அவன் தோள் மீது கைப்போட்டு மித்ரன் அவனைத் தனியே அழைத்துச் சென்று ஒரு ஓரமாக அமர வைத்து, ''என்ன அர்ஜுன், ஒரே சோக கீதம் வாசிக்குற? என்ன பிரச்சனை?'' என்று கேட்டான்.

சில நொடிகள் அமைதியாக இருந்த அர்ஜுன், ''சாரி மாமா'' என்று தன் மன்னிப்பை வேண்டினான்.

''என்னாச்சுடா? எதுக்கு சாரி?'' என்று மித்ரன் ஏகத் திற்கும் வியக்க,

''நீங்க தான் அப்பாக்கு பிரஷர் கொடுத்து இந்தக் கல்யாணத்தை முடிச்சு இருப்பீங்க என்று உங்க மேலே சந்தேகப்பட்டு நான் மகாதேவன் மாமா கிட்டே போய் கேள்வி எல்லாம் கேட்டேன். அப்புறம் உங்களைப் பார்த்த உடனே எனக்குப் பிடிச்சது. அதை விட உங்க அம்மா எங்க கிட்டே பழகின முறை ரொம்பப் பிடிச்சது. அதனால எங்கக்காவை நீங்க கல்யாணம்



பண்ணிக்கிறதுல எனக்கு இருந்த சந்தேகமும், வருத்தமும் மறைஞ்சது.

அப்புறம் அப்பா ஆஸ்பிட்டலில் இருக்கும்போது அப்பாவோட ஹெல்த் கண்டிஷனலா தான் கல்யாணம் அவசரமா நடந்த மாதிரி மட்டும் ஒரு வார்த்தை சொன்னீங்க. ஆனா அப்பக்கூட உங்களை எங்கப்பா தான் வற்புறுத்திச் சம்மதிக்க வைச்சதா சொல்லாமல் மறைச்சுட்டீங்க.

விஷயம் இப்படி இருக்க உங்களை நான் அன்னைக்கு சந்தேகப்பட்டது மனசுக்கு சங்கடமா இருக்கு மாமா. சாரி மாமா'' என்று வருத்தத்துடன் மொழிந்தான்.

''இது தானா விஷயம்? அர்ஜுன் நீ அன்னைக்கு சந்தேகப்பட்டது ஒரு மூணாம் மனுஷனான மித்ரனை. உன் மாமாவை இல்லை. இன்னும் சொல்லப் போனால் ஏன் என்னைச் சந்தேகமே படாமல் உங்க பொண்ணுக்கு என்னைக் கட்டி வைச்சீங்கன்னு போன வாரம் உங்க அப்பாவை நான் கேள்வி கேட்டேன். அட்லீஸ்ட் நீயாவது பொறுப்பா யோசிச்சு இருக்கியே. அதை நினைச்சுப் பெருமைப் படுடா!'' என்று மித்ரன் சொன்னவுடன்,

'நிஜமாவே நான் செஞ்சது சரியா?' என்பது போல் அவன் நிமிர்ந்து பார்க்க...

''ஹேய்! நான் சும்மா லூலாயிக்கு எல்லாம் உன்னைச் சமாதானம் செய்யலை. நிஜமாத் தான் சொல்லுறேன். அதைப் பற்றி எல்லாம் மறந்திடு. அப்புறம் அர்ஜுன், இது நாம நடத்துற பார்ட்டி. அதனால என்ன பிரச்சனை என்றாலும் அதை ஒதுக்கி வைச்சிட்டு இதைச் சிறப்பா செஞ்சு முடிக்கணும். உன் பிரண்ட்சை எல்லாம் கூட்டி வைச்சிட்டு நீ இப்படி மோசமா போஸ் கொடுத்துட்டு

இருந்தால் அவங்களுக்கு கடுப்பாகிடாது. சியர் அப் மேன்!'' என்று சொன்னான்.

அர்ஜுன் எந்த பதிலும் கூறவில்லை.

ஓரளவு மட்டுமே தெளிவடைந்திருந்த அர்ஜுனைப் பார்த்து மித்ரன், ''முடி வளர்ந்தா வெட்டிக்கலாம்; நகம் வளர்ந்தா வெட்டிக்கலாம்; ஆனால் அறிவு வளர்ந்தால்?'' என்று கேள்வி கேட்டு நிறுத்த,

'இப்போ எதுக்கு இப்படி ஒரு கேள்வி?' என்பது போல் நோக்கிய அர்ஜுனைப் பார்த்து மித்ரன் கொஞ்சம்கூடச் சிரிக்காமல், ''ஆனா டோன்ட் வொரி அர்ஜுன். உன்னோட நல்ல மனசுக்கு அறிவு எல்லாம் வளராது'' என்று சொன்னதும்,

''மாமா...'' என்று அர்ஜுன் பல்லைக் கடிக்க,

''ஹேய் ஆர்ஜுன் நீ சிரிப்பேன்னு நினைச்சேன். கடுப்பாகிறே... சரி வேற ஒண்ணு சொல்லுறேன். அதுக்காவது உனக்குச் சிரிப்பு வருதான்னு பார்க்கலாம்'' எனவும்,

அர்ஜுன் தனது இரு கைகளால் கும்பிடு போட்டவாறே, ''வேணாம் மாமா... நீங்க ஜோக்குங்குற பேரிலே என் இமேஜை டேமேஜ் பண்ணதெல்லாம் போதும். அங்க ஒருத்தி என் தம்பி கிட்ட தான் பேசுவீங்களா! என்கூட எல்லாம் பேச மாட்டீங்களான்னு உங்களைத் தாக்கத் தயாரா இருக்காள். அவ கிட்ட இருந்து முதல்ல உங்களைக் காப்பாத்திக்கோங்க. ஏன்னா எனக்கு இருக்குறது ஒரே ஒரு மாமா'' என நக்கல் பண்ணினான்.

மித்ரன் சஹானாவின் பக்கம் பார்க்க... அங்கே அவள் கண்களில் பொறாமையுடன் பார்த்துக் கொண்டிருப்



பதைப் பார்த்து அர்ஜுனிடம் சிரித்துக் கொண்டே விடைபெற்றுத் திரும்பி நடக்க,

மித்ரனின் கை பிடித்துத் தடுத்து நிறுத்தினான் அர்ஜுன். என்னவென்று மித்ரன் திரும்பிப் பார்க்க...

''தாங்க்ஸ் மாமா. தாங்க்ஸ் பார் எவ்ரிதிங்'' என்று முகம் கொள்ளாப் புன்னகையுடன் அர்ஜுன் சொல்ல, மித்ரன் அவனைத் தோளோடு அணைத்து விடுவித்து விட்டுச் சென்றான்.

இதை எல்லாம் தூரத்தில் இருந்து வரதராஜன் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு அவர்கள் எது குறித்துப் பேசினார்கள் என்று தெரியாது. ஆனால் மகனின் கலங்கிய முகம் மருமகன் வந்து பேசியவுடன் தெளிவடைந்தது என்பது மட்டும் தெளிவாகப் புரிந்தது.

'என் மகளுக்கோ, மகனுக்கோ என்ன பிரச்சனை என்றாலும் உடனுக்குடன் தீர்க்கிறார்... அமிர்தத்திற்கு வலது கையில் அடிபட்டு இருப்பதால் இடது கையால் தட்டில் இருந்து ஸ்பூனால் சாப்பிட முடியாது என்று நினைத்து இந்தக் கூட்டத்திலும் அவளுக்கு ஒரு பவுல் வர வைத்துக் கொடுத்து இருக்கிறார்... இவரைப் பற்றி நான் விசாரிக்காமல் என் பொண்ணுக்குக் கட்டி வைச்சுட்டேன் என்று என்கிட்டே வந்து சண்டை போடுறார்.

இவரை விட நல்ல மாப்பிள்ளையை நான் எங்கே போய் பிடிப்பது?' என்று மனதினில் சந்தோஷமாக அலுத்துக் கொண்டார்.

சஹானாவின் தோழிகள் அருகே வந்த மித்ரன் அவர்களைப் பார்த்து, ''உங்களில் ஹேமா யாரு?'' என்று கேட்டான்.

''உங்களுக்கு எப்படி ஹேமாவைத் தெரியும்?'' என்று காவ்யாவும், சஹானாவும் ஒரு சேர கேட்டனர் என்றால்,

அந்த ஹேமாவோ, ''நான் தான் ஹேமா. என்னை எப்படி...'' என்று ஒரு ஆச்சரியத்துடன் இழுக்க,

''ஹேய் சாரி! எனக்கு உங்களைத் தெரியாது. ஆனால் நான் உங்களுக்கு ஒரு நிக் நேம் வைச்சு இருக்கேன்'' என்று சொன்னவுடன் அனைவருமே ஒரு ஆச்சரியத்தோடு அவனை ஏறிட்டனர்.

''நான் காலேஜ் பங்ஷனில் பாட்டு பாடவும் நீங்க சஹானாக்கு போன் பண்ணி இருந்தீங்களா... நீங்க பேசிட்டு வைச்சதும் உங்களைக் கீமா உருண்டையாக்கி என் வைஃப் பொறிச்சு எடுத்துட்டாள்'' என்று சொன்னதும் சஹானா தவிர அனைவரும் சிரித்தனர்.

சஹானா, ''என்னமோ என்னை ரொம்ப பாதுகாக்குறார்ன்னு சொன்னீங்களே... பார்த்தீங்க இல்ல... அவர் பாதுகாக்குற லட்சணத்தை'' என்று தன் தோழிகளைப் பார்த்துச் சொன்னதும்,

''மேகலா மாதிரி ஆளுங்ககிட்ட இருந்து தான் மா உன்னைப் பாதுகாக்கணும். பிரண்ட்ஸ் கிட்ட எல்லாம் போட்டு தான் கொடுக்கணும்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது,

காவ்யா, ''அண்ணா உங்க ஆபிஸ் ஸ்டாப்...'' என்று மித்ரனின் பின்பக்கம் கை காட்ட...

அங்கே மித்ரனின் பி.ஏ. தயங்கி நிற்பதைப் பார்த்து மித்ரன் தன்னருகே வருமாறு அழைத்தான். வந்தவன், ''சார் அந்த ஷர்மா உங்க அப்பாயின்மென்ட் கேட்டு போன் மேல போன் போடுறார். எப்போ கொடுக்கட்டும்? நாளைக்கு...'' என்று கேட்டு நிறுத்தினான்.



''நாளைக்கா'' என்று மித்ரன் தொடங்கும் பொழுதே சஹானா அவனைப் பார்த்து முறைக்க...

''நாளைக்கு அப்பாயின்மென்ட் கொடுக்க உங்க பாஸ் ரெடி தான். ஆனா என்னை அனுப்பி வைக்க என் பாஸ் ரெடி இல்லை போலவே!'' என்று சொல்லிச் சிரித்தவன், ''செவ்வாய்க்கிழமை கொடுங்க'' என்று சொன்னான்.

''சார்...'' என்று அவனது பி.ஏ. தயக்கத்துடன் இழுக்க...

''என்னாச்சு? உங்களைக் கடிக்கிறாரா? சரி அவர் போன் பண்ணினால் என்கிட்டே கொடுங்க. நான் பேசுறேன்'' என்று சொல்லிக் கொண்டு இருக்கும் பொழுதே பி.ஏ.வின் கைப்பேசி சிணுங்கியது. ஷர்மா தான் அழைத்திருந்தார்.

அவன் கைப்பேசியை மித்ரனிடம் நீட்ட அதை வாங்கிய மித்ரன் அனைவரையும் பார்த்துப் பொதுவான ஒரு தலையசைப்புடன் சரளமான ஹிந்தியில் பேசிக் கொண்டே சென்றான்.

தோழிகள் அனைவரும் ஒருவர் காலை அடுத்தவர் வாருவதில் குறியாய் இருக்க காவ்யா மட்டும் அமைதியாக இருந்தாள். அதைப் பார்த்த சஹானா காரணம் கேட்டாள்.

''அண்ணா கிட்ட வரக் கூட எல்லோரும் யோசிக்குறாங்க. அவர் தலை அசைவில் வேலை செய்யுறாங்க. ஆனால் நான் அவரைச் சாதாரணமா எடை போட்டுப் பழகுறேனோ? சிங்கப்பூரில் இருந்து சாக்லேட் வாங்கிட்டு வாங்கன்னு சின்னப் புள்ளை மாதிரி கேட்டுக்கிட்டு...'' என்று சொல்லிக் கொண்டு இருக்கும் போது அதைக் கேட்டுக் கொண்டே மித்ரன் அங்கு வந்து சேர்ந்தான்.

''அப்போ சும்மா வாய் வார்த்தையா தான் என்னை அண்ணான்னு சொல்லுறியா காவ்யா? உணர்ந்து சொல்லலையா?'' என்று கேள்வி எழுப்பினான்.

''இல்லைண்ணா...'' என்று காவ்யா மறுக்க ஆரம்பிக்கவும்,

''அவங்களுக்கு நான் எம்.டி. ஆனால் வீட்டில் உள்ளவங்களுக்கும், என் பிரண்ட்ஸுக்கும் நான் மித்ரன். சாதாரண மித்ரன். ரெண்டையும் போட்டுக் குழப்பி உன்னையும் குழப்பிக்காதே காவ்யா'' என்று சொன்னதும் காவ்யா தெளிவடைந்தாள் என்றால், சஹானா பெருமிதம் அடைந்தாள்.

அனைவரும் சாப்பிட்டு முடித்துக் கிளம்ப ஆரம்பித்த பொழுது தன் தாயிடம் சென்று, ''அம்மா நீங்களும் சஹானாவும் முத்தண்ணன் கூடப் போங்க. நான் இங்க எல்லாத்தையும் செட்டில் பண்ணிட்டு வந்து சேர்கிறேன்'' என்று சொல்லி அவர்கள் இருவரையும் கிளப்பினான்.

# 23

வீட்டிற்கு வந்த சஹானா தனது வைர நகைகளைக் கழட்டி மாமியாரிடம் கொடுத்து பத்திரப்படுத்தும் படி கூறிவிட்டுத் தனது அறை நோக்கிச் சென்றாள். சாதாரணக் கம்மலை அணிந்தவள், தலையில் இருந்த கிளிப்பைக் கழட்டிவிட்டு ஆடையைக் கூட மாற்றாது கணவனின் வருகைக்காகக் காத்திருந்தாள்.



வந்திருந்த அனைவரையும் வாகனங்களில் ஏற்றி அனுப்பி வைத்துவிட்டு எல்லாவற்றையும் செட்டில் செய்து முடித்து அவன் வீடு வந்து சேரும் பொழுது மணி பதினொன்றரையைத் தாண்டி இருந்தது.

தங்களது அறைக்குள் நுழைந்தவன் தூங்காது தனக்காக விழித்துக் கொண்டிருக்கும் மனைவியைச் சீண்டும் பொருட்டு, ''என்னடா சனா தூங்கலையா?'' என்று கேட்டான்.

தனது இடுப்பில் கை வைத்து அவனை முறைத்துப் பார்த்தாள்.

''ஹலோ மேடம், இப்போ எதுக்கு தலை விரி கோலமாய் காளி அவதாரம் எடுக்கிறாய்?'' என்று கேட்டவுடன்,

அவன் அருகே வந்து அவனது சட்டையைக் கொத்தாகப் பற்றி, ''எதுக்குடா இத்தனை நாளா என்கிட்ட இருந்து உண்மையை மறைச்சே? கல்யாணத்துக்கு முன்னாடி சொல்லலைன்னாக் கூடப் பரவாயில்லை. நான் அன்னைக்கு ஹாஸ்பிட்டல்ல வைச்சுக் கேட்டேன் தானே? அப்போ சொல்லியிருக்கலாம் தானே?'' என்று கேட்டாள்.

அவன் அவளது கைகளை விலக்காது சிரித்துக் கொண்டே, ''சொல்லி இருந்தால் என்ன மேடம் பண்ணியிருப்பீங்க?'' என்று புருவம் உயர்த்திக் கேட்கவும்,

அவனது சட்டையில் இருந்து தனது கைகளை விலக்கியவாறே, ''நமக்கு இடையிலே கருத்து வேறுபாடு வந்திருக்காது தானே?'' என்றாள்.

''சரி ஒற்றுமையா இருந்து என்ன செஞ்சிருப்போம் சனா?'' என்று கண்சிமிட்டிக் கேட்க, சிணுங்கிக்

கொண்டே கணவனின் புஜத்தில் ஒரு அடி கொடுத்தாள்.

''அது போகட்டும் விடுங்க. ரெண்டு செல்போன் நம்பர் வைச்சு இருக்கீங்க என்றும் அதுல ஒண்ணு எனக்கே எனக்கானது என்றும் என்கிட்டே சொன்னீங்களா?'' என்று கேட்கவும்,

அவன் ஆச்சரியமாக அவளைப் பார்க்க... அவள் தான் செய்த குளறுபடிகள் பற்றிக் கூறினாள்.

''நீ இவ்வளவு அறிவாளியா சனா? எனக்குத் தெரியாமல் போச்சே!'' என்று அவன் போலி ஆச்சரியம் காட்டிக் கேட்க,

''நீங்க என்கிட்டே சொல்லாதது உங்க தப்பு. இதுல எனக்கு முட்டாள் பட்டம் கொடுக்குறீங்களா?'' என்று கேட்டவுடன்,

''அது எப்படி சனா உன் மேல உள்ள தப்பை எல்லாம் என் மேல திருப்புகிறாய்? அந்த வித்தையை எனக்குக் கொஞ்சம் சொல்லித் தாயேன்'' என்று சொல்ல அவள் சிணுங்கிக் கொண்டே அவனது மார்பில் குத்தினாள்.

''ஆமா நான் மிதுன் என்று உங்க பேரை ஸ்டோர் பண்ணி வைச்சதை எப்படிக் கண்டு பிடிச்சீங்க? நான் இதுவரை உங்ககிட்டே சொன்னதே இல்லையே?'' என்று சந்தேகம் கேட்டவுடன்,

மனைவியின் பட்டுக் கூந்தலை அன்று போலவே ஸ்பரிசிக்க ஆசைப்பட்டவனாய் அவளது கூந்தலில் தனது கைகளை அளைய விட்டவாறே, ''உன் மனசுக்குள்ளே புகுந்து கண்டு பிடிக்குற அளவுக்கெல்லாம் உன் ஹஸ்பண்ட் பெரிய ஆள் இல்லைம்மா. அவன் ரொம்பச் சாதாரணமானவன்'' என்று சொன்னதும்,



''அவரைப் பற்றி நீங்க ஏன் மட்டமா பேசுறீங்க. அதெல்லாம் பேசக்கூடாது'' என்று அவள் போலிக் கோபம் காட்டவும்,

''ஓ! உங்க ஹஸ்பண்டை நீங்க மட்டும் தான் கேவலப் படுத்தணுமா? அது உங்க ஏக போக உரிமையா?'' என்று அவன் நக்கல் பண்ண,

''ப்ளீஸ் சொல்லுங்க மிதுன்!'' என்று சிணுங்க,

''நீ தான் மா நேற்றுத் தூக்கத்திலே உளறினே.''

''என்னது உளறினேனா? நான் செல்லமாக் கூப்பிட்டால் அது உங்களுக்கு உளறலா இருக்கா?'' என்று அவள் கோபமாய்க் கேட்டாள்.

''ஹேய் சாரி... சாரி. நீ உளறலை. இப்போ நான் தான் உன் கிட்டே உளறுகிறேன். நீ மலை ஏறாத தாயி. அப்புறம் என் பாடு திண்டாட்டமா போயிடும்'' என்று கண்ணடித்துச் சொன்னான்.

அவள் பதில் பேசாது தலை குனிந்து இருக்க... அதில் குழம்பியவனாய் அவள் முகத்தை நிமிர்த்திப் பார்க்க...

அவள் கண்கள் கலங்க, ''காவ்யா கொஞ்ச நேரத்துக்கு முன்னால உங்க உயரம் தெரியாம சாதாரணமா நினைச்சிட்டேன் என்று சொன்னால் தானே! நானும் அப்படித் தானே... அவளாவது உங்களை அண்ணான்னு கூப்பிட்டுப் பாசமாவாது பழகினாள். நான் எப்பப் பார்த்தாலும் உங்களுக்கு வருத்தம் தானே கொடுத்து இருக்கேன். நான் சுத்த வேஸ்ட் இல்லை?'' என்று கேட்டவுடன்,

அவளது கேள்விக்குப் பதில் சொல்லாது அவளது உதடுகளில் முத்தமிட்டவன், ''ஒரு மனைவியைக் கணவன் ஒண்ணு வாய் வார்த்தையாய் சமாதானப்படுத்தலாம். இல்லைன்னா வார்த்தையில்லாமல் வாயால்

சமாதானப் படுத்தலாம்'' என்று சொல்லி அவளது உதடு களை வருட,

அதில் அவளது முகம் சிவந்த போதும், ''நான் இது வரைக்கும் உங்களுக்கு எந்தப் பொருளும் வாங்கித் தரலை இல்லையா?'' என்று வருத்தப்பட,

''இப்பத் தானே டா வேலைக்குப் போயிருக்க! முதல் மாசச் சம்பளம் வாங்கிய உடன் எனக்கு நீ வாட்ச் வாங்கிக் கொடு. நான் உன்னை மாதிரி எல்லாம் கிடையாது... டபக்குன்னு கை நீட்டி வாங்கிக்குவேன். வாட்ச் வாங்கித் தரப் பிடிக்கலைன்னா மோதிரம் வாங்கிக் கொடு. நான் அதை ஹோட்டல் டேபிளில் எல்லாம் வைச்சு நகர்த்தி விட மாட்டேன்'' என்று சொன்னவுடன் அவள் சரமாரி யாக அவனை அடிக்க ஆரம்பிக்க அவன் அவளது கைகளைப் பிடித்துத் தடுத்தான்.

பின் மெதுவாக நிமிர்ந்து அவன் முகம் பார்த்தவாறே, ''அன்னைக்கு நான் உங்களை சத்ரு என்று சொன்னது உங்களை ரொம்ப ஹேர்ட் பண்ணுச்சா மிதுன்? அப்புறம் அந்த மோதிரத்தைத் திருப்பிக் கொடுத்தப்போ...'' என்று கண்கள் கலங்க அவன் முகம் பார்த்துக் கேட்க,

அவளது கைவிரலில் தான் அன்று அணிவித்த மோதி ரத்தை முன்னும் பின்னும் நகர்த்திக் கொண்டே, ''இல் லைன்னு பொய் சொல்ல மாட்டேன் டா சனா'' என்று தொண்டை கரகரக்கக் கூறியவன்,

''அதை எல்லாம் மறந்திடலாம் டா. நீ என்கிட்ட சண்டை எதுவும் போடாமல் இருந்திருந்தால் என்னால உன்னைப் பிரிஞ்சு இருந்திருக்க முடியாது'' என்று சொல்லி அவளைச் சமாதானப்படுத்தினான்.



திடீரென்று ஞாபகம் வந்தவளாக, ''அன்னைக்கு நீங்க பாடும் போது நீங்க என்னைப் பார்க்க மாட்டீங்களான்னு எவ்வளவு ஆசையா தெரியுமா காத்திருந்தேன். நீங்க என் பக்கம் திரும்பக் கூட இல்லை மிதுன்'' என்று வருத்தத் தோடு சொல்லிக் கொண்டு வந்தவள், ''அதனால இப்ப ஒரு பாட்டுப் பாடுங்க'' என்றாள்.

''இப்பவாடா பேபி?'' என்று கேட்டதும்,

''யெஸ் இப்ப தான். எனக்கே எனக்காக... என்னைப் பார்த்துக் கொண்டே பாடணும்!'' என்று ஒரு பிடிவாதத் துடன் சொல்லி சஹானா தனது கைகளை அவனது கழுத்தில் மாலையாகக் கோர்த்துக் கொண்டு கணவனது பாடலை ரசிக்கத் தயாரானாள்.

மனைவியின் இடையைத் தன் கரங்களால் சுற்றி வளைத்துத் தனக்கு அருகே இழுத்துக் கொண்டவன் தனது வலது புறங்கையால் அவளது கன்னத்தை வருடிய வாறே அவளை... முக்கியமாய் அவளது கண்களைப் பார்த்துக் கொண்டே பாட ஆரம்பித்தான்.

மின்னல் ஒரு கோடி எந்தன் உயிர் தேடி வந்ததே

ஓ... லட்சம் பல லட்சம்

பூக்கள் ஒன்றாக பூத்ததே

உன் வார்த்தை தேன் வார்த்ததே

மௌனம் பேசியதே

குளிர் தென்றல் வீசியதே

ஏழை தேடிய ராணி நீ என் காதல் தேவதையே...

என்று பாடிக் கொண்டே வந்தவன் பாடலையும், வருடலையும் நிறுத்தி ஒரு எதிர்பார்ப்போடு அவளைப் பார்க்க...

அவனது எதிர்பார்ப்பு புரிந்தவளாய், அவனது கழுத்தில் இருந்து தனது கையை விலக்கி தனது கன்னத்தில் பதிந்திருந்த கணவனின் வலது கரத்தை தனது இதழ் அருகே எடுத்துச் சென்று ஒரு முத்தம் பதித்தவள்... தனது காதல் அனைத்தையும் தன் கண்களில் தேக்கி, ''ஐ லவ் யூ!'' என்று அடுத்த வரியை அவனைப் பார்த்துச் சொன்னாள்.

அவளது கன்னத்தோடு தன் கன்னம் வைத்து இழைந்தவள் அவளது காதில், ''சனா பேபி! இதுக்கு மேல என்னால பாடவோ, உன்கூடப் பேசிக்கிட்டு இருக்கவோ முடியாது டா. புரிஞ்சுக்கோடா ப்ளீஸ்!'' என்று கிறங்க...

எனக்குப் புரிந்தது, அதில் எனக்குமே சம்மதம் என்று சொல்லும் விதமாய் அவள் அவனது மார்பில் தன் முகம் புதைக்க... அவளை இறுக்கி அணைத்தான்.

அவர்களது இல்லறம் நல்லறமாகட்டும் என்று வாழ்த்தி விடைபெறுவோம்!


நீயில்லாமல்
நானில்லை
பிரேமா